www.padippakam.com



நேர்காணல்

இ. அண்ணாமலை

# காலச்சுவடு

ஜூலை 2004 மாத இதழ் ரூ. 15 இதழ் 55

சிறப்புப் பகுதி: தமிழுக்குச் செம்மொழித் தகுதி

உடன்படுக்கை மீடியா: கண்ணன்

இலங்கை: வாழ்வும் மரணமும்

காவிரிப் பிரச்சினை: மாற்றுச் சிந்தனை

சக்கரியா: மலையாள ரகசியங்கள்

சேரன் கவிதைகள்

பத்தி: ரவிக்குமார் அ. முத்துலிங்கம் வெ. ஸ்ரீராம்

படிப்பகம்

www.padippakam.com

# இந்தியாவின் இணையற்ற
# சீட்டு நிதிச் சிகரம் ஸ்ரீராம் சிட்ஸ்




3000 ஆண்டுகளுக்கு முன்னரே, இந்திய மக்களின் அனுபவ அறிவில் உதயமானது சீட்டு சேமிப்பு திட்டம். சமுதாய மக்கள் ஒருங்கிணைந்து, சிறுகச் சிறுகச் சேமிக்கவும், தேவைப் படும்போது அச்சேமிப்பில் இருந்தே கடன் பெறவும் உதவி செய்வதே சீட்டுச் சேமிப்பு திட்டத்தின் சிறப்பு அம்சம்.

### இருவழிப் பயன்:

குடும்ப வளமைக்காகத் தொடர்ந்து சேமிக்கவும், அவசரத் தேவைகளையும், திட்டமிட்ட செலவுகளையும் எதிர் கொள்ளவும் உதவும் இருவழிச் சாதனம் சீட்டு சேமிப்பு திட்டம்.

### வளரும் வளமை:

சீட்டு சேமிப்பு திட்டத்தில், சேமிக்கும் தொகை, சேமிக்கும் காலம், கடன் பெறும் தொகை, வட்டி விகிதம், யாவும் உறுப்பினர்களாலேயே தீர்மானிக்கப் படுகிறது. மேலும், மாதந்தோறும் வருவாய் உயரும் வாய்ப்பு, உறுப்பினர் அனைவரும் சமமாக லாபம் பெறும் வாய்ப்பு ஆகியவை இதன் தனிச்சிறப்பு அம்சங்கள்.

### உயரும் வருவாய்:

வங்கிச் சேமிப்பு, அஞ்சலகச் சேமிப்பு, சிறுசேமிப்பு, ஆகிய முதலீடுகள் மீதான வருவாய் சரிந்து விட்டது. ஆனால் சீட்டுத் திட்டங்களில் ஏல உச்ச வரம்பு 40% ஆக உயர்த்தப் பட்டுள்ளதால், உறுப்பினர்களின் கசறுத்தொகை (Dividend) கணிசமாக உயரும். ஏலத்தில் போட்டியின் கடுமை குறைந்து, உடனடியாக ஏலம் எடுக்கும் வாய்ப்பு உயர்ந்துள்ளது.

### நிகரற்ற ஸ்ரீராம் சிட்ஸ்

ஸ்ரீராம் சிட்ஸ் 29 ஆண்டுகளுக்கு மேலாக பல லட்சம் குடும்பங்களின் வளமைக்கு வழிகாட்டி வருகிறது. நேரடியாகவும், மறைமுகமாகவும் பலருக்கு வேலை வாய்ப்பு அளித்துள்ளது. சீட்டுத் தொகையாக ரூ.10,500 கோடிக்கு மேல் பட்டுவாடா செய்துள்ளது.

உங்கள் அருகிலுள்ள ஸ்ரீராம் சிட்ஸ் கிளைக்கு இன்றே வாருங்கள். நலமும் வளமும் வளரத் தேவையான திட்டங்களில் சேர்ந்து சீரும் சிறப்புமாய் வாழுங்கள்.



## ஸ்ரீராம் சிட்ஸ்

தமிழ்நாடு (பி) லிமிடெட்

சுப்ரமணியன் பில்டிங், 1, கிளப் ஹவுஸ் ரோடு, சென்னை 600 002.
போன்: 52011833. www.shriramchits.com

WORDCRAFTS

www.padippakam.com


**சிறப்புப் பகுதி**
செம்மொழி 15

**நேர்காணல்**
இ. அண்ணாமலை 24

**தலையங்கம்**
திருத்த வேண்டிய வரலாறு 5

**பத்தி**
ரவிக்குமார் 46
சக்கரியா 49
வெ. ஸ்ரீராம் 56
அ. முத்துலிங்கம் 59

**கட்டுரைகள்**
காவிரி: புலப்படாத் தண்ணீர் 7
உடன்படுக்கை மீடியா 32
இலங்கை: வாழ்வும் மரணமும் 52

**சிறுகதை**
உப்பாவைச் சொல்லும் கலை 10

**கவிதைகள்**
சேரன் 40

**அஞ்சலி**
டேவிட் பாக்கியமுத்து 66
டாம் மோரஸ் 67
காசியபன் 68

**பிற**
நாடக விமர்சனம் 38
நிர்வாக இயலில் புனைகதை 39
மதிப்புரைகள் 62
விவாதம் 69
கடிதங்கள் 2
நீரோட்டம் 72



இதழ் 55
ஜுலை 2004

காலச்சுவடு

www.padippakam.com



ஜூன் 2004 காலச்சுவடு தலையங்கம் படித்தேன். கடந்த காலங்களில் ஒரு மாற்றுப் பொருளாதாரப் பாதையை இடது சாரிகளை முன்வைத்ததில்லை என்று சொல்லியுள்ளீர்கள். இடதுசாரிக்கட்சிகள் பொருளாதாரம் மட்டுமல்லாமல் சமூக அரசியல் தளங்களின் மாற்றுப்பாதையை எப்போதும் வலியுறுத்திவந்துள்ளனர். வெறும் தொழிற்சங்க நலனை மட்டும் பாதுகாப்பது எனச் சிறுமைப்படுத்துவது சரியல்ல. நிலச்சீர்திருத்தம், நிலப் பங்கீடு போன்ற கோரிக்கைகளைச் சுதந்திரத்திற்கு முன்பிருந்தே இடதுசாரி இயக்கம் வலியுறுத்தி வீரஞ்செறிந்த இயக்கங்களை நடத்திவந்துள்ளது. மக்கள் எழுச்சியினை அடக்குவதற்குத்தான் ஆட்சியிலிருந்தவர்கள் ஓட்டைகள் நிறைந்த ஏமாற்று நிலச்சீர் திருத்தச் சட்டத்தினைக் கொண்டுவந்தார்கள். ஆனால் கேரளம், மேற்கு வங்காளத்தில் அமைந்த இடதுசாரி அரசுகளால் மட்டுமே நிலம் விவசாயிகளின் கைகளுக்குச் செல்லும் வகையில் சட்டம் கொண்டுவரப்பட்டு அமலாக்கப்பட்டது. நிலச்சீர்திருத்தத்திற்கு மாற்றாக மதச்சார்பின்மை மாற்றுச் செயல்திட்டமாகிவிட்டது என்பதும் சரியல்ல. நாட்டில் எப்போதும் இல்லாத அளவிற்கு மத நல்லிணக்கம் அபாயத்திற்குள்ளாகியிருக்கிறது. எனவே இடதுசாரிக்கட்சிகள் பி. ஜே. பியின் மதசார்பின்மை மாற்றுச் செயல்திட்டமாகிவிட்டது என்பதும் சரியல்ல. கடைசியாக மன்மோகன் சிங்கிற்கு 'நெருக்கடி' எதையும் ஏற்படுத்தும் நோக்கமும் இடதுசாரிகளுக்கு இல்லை. இதுவரை இடதுசாரிகள் ஒருபோதும் நெருக்கடியை ஏற்படுத்தியவர்கள் அல்ல.

**ஜி. வெங்கடாச்சலம்**
எழுமாத்தூர் 638 104

நடந்து முடிந்த மக்களவைத் தேர்தலில் எவருக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை என்பது உண்மைதான். ஆனால் பா. ஜ. கவின் எதிரணி முன்னூறுக்கும் அதிகமான இடங்களைக் கைப்பற்றியிருப்பதை மறுக்க முடியாது. இந்த எதிரணியினர் ஒரே கூட்டணியில் இல்லாமல் இருந்தாலும் பா. ஜ. கவை எதிர்ப்பதில் ஒரே அணியினர்தாம். கடந்த ஆட்சியில் பா. ஜ. கவின் மதவாதக் கொள்கையாலும் உயர்சாதிக் கொள்கையாலும் பாதிக்கப்பட்ட சிறுபான்மை மக்களும் தாழ்த்தப்பட்ட மக்களும் பா. ஜ. கவிற்கு எதிரான நிலையைத் திடமாக மேற்கொண்டதே அக்கட்சியின் தோல்விக்குக் காரணம் ஆகும். பா. ஜ. கவுடன் கூட்டணி அமைத்த கட்சிகளையும் இதே காரணத்தால் அவர்கள் புறக்கணித்தார்கள்.

**அ. முஹம்மது கான் பாகவி**
சென்னை 600 004

"உண்மையான மதநம்பிக்கை இல்லாதவர்கள் அரசியலுக்கு மதத்தைப் பயன்படுத்திக்கொள்ள நினைத்தார்கள்." என்று யு. ஆர். அனந்தமூர்த்தி அவர்கள் கூறியிருப்பது நூறு சதவீதம் உண்மை. இதனால் தான் நாட்டில் பல்வேறிடங்களில் குண்டு வெடிப்புகள் மதக்கலவரங்கள் வன்முறைச் சம்பவங்கள் ஏற்படுகின்றன. ஜாதி, மதத்தைத் துறந்து நடுநிலையோடு பொது வாழ்வில் தூய்மையானவர்களாக நாட்டு மக்களின் முன்னேற்றத்தில் மட்டுமே அக்கறை கொண்டவர்களாக மாறுவார்களா நம் அரசியல்வாதிகள்? தேசிய நதிநீர் இணைப்புத் திட்டம் பற்றிய இரண்டு கட்டுரைகளையும் படித்தபிறகு, அதற்குச் செலவு செய்யும் தொகையைவிடவும் அதனால் ஏற்படும் பின்விளைவுகள். பிரமிக்கச் செய்தன, நதிநீர் இணைப்புத் திட்டம் வெளி நாடுகளிடம் நம் நாட்டை அடமானம்வைக்கத்தான் பயன்படும்.



**ஆர். ரவிச்சந்திரன்**
நாமக்கல் 637 212

"அடிசறுக்கும் ஆனைகள்" கட்டுரையில் தமிழர்களின் ரசனை குறித்தும் தமிழ் சினிமாவின் சராசரி பலவீனங்களைப் பற்றியும் குறிப்பிட்டிருப்பது அவர் தமிழர்களின் உணர்வுகளையும் ரசனைகளையும் குறைத்து மதிப்பிட்டிருப்பதாக நான் கருதுகிறேன். ஏனெனில் கட்டுரையாளர் தமிழர்களின் மென்மையான உணர்வுகளையும் கலாச்சார மேம்பாடுகளையும் புரிந்துகொள்ளத் தவறியிருப்பதோடு, தமிழர்களின் மென்மையான, இலகுத் தன்மை கொண்ட ரசனையைச் சந்தேகிப்பவராகவே காட்சியளிக்கிறார்.

**எஸ். கலைச்செல்வி**
சென்னை 600 011

உலக சினிமா ஞானம் இருக்கிற தீவிர விமர்சகர்கள்கூட, 'ஆட்டோகிராப்' பற்றி எழுதும்போது உணர்ச்சிவசப்பட்டு விட்டார்கள் என்று அரவிந்தன் தன் வருத்தத்தைத் தெரிவித்திருந்தார். அவர் பாரீஸில் வாழ்கிறாரோ என்று சந்தேகம் ஏற்பட்டது. சூழல் சார்ந்த பிரக்ஞையற்று விமர்சகர்கள் படைப்பை முதன்மைப் படுத்தி தங்கள் விமர்சனத்தை முன்வைக்க வேண்டும் என்பது மாதிரியான கருத்தையும் வைத்திருந்தார். இது தமிழ் இலக்கியச் சூழலில் சாத்தியமாக இருக்கலாம். நிச்சயம் இன்றைய நிலையில் தமிழ் சினிமாவில் சாத்தியமில்லை.

வெகுஜன மார்க்கம் மட்டுமே' நம் தமிழ் சினிமாவுக்கு வாய்த்திருப்பது யாவரும் அறிந்ததே. அந்த ஒற்றை வழியில் வெகு விரைவாகவும் சுலபமாகவும் நுழைந்து வெற்றிபெறும் முட்டாள்தனமான சாகசப்படங்களின் மத்தியில் 'ஆட்டோகிராப்' தன்னுடன் தன்னம்பிக்கையோடு கொண்டு வந்திருப்பது எளிய உணர்வுகளையும் நேர்த்தியான சொல்லாடலையும். இது தமிழ்ச் சூழலில் இயங்கும், நல்ல சினிமாவிற்குப் பிரயத்தனப்படும், எந்த ஒரு விமர்சகனையும் உற்சாகத்தில் ஆழ்த்தக்கூடியது. மேலும், பெண்களை இழிவுபடுத்துகிற, ஊடகத்தின் மீதான புரிதல் இம்மி அளவுகூட இல்லாத படங்களைப் பார்த்து அயர்ச்சியுற்றவனுக்கு, தான் உலக சினிமாவில் மட்டுமே கண்ட கவித்துவமான காட்சியாடல்களின் அனுபவத்தை மின்னல் போன்று ஆங்காங்கே பளிச்சிடத் தரும் 'ஆட்டோகிராப்' உணர்ச்சிவசப்படும் அனுபவமாக மாறுவது இயல்பான காரியம். படத்தில் இரண்டாம் பாதியின் [illegible] பாணியிலான திரைக்கதை அமைப்பை வெகுஜன ரசனைக்காக வைக்கப்படும் சமரசப் பகுதியாகப் பார்க்கலாம். ஒட்டுமொத்தமான படத்தின் அனுபவத்தை அது பாதிக்கவில்லை என்றே கருதுகிறேன்.

உணர்ச்சிகளை மையமாகக்கொண்ட படத்தை அறிவு சார்ந்து அணுகுவதென்பது சரியா என்று தெரியவில்லை. அச்சுறுத்தும் கொலை ஆயுதங்களுடன் அணிவகுத்து நிற்கும் இடத்தில் திடீரென்று நம்மைத் திசைதிருப்பும் புறாக்களின் மெல்லிய சிறகடிப்பு போன்றது 'ஆட்டோகிராப்' தரும் அனுபவம். அங்கு அறிவிற்கு இடமில்லை. மேலும் 'ஆட்டோகிராப்' அறிவுஜீவிகளுக்கான படமுமில்லை.

**மாமல்லன்**
சென்னை

மணிரத்னம் மீது அரவிந்தன் முடுக்கிவிடும் எதிர்வினை ஆளுமையை எந்த விதத்திலும் குறைத்துவிடாது. மிகைப் படுத்தப்பட்ட அதீதமான சொல்லாடல்களுடன் வசை அடுக்குகளை மணி மீது சுமத்தியிருக்கிறார் அரவிந்தன். "சராசரிகள் மலிந்துகிடக்கும் வெகுஜனத் தளம்" என்று அவரே ஒப்புக்கொண்டுவிட்டுப் பிற்பாடு அந்தத் தளத்தினில் மேதமையைத் தேடுவது எப்படிச் சரியாகும்?

மணிரத்னம் மீது 'ஒளிவட்டம்' என்ற சொல்லை அரவிந்தன் பயன்படுத்துகிறார். இதில் வேதனையென்னவென்றால் திரை ஜாம்பவான்களிலேயே எந்தவொரு மிகையையும் தன் ஆளுமையில் கொள்ளாத மனிதர் அவர். பேட்டிகளோ தன்னை முன்னிலைப்படுத்துவதோ மிகைச்சொல் விளையாட்டோ பகட்டோ எதுவுமில்லாதவர் மணிரத்னம். எந்த வெற்றியிலும் தோல்வியிலும் இழப்பிலும் மனத்தைத் தவறவிடாதவர். வெறும் மௌனத்தைத் திரையில் நுழையவிட்ட ஒரே மேதை.

**இளஞ்சேரல்**
கோவை 641 103

படிப்பகம்

www.padippakam.com



குண்டுச் சட்டியில் குதிரை ஓட்டிக் கொண்டிருக்கும் தமிழ் சினிமா உலகில் மணிரத்னத்தைப் பத்திரிகைகள் கொண்டாடுவதில் ஆச்சரியமில்லை. ஆலை இல்லா ஊரில் இலுப்பைப் பூச் சர்க்கரை தான் மணிரத்னம். தொழில்நுட்பத்திலும் காட்சி அமைப்பிலும் பிரமாண்டத்தையும் பிரமிப்பையும் ஏற்படுத்தும் மணிரத்னத்தின் அரசியல் பார்வை தீவிரமில்லாத மேலோட்ட நிலையில் உள்ளதை அவரது அரசியல் படங்களில் காணலாம். நதிநீர் இணைப்புப் பற்றிய சங்கீதா ஸ்ரீராமின் கட்டுரையைக் காங்கிரஸ் கட்சித் தலைவர்களுக்கு அனுப்பலாம். ஆனந்த் பட்வர்த்தனின் அரசியல் சினிமா பற்றிய கட்டுரையும் சிறப்பாக உள்ளது. காலச்சுவடு மே இதழ் மொத்தத்தில் மனநிறைவைத் தந்தது. காலச்சுவடு பதிப்பக வெளியீடுகள் பற்றிய தொகுப்பு தீவிர எழுத்தை விரும்பும் தேடிப் படிக்கும் வாசகர்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

**கே. எஸ். சுந்தரம்**
பெங்களூர் 560 060

பெருமாள்முருகன் கந்தர்வன் உட்பட்ட முற்போக்குப் படைப்பாளிகள் வாசகர்கள், பொதுவுடமை இயக்கத்தினர் மீதான தனது 'அசூயை'யையும் அவமதிப்பையும் பதில் சொல்ல வாய்ப்பில்லாத கந்தர்வனை முன்வைத்து வெளிப்படுத்தி மகிழ்ச்சியடைந்துள்ளார் என்றே தோன்றுகிறது.

'அமைப்பு சார்ந்து இயங்கும் படைப்பாளிகளை ஏற்க விரும்பாதவர்கள்' என்று பெருமாள்முருகன் போன்றவர்கள் தங்களை நிறுவிக்கொள்ள விரும்புகின்றனர். ஆனால் பள்ளி, கல்லூரி, அலுவலகம், சாகித்ய அகாடெமி, பதிப்பகம், இதழ் நிறுவனம் என்று ஏதேனும் அமைப்பைச் சார்ந்து இயங்காமல் எந்தப் படைப்பாளியும் இயங்க முடியாது என்பதே உண்மை.

**புதுவை ஞானகுமாரன்**
புதுவை 605 110

கந்தர்வன் நல்ல எழுத்தாளர் மட்டுமல்ல, சிறந்த ஸ்தாபனவாதியும்கூட, ஒரு கூட்டத்தை அல்லது மாநாட்டை எப்படி வழிநடத்துவது என்பது குறித்த ஞானம் நிறைந்தவர். பெரும்பாலான தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்க மாநாடுகள் அவர் தலைமையில் நடந்துள்ளன.

1999ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்க மாநிலக் குழுக் கூட்டம் புதுக்கோட்டையில் நடந்துகொண்டிருந்தது. அந்த நாளில்தான் 'விசை' என்ற காலாண்டிதழில் கந்தர்வனின் புகழ்பெற்ற படைப்பாகிய 'கொம்பன்' பிரசுரமாகியிருந்தது. உணவு இடைவேளையின்போது அந்தக் கதையை வாசித்துவிட்டு இளம் படைப்பாளிகள் முதல் பெரிய எழுத்தாளர்கள் வரை அனைவரும் கந்தர்வனைப் புகழ்ந்து கொண்டிருந்தனர். அப்போது கூட்ட அரங்கத்துக்குள் இருந்து அடுத்த அமர்வுக்கான அழைப்பு வந்தது. அனைத்துப் புகழ்மொழிகளையும் விலக்கிவைத்து விரலிடுக்கில் பாதி கரைந்த சிகரெட் துண்டைத் தூக்கி எறிந்துவிட்டு அரங்கினுள் நுழைந்து இருக்கையில் அமர்ந்தார். ஓய்வு நேரத்திலும் உணவு நேரத்திலும் தான் மற்றவர்களுக்குப் பாடம் சொல்வாரே தவிர பொதுக்குழு, செயற்குழுக் கூட்டங்களை நிராகரித்துவிட்டு அல்ல.

ஸ்தாபனம் என்பது வரப்புப் போன்றது. வரப்பை மீறி வளரும் தாவரங்கள் கத்தரிக்கப்படுவது உழைப்பின் இயல்பு. தமுஎசவில் இருந்து அப்படி வெட்டி எறியப்பட்ட விருட்சங்கள் அஸ்வகோஷ் மற்றும் மணியரசன் போன்றவர்கள். ஸ்தாபன விதிமுறைக்கு உட்பட்டு வளரும் தனிமனிதர்களே தலைமைப் பொறுப்பை நிறைவேற்றும் தகுதியை அடைகிறார்கள். இதையெல்லாம் புரிந்துகொள்ளாமல் பொய்மைச் சகதியைப் பேனாவில் நிரப்பிப் பேப்பரை அசிங்கப்படுத்தி இருக்கிறார் பெருமாள்முருகன். இது அமரர் கந்தர்வனுக்கான அஞ்சலி அல்ல; அவமதிப்புப் புனைகதை. பெருமாள் முருகன் போன்ற பெரும் படைப்பாளிகள் இப்படிப்பட்ட அபத்த எழுத்துகளோடு உறவுகொள்ளாமல் இருப்பது நல்லது.

**சீருடையான்**
தேனி 625 531

இடஒதுக்கீடு கோரிக்கை வாழ்வுரிமைக்கான பிரச்சினையல்ல. முஸ்லிம் சமுதாயம் இப்பிரச்சினையில் "சீரியசாக" இல்லை. தஞ்சாவூரில் இட ஒதுக்கீடு பேரணி நடைபெற்ற அதே நாளில் சென்னையில் இரண்டு முக்கிய நிகழ்வுகள் நடைபெற்றன.

தேனாம்பேட்டைக் காமராஜ் அரங்கில் 3000 முஸ்லிம்களிடையே அமெரிக்கன் பாணி சர்வதேச முஸ்லிம் பள்ளிக் கல்வித் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது. 6000 ரூபாய் மாதக் கல்விக் கட்டணத்தில் அரபி, ஆங்கிலம் மொழிப்புலமையுடனான கல்வித்திட்டம். சர்வதேச அறிஞர்கள் பங்கேற்றனர். மேல்தட்டு ஐந்து நட்சத்திரக் கலாச்சாரச் செவப்புத் தோல் செல்வ முஸ்லிம்கள் பெரும் ஆர்வம் காட்டினர்.

அதே நாளில் சென்னை மண்ணடி மஸ்ஜிதே மஃமூர் வளாகத்தில் மாநில முஸ்லிம் மத அறிஞர்கள், அரபிக் கல்லூரி நிர்வாகிகள், மத போதகர்கள் பொதுக்கூட்டம் நடைபெற்றது. திண்டி

## தக்க தருணத்தில் வெளிவந்த ஆய்வுகள்

நதிநீர் இணைப்புத் திட்டம் நிறைவேறினால் இந்தியா வல்லரசாகிவிடுமென்று எண்ணிய சாமானிய இந்தியனில் நானும் ஒருவன். ஏ. வைத்திநாதன், சங்கீதா ஸ்ரீராம் ஆகியோரின் கட்டுரைகளைப் படித்ததும் அத்திட்டத்தின் பக்க விளைவுகள் பற்றித் தெளிவாகப் புரிந்தது சாதாரணக் காய்ச்சலுக்கு மருந்து சாப்பிடுவதைவிடுத்து, ஓவர்டோஸ் சாப்பிட்டு உடனே நிறுத்துவதாக நினைத்து உடலுக்குக் கேடு விளைவிக்கும் நிலைக்கு ஒப்பானதாகும் தேசிய நதி நீர்த்திட்டம் என்பது தெளிவாகப் புரிந்தது.

**டி. ஆர். தாசன்**
வேடசந்தூர்.

தேசிய நதிகளை இணைக்க வேண்டியது காலத்தின் கட்டாயம் என்பது இன்றளவில் இந்தியாவெங்கும் ஒலிக்கின்ற குரலாக இருக்கின்றது. வறண்ட பகுதிகளை வளப்படுத்த நதிநீர் இணைப்பு அவசியம் என்று பல்வேறு பக்கங்களில் இருந்தும் முழுவீச்சோடு முழக்கங்கள் கேட்கும் இவ்வேளையில் 'இது சாத்தியமா?' என்ற முனைவர். ஏ. வைத்திய நாதனின் கேள்வி சற்று அசாத்தியமானதாக இருக்கின்றது. ஒவ்வொரு சாதனைக்கும் முன்னால இது சாத்தியமா? என்ற கேள்வி எழுந்து அந்தச் செயல் முடக்கப்பட்டிருந்தால் எத்தனையோ – அல்ல; அத்தனை சாதனைகளும் நிகழ்த்தப்படாமலேயே போயிருக்கும்.

ஆனாலும் நதிநீர் இணைப்பின் வெற்றிகளை நிர்ணயிக்க அதன் பல்வேறு கூறுகளை ஆராய்தலும் தெளிதலும் சாதனையின் முதல்படி எனலாம். அதே வேளையில் சங்கீதா ஸ்ரீராம் கொடுத்துள்ள வரலாற்றுப் பதிவுகளும் நதிநீர் இணைப்பினால் எதிர்காலத்தில் சந்திக்க விருக்கும் ஏமாற்றமும் சிந்திக்க வேண்டிய நல்ல எச்சரிக்கை. அவரது அறிவார்ந்த தீவிர அலசல் ஒவ்வொரு தனி மனிதனுக்கும் சென்று சேரவேண்டும்.

இரண்டு கட்டுரைகளையும் வைத்துப் பார்க்கும்போது நதிநீர் இணைப்பிற்குச் செலவிடும் ஐம்பது லட்சம் கோடிக்கும் மேற்பட்ட பணத்தை மழைநீர் சேகரிப்பதற்கும் மரம் வளர்ப்பு மற்றும் அது சம்மந்தமான விழிப்புணர்விற்கும் பயன்படுத்துவது புத்திசாலித்தனம் என்றுகூடத் தோன்றுகிறது. தக்க தருணத்தில் நல்ல ஆய்வுகளை வெளிக்கொணர்ந்த காலச்சுவடின் பணி பாராட்டுதலுக்கும் போற்றுதலுக்கும் உரியது.

**சிபிகுமாரன்**
பரமக்குடி.

தற்போதைய கூட்டணியின் ஸ்திரத்தன்மையைத் தென்மாநிலங்களே ஓரளவு நிர்ணயிப்பதால் தென்னக நதிநீர் இணைப்புத் திட்டத்தை முன்வைத்து மத்திய அரசும் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள நினைப்பதுபோலத்தான் தோன்றுகிறது. கோடையில் தென்னிந்தியாவே வறண்டுபோகும்போது இத்திட்டம் எதற்காக? அணைக்கட்டுகள் கட்டும்போது இடம்பெயர்ந்த மக்களுக்கே இன்னும் முழுமையான இழப்பீடு வழங்காத நம் தேசம் பல நூறு சதுரமைல் பரப்பளவில் வாழும் மக்களுக்கு இழப்பீடு வழங்குவது சாத்தியமா?

இந்நிலையில் குறைந்த நிதிஆதாரம் கொண்ட திட்டங்கள்தான் வெற்றியைத் தரும் என்ற மாற்றுக் கருத்து கவனிக்க வேண்டிய ஒன்றாகும். நதிநீர்ப் படுகையில் வாழும் மக்கள் வறட்சியான காலங்களில் பிரச்சனைக்கு உட்பட்ட இருதரப்பினரும் ஒருமித்து சுழற்சி முறையில் பயிரிடுதல், நீர்வரத்துள்ள பகுதிகளில் மழைநீர் சேகரிப்பு அமைப்பது, கசிவு நீர்க்குட்டைகள் அமைப்பது போன்ற மாற்றுத் திட்டங்களை மத்திய அரசு செயல்படுத்தும் பட்சத்தில் வறட்சி என்பது வரலாற்றில் காணவேண்டிய ஒன்றாக மாறிவிடும்.

**புயல் ஒலி**
தேன்கனிக்கோட்டை.



படிப்பகம்

www.padippakam.com

வனத்தில் போலீஸ் அடித்துப் பாதிக்கப் பட்டுப் பைத்தியம் பிடித்து மரணமடைந்த இமாம் குடும்பத்துக்கு 1.5 லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டது. கூட்டத்தில் உரையாற்றிய மாநிலத் தலைமை நிர்வாகி கள் "ஷைத்தான்கள் சென்னையிலிருந்து தப்பி ஓடித் தஞ்சாவூருக்கு நழுவிவிட்ட தாக" இடஒதுக்கீடுப் பேரணியை இழிவு படுத்திக் கிண்டலடித்தனர்.

கட்டுரையாளர் முஸ்லிம் நடப்புகளை அறிந்திருக்கவில்லை. இட ஒதுக்கீடு தேர்தல் அரிப்பு முழக்கம். அவ்வளவு தான். வாழ்வுரிமைக் கோரிக்கையல்ல.

**ரசூல் மொஹிதீன்**
வடலூர் 607 303

சுஜாதா பன்முகத்தன்மை கொண்ட ஒரு நல்ல எழுத்தாளர். அவரது புறநானூறு ஓர் எளிய அறிமுகம், இன்றைய இளைஞர் களுக்கான ஓர் எளிய முயற்சி. ஆர்வ மிகு தியால் குறைகள், பிழைகள் இருக்கலாம். நுண்மாண் நுழைபுலம் மிக்கவர்கள் செய்ய இயலாத, முடியாத (எளிமைப் படுத்துவது எளிதன்று) முயற்சியை வாழ்த்தி வரவேற்க வேண்டாம். குத்திக் காயப்படுத்தாமல் இருக்கலாமே. பாழ் கிணற்றிலிருந்து தப்பினேன் என்கிறார் ஒருவர். இலக்கியப் பாமரனை ஏமாற்றும் வித்தை என்கிறார் ஒருவர். வெட்டிவேலை என்கிறார் மற்றொருவர். நான் சுஜாதா வுக்குப் பதில் சொல்ல விரும்பவில்லை என்று சொல்கிறார் 'கனியிருப்பக் காய் கவர்ந்தற்று' என்று மாணவர்க்குப் போதிக் கும் பேராசிரியர். பிழைகளை மென்மை யாகக் சுட்டிக்காட்டியிருக்கலாம். ஆளைப் பார்க்காமல் எழுத்தைப் பார்த்திருக்கலாம்.

**நாஞ்சிலமுதன்**
சுசீந்தரம்

எனது கவிதைகள் தேர்வு செய்யப்பட வில்லை என்ற கடிதம் கிடைத்தது. உண்டு அல்லது இல்லை என்ற பதிலை உடனே படைப்பாளர்க்கு அனுப்புவது தான் உயர்ந்த பத்திரிகைத் தர்மம். வளர வேண்டும், வளர்ந்து படர வேண்டும் என்று எண்ணுகிற பத்திரிகைக்கு இம் மாதிரியான அணுகுமுறைதான் ஆரோக் கியமான அடித்தளம்.

**ராஜன்**
ஏரல்

தாங்கள் எனக்கு அனுப்பியிருந்த கடிதமே என் கதை பிரசுரம் ஆகிவிட்ட திருப்தியைத் தந்துவிட்டது. தேர்வு செய்யப்படாத கதையானாலும் சரி, மதித்துப் பதில் அனுப்பத் தோன்றிய காலச்சுவடு மேன்மேலும் வாசக நெஞ்சத்தில் உயரிய இடத்தைப் பிடித்து விடும் என்பதில் அய்யமில்லை.

**ஆர். பி**
திண்டுக்கல்

கவிதைகள் தேர்வு செய்யப்படவில்லை என்ற தங்களது பதில் கண்டு வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்தேன். ஏனெனில் நான் பல பத்திரிகைகளுக்குக் கவிதை களை அனுப்பியிருந்தேன். ஆனால் எந்த பதிலும் வந்ததில்லை. படித்தாவது பார்த்திருப்பார்களா என்று சந்தேகம். ஆனால் காலச்சுவடின் இத்தகைய பதில் மிக்க மகிழ்ச்சியைத் தந்தது. காலச்சுவடு, வாசகனின் உணர்வுகளுக்கு மதிப்பளிப் பதில் இணையற்றதென்பது தெளிவாகிறது.

**டாக்டர் தீபக்**
மயிலாடுதுறை

சென்ற இதழில் கடிதங்கள் பகுதியில் பொன். இளவேனில் என்பவர் நியாயமற்ற அவதூறை என்மீது பொழிந்துள்ளார். எனது நேர்காணலில் கூறியிருந்த நாமக் கல் பழமொழியின் பொருள் மிக எளிமை யானது. குற்றம் செய்யாதே என்று சொல் லும் பெரியவர்களே குற்றவாளிகளாக இருப்பதை நாட்டுப்புற மொழியில் நச் சென்று குட்டுவது அப்பழமொழி. அதில் வக்கிரம் காண முயல்வது அறியாமை.

ஜெயமோகன், இத்தகைய பிழை நேர்ந்ததை அப்போதே அறிந்திருக்கிறார். அதற்குபின் 'சொல் புதிது' இதழும் வந்திக் கிறது. மேலும் ஜெயமோகனுக்கு இணை யம் உள்ளிட்ட பல்வேறு ஊடகங்களும் எழுத வாய்ப்பளிக்கின்றன. எனினும் அவர் இவ்விஷயம் பற்றி எதுவும் பேசாமல் பல காலம் மௌனம் காத்தார். அதனைக் கண்டுபிடித்து எழுதிய பிறகும் அவரிட மிருந்து உடனடி எதிர்வினை இல்லை. இணையம் உள்ளிட்ட ஊடகங்கள் வழியாக இத்திருட்டு விஷயம் உலகம் முழுவதும் சென்ற பின்தான் அவருடைய மறுமொழி வந்தது. காலம் கடந்து கிடைக்கும் நீதி அநீதி என்பார்கள். ஜெயமோகனின் பதிலும் அத்தகையதே.

**பொ. வேல்சாமி**
நாமக்கல்




## கவிஞரின் படைப்புகள் பற்றிய ஆய்வு நூல்கள்

### கண்ணதாசன் பதிப்பகம்

23, கண்ணதாசன் சாலை, தியாகராய நகர், சென்னை – 600 017.
தொலைபேசி : 24332682 / 5207776
மதுரை – 625 003, தொலைபேசி: 0452 – 2608793
பாண்டிச்சேரி – 605 001, தொலைபேசி: 0413 – 2221332

விளம்பரம்

| | |
|---|---|
| கண்ணதாசனின் கவி அலைகள் – *முனைவர் எம். பாலு* | 50.00 |
| கவிஞர் கண்ணதாசனின் கவி இன்பம் – *முனைவர் எம். பாலு* | 50.00 |
| வெள்ளித்திரையில் கவிஞர் கண்ணதாசனின் தங்க இலக்கியங்கள் – *வி. சுந்தரம்* | 45.00 |
| கவிஞர் கண்ணதாசனின் பாநயம் – *சிலோன் விஜேயந்திரன், எம்.ஏ., டிலிட்.* | 40.00 |
| கண்ணனைக் கண்ட கவிஞன் – *சி. ஆர். ரவீந்திரன்* | 120.00 |
| கவிஞர் கண்ணதாசனின் திரையிசைப் பாடல்களில் – காதல் – *முனைவர் சாமி. திருமாவளவன்* | 20.00 |
| கண்ணதாசன் கவிதைகளில் இறையுணர்வு – *முனைவர் சித்திரா திருமாவளவன்* | 18.00 |
| திரை இசைப்பாடல்களில் காவிய வர்ணனைகள் – *வி. சுந்தரம்* | 21.00 |
| கண்ணதாசன் திரை இசைப் பாடல்களில் மனிதமனம் – *நாக ஜெகசிற்பியன்* | 25.00 |
| கவிஞர் கண்ணதாசன் பொன்விழா மலர் – *இராம. கண்ணப்பன்* | 51.00 |
| வாழ்க்கைத் தெருவெங்கும் கவிதைகள் – *ஜெ. கமலநாதன்* | 28.00 |
| கண்ணதாசன் காவியம் – *கவிஞர் அழகிரி* | 36.00 |
| கவியரசர் கண்ணதாசனின் கவிதைகளில் உலகியல் நோக்கு – *எம். ஜெயபோஸ், எம்.ஏ., எம்ஃபில்., பி.எச்.டி.* | 60.00 |
| கண்ணதாசனின் கவிதைகளில் அறிவியல் – *மித்ரா* | 41.00 |
| வால்ட் விட்மனும் கண்ணதாசனும் – *முனைவர் சித்திரா திருமாவளவன்* | 33.00 |
| இராபர்ட் பிராஸ்டும் கண்ணதாசனும் – *முனைவர் சக்கர இலக்குமிகாந்தன்* | 42.00 |
| கண்ணதாசன் ஆய்வுமாலை – *முனைவர் சித்திரா திருமாவளவன்* | 30.00 |
| கண்ணதாசன் கவிதைகளில் தத்துவம் – *பெ. இளவரசு, எம்.ஏ., எம்.எட்.,* | 24.00 |
| கண்ணன் கோயில் புறவை – *முனைவர் சாமி. திருமாவளவன்* | 32.00 |
| கண்ணதாசன் கவிதைகளில் சமுதாயச் சிந்தனைகள் – *வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல்.* | 30.00 |
| கவிஞர் கண்ணதாசனின் திரைஇசைப் பாடல்களில் இலக்கியம் – *சு. சுப்பிரமணியம், எம்.ஏ.,* | 9.00 |
| திரை இசைப் பாடல்களில் தாலாட்டு – *முனைவர் சாமி. திருமாவளவன்* | 18.00 |



படிப்பகம்

www.padippakam.com



# திருத்தப்பட வேண்டிய வரலாறு

தன் கட்சியின் தோல்விக்குக் காரணமாகக் குஜராத் படுகொலைகளை வாஜ்பாய் சுட்டிக்காட்டியிருந்தார். அதற்கு இணையான வேறு பல காரணங்களும் உள்ளன. மனிதவள மேம்பாட்டுத்துறையில் (HRD) செய்யப்பட்ட மாற்றங்கள் அவற்றுள் முக்கியமானவை.

வரலாற்றுப் பாடங்களை இந்துத்துவ நோக்கோடு திருத்தி எழுதியது; பல்வேறு கல்வி நிறுவனங்களிலும் முக்கியப் பொறுப்புகளில் இந்துத்துவச் சார்பு நபர்களை அமர்த்தியது; பல்கலைக்கழகங்களில் சோதிடம், புரோகிதம் முதலிய பாடங்களைத் தொடங்கியது; இந்துத்துவச் சார்புத் தன்னார்வக் குழுக்களுக்கு (NGO) நிதிஉதவி செய்தது; ஐ. சி. எச். ஆர். (ICHR) ஐ. சி. எஸ். எஸ். ஆர். (ICSSR) முதலான வரலாறு சம்பந்தப்பட்ட அமைப்புகளில் தலையிட்டு அவற்றின் ஆய்வுப் பணிகளை இந்துத்துவ நோக்கோடு மாற்றியமைத்தது - இப்படியான காரியங்கள் குஜராத் இனப் படுகொலைகளைப் போலவே கடும் எதிர்ப்பைக் கொண்டுவந்தன. பண்பாட்டுத் தளத்தில் ஆழமான, நீண்டகாலப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய இந்த நடிவடிக்கைகளை மாற்றப்போவதாக இப்போதைய மத்திய அரசு கூறியுள்ளது.

அர்ஜுன் சிங் மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சராகப் பொறுப்பேற்றதும் இந்த வேலைகள் ஆரம்பமாகிவிட்டன. முரளி மனோகர் ஜோஷி காலத்தில் நியமிக்கப்பட்ட வி. எம். பாண்டே முதலிய அதிகாரிகள் நீக்கப்பட்டனர். என். சி. ஈ. ஆர். டி. (NCERT) அமைப்பின் தலைவராயிருந்த ஜே. எஸ். ராஜ்புட் விருப்ப ஓய்வு கோரியுள்ளார். முஷிருல் ஹசன் டெல்லியில் உள்ள ஜாமியா மிலியா இஸ்லாமியா பல்கலைக்கழக துணைவேந்தராக நியமிக்கப் பட்டுள்ளார். இவை தவிர ஜோஷி காலத்தில் பல கோடி ரூபாய் நிதி உதவியோடு தொடங்கப் பட்ட மாட்டு மூத்திர ஆராய்ச்சிக் கூடங்கள் தொடருமா என்பதும் கேள்விக்குறியாகியுள்ளது.

வரலாற்றுப் பாடநூல்களைத் திருத்தி எழுதியதென்பது என். சி. ஈ. ஆர். டியில் நடந்தது. அப்படித் திருத்தி எழுதப்பட்ட பாடநூல்கள் சி. பி. எஸ். ஈ. மாணவர்களுக்குப் போதிக்கப் பட்டன. நாட்டிலுள்ள பள்ளிகளில் சி. பி. எஸ். ஈ. பள்ளிகள் சுமார் ஐந்து சதவீதமேயாகும். எனவே இந்துத்துவ நோக்கிலான இந்த நடவடிக்கை பெரும்பாலான மாணவர்களைப் பாதிக்க வில்லை எனக் கூறப்படுகிறது. ஆனால் மத்திய அரசின் நடவடிக்கையைத் தொடர்ந்து பல்வேறு மாநில அரசுகள் மேற்கொண்ட நடவடிக்கைகள் மோசமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன. இப்போதும் பல மாநிலங்களில் பா. ஜ. க. ஆட்சி இருப்பதால் அங்கெல்லாம் இத்தகைய பாடத்திட்டங்கள் தொடர்வதற்குத் தடையெதுவும் இல்லை. அவற்றை மாற்ற வேண்டுமென்றால் 2000இல் உருவாக்கப்பட்ட, 'பள்ளிக்கல்விக்கான தேசியப் பாடத்திட்டச் சட்டகம்' மாற்றியமைக்கப்பட வேண்டும். அத்துடன் கடந்த ஆட்சியின்போது முடக்கப்பட்ட, 'கல்விக்கான மத்திய ஆலோசனைக்குழு' (CABE) மீண்டும் செயல்பட வேண்டும்.

•

வரலாற்றுப் பாடங்களைத் திருத்தி எழுதியது பற்றி விமர்சிக்கும் 'இடதுசாரிகள்' வேறு சிலவற்றைப் பற்றிப் பேசுவதில்லை. அதே காலத்தில் 'மதச்சார்பற்ற' கட்சிகளின் ஆட்சி நடந்த மாநிலங்களில் எத்தகைய பாடங்கள் பயிற்றுவிக்கப்பட்டன என்பதை அவர்கள் ஆராய்வதில்லை. அதுபோலவே அவ்வப்போது நிகழ்ந்துவரும் அகழ்வராய்ச்சிக் கண்டு பிடிப்புகளையொட்டி அதுவரையில் எழுதப்பட்டுவந்த வரலாற்றில் செய்யப்படவேண்டிய மாறுதல்கள் குறித்தும் அவர்கள் கவலைப்படுவதில்லை.

வரலாற்றுப் பாடங்களை இந்துத்துவவாதிகள் திருத்தி எழுதியது பற்றி விமர்சிப்பவர்கள் பெரும்பாலும் வடஇந்திய உதாரணங்களை மட்டுமே குறிப்பிடுகின்றனர். ஆங்கிலக் கட்டுரைகளில் வரும் உதாரணங்கள், மேற்கோள்கள் முதலியவற்றை அப்படியே இங்கு எடுத்துக்காட்டுகின்றனர். தமிழ்நாட்டில் பயன்படுத்தப்படும் பாடநூல்கள் குறித்த ஆய்வுகள் எதுவும் செய்யப்படவில்லை.

கடந்த தி. மு. க ஆட்சியின்போது உருவாக்கப்பட்ட பாடநூல்களிலும்கூட இந்துத்துவச் சார்புக் கருத்துகள் பதிவாகியுள்ளன. 1997இல் தயாரிக்கப்பட்டு 2004இல் மறுபதிப்பு



படிப்பகம்

www.padippakam.com

செய்யப்பட்டுள்ள பத்தாம் வகுப்பு (மெட்ரிக்) வரலாற்றுப் பாடநூலில் (ஆங்கிலம்) இடம்பெற்றுள்ள கருத்துகளை இதற்கு உதாரணமாகக் காட்டலாம்:

"தேசிய இயக்கத்தின் வளர்ச்சியைத் தடுப்பதற்காக பிரிட்டிஷார் பிரித்தாளும் சூழ்ச்சியைக் கையாண்டனர் . . . . (பிரிட்டிஷ்) அரசு பிரிவினைவாத உணர்வுகளை ஊக்குவித்தது, குறிப்பாக முஸ்லிம் மேல்தட்டு வர்க்கத்தினரிடம் அத்தகைய உணர்வுகளை ஊக்குவித்தது. கவர்னர் ஜெனரலால் ஊக்குவிக்கப்பட்டு 1906 டிசம்பரில் நவாப் சலிமுல்லாகான் என்பவரால் முஸ்லிம் லீக் உருவாக்கப்பட்டது." (பக். 103).

"(இந்தியாவில்) ஒற்றுமையை உருவாக்குவதில் முக்கிய அம்சமாக இருந்தது நாடு முழுவதும் பரவிய இந்துமதம்." (பக். 124)

"முஸ்லிம்கள் இந்தியாவுக்கு வந்த 12ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு இங்குப் பல்வேறு அறிவியல் துறைகளும் வீழ்ச்சியடையத் தொடங்கின." (பக். 165)

இப்படியான 'மதச்சார்பற்ற' கருத்துகளைக் கொண்டே அந்தப் பாடநூல் தி. மு. க ஆட்சியின்போது தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த ஆட்சியிலும் அதுவே நீடிக்கிறது. மற்ற வகுப்புகளுக்கான பாடநூல்களும் இதுபோல 'மதச்சார்பின்மையை' வளர்க்கின்ற கருத்துகளைத்தான் கொண்டிருக்கும் என நம்புவோம்.

•

வரலாற்றுப் பாடங்களை இந்துத்துவவாதிகள் கெடுத்துவிட்டார்கள் என்னும்போது, அதற்குமுன் அந்தப் பாடங்கள் சிறப்பாக இருந்தன என்று பொருள்படுகிறது. ஆனால் உண்மை அதுவல்ல. அதற்கு முன்பும் இப்படியான பல திரிபுகள் இருக்கவே செய்தன. இடதுசாரிகள் எனக் கூறிக்கொள்ளும் வரலாற்றாளர்களும்கூடத் தமக்குப் பிடித்தமான பல திரிபுகளைச் செய்தேவந்துள்ளனர். வேதகாலம் பொற்காலம் என்பது வலதுசாரிகள் சொல்லும் கட்டுக்கதை. அதுபோலவே பிரிட்டிஷ் ஆட்சிக்கு முன்னால் மதநல்லிணக்கம் செழித்திருந்தது என்பதும் கட்டுக்கதையே. இது இடதுசாரிகள் பரப்பும் கட்டுக்கதை.

இடதுசாரி வரலாற்றாளர்களும்கூடப் பௌத்தம், சமணம் தொடர்பான ஆய்வுகளில் நடுநிலையோடு நடந்துகொள்வதில்லை. சாதிப் பிரச்சினையை அணுகுவதில் அவர்களது பக்கச் சார்புகள் யாவரும் அறிந்தவை. இவை மட்டுமின்றித் தொடர்ந்து அகழ்வராய்ச்சிகள் வெளிப்படுத்திவரும் ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு தமது நிலைப்பாடுகளை மறுபரிசீலனை செய்வதிலும் இடதுசாரி வரலாற்றாளர்கள் அவ்வளவு முனைப்புக் காட்டுவதில்லை.

இவற்றிலிருந்து நாம் வந்துசேரும் முடிவு இதுதான்: இந்துத்துவவாதிகளால் மட்டுமல்லாது இடதுசாரிகளாலும் திராவிட இயக்கத்தினராலும் திரிக்கப்பட்ட வரலாற்றுப் பாடங்களைத் திருத்தி எழுத வேண்டும். ஆனால் அதை இடதுசாரி மற்றும் திராவிடக் கட்சிகளின் ஆதரவோடு செயல்பட்டுவரும் காங்கிரஸ் தலைமையிலான இந்த அரசு நடுநிலையாகச் செய்ய முடியுமா என்பதுதான் கேள்வி.

## கடிதம், விவாதம், படைப்பு...

- காலச்சுவடு மாத இதழாக வருவதால் வாசகர் கடிதம் அனுப்புபவர்கள் ஒவ்வொரு மாதமும் 15ஆம் தேதிக்குள் கடிதம் எங்களுக்குக் கிடைக்குமாறு அனுப்புக. 15ஆம் தேதிக்கு மேல் வரும் கடிதங்கள் அடுத்த மாதத்திற்கான பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படாது. மின்னஞ்சலில் கடிதம் அனுப்புவோர் (kalachuvadu @sancharnet.in) TAM, TAB, TSCII, Bamini ஆகிய குறியீடுகள் கொண்ட எழுத்துருக்களைப் பயன்படுத்துக.
- விவாதம் பகுதிக்கு எழுதுவோர் தங்கள் கருத்துகளை 500 சொற்களுக்கு மிகைப்படாமல் எழுதவும்.
- படைப்புகள் அனுப்புவோர் பிரதி எடுத்து வைத்துக்கொண்டு அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம். கவிதைகளைத் தபால் கார்டில் எழுதி அனுப்ப வேண்டாம். மொழிபெயர்ப்புகளை அனுப்புவோர் மூலத்தின் ஒளிநகலையும் இணைக்க வேண்டும். படைப்புகளைத் திருப்பி அனுப்ப இயலாது. எனவே தபால் தலைகளை இணைக்க வேண்டாம். பிரசுர விவரம் கடிதம் மூலம் மூன்று மாதங்களுக்குள் தெரிவிக்கப்படும்.
- காலச்சுவடில் அதன் வாசகர்களுக்கான இடம் 'திறந்த வெளி'யாக விரிவடைகிறது. இதழில் வெளியாகும் விஷயங்களைப் பற்றி மட்டுமன்றி தங்களுக்கு முக்கியமாகப்படும் எந்த விஷயம் குறித்தும் வாசகர்கள் தங்கள் கருத்தைப் பதிவு செய்வதற்கான வெளி இது. சமூகம், இலக்கியம், சினிமா, நாடகம், சூழலியல் என்று எந்தத் துறை சார்ந்தும் தங்கள் கருத்துக்களை வாசகர்கள் இந்த வெளியில் முன்வைக்கலாம். ஆதாரமற்ற தகவல்கள், அவதூறு என்று சொல்லத்தக்க விமர்சனங்கள் போன்றவற்றைத் தவிர்க்குமாறு கேட்டுக்கொள்கிறோம். அதிகபட்சம் 300 வார்த்தைகளில் உங்கள் பதிவுகள் இருக்கலாம்.


படிப்பகம்

www.padippakam.com





# காவிரி: புலப்படாத் தண்ணீர்

ஆதவன்

இலங்கைப் பிரச்சினையே தீர்ந்தால்கூடக் காவிரிப் பிரச்சினை தீரப்போவதில்லை என்பது யாவரும் அறிந்த உண்மை. அரசியல்வாதிகளாலும், சில சினிமாக் காரர்களாலும் கேளிக்கையாக மாற்றப்பட்டுவிட்ட காவிரிப் பிரச்சினையில் மனுக் கொடுப்பது, குமுறுவது எனக் காட்சிகள் மாறுவதில்லை; வசனங்களில் மட்டும்தான் சிறுசிறு மாற்றங்கள்.

காவிரிப் பாசன விவசாயிகள் பிரச்சினையென்பது தமிழ்நாடு முழுவதையும் பாதிக்கும் பிரச்சினையாகும். எனவே அதற்கான மாற்றுகளைச் சிந்திக்க வேண்டிய கடமை அனைவருக்கும் உள்ளது. விவசாயிகள் பயறு வகைகள் உள்ளிட்ட மாற்றுப் பயிர்களை முயற்சித்துப் பார்க்க வேண்டும் எனச் சென்ற ஆண்டு ' யோசனை' சொன்ன ஜெயலலிதா தேர்தல் கற்பித்த பாடத்தில் தனது வசனத்தை இப்போது மாற்றிக்கொண்டுவிட்டார்.

அதிகம் தண்ணீர் தேவைப்படுகிற நெல்லுக்குப் பதிலாக வேறு பயிர்களைச் சாகுபடி செய்யும் யோசனை பஞ்சாபிலும் முன்வைக்கப்பட்ட ஒன்றுதான். நெல், கோதுமை ஆகியவற்றைப் பயிரிடுவதிலிருந்து மாறி வேறு பயிர்களைப் பயிரிடுவதற்கு ஊக்குவிக்கும் விதமாகப் பஞ்சாப் மாநில விவசாயிகளுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ. 12,500 மானியம் வழங்கும் திட்டமொன்றைப் பஞ்சாப் மாநில அரசு தயாரித்துள்ளது. இதற்கு ஆண்டுக்கு சுமார் ரூ. 1280 கோடி செலவாகுமெனக் கணக்கிட்டு அத்தொகையை மத்திய அரசு மானியமாக வழங்க வேண்டுமெனப் பஞ்சாப் அரசு கோரிவருகிறது.

உலகில் சுமார் 60 சதவீத மக்கள் அரிசி உணவையே உட்கொள்ளுகின்றனர். அதை விளைவிக்க உலகில் கிடைக்கும் நல்ல தண்ணீரில் 85 சதவீதம் நீர் செலவாகிற தெனக் கணக்கிடப்பட்டுள்ளது. ஆசிய நாடுகளில் அரிசி உணவு சாப்பிடுவோர் அதிகம். எனவே இந்த நாடுகளில் தண்ணீரின் பயன்பாடும் அதிகம். இதன் காரணமாகத் தண்ணீர்ப் பற்றாக்குறையால் இந்த நாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காகப் பரிந்துரைக்கப்படும் வழிகளில் புலப்படாத் தண்ணீர் (virtual water) என்பதும் ஒன்றாகும். நீர் நிர்வாகம் பற்றிய விவாதங்களில் பத்து ஆண்டுகளுக்கு முன்பு புகுத்தப்பட்ட இந்தக் கருத்தாக்கம் இப்போது வளர்ச்சியடைந்த நாடுகளால் ஆதரிக்கப்படுகிறது.

கடந்த ஏப்ரல் 20 அன்று நியூயார்க்கில் கூடிய 'தொடர்ந்த வளர்ச்சிக்கான ஐ. நா. சபைக் கமிஷன்' கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை புலப்படாத் தண்ணீர் என்ற தீர்வை அழுத்தமாக முன்வைத்துள்ளது. புள்ளிவிவரங்களின்படி உலகம் முழுவதும் 840 மில்லியன் மக்கள் சத்துக்குறைவால் பாதிக்கப் பட்டுள்ளனர். வரும் இருபது ஆண்டுகளில் மேலும் இரண்டு பில்லியன் மக்கள் இதில் சேருவார்கள் என எச்சரித்துள்ள அந்த அறிக்கை நீர் உற்பத்தியை மேம்படுத்துவது பற்றி வலியுறுத்தியுள்ளது.

புலப்படாத் தண்ணீர் என்ற கருத்தாக்கத்தைச் சுருக்கமாக இப்படி விளக்கலாம்: நாம் சாப்பிடும் உணவுப் பொருள் எதுவொன்றையும் தயாரிக்க ஒரு குறிப்பிட்ட அளவு தண்ணீர் செலவாகியுள்ளது. உதாரணமாக ஒரு மூட்டை அரிசி நம் குடும்பத்துக்கு ஒரு மாதத்துக்குத் தேவைப்படுகிறதென்றால் அதை விளைவிக்கப் பல நூறு காலன் நீர்ச் செலவிடப் பட்டுள்ளது. அதே அரிசியை வேறு நாட்டிலிருந்து நாம் இறக்குமதி செய்தால் அதை விளைவிக்க நாம் செலவிட்ட நீர் நமக்கு மிச்சமாகும். இப்படித் தமது தேவைக்கு அதிகமாக உணவு தானியங்களை உற்பத்தி செய்யும் நாடுகளிலிருந்து தண்ணீர்ப் பற்றாக்குறையுள்ள நாடுகளுக்கு உணவு தானியங்களை ஏற்றுமதி செய்து உலகளவில் நீர் செலவாவதைச் சமநிலைப்படுத்தலாம் என்கிறார்கள். இப்படி உணவு தானியங்களை ஏற்றுமதி/ இறக்குமதி செய்வதன் மூலமாகத் தண்ணீர்தான் ஏற்றுமதி / இறக்குமதி செய்யப்படுகிறது என்பது அவர் களின் வாதம். இப்படி வெளிப்படையாகத் தெரியாத தண்ணீரையே புலப்படாத் தண்ணீர் என்கிறார்கள்.

இது கேட்பதற்கு மிகவும் புரட்சிகரமானதாகத் தெரிகிறது. தமிழ்நாட்டில் காவிரிப் பிரச்சினையை



படிப்பகம்

இப்படித் தீர்த்துவிடலாமே என்றுகூட நமக்கு யோசனை வரலாம். ஆனால் கூர்ந்து பார்த்தால் இதற்குப் பின்னால் உள்ள சதித்திட்டம் நமக்குப் புரியும்.

அமெரிக்கா உள்ளிட்ட வளர்ந்த நாடுகள் தமக்குத் தேவையானவற்றை உற்பத்தி செய்யும்படி 'மூன்றாம் உலக நாடுகளை' நிர்ப்பந்திக்கவும் தம்மிடம் உபரியாக உள்ள உணவு தானியங்களை அவற்றின் தலையில் கட்டவும் இந்தக் கருத்தாக்கத்தைப் பயன்படுத்த முனைகின்றன. உள்நாட்டு உணவு உற்பத்தியை அழித்து அந்த நாடுகள் தம்மைச் சார்ந்து நிற்கும்படிச் செய்வதே இந்தத் திட்டத்தின் உள்நோக்கம். அதுமட்டுமின்றி சைவ உணவைவிட அசைவ உணவுக்கே அதிகம் தண்ணீர் செலவாகிறது எனக் காரணம் காட்டி ஒருவிதக் கலாச்சாரப் பாசிசத்தைத் திணிக்கவும் இந்தக் கருத்தாக்கம் வழிவகுக்கிறது.

இந்த அறிக்கையில் இந்தியா குறித்துச் சொல்லப் பட்டுள்ள தகவல்கள் கவனத்துக்குரியவையாகும். தற்போது இந்தியாவில் ஒரு ஹெக்டேருக்கு 2.7 டன் தானியம் உற்பத்தி செய்யப்படுகிறது. அதற்குச் சுமார் 600 க்யூபிக் கிலோ மீட்டர் தண்ணீர் பயன்படுத்தப் படுகிறது. 2025ஆம் ஆண்டில் ஏற்படப்போகும் உணவுத் தேவையைச் சமாளிக்க இன்றுள்ளதுபோல இருமடங்கு தண்ணீர் தேவைப்படும். இதைச் சொல்லித்தான் நதிநீர் இணைப்புத் திட்டத்தை ஆதரிப்பவர்கள் வாதிடுகின்றனர். நதிகளை இணைத்தால் மேலும் 34 மில்லியன் ஹெக்டேர் நிலம் பாசனவசதிபெறும் என அவர்கள் கூறுகின்றனர்.

பற்றாக்குறையை வேறு விதமாகச் சமாளிக்க முடியாதா? உணவு தானிய உற்பத்தியை ஹெக்டேருக்கு 70 சதவீதம் அதிகரிப்பதன் மூலம் இதை எதிர்கொள்ள முடியும். இப்போதுள்ள ஹெக்டேருக்கு 2.7 டன் என்ற அளவைச் சீனாவில் உள்ள ஹெக்டேருக்கு 4.6 டன் உற்பத்தி என்ற அளவுக்கு உயர்த்தினால் இதே நீரைக்கொண்டு இந்தியாவின் உணவுத்தேவையை நிறைவுசெய்ய முடியும். அதற்கு வீரியமான உணவு தானிய விதைகளை உற்பத்தி செய்வதற்கான ஆராய்ச்சி கள் மேற்கொள்ளப்படுவது அவசியமாகும்.

இந்த ஆராய்ச்சியைப் போலவே குறைவான நீரைக் கொண்டு அதிக அளவு உணவு தானியங்களை உற்பத்திசெய்யும் ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட வேண்டும். இதில் நம்பிக்கையூட்டும் கண்டுபிடிப்பு ஒன்றைப் பஞ்சாப்பில் உருவாக்கியுள்ளார்கள். லூதியானாவுக்கு அருகில் உள்ள கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள். இப்போது செலவாகும் நீரைவிடச் சுமார் 60 – 70 சதவீதம் குறைவான நீரில் இதே அளவு நெல்லை உற்பத்திசெய்ய முடியும் என நிரூபித் துள்ளார்கள். நாற்றைப் பறித்து நடுவதில் சில எளிய மாற்றங்களைச் செய்து அவர்கள் இதனைச் சாதித்துள்ளனர். இதனால் நீர் மட்டுமின்றி உரம் மற்றும் மின்சாரச் செலவுகளும் கணிசமாகக் குறைகின்றன. ஜே. டி. எம். ஃபவுண்டேஷன் என்ற நிறுவனம் இந்த ஆய்வில் முன்னோடிப் பங்காற்றி யுள்ளது. கடந்த நான்கு ஆண்டுகளாகப் பஞ்சாப்பின் பல கிராமங்களிலும் இந்த முறை செயல்படுத்தப்பட்டு வெற்றிகரமாக நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆனால் மத்திய அரசிடமிருந்து 1280 கோடி மானியம் பெறுவதிலும் அதைப் பங்கிடுவதிலுமே கவனமாக உள்ள பஞ்சாப் மாநில அரசும் மாற்றுப் பயிர்த் திட்டத்தால் பயிறு வகைகளின் விதைகள் மற்றும் அவற்றுக்கான உரங்களை விற்றுப் பணம் சம்பாதிக்கலாம் என ஆவலோடு காத்திருக்கும் பன்னாட்டு நிறுவனங்களும் இந்த முறையை விரும்பவுமில்லை, ஊக்குவிக்கவுமில்லை.

பயறு வகைகளையும் எண்ணெய் வித்துகளையும் பயிரிடச் சொன்ன முதலமைச்சர் பஞ்சாப் விவசாயி கள் கண்டறிந்துள்ள விவசாய முறையை இங்கு அறிமுகப்படுத்த முன்வரவேண்டும் (மத்திய அரசு ஜெயலலிதாவுக்கு நட்பாக இல்லாத நிலையில் பஞ்சாப் மாநிலத்தைப் போன்று இழப்பீடு கோரிப் பெறுவது சாத்தியமில்லை). எம். ஐ. டி. எஸ் (MIDS) நிறுவனம் இரு மாநில விவசாயிகளுக்கிடையே நட்புறவு ஏற்படுத்த மேற்கொண்ட முயற்சிகளை ஆதரிக்கவும் அரசு முன்வரவேண்டும்.


நன்றி:

1. Dr. Sudhirendar Sharma - rooted in paddy, indiatogether.org, Nov 2003.
2. -do-- saving water to feed the millions, indiatogether.org, April 2004.
3. Sowmya Herbert sivakumar - its callled vintual water - The Hindu, June 6, 2004.



ஈழப் போராட்டத்தில் எனது சாட்சியம்

சி. புஸ்பராஜா

பக்கம்: 632 விலை: ரூ. 275




இது ஓர் ஆய்வு நூலல்ல. ஆய்வாளர்களுக்கெல்லாம் பயன்படக்கூடிய முதன்மை ஆவணம். சொல்லப்படாத தகவல்கள், சங்கேதங்கள், வரலாற்றுக் குறிப்புகள். ஓர் ஈழப் போராட்ட முன்னோடியின் நேரடி சாட்சியம்.

வெளியீடு

அடையாளம்

1204–05, இரண்டாம் தளம், கருப்பூர் சாலை
புத்தாநத்தம் 621 310 ✆ 04332 273444
email: admin@adaiyalam.com

விளம்பரம்

# காலச்சுவடு சிறப்புத் திட்டங்கள்

- ❖ காலச்சுவடு தனி இதழ் ரூ.15. ஆண்டுச் சந்தா ரூ.140. இரண்டாண்டுச் சந்தா ரூ.240. ஐந்தாண்டுச் சந்தா ரூ.600. மாணவர் ஆண்டுச் சந்தா ரூ. 75
- ❖ வெளிநாட்டவர்களுக்கு ஆண்டுச் சந்தா ரூ. 600 இரண்டாண்டுச் சந்தா ரூ.1000. ஐந்தாண்டுச் சந்தா $ 75.
- ❖ காலச்சுவடு ஆயுள் சந்தா ரூ.2500. அயலில் வாழ்பவர்களுக்கு ஆயுள் சந்தா US$ 250. ஆயுள் சந்தாதாரர்கள் ரூ.500க்கான காலச்சுவடு பதிப்பக நூல்களை இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.
- ❖ மூன்று வாசகர்களை சந்தாதாரர்களாகச் சேர்ப்பவர்களுக்கு ஒரு சந்தா அன்பளிப்பாக வழங்கப்படும். இந்தத் திட்டப்படி இரண்டாண்டுச் சந்தா, ஆயுள் சந்தா, ஐந்தாண்டுச் சந்தா, மாணவர் சந்தா, ஆயுள் சந்தா ஆகியவற்றைச் சேர்த்துக் கொடுப்பவர்களுக்கும் இணையான ஒரு சந்தா அன்பளிப்பாக வழங்கப்படும்.
- ❖ ரூ.500க்குக் காலச்சுவடு பதிப்பக நூல்களை எங்களிடமிருந்து நேரடியாகப் பெற்றுக்கொள்பவர்களுக்குக் காலச்சுவடு ஓராண்டுச் சந்தா அன்பளிப்பாக வழங்கப்படும்.
- ❖ காலச்சுவடு இரண்டாண்டுச் சந்தாதாரராகச் சேர்பவர்களுக்கு 6 (பழைய) இருமாத இதழ்கள் அன்பளிப்பாக வழங்கப்படும். இதை இந்தியாவில் இருக்கும் உங்கள் நண்பர்களுக்கும் காலச்சுவடு மூலமாக அனுப்பலாம். இந்தச் சலுகையை பெற விரும்புகிறவர்கள் விபரம் எழுத வேண்டும்.

சந்தாத் தொகையை Kalachuvadu என்ற பெயரில் பணவிடையாகவோ, வரைவோலையாகவோ நாகர்கோவில் / சென்னை வங்கிக் காசோலையாகவோ அனுப்புக. இதரக் காசோலைக்கு ரூ. 40 சேர்த்து அனுப்புக.

**தலைமை அலுவலகம்**
669, கே. பி. சாலை, நாகர்கோவில் 629 001
தொலைபேசி: 04652 278525 /
தொலைநகல்: 04652 231160
மின்னஞ்சல்: kalachuvadu@sancharnet.in

**சென்னை அலுவலகம்**
9/4, முசாபர் ஜங் சாலை, திருவல்லிக்கேணி,
சென்னை 600 005
தொலைபேசி: 31049832
மின்னஞ்சல்: kalachuvadu@yahoo.com

**சந்தாதார் கவனத்திற்கு**

ஒவ்வொரு மாதமும் 26 அல்லது 29 தேதிகளில் சந்தாதாரர்களுக்கு காலச்சுவடு தபால் மூலம் அனுப்பப்படுகிறது. அடுத்த மாதம் 5ஆம் தேதிக்குள் கிடைக்காவிட்டால் காலச்சுவடு அலுவலகத்துக்கு தபால் அல்லது தொலைபேசி அல்லது மின்னஞ்சல் வழி தெரிவித்தால் மாற்றுப் பிரதி அனுப்பி வைக்கிறோம். அயலில் வாழும் வாசகர்கள் 10ஆம் தேதிக்குப் பின்னர் தெரிவிக்கவும்.

தங்கள் முகவரியில் பிழைகள் இருந்தால் சரியான முகவரியைத் தெரிவிக்கக் கேட்டுக் கொள்கிறோம்.

**– ஆசிரியர் குழு**

## காலச்சுவடு பதிப்பகம்: ஜூலை வெளியீடு



**முச்சந்தி இலக்கியம் - ஆ. இரா. வேங்கடாசலபதி**

**பக். 280 விலை ரூ. 140**


**'பெரிய எழுத்துப் புத்தகங்கள்', 'குஜிலி நூல்கள்', 'காலணா, அரையணா பாட்டுப் புத்தகங்கள்', 'தெருப் பாடல்கள்' என்று பலவாறாக அழைக்கப்பட்ட வெகுசன இலக்கியக் கருவூலம் பற்றிய முதல் நூல் இது. மெல்லிய தாளில், மலிவான அச்சில், பெரிய எழுத்தில், பல்வேறு பொருள்கள் பற்றி 19ஆம் நூற்றாண்டின் கடைசியிலிருந்து 20ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை வெளியான வெகுசன இலக்கியம் குறித்த விரிவான ஆய்வு இது. இவ்விலக்கியத்தின் தன்மை, உருவாக்கம், உள்ளடக்கம், இயற்றியோர், வெளியிட்டோர், பரப்பியோர், வாசகர்கள், வாசிப்பு முறை ஆகியவற்றை விரிவாக ஆராயும் நூல் இது. துண்டுதுணுக்குகளாகப் பல்வேறு இடங்களில் சிதறிக்கிடக்கும் அரிய செய்திகளைக் கொண்டு சுவையாகவும் விறுவிறுப்பாகவும் எழுதப்பட்ட நூல்.**

www.padippakam.com



சிறுகதை

கதா–காலச்சுவடு சிறுகதைப் போட்டியில் நான்காவதாகத் தேர்வுபெற்ற கதை



# உப்பாவைச் சொல்லும் கலை

எச். முஜிப் ரஹ்மான்

எனக்கு உப்பாவைப் பற்றிச் சொல்லுவது என்பது எப்போதும் பெருமிதமான விஷயமே. ஏதாவது காரணகாரியம் இன்றியே சந்தர்ப்ப, சூழல் அமையும் பட்சத்தில் அவரைப் பற்றிப் பலமுறை சொல்லி இருக்கிறேன். அப்படி அவரைப் பற்றிச் சொல்லுவதில் என்னைப் பெருமிதப்படவைத்த விஷயங்கள் பலவும் உம்மாவும் வாப்பாவும் உப்பாவின் நண்பர்கள் பலரும் என்னிடத்தில் சொல்லியதுண்டு. அவரைப் பற்றி ஏன் இப்படிப் புளகாங்கிதப்பட்டுச் சொல்கிறேன் என்று நினைத்துப் பார்க்காமலும் இல்லை. இருந்தபோதிலும் உப்பாவைப் பற்றிச் சொல்லுவது என்பதே அலாதியான விஷயம்தான். அவருக்கும் எனக்குமான பேச்சுகள் சிலகாலம் தான் எனினும் உப்பாவைப் பற்றிய பிம்பம் என்பது என்னையே சில சமயம் விழுங்கியதுண்டு. உப்பா சொன்னவைகளைத் தவிர, நான் கேள்விப்பட்டவைகளைத் தவிர ஏதாவது அதிகமாக அறிந்துகொள்ள வேண்டும் என்ற சந்தர்ப்பம் பலமுறை வாய்க்காமல் போனதில்லை. அவரைப் பற்றித் தெரிந்துகொள்ள நான் காட்டிய ஆர்வம் பலமுறை எனக்கே சங்கடமாய்ப் போனபோதிலும் ஆர்வம் மட்டும் மறையாமலே இருந்துவந்தது. ஒரு தனிமனிதனைப் பற்றிப் புகழ்வதோ இகழ்வதோ என்பது அரசியலாக்கிப் பார்க்கப்படும் பார்வை இருந்தபோதிலும் எந்தவித மாய்மாலங்களோ பார்வைகளோ எனக்கு இல்லாமலே அவரைப் பற்றிப் பேசுவதும் தொடர்ந்து சொல்லிக் கொள்வதும் உற்சாகம் அளிக்கும் விஷயங்களே. அவரைப் பற்றி நான் என்ன சொல்கிறேன் என்பதை விட எப்படிச் சொல்கிறேன் என்ற விஷயம்கூட என்னைப் பாதித்த கணங்கள் உண்டு. சந்தர்ப்பம்

படிப்பகம்

www.padippakam.com



கிடைக்கும்போது பேச்சிலே அவரைப் பற்றி ஒரு வரியாவது சொல்லாமல் இருந்தால் எனக்குத் தூக்கமே வருவதில்லை. அவர் சொன்ன விஷயங்களைப் பலமுறை திரித்தும் கற்பனையாக உருமாற்றியும் சில விஷயங்களைச் சேகரித்தும் புனைந்தும் சொல்லியிருக்கிறேன். பேசுவது என்பது எல்லோருக்கும் எளிதான செயல் என்பதால்தானோ இப்படிப் பேச முடிகிறது என்று நினைத்துப் பார்த்தேன். பேசுவதால் ஆன திருப்திகூட முக்கியமாக இருக்கும் என்று ஆசுவாசப்படுத்திய நாள்களும் உண்டு. மேலும் உப்பாவைப் பற்றிப் பிறரிடம் சொல்ல எத்தனிக்கையில் அவரைப் பற்றிச் சொல்லாமல் இருக்கக்கூடாது என்ற பிரக்ஞை நிறைந்த சந்தர்ப்பங்களும் இருந்ததுண்டு. சொல்லுவது அவ்வளவு எளிதான காரியமல்ல என்பது புரிந்த பிறகு அவரைச் சொல்லுவது என்பது எனக்கு விடுத்த சவால் மாதிரியாகத் தோன்றியது. உணர்ச்சி வசப்பட்டுப் பேசுகிறோமோ என்று நினைத்துப் பார்த்து ஆற அமரப் பேசும் அச்சமும் இருந்துவந்தது.



சில நேரங்களில் உப்பாவைப் பற்றிச் சொல்லுவதற்கான சூழல் சரியாக அமையாதபோது கண்ணாடிமுன் நின்று என்னிடம் நான் பேசிக்கொள்வேன். இந்த முறையைப் பிற்காலத்தில் நான்தான் கண்டுபிடித்ததாகப் பெருமைப்பட்டுக்கொண்டபோதிலும் இதுபற்றி யாரிடமும் வாயைத் திறக்கவே இல்லை.

அவரைப் பற்றிப் பேசும்போதோ சொல்லும்போதோ எதிர்க் கேள்விகளை எப்படிச் சமாளிக்க வேண்டுமென்று முன்பெல்லாம் யோசிக்காமல் பேசினபோதும் பிற்பாடு யோசனை செய்து பேசுகின்ற பழக்கமும் தோன்றி அதுவே பழக்கமாய்ப்போனது. அவரைப் பற்றிப் பேச்சை எடுக்கும்போது பலரும் கோபப்பட்டு என்னைத் திட்டியதுகூட உண்டு என்று தெரிந்தபோதும் அவரைப் பற்றிப் பேசாமலிருந்ததில்லை. சில சமயங்களில் பேச்சின் சுவராஸ்யம் முடிந்துவிடக் கூடுமென்று சில விஷயங்களை மட்டும் அவரைப் பற்றிப் பேசி முடித்திருக்கிறேன். பேச்சானபோதும் சொல்லும்போதும் உரையாடல் பற்றிய என் தர்க்க ஞானத்தை வெளிக்காட்டிக்கொள்வதில் விருப்பமேயில்லை. உரையாடல் வடிவைத் தவிர்த்து ஏதேச்சதிகாரமாகச் சொல்லுவது என்பது எனக்குப் பிடித்த கலையாக இருந்தது. பேசுவதற்கு இடையில் உரையாடல் களம் வந்துவிடுவதற்கான சந்தர்ப்பம் தோன்றியவுடன் பேச்சை முடித்துவிட்டுச் சென்றிருக்கிறேன். அவரைப் பற்றிக் கேள்வி கேட்பதும் விசாரணை செய்வதும் பிடிக்காததாகையால் உரையாடல் என்பது எனக்கு அருவருப்பான விஷயமாகத்தான் இப்போதும் இருக்கிறது. சில சமயம் வேலை வெட்டி ஒன்றுமில்லாத நண்பர்களுடன், டீ வாங்கிக் கொடுத்துவிட்டு மணிக் கணக்கில் அவரைப் பற்றிப் பேசிக்கொண்டிருப்பேன். எனது பேச்சை வழிமறித்துக் கேட்கவோ எழுந்து போய்விடவோ முடியாத சூழ்நிலையில் நண்பர்கள் இருக்குமாறு பார்த்துக்கொள்வேன். இன்னும் அதிகமாக ஏதாவது சொல்லிவிடுவார்களோ என்று அவரைப் பற்றிச் சொல்லாமல், வேறு விஷயங்களைப் பேசி ஆர்வத்தையும் ஆவலையும் தூண்டிவிட்டுக்கொண்டே 'உச்' என்றோ 'உம்' கொட்டவோ செய்யாத சமயங்களில் அவரைப் பற்றிப் பேசித் தீர்த்துவிடுவேன்.

அவரைப் பற்றி என் குடும்பத்துடன் அதிகம் பேசுவதைத் தவிர்த்து வந்திருக்கக் காரணம் அவரைப் பற்றி அவர்களுக்கு ஒருவேளை என்னைவிடக் கூடுதலாகத் தெரிந்திருக்கக்கூடும் என்பதால்தான். இருந்தபோதிலும் கேள்விகளை, விசாரணைகளை நான் தொடுப்பதுண்டு. சிலசமயம் அவர்கள் எனக்குப் பதிலளிக்காமல் போகையில் எனக்கே பெருமிதமாக இருக்கும். உடனே அதுபற்றி என் உம்மாவிடமோ உப்பாவின் நண்பர்களிடமோ விசாரிக்காமல் எனக்கு நிம்மதியே வராது. அவரைப் பற்றிய செய்திகளும் தகவல்களும் கிடைக்கக் கிடைக்க எனக்குள் ஒரு மாதிரியான உத்வேகம் பிறக்கும். இன்று பேசுகின்றபோது நான் சொல்கின்ற விஷயங்களில் அவரைப் பற்றிய புதிய செய்திகள் கண்டிப்பாக இருக்கும் என்ற தீர்மானத்தில் மாற்றமிருக்காது. சில சமயம் இப்படிப் புதிய செய்திகளைத் தெரிந்துவைத்துக் கொண்டபோதும் சொல்லுவதற்கான சந்தர்ப்பம் வாய்க்காமல் பழைய தகவல்களையே சொல்லிக்கொண்டிருக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்போது கோபம் கூட வரும். எனினும் அவரைப் பற்றிச் சொல்கின்ற ஒரே ஒரு காரணத்தால் அதை மறந்துவிடுவேன். அவரைப் பற்றிச் சொல்லும்படியான செய்திகள் எனக்கு அதிகம் கிடைத்துக்கொண்டேயிருப்பதால் மற்றவைகளுக்கு அதிகம் மதிப்பளிப்பது கிடையாது. மற்ற விஷயங்கள் அப்படிச் சொன்னாலும் நான் நாலு வார்த்தையில் நறுக்கென்று சொல்லியும் விடுவேன். இப்படியான எண்ணம் மனத்தில் இல்லை என்றாலும் போகப்போக இப்படியான மனநிலையோடுதான் பேசினேன் என்று சொல்வதுதான் உசிதம்.


சில நேரங்களில் உப்பாவைப் பற்றிச் சொல்லுவதற்கான சூழல் சரியாக அமையாதபோது கண்ணாடிமுன் நின்று என்னிடம் நான் பேசிக்கொள்வேன். இந்த முறையைப் பிற்காலத்தில் நான்தான் கண்டுபிடித்ததாகப் பெருமைப்பட்டுக்கொண்டபோதிலும் இதுபற்றி யாரிடமும் வாயைத் திறக்கவே இல்லை. ஒருசமயம் வாப்பா இதைக் கவனித்துவிட்டார் என்று நினைக்கிறேன். கண்ணாடியை அவர் திட்டிக்கொண்டே இருப்பார். அல்லது கண்ணாடி பற்றிக் கோபாவேசப்படுவார் என்பதை அவரது முகம் காட்டிவிடும். என்னைப் பொறுத்தவரையில் கண்ணாடி என்பது பெரிய விஷயமாக இருந்தபோதிலும், வாப்பாவுக்கு இது புரியாமலிருக்கிறதே என்று சந்தேகப்பட்ட தருணங்களும் இருக்கின்றன. வாப்பா திட்டிவிடுவார் என்ற காரணத்திற்காக நான் கண்ணாடி முன்பு அதிகம் பேச முற்படுவது கிடையாது என்பதால், உப்பாவைப் பற்றிச் சொல்லுவதை அதிகம் வீட்டிற்கு வெளியே



படிப்பகம்

www.padippakam.com

உள்ளவர்களிடம் மட்டும் வழக்கமாகக்கொண்டிருந்தேன். பக்கத்து வீட்டுக்காரர்கள் முதலில் அதிக சுவாரஸ்யத்துடன் சொல்லச் சொல்லிப் பேச்சை உசுப்பி விட்டார்கள் என்று நிச்சயமாகச் சொல்ல முடியும். ஆனால் இப்போது அவர்கள் நான் பேசுவதை எள்ளி நகையாடுவர்கள் என்று புரியாமல் இல்லை. எனினும் பக்கத்து வீட்டுக்காரர்களிடம் ஒருவித



வைராக்கியத்துடன் பேச்சைத் தொடங்குவேன். பல்வேறுபட்ட சாக்குப் போக்குகளைச் சொல்லிவிட்டு அவர்கள் தப்பிக்க நினைக்கும்போது உப்பாவைப் பற்றிச் சொல்லுவதை விட்டுவிட்டு அவர்களுக்குப் பிடித்த விஷயங்களைக் கேள்விகளாகத் தொடுப்பேன். முதலில் வெளியே போக முற்பட்டவர்கள் பின்னர் அதிகக் கவனத்துடன் உரையாடுவார்கள். பேச்சு நீண்டுகொண்டே செல்லும் போது இடையே அவரைப் பற்றி ஆரம்பிப்பேன்.

ஒருமுறை தர்ஹா வளாகத்தில் நாலைந்து நண்பர்களுடன் அவரைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கும்போது ஒருவன் இடைமறித்து உப்பாவைப் பற்றி மட்டும் பேசாதீர்கள் என்று கோபத்துடன், அதிகாரத்துடன் சப்தமிட்டான். எனினும் இதைக் கண்டுகொள்ளாமல் நான் பேச்சினைத் தொடர்ந்தபடியே இருந்தமையால் திடீரென்று என்மீது பாய்ந்து என் சட்டையைப் பிடித்து இழுத்து முகத்தில் இடித்துவிட்டதோடு மாத்திரமல்லாது, பிடித்துத் தள்ளியபோது சட்டை கிழிந்துவிட்டது. எனது நண்பர்கள் அந்த மனிதனைப் பிடித்து இழுத்தபோதும் காலால் உதைத்தான். கண்டபடி திட்டினான். பின்னர் நண்பர்கள் அவனை இழுத்துக்கொண்டு போய்விட்டார்கள். என் வாயருகே லேசாக ரத்தம் வடிந்தது. அன்றைய தினம் எனக்கு ரொம்பவும் சங்கடமாகப்போனது. வீட்டில் வந்து விஷயத்தைச் சொல்வதற்குப் பயமாக இருந்த காரணத்தினால் சொல்ல முடியாமல் தடுமாறினேன். யாரும் வீட்டில் இல்லாத தருணம் பார்த்து என் அறைக்குள் நுழைந்துவிட்டேன். பல்லி சப்தமிட்டவாறு இருந்தது. என்னை நோக்கி ஓடிவர ஆரம்பித்தது. என் மனமெல்லாம் திக் என்று அடித்துக்கொண்டது. திகிலோடும் மிரட்சியோடும் பயந்த விழிகளுடன் பின்னகர்ந்து சென்று கட்டிலில் மல்லாந்து விழுந்தேன். அந்தப் பல்லி ராட்சத வடிவில் உருமாறிக் கொண்டு செல்வதாக உணர்ந்தேன். என் பயம் அதிகரிக்க அதிகரிக்க அதன் உருவமும் அதிகரித்தது. என்னை விழுங்கும் அளவுக்குப் பெரிதானவுடன் நான் நினைத்ததற்கு மாறாக அந்தச் சம்பவம் நிகழ்ந்தது. உப்பாவைப் பற்றிப் பேசாதே என்று பல்லி கட்டளையிட்டது. இந்தச் சம்பவத்திற்குப் பிறகு உப்பாவைப் பற்றி யாருடனும் பேசாமலே இருந்துவந்தேன்.

உப்பாவைப் பற்றிச் சொல் என்று சொன்ன உப்பாவைப் போன்ற தோற்றமுடைய பெரியவருக்குச் சொல்வது என்பது உப்பாவிடம் சொல்வது மாதிரி என்ற எண்ணம் தோன்றியது. உப்பாவைப் பற்றி உப்பாவிடமே சொல்வது என்பது இதற்கு முன்பு எனக்கு வாய்க்கவே இல்லை. எனவே எல்லாவற்றையும் மறந்துவிட்டு அவரைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்தேன். எனது புரிதல் குறித்து அவர் ரொம்பவும் மகிழ்ந்தார். மேலும் உப்பாவைப் பற்றிச் சொல்லுவதை நிறுத்திவிடாதே என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டார். உப்பாவே என்னிடம் கேட்பதா என்ற கேள்வியை எனக்குள் கேட்டுக்கொண்டே இனித் தவறாமல் அவரைப் பற்றிப் பேசுவது என்றும் எந்தச் சூழலிலும் சந்தர்ப்பத்திலும் எனக்கு இடையூறு வந்தாலும் அவரைப் பற்றிச் சொல்லாமல் இருப்பதில்லை என்றும் தீர்மானித்துக்கொண்டேன்.

இனி யாருடன் அவரைப் பற்றிப் பேச வேண்டும் என்றும் எல்லோரிடமும் வாய்கிழியப் பேசுவதில் அர்த்தமில்லை என்றும் யோசனை செய்துகொண்டேன். இப்படிப்பட்ட சூழ்நிலையில் எனது நண்பர்களும் உறவினர்களும் என் பக்கத்து வீட்டுக்காரர்களும் என்னைவிட்டு ரொம்ப தூரம் விலகிப்போய்விட்டார்கள் என்றே தோன்றுகிறது. அவரைப் பற்றிச் சொல்லப் புதிய நண்பர்கள் எனக்குக் கிடைத்ததினால் வந்த பொறாமைகூடக் காரணமாக இருக்கலாம். ஆனால் இதுபற்றி நான் அவர்களிடம் விவாதம் நடத்தியது இல்லை. என் தீர்மானத்தில் எந்த மாற்றமும் இல்லாது புதிய வட்டங்களை உருவாக்க எத்தனித்தேன். அந்த வட்டத்தில் சில வித்தியாசமானவர்கள் கிடைத்தனர். எனக்கு அவர்களை ரொம்பப் பிடித்துப் போயிற்று. ஏனெனில் நான் உப்பாவைப் பற்றிப் பேசாமலிருந்தால்


படிப்பகம்

www.padippakam.com



அவர்களாகவே என்னை அவரைப் பற்றிப் பேசுமாறு சொல்லுவார்கள். இதன் காரணமாகக் கண்ணாடி முன் நின்று பேசும் பழக்கம் நாளடைவில் மறைய ஆரம்பித்தது. வாப்பா ரொம்பவும் சந்தோஷப்பட்டார். ஏனெனில் சாப்பிடும் வேளையில் உப்பா சாப்பிடும் விதம் எப்படியிருக்கும் என்று கேள்வி கேட்டுக்கொண்டு சாப்பிடுவது எனக்குப் பிடித்துப் போயிற்று. தினமும் இந்தக் கேள்வியைக் கேட்பதால் உம்மாவுக்குக்கூட எரிச்சல் வந்திருக்கலாம். இது குறித்து உம்மா என்னிடம் ரொம்பக் கனிவுடன் இந்தப் பழக்கத்தை விட்டொழிக்கும் படி கேட்டுக்கொண்டார். எனவே வீட்டில் இது பற்றிப் பேசுவது அவ்வளவு நல்லதல்ல என்று தோன்றிய வுடன் இது பற்றிப் பேச்சை எடுப்பதே இல்லை. எனவே எல்லோரும் ரொம்ப சந்தோசப்பட்டார்கள். ஆனால் எனது புதிய நண்பர் வட்டம் நாளடைவில் பெருக ஆரம்பித்தது. தினம் ஒரு மணி நேரம் பேசுவது என்ற வேண்டுகோளின்படி பேசிக்கொண்டே இருந்தேன். நண்பர் வட்டத்தினர் எண்ணிக்கை அதிகரிக்க, நண்பர் ஒருவரின் வேண்டு கோளின்படி ஞாயிற்றுக்கிழமைகளில் தனி ரூம் போட்டுப் பேசுவது நல்லது என்ற கருத்தை எல்லோரும் ஆமோதிக்க எனக்கு வேறுவழியின்றித் தலையசைக்க வேண்டிவந்தது. எனினும் முன்பு எப்போதும்விட ரொம்பவும் சங்கடமும் சேர்ந்து கொண்டது. தினமும் பேசுவதை இப்படி வாரத்தில் ஒரு நாள் என்று சுருக்கிவிட்டார்களே என்ற எரிச்சலும் வந்தது. எனினும் இதுபற்றி யாரிடமும் எதுவும் சொல்ல முடியாத துர்ப்பாக்கியவசமானவனாக நான் இருந்த காரணத்தினால் ஞாயிற்றுக்கிழமைக்கு மிகுந்த முக்கியத் துவம் கொடுக்கத் தொடங்கினேன். ஞாயிற்றுக்கிழமை களில் மாலை ஆறுமணியில் இருந்து இரவு பத்துமணி வரை கிட்டத்தட்ட நான்கு மணிநேரம் உப்பாவைப் பற்றிச் சொல்லுவது என்பது உலகிலேயே யாருக்கும் வாய்க்காத அதிர்ஷ்டம் என்றே கருதினேன்.

இவ்வாறாக அவரைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருக்கும் சூழலில் நண்பர் ஒருவர் பக்கத்துக் கிராமத்தில் ஒரு விழா நடப்ப தாகவும் அதில் வந்து உப்பாவைப் பற்றிப் பேசுமாறும் கேட்டுக்கொண்டார். சில நிமிடங் கள் எனக்குப் பூரிப்பாக இருந்தது. உப்பாவின் மகிமையை உலகறியச் செய்வதில் என்னை விடச் சந்தோசப்படுபவர் வேறு யாராக இருக்க முடியும்? மேலும் எனது பேச்சைக் கேட்க எல்லோரும் தயாராகிவிடவே எனக்கு ரொம்பவும் நல்லதாகத் தோன்றியது. எனவே அந்த நாளில் பேசுவேன் என்று வாக்குறுதி கொடுத்தேன். நண்பரும் சந்தோசமாகப் போய் விட்டார். அவர் சொல்லிய நிமிடத்திலிருந்து என் மனத்துக்குள் ஆயிரம் பட்டாம்பூச்சிகள் சிறகடிக்கத் தொடங்கித் திருவிழா நாள்வரை நீடித்தது. திருவிழா நாளில் கிட்டத்தட்ட ஒரு லட்சம் பட்டாம் பூச்சிகள் வெளியே கிளம்பியிருந்தன. எனது சொற்பொழிவு குறித்து வீட்டிலும் அக்கம்பக்கம் உள்ளவர்களிடமும் பழைய நண்பர்களிடமும் சொல்லிப் பெருமைப்பட்டேன். இந்த இடைப்பட்ட காலத்தில் உப்பாவைப் பற்றி நான் சிந்தித்ததுகூடக் கிடையாது. அவரைப் பற்றிய பேச்சுகள் கிட்டத்தட்ட இல்லை என்று சொல்லுமளவுக்குச் சொற்பொழிவுதான் முக்கிய இடம் பெற்றிருந்தது. மேலும் அவரைப் பற்றிய பேச்சோ எண்ணமோ தோன்றாததில் எந்த வருத்தமும் இருக்கவில்லை என்பதுதான் பிரதானமான தாகும். அந்த ஊரில் முன்பு பெருந்தலைவர்கள் எல்லாம் பேசியிருக்கிறார்கள். புதிய தலைமுறைப் பேச்சாளர்களும் பேசியிருக்கிறார்கள். எனினும் பெருந் தலைவர்களின் பேச்சுக்குமுன் இதொன்றும் பெரிய விஷயமே இல்லை. இருப்பினும் எனது சொற்பொழிவுக் கான முக்கியத்துவம் பெருந்தலைவர்களை ஒத்து இருந்தது என்று நண்பர்கள் சொல்லிக்கொண்டார்கள். மேலும் மக்களுக்குத் தெரிந்த தாத்தாவைவிட எனது உப்பாவைப் பற்றிச் சொற்பொழிவு செய்வது என்பது சாதாரண விஷயமல்ல. அப்போதுதான் மக்களுக்குத் தெரிந்த தாத்தாவைப் பற்றிச் சிந்திக்கலானேன். மக்களின் தாத்தா ரொம்பவும் செல்வாக்கு உடையவர். பல காரணங்களினால் அவரது செல்வாக்கு அவர் காலத்தி லேயே பெருகுகிறது. ஆனால் எனது உப்பா அப்படிப்பட்டவர் இல்லை. அப்படிப்பட்ட மக்களுக் கான தாத்தாவைவிட எந்தவிதத்திலும் மக்கள் நெஞ்சில் இடம் பிடிப்பதற்காக ஏதாவது பொய்கள் இருக்குமா என்ற சந்தேகம் எழுந்தது. எனினும் அவரைப் பற்றி நான் சொல்லும் முறைதான் எனக்குப் பெரிய உபாய மாகத் தெரிந்தது. இந்த உத்தியில் மக்கள் நெஞ்சில் என் உப்பா இடம்பெற்றுவிடுவார் என்ற நம்பிக்கை யிருந்தது. அவரைப் பற்றி என்ன சொல்லுவது என்றும் யோசித்துக்கொண்டேன். மேலும் இதுவரை நண்பர் களுக்கிடையில், தெரிந்தவர்களுக்கிடையில் பேசி வந்த நான் முதல்முதலாகச் சொற்பொழிவாக மைக் முன்பு நின்று பேசும்போது தெளிவாக, பிசிறில்லாமல் பேசிவிட முடியுமா என்ற ஐயமும் எனக்குள்ளே எழுந்தது. எது எப்படியாயினும் எனது சொற்பொழிவுக்கான பரபரப்பு என்னைத் தெரிந்தவர்களிடமும் என்னிடமும் கூடிக்கொண்டேயிருந்தது. மேலும் பொதுமக்கள் முன்பு



உப்பாவைப் பற்றிச் சொல் என்று சொன்ன உப்பாவைப் போன்ற தோற்றமுடைய பெரியவருக்குச் சொல்வது என்பது உப்பாவிடம் சொல்வது மாதிரி என்ற எண்ணம் தோன்றியது. உப்பாவைப் பற்றி உப்பாவிடமே சொல்வது என்பது இதற்கு முன்பு எனக்கு வாய்க்கவே இல்லை. எனவே எல்லாவற்றையும் மறந்துவிட்டு அவரைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்தேன்.

அவரைப் பற்றிப் பேசும்போது எதிர்வினை எப்படி யிருக்கும் என்ற கேள்விக்குறி பெரிதாக இருந்துவெ காண்டிருந்தது. நண்பர்கள் ஐந்தாறு பேர் வந்து மாலையில் ஆறுமணி அளவில் உங்களது சொற் பொழிவு தொடங்கும் என்றும் சரியாக ஒரு மணி நேரம் மட்டுமே சொற்பொழிவு ஆற்றவேண்டும் என்றும் நிபந்தனை விதித்தபோது தர்மசங்கடப்பட்டுப் போனேன். ஒரு மணிநேரத்தில் உப்பாவைப் பற்றிப்



படிப்பகம்

www.padippakam.com

பேசிவிட முடியுமா? எல்லா விஷயங்களையும் சுருக்கிச் சொன்னாலே கிட்டத்தட்ட ஐந்து மணி நேரம் பிடிக்குமே என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டிருந்தேன். நண்பர்கள் உங்கள் சொற்பொழிவு பெருந்தலைவர்களுக்கு ஈடாக இருக்க வேண்டும் என்றும் வரலாற்றில் பதிவுசெய்யப்படும் அளவுக்கானது என்றும் என்னை ஆர்வப்படுத்தினார்கள். இதற்கிடையில் அவரைப் பற்றிப் பேசுவது அவ்வளவு உசிதம் இல்லை என்று விழா ஏற்பாடுகளைப் பற்றி மட்டும் பேசினேன். நண்பர்களும் விடைபெற்றுக்கொண்டு போய்விட்டார்கள். சிறிதுநேரம் ஆற அமர்ந்து யோசிக்கலானேன். ஆறுமணிக்குச் சரியாகப் பேசத் தொடங்கினேன். பயங்கரமான வரவேற்பு. கைத்தட்டல் விண்ணைப் பிளந்தது. எதிர்பார்த்ததை விட நன்றாகப் பேச்சு அமைந்திருந்ததாக எல்லோரும் புகழ்ந்தார்கள். விழாத் தலைவர் பொன்னாடை போர்த்தினார். பூமாலைகள் பலவும் கழுத்தில் விழுந்தன. வீடியோ, உள்ளூர்த் தொலைக்காட்சிகள், பத்திரிகையாளர்கள், போட்டோகிராபர்கள் என்று பெரும் கூட்டமே என்னை முன்னிறுத்தியது. அடுத்தநாள் உள்ளூர்த் தொலைக்காட்சிச் செய்திகளிலும் தினசரிகளிலும் எனது படமும் செய்தியும் பேச்சும் வந்தது. செய்தியறிந்து பல தொலைபேசி அழைப்புகள் வந்துகொண்டிருந்தன. முன்னாள் எம். பி, அமைச்சர், இந்நாள் எம். எல். ஏ., ஜமாஅத் தலைவர், கட்சிப் பிரமுகர்கள் எனப் பலரும் பாராட்டினார்கள். பிரபல தொலைக்காட்சி நிலையத்தில் இருந்து பாராட்டு வந்தது. நேர்காணலுக்கான தேதியையும் கேட்டார்கள். இப்படி என் புகழ் நாடெங்கும் பரவத் தொடங்கியது.



ஆனால் எனக்குள்ளே, உப்பாவின் முக்கியத்துவத்தை எல்லோரும் மறந்துவிட்டார்களே என்ற ஆதங்கம் தலைதூக்கியது. நான் சொற்பொழிவு ஆற்றக் காரணமே அவரது புகழ் ஓங்கவேண்டும் என்ற நல்லெண்ணத்தினால் மட்டுமே. இந்த விஷயம் மக்களுக்குத் தெரியவில்லையே என்று ஏங்கிக்கொண்டிருந்த வேளையில் உப்பாவைப் பற்றி எழுதுமாறு ஒரு பிரபல இதழ் ஒன்று வேண்டுகோள் வைத்தது. அதைத் தொடராக வெளியிடுவோம் என்று வாக்குறுதியும் தந்தது. இப்போது வேறுவிதமாக எனக்குள் அச்சம் பூதாகரமாக வெளிவர ஆரம்பித்தது. பேசுவது என்பது என்னைப் பொறுத்தவரையில் எளிமையானது. எழுத்துக்கும் எனக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது? ஒரு சின்னத் துணுக்குகூட எழுதத் தெரியாதே. எப்படிக் கட்டுரைத் தொடர் எழுதுவது? பேச்சைவிட எழுத்து பெரும் தாக்கத்தை உண்டுபண்ணும் என்று தெரியும். நண்பர்களுக்கிடையில் பேசுவதைவிட, எப்படிப் பேசினாலும் எழுத்தின் வீச்சுப் பரவலாக எல்லோரையும் சென்றடையும். எனினும் எழுதுவது என்பது லேசுப்பட்ட காரியம் அல்ல. எனக்கு என்ன தெரியுமோ அதைத்தான் செய்ய வேண்டும். தெரியாததில் இறங்கிக் கேவலப்படக்கூடாது. எனவே எழுதுவதற்கான சந்தர்ப்பம் சரியில்லை என நினைத்துக்கொண்டு எழுதுவதில்லை என்று தீர்மானித்தேன். பேசுவதில்தான் எனக்கு ஆனந்தம் இருக்கிறது. பேச்சைத் தவிர்த்துப் பிறிதொரு முறையை என்னால் இப்போது சிந்திக்கக்கூட முடிவதில்லை. பேசுவதில் ஆனபயன் கண்முன்னே கிடைத்துவிடும். எனவே பேசுவதுதான் சாலச் சிறந்தது. அதுவும் வேறு எதையும் பேசவில்லையே. உப்பாவைப் பற்றி மட்டும் தானே. ஒருவேளை அவரிடம் கேட்டிருந்தால் கூட, பேசத்தான் சொல்லியிருப்பார். அவரைப் பற்றிப் பேச்சுக்கிடையில் அவ்வப்போது சொல்லுவதும் தாராளமாகச் சொல்வதும் சில குறிப்புகளை மாத்திரம் கொடுப்பதும் அல்லது சில தகவல்கள் அல்லது சில செய்திகள் அல்லது மொத்தமும் விவரணம் என்ற மாதிரியான சொல்லலைத்தான் என்மனம் விரும்புகிறது. செய்திகளிலோ தகவல்களிலோ வெறுமனே விஸ்தரிப்பதினால் மாத்திரம் சுவராஸ்யம் கிடைப்பதில்லை. மாறாக இவற்றையெல்லாம் சாமர்த்தியமாகச் சொல்லும்போது கேட்பவர்கள் மனத்தளவில் நிலைகுலைந்துபோனபோதிலும் நிறுத்தச் சொல்ல முடியாத அளவுக்கு இன்னும் ஏதாவது வித்தியாசமான முறையில் சொல்லலாம். அவரை வெறும் ரசனையுடன் சொல்வதால் பிரயோஜனப்பட முடியாமல் போகும்போது சில விஷயங்களைச் சொல்லத்தான் வேண்டியிருக்கிறது. சட்டெனப் பிரக்ஞையில் கலந்த மணி ஒலியில் கண்விழித்துப் பார்த்தபோது மயக்கம் கலைந்திருந்தது. உடனே சொற்பொழிவு ஆற்றப் புறப்படவேண்டும். சமயம் நெருங்கிவிட்டது.

ஓவியங்கள்: **குணசேரன்**

www.padippakam.com






**தமிழ் செம்மொழி ஆகும் தருணத்தில்...**

# கூரை ஏறிக் கோழி பிடிக்காதவன்...

## ஆ. இரா.வேங்கடாசலபதி


**தமிழ் செம்மொழியாக அறிவிக்கப்படும் என்று ஐக்கிய ஜனநாயகக் கூட்டணி அரசின் குறைந்தபட்சப் பொதுத் திட்டம் உறுதியளித்துள்ளது. மிகத் தொன்மையான மொழிகளில் ஒன்றான தமிழுக்குக் காலம் கடந்து கிடைக்கவிருக்கும் இந்த அங்கீகாரத்தின் பொருள் என்ன? கல்வித் துறையிலும் பிற அறிவுத் துறைகளிலும் தமிழின் தற்போதைய நிலை என்ன? தமிழகம் மற்றும் உலகளாவிய தளத்தில் தமிழியல் துறையில் நடைபெற்றுவரும், நடைபெற வேண்டிய பணிகள் என்னென்ன?**

**இந்தக் கேள்விகளுக்கு விடைகாணும் முயற்சிகள் இந்தச் சிறப்புப் பகுதியில் பதிவுபெறுகின்றன. தமிழ் செம்மொழியாகும் தருணத்தில் தமிழின் இன்றைய நிலை குறித்த விவாதத்தைத் தூண்டும்முகமாக இப்பகுதி வெளியாகிறது.**

பதினாறு நாடுகளைச் சேர்ந்த நாற்பது அறிஞர்கள் எழுதிய, பெரிதும் தமிழியல் சார்ந்த கட்டுரைகள் அடங்கிய South-Indian Horizons என்ற நூல், பிரெஞ்சு நாட்டுத் தமிழறிஞர் ஃபிரான்சுவா குரோ அவர்களின் 70ஆம் பிறந்த நாளைக் கொண்டாடும் முகமாக அண்மையில் வெளிவந்துள்ளது. கட்டுரை வழங்கியவர்களில் இருபத்தைந்து பேரேனும் தமிழரல்லாதவர்கள்.

தமிழ் செம்மொழியாக இந்திய அரசால் அங்கீகரிக்கப்படவுள்ள நிலையில், உலக அளவில் தமிழியல் ஆய்வு பெற்றுள்ள இடத்தை மதிப்பிட இது ஒரு தொடக்கப் புள்ளியாக அமையும்.

ஒரு வகையில் செம்மொழி அந்தஸ்து புலமை உலகில் தமிழுக்கு எப்பொழுதோ கிடைத்துவிட்டது. ஃபிரன்சுவா குரோ மலர் போன்ற நூல்கள் ஒரு சோற்றுப் பதம். உலகின் பல பல்கலைக்கழகங்களில் தமிழ் பல காலமாகவே பயிற்றுவிக்கப் பட்டும் பயிலப்பட்டும் வருகின்றது. தமிழைச் செம்மொழியாக இந்திய அரசு அறிவிப்பதால் உலக அளவில் தமிழுக்குப் பெருமை கிடைக்கும் என்று பொதுவாக நம்பப்படும் சூழ்நிலையில், உலக அளவில் தமிழியல் ஆய்வின் நிலையை அறிமுகப் படுத்துவதும் மதிப்பிடுவதுமே இங்கு என் நோக்கம்.



மேற்குலகு தமிழை அறியவும் ஆராயவும் தொடங்கி நாலரை நூற்றாண்டுகளாகிவிட்டன. கிறித்தவ சமயப் பணியின் மூலமாகத் தொடங்கிய இந்த உறவு அச்சு நூல்களும் அகராதிகளும் புதிய முறை இலக்கணங்களும் உருவாக வழிசெய்தது. காலனியாதிக்கம் வேரூன்றத் தொடங்கிய கட்டத்தில், பதினெட்டாம் நூற்றாண்டின் கடைப் பகுதியிலிருந்து வெள்ளை நிர்வாகிகளும் இதில் பங்கெடுக்கலாயினர். மொழிசார்ந்த பனுவல்கள் மட்டுமல்லாமல், சமூகம், பொருளாதாரம், வரலாறு முதலானவை தொடர்பான நூல்களும் எழுதப்பட்டன. என்ரி என்ரிக்ஸ், பெஸ்கி என்ற வீரமா முனிவர், இராபர்ட் டி நோபிலி, சீகன்பால்கு, பெப்ரீசியசு, கால்டுவெல், ஜி.யு.போப் என்று தமிழுக்குப் பணியாற்றிய மேலைக் கிறித்தவப் பணியாளர் பட்டியலுக்குக் காலின் மெக்கன்சி, எல்லீஸ், மக்லின், பெர்சி மெக்வீன், எட்கர் தர்ஸ்டன் என்று வெள்ளை அதிகாரிகள் பட்டியலும் குறையாதது. இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கம்வரை தமிழுக்குப் பணியாற்றிய மேலைத் தமிழறிஞர் பற்றித் தமிழுலகம் ஓரளவு அறியும். காலனியாதிக்கத்திற்குப் பிந்திய நிலை என்ன?

இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி ஆகிய நாடுகளில் கணிசமான அளவிலும் சோவியத் ஒன்றியம், செக்கஸ்லோவகியா ஆகிய நாடுகளில் சிறிய அளவிலும் பின்-காலனியக் காலத்திலும் தமிழியல் ஆய்வு தொடர்ந்தது. இதில் முக்கிய மாற்றம் அமெரிக்காவின் நுழைவோடு ஏற்பட்டது. இரண்டாம் உலகப் போர் முடிந்து, பனிப்போர் தொடங்கிய காலப் பகுதியில், புவி முழுவதையும் பற்றிய அறிவைத் திரட்டிக்கொள்ள அமெரிக்க ஏகாதிபத்தியம் விழைந்தது. Area Studies என்ற புதிய அறிவுத்துறை இதனால் தோற்றம் பெற்றது. அமெரிக்க மாணவர்கள் உலகின் இண்டு இடுக்குகளை எல்லாம் ஆராயத் தொடங்கினர். சிகாகோ



படிப்பகம்

www.padippakam.com




பல்கலைக்கழக மானிடவியல் துறைக் கட்டடத்தில் நுழைந்ததும், அத்துறை மாணவர்கள் ஆராய்ச்சி செய்த பகுதிகள் வண்ண வண்ணக் குண்டுமணிகளால் அடையாளப் படுத்தப்பட்ட பெரிய உலக வரைபடம் வரவேற்கும். அதிகாரத்திற்கும் அறிவுக்கும் இடையிலான உறவின் வீச்சைக் காட்சிப்படுத்தும் இவ்வரைபடம் மலைப்பைத் தருவது.) வரலாறு, சமூகவியல், மானிடவியல், அரசியல் விஞ்ஞானம் எனப் பல்வேறு துறையினரும் இதில் பங்கெடுத்தபொழுதும், இவர்களது ஆய்வுக்கு மொழிப் பயிற்சி இன்றியமையாததாக இருந்தது. மொழியியல் என்ற துறை உலகெங்கும் வளர்வதற்கு அமெரிக்க நிதியுதவி துணைசெய்தது. இந்தியாவிலும்கூட மொழியியலுக்கான கோடைப் பள்ளிகளும் துறைகளும் உருவாக்கப்பட்டன. (மொழியியல் ஓய்ந்த பிறகு, 1980களிலிருந்து நாட்டார் வழக்காற்றியல் கவனம் பெற்றது.)

மொழி - இலக்கியப் படிப்பாக மட்டும் இல்லாமல், தமிழ்ச் சமூகத்தின் பல கூறுகளையும் பல்வேறு அறிவுத் துறைகள்சார்ந்து அறியத் தலைபட்ட வேளையில் தமிழ் ஆய்வு என்பது தமிழியல் ஆய்வாக விரிவுபெற்றது. அதுகாலம்வரை மொத்த இந்தியாவைப் பற்றிய ஆய்வுகள் இந்தியவியல் (Indology) என்ற பெயரில், பெரிதும் சமஸ்கிருதம் சார்ந்து நடைபெற்றுவந்த வேளையில், தமிழின் தனியிடம் உணரப்படலான அறிவுத் திருப்பத்தையும் இப்பெயர்மாற்றம் சுட்டுகின்றது. தமிழகத்தின் பல்வேறு சாதிகள், அரசியல் இயக்கங்கள், பண்பாட்டு மாற்றங்கள், குலமுறை முதலானவை பற்றிய ஆய்வேடுகளும் நூல்களும் கட்டுரைகளும் பல்கிப் பெருகின. இதனை அவதானித்து, தமிழியல் என்ற துறைக்கு நிறுவன வடிவம் கொடுக்கத் தலைப்பட்டவர் தனிநாயக அடிகள். ஈழத்தவரான தனிநாயக அடிகள், தமிழகத் தொடர்புகொண்டிருந்தவர் என்பதோடு, மலேசியாவில் பேராசிரியராகப் பணியாற்றினார்; கிறித்தவப் பாதிரி என்ற முறையிலும் உலகின் பல பகுதிகளைக் கண்டவராக இருந்தார். இவருடைய பரந்த பார்வைக்கும் தொலைநோக்குக்கும் Tamil Culture என்ற பெயரில் 1952இல் அவர் தொடங்கிய ஆய்விதழ் சிறந்த உதாரணம். உலகின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த தமிழியல் அறிஞர்களின் ஆய்வுப் பரிமாற்றத்திற்கான களமாக 'Tamil Culture' விளங்கியது. (இதனை அடியொற்றியே உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் Journal of Tamil Studies, தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் Tamil Civilization முதலான இதழ்கள் தொடங்கப்பட்டன.) Tamil Culture ஏற்படுத்திய தொடர்புகளே International Association of Tamil Research (IATR) தோன்றுவதற்கும் அதன் மூலம் உலகத் தமிழ் மாநாடுகள் நடைபெறுவதற்கும் வழிவகுத்தன.



இந்தக் காலப்பகுதியில் உலகத் தமிழியலாளரிடையே நீடித்த தொடர்புகள் இருந்தன. செக் நாட்டுக் கமில் சுவெலபில் பற்றிய ஒரு பெரிய மயக்கம் தமிழ் நாட்டு அறிஞர்களிடம் அப்பொழுது இருந்தது. (முக்கியமாக இடதுசாரிகள் இவரைக் கொண்டாடினர். 1968க்குப் பிறகு அது மறந்தேபோனது.) மயிலை சீனி. வேங்கடசாமி அவருக்குத் தம் நூலைக் காணிக்கையாக்கினார் என்றால், கமில் சுவெலபில் மயிலை சீனியின் பாராட்டுக் கடிதத்தைத் தம் நூலுக்கு அணியாகச் சேர்த்துக் கொண்டதோடு மே. வீ. வேணுகோபாலப் பிள்ளைக்குத் தம் நூலொன்றையும் காணிக்கையாக்கினார்.

தமிழியலின் உலக விரிவில் தெ. பொ. மீக்கும் முக்கியப் பங்கி ருந்தது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் மொழியியல் துறையை நிறுவிய தெ. பொ. மீக்கு, சிகாகோ பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பயிற்சியைத் தொடங்கிவைத்த பெருமையும் உண்டு. மேலும், உலக அறிஞரிடையே சரிசமமாகக் கருத்துப் பரிமாற்றத்தை நிகழ்த்தும் புலமையும் அவரிடம் இருந்தது.

இந்தக் காலப்பகுதியில் சில முக்கியமான கருவி நூல்கள், பன்னாட்டுத் தமிழியல் அறிஞர் கூட்டுறவால் வெளிவந்தன. ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகப் பேராசிரியர் தாமஸ் பரோ, கலிஃபோர்னியா பேராசிரியர் எம். பி. எமனோ ஆகியோர் இணைந்து உருவாக்கிய 'திராவிடச் சொற்பிறப்பியல் அகரமுதலி' (Dravidian Etymological Dictionary - DED என்ற சுருக்கம் தமிழ்ப் புலமையுலகில் புகழ்பெற்றது.), புதுச்சேரி பிரெஞ்சு நிறுவனம் மூலம் நீ. கந்தசாமிப் பிள்ளை வெளியிட்ட சங்க இலக்கியச் சொல்லடைவு, ஜப்பான் நாட்டு நொபோரு கராஷிமாவுடன் இணைந்து எ. சுப்பராயலு வெளியிட்ட கல்வெட்டு அடைவுகள் ஆகியவற்றை முக்கியமாகச் சொல்லலாம். இப்பெரும்பணிகள் உலக அளவிலான அறிஞர் கூட்டுறவின்றிச் சாத்தியம் இல்லை என்பதை மறந்துவிடக் கூடாது.

1970களிலிருந்து தமிழகக் கல்வியில் சமூக அறிவியல் துறைகளில் ஏற்பட்ட சீரழிவும் தமிழ்த் துறைகளின் பலவீனங்களும் தமிழியல் உலகில் அயல்நாட்டுத் தமிழியல் அறிஞர்களுக்கும் தமிழக அறிஞர்களுக்கும் இடையே சமச்சீரற்ற நிலையை உண்டாக்கிவிட்டன. அறிவுத் துறையில் அன்றாடம் தோன்றியும் மெருகேறியும்வந்த கோட்பாடுகளில் பயிற்சியும் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளில் படிப்பும் பிற அறிவுத் துறை சார்ந்த அறிமுகமும் மேலைத் தமிழறிஞர்களிடம் புலப்பட, தமிழகக் கல்வி நிறுவனங்களில் இவை முயற்கொம்பாயின. எட்வர்ட் சயித்தின் Orientalism மேலைக் கல்வித்துறையில் புயலைக் கிளப்பி, நிலைப்பாடுகளை மறுபரிசீலனை செய்யவேண்டிய கட்டாயம் உருவானபொழுது, தமிழ்ப் பல்கலைக்கழகம் எட்கர் தர்ஸ்டனின் 'தென்னிந்தியக் குலங்களும் குடிகளும்' நூல் தொகுதிகளை விசுவாசமாக மொழிபெயர்த்துக் கொண்டிருந்தது.

www.padippakam.com



அதே வேளையில், மேற்குலகில் தமிழ்ச் சமூகத்தின் வெவ்வேறு கூறுகள் விரிவான ஆய்வுக்கு உள்ளாகி வந்தன. வெறும் மொழிபெயர்ப்பு என்று எடுத்துக் கொண்டால்கூட, சங்க இலக்கியம் முதல் சிலப்பதி காரம், திவ்வியப் பிரபந்தம், தேவாரம், இறையனார் அகப்பொருள் எனப் பல நூல்கள் ஆங்கிலத்தில் வெளியாயின. நம் இலக்கியத்தை அயல்நாட்டார் மொழிபெயர்த்துவிட்டார்கள் என்ற வெற்றுப் பெருமை பாராட்டல்கூட நாளடைவில் அறியாமை – மெத்தனம் என்ற கட்டெறும்பாய்த் தேய்ந்தது. இதில் முரண்நகை யாக, கல்விப் புலத்திற்கு வெளியே இவை பற்றிய அறிமுகம் ஓரளவுக்கேனும் இருந்தது. பர்ட்டன் ஸ்டெய்னின் சோழர்காலம் பற்றிய ஆய்வுகள் வரலாற்றுத் துறையைவிடத் தமிழ்ச் சிற்றிதழ்களில் அதிகமாகப் பேசப்பட்டமை இப்பின்னணியில் கவனிக்கத்தக்கது.

இந்த நிலைமையின் மறுபுடையாக, உலகத் தமிழ் மாநாடு அரசியலோடு பிரிக்க முடியாத நிலையை எட்டிவிட்டது. மலேசியாவிலும் பாரீசிலும் நடந்த மாநாடுகள் ஆய்வு மாநாடுகளாக விளங்க, யாழ்ப்பாண மாநாடு சிங்களப் பேரினவாத அரசின் வன்முறைக்கு இலக்காகித் துப்பாக்கிச் சூட்டில் முடிந்தது. தமிழ் நாட்டில் நடந்த மாநாடுகளில் அரசியலே முன்னின்றது. பண்பாட்டு முக்கியத்துவம் வாய்ந்த உலகத் தமிழ் மாநாடு போன்றதொரு நிகழ்வு அரசியலோடும் பொது மக்களின் பங்குபற்றலோடுமே நிகழ இயலும் என்றாலும், தமிழியல் ஆய்வு பெரிதும் பின்னகர்ந்து விட்டது என்பதை மறுப்பதற்கில்லை.

1968 சென்னை மாநாடு புதிய தி. மு. க. அரசின் வெற்றி விழாவைப் போல அமைய, நாடாளுமன்ற, சட்டமன்றத் தேர்தல்களால் இருமுறை ஒத்திவைக்கப் பட்டு, 1981இல் நடந்தேறிய மதுரை மாநாடு எம். ஜி. ஆர்., இந்திரா காங்கிரசோடு கூட்டமைப்பதற்கு வழிசெய்தது. (மதுரை மாநாட்டின் பெரும்பயன் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதி பெரும் எண்ணிக்கையில் மறுபதிப்பானதே.) 1995 தஞ்சை மாநாடும் கா. சிவத்தம்பி, ஆ. வேலுப்பிள்ளை ஆகியோரின் வெளியேற்றமும் அண்மை நினைவுகள். உலகத் தமிழ் மாநாடுகளில் அயல்நாட்டுத் – முக்கிய மாக வெள்ளையர் – தமிழறிஞர்கள் காட்சிப் பொரு ளாகவும் தமிழின் உலகப் பெருமைக்கு அடையாளங் களாகவும் உருவகங்களாகவும் இனங்காணப்பட்டதை மிக நுட்பமாக நார்மன் கட்லர் ஒரு கட்டுரையில் பதிவுசெய்திருக்கிறார். தமிழ் செம்மொழியாக அங்கீ கரிக்கப்பட்டால் மேலைப் பல்கலைக்கழகங்களில் தமிழுக்கு இடம் கிடைக்கும் என்ற கருத்திலும் இதே (அடிமை) சமூக உளவியல்தான் செயல்படுகின்றது.

தமிழியல் புலமை உலகின் விரிவைத் தமிழகப் பல்கலைக்கழகங்கள் உணர்ந்துகொள்ளாமல் உள்ளடங் கவும் வேறு சிலர் இதைச் சுரண்டினார்கள். ஆசியவியல் ஆய்வு நிறுவனம் (Institute of Asian Studies) இதற்கு ஓர் உதாரணம். அயல்நாட்டுத் தமிழியல் அறிஞர்களின் இரண்டாம் நிலை நூல்களையும் சிறந்த தமிழ் இலக்கியங்களின் தகுதியற்ற மொழிபெயர்ப்புகளையும் தாறுமாறாகத் தயாரிக்கப்பட்ட பென்னம் பெரிய கலைக் களஞ்சியங்களையும் வெளியிட்டது இந்நிறுவனம். அத்துடன், அரசு மற்றும் அரசு சாராத செல்வர்களின் உதவியுடன், தெளிவான நோக்கமற்ற –திருவிழாக் கள் போன்ற – அனைத்துலக மாநாடு களையும் இந்நிறுவனம் நடத்தி யுள்ளது. ஏறத்தாழப் பத்தாண்டு களுக்கு ஓர் ஆய்விதழையும் இது நடத்தியது. இந்நிறுவனம் காட்டிய முனைப்பில் ஒரு பகுதியையேனும் தமிழகப் பல்கலைக்கழகங்கள் காட்டியிருந்தால் தமிழியல் ஆய்வு எங்கோ சென்றிருக்கும்.




உலகின் முக்கியமான பல்கலைக்கழகப் பதிப்பகங்கள் வெளியிடும் நூல்களையும் ஆய்விதழ்களையும் பார்த்தால் தமிழுக்குப் புலமை உலகில் உள்ள இடம், செம்மொழி என்ற அங்கீகாரம் ஆகியவை பற்றி எந்த ஐயமும் ஏற்பட வாய்ப்பேயில்லை. அயல்நாட்டுத் தமிழியல் ஆய்வுகளை அடைவுபடுத்தும் முயற்சியைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் முன்பொருமுறை மேற் கொண்டிருந்தது. புஸ்நாகி ராஜண்ணன் South Indian Studies என்றொரு நூல்கூட வெளியிட்டார். இத்தகைய அடைவுகளில் அடங்கமுடியாத அளவுக்குத் தமிழியல் ஆய்வுகள் பெருகிவிட்டன என்பதே இன்றைய நிலவரம். உண்மையில் தமிழகம் இனி எதிர்கொள்ள வேண்டிய பிரச்சினை, தமிழும் தமிழாய்வும் தமிழர் கையைவிட்டு நழுவிவிடுமோ என்பதே.

தமிழில் வெளிவரும் நூல்களையெல்லாம் சேர்த்துவைக்கும் ஒரு நூலகம்கூடத் தமிழகத்தில் இல்லை. பல்கலைக்கழக நூலகங்களில் நுழைந்தால் தும்மலோடு கண்ணீரும் வரும் என்பது மட்டும் உறுதி. புதுக்கோட்டைக் கிருஷ்ணமூர்த்தி, பல்லடம் மாணிக்கம், ச. மெய்யப்பன் ஆகியோரின் தனி நூலகங்கள் இவற்றில் நம்பிக்கை இழந்ததன் அறிகுறிகள். தமிழில் வெளியாகும் முக்கிய நூல்கள் அனைத்தையும் பாதுகாக்கும் நூலகங்கள் அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் பத்தேனும் இருக்கும். நம் அறிவுச் செல்வம் நம்மிடமே இல்லாத நிலையில், அவை பற்றிய ஆய்வுக் கேள்விகளும் ஆய்வு முறையிய லையும்கூட இழந்துவிட்டோமோ என்று அஞ்ச வேண்டிய நிலையே இன்றுள்ளது.

தமிழ் செம்மொழியாக இந்திய அரசால் அறிவிக்கப்படவுள்ள நிலையில் இந்த நிலைமை பற்றிய வலிநிறைந்த ஓர்மை நமக்கு வேண்டும். தமிழ்ப் பல்கலைக்கழகம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், உலகத் தமிழ்ச் சங்கம் ஆகியவற்றின் நிலை என்ன? தமிழக அரசின் அதிகாரத்திற்குட்பட்ட பணிகள் செய்யப்பட்டுள்ளனவா? அயல் மாநிலங்களின் முக்கியப் பல்கலைக்கழகங்களில் தமிழ் இருக்கையை ஏற்படுத்துவது நம் சக்திக்கு மீறியதா? பிற திராவிட மொழிகளோடு தமிழின் புலமைத் தொடர்புகள் அற்றுப்போனது ஏன்? தமிழ் வளர்ச்சிக்குத் தேவையான வளங்களை நாமே திரட்டிக்கொள்ளத் தவறியதற்கு இந்திய அரசின் அங்கீகாரம் மாற்று ஆகுமா? கூரை ஏறிக் கோழி பிடிக்க இயலாதவனுக்கு வைகுந்தப் பதவியால் கிடைப்பதென்ன? □



படிப்பகம்

www.padippakam.com






# அக்கரையிலிருந்து ஒரு மதிப்பீடு

தமிழ் ஒரு செம்மொழி என்பதை வலியுறுத்திக் கூறும் ஒரு கட்டுரையை எழுத வேண்டியுள்ள நிலை எனக்கு வினோதமாகத் தோன்றுகிறது...

## ஜார்ஜ் எல். ஹார்ட்

தமிழின் செம்மொழித் தகுதி பற்றி எழுதும்படி பேராசிரியர் சி. இ. மறைமலை என்னைக் கேட்டுக் கொண்டார். அவரது வேண்டுகோளை நிறை வேற்றுவதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

பெர்க்லியிலுள்ள கலிஃபோர்னியா பல்கலைக் கழகத்தில் 1975 முதல் பேராசிரியராக இருக்கிறேன். 1970இல் ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் நான் பட்டம் பெற்றது சமஸ்கிருதத்தில். என் முதல் பணி மாடிசனி லுள்ள விஸ்கான்சின் பல்கலைக்கழகத்தில் சமஸ்கிருதப் பேராசிரியர் பதவி. தமிழ், சமஸ்கிருதம் மட்டுமல்லாமல் லத்தீன், கிரேக்கம் போன்ற செம்மொழிகளும் எனக்குத் தெரியும். அம்மொழி இலக்கியங்களை மூலத்திலேயே விரிவாகப் படித்திருக்கிறேன். நவீன ஐரோப்பிய இலக்கியங்களிலும் ஒப்பீட்டு மொழியியலிலும் எனக்கு நல்ல பரிச்சயம் உண்டு. தமிழ், மலையாளம் தவிர்த்த பிற நவீன இந்திய மொழி இலக்கியங்களை மொழி பெயர்ப்புகளின் மூலம் படித்திருக்கிறேன்.

தெலுங்கு இலக்கியம் மற்றும் அதன் பாரம்பரியம் குறித்து இப்போது வாழும் மிகப் பெரும் தெலுங்குப் புலமையாளர்களில் ஒருவரான வி.நாராயண ராவ் அவர்களுடன் மிக விரிவாகக் கலந்துரையாடியிருக் கிறேன். ஆகையால் தெலுங்கின் பாரம்பரியத்தையும் நன்கு அறிவேன். தெற்காசிய ஆராய்ச்சித்துறையில் நீண்ட காலமாகப் பணியாற்றிவருவதால் இந்தி மொழி இலக்கியத்தின் வளமும் நான் அறிந்ததுதான். மகாதேவி வர்மா, துளசி, கபீர் ஆகியோரின் எழுத்துகளை விளக்க மாகப் படித்திருக்கிறேன்.

என் வாழ்வின் பெரும் பகுதியை - அதாவது 1963 முதல் - பல வருடங்களைச் சமஸ்கிருதம் பயில்வதில் செலவழித்திருக்கிறேன். காளிதாசர், மகா ஆகியோரின் அனைத்துப் படைப்புகளையும் பாரவி, ஸ்ரீ ஹர்சா ஆகியோர் எழுதியவற்றில் சில பகுதிகளையும் மூல வடிவத்திலேயே வாசித்திருக்கிறேன். ரிக் வேதத்தின் ஐந்தாம் பகுதி, பல உபநிஷத்துகள், மகாபாரதத்தின் பெரும் பகுதி, கதாசரித சாகரம், ஆதிசங்கரரின் படைப்பு கள் முதலானவற்றையும் மூலத்திலேயே படித்திருக்கிறேன்.

என் புலமையைக் காட்டிக்கொள்வதற்காக நான் இதையெல்லாம் சொல்லவில்லை. மாறாக, ஓர் இலக் கியம் செவ்வியல் தகுதியுடையதா இல்லையா என்பதை மதிப்பீடு செய்வதற்கான என் தகுதியைத் தெரிவிப்ப தற்காகவே சொல்கிறேன். எந்த அளவுகோலின்படி பார்த்தாலும் தமிழ், உலகிலுள்ள மகத்தான செம்மொழி இலக்கியங்களிலும் மரபுகளிலும் ஒன்று என்பதை அறுதியிட்டு இதன் மூலம் கூறுகிறேன். அதற்கான காரணங்களை ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.

முதலாவதாக, தமிழ் குறிப்பிடத்தக்க தொன்மை வாய்ந்தது. தற்கால இந்திய மொழி இலக்கியங்களுக் கெல்லாம் ஓராயிரம் வருடம் முந்தையது. அதன் மிகப் பழமையான நூலாகிய தொல்காப்பியம், தொடக்க காலத் தமிழ்க் கல்வெட்டுகளை வைத்து நிர்ணயிக்கும் போது, கி. மு. 200க்கு முந்தி எழுதப்பட்ட பகுதிகளைக் கொண்டது. பழந்தமிழின் மிகப் பெரும் படைப்புகளான சங்க இலக்கிய நூல்களும் பத்துப்பாட்டும் நம் சகாப்தத் தின் முதல் இரண்டு நூற்றாண்டுகளைச் சேர்ந்தவை. காளிதாசனின் நூல்களுக்கு இருநூறு வருடங்கள் முற்பட்ட அவை இந்தியாவில் முதன்முதலாக எழுதப்பட்ட சமயம்சாரா இலக்கியமாகும்.

இரண்டாவதாக, இந்தியாவுக்கே உரிய அதே சமயத் தில் சமஸ்கிருதத்தினடியாக வராத இலக்கியப் பாரம் பரியத்தைத் தமிழ் மட்டுமே கொண்டிருக்கிறது. உண்மையில் தென்னகத்தில் சமஸ்கிருதம் செல்வாக்குப் பெறுவதற்கு முன்னரே, தமிழ் இலக்கியம் எழுச்சி யடைந்துவிட்டது. எனவேதான் சமஸ்கிருதம் மற்றும் பிற இந்திய மொழிகளின் இலக்கியங்களிலிருந்து தமிழ் இலக்கியம் பண்பு ரீதியாக வேறுபட்டிருக்கிறது. தனக்கே உரிய கவிதைக் கோட்பாடுகளையும் இலக்கண மரபையும் அழகியலையும், எல்லாவற்றுக்கும் மேலாக முற்றிலும் தனித்துவம் உடைய பெரும் இலக்கியக் கருவூலத்தையும் தமிழ் பெற்றிருக்கிறது; தனித்துவமிக்க, வளமான, விரிவான அறிவு மரபையும் கொண்டுள்ளது.

மூன்றாவதாக, சமஸ்கிரும், கிரேக்கம், லத்தீன், சீனம், பாரசீகம், அரபு ஆகிய மொழிகளின் பெரும் இலக்கியங் களுக்கு ஒப்ப நிற்கும் தகுதி தமிழின் செவ்விலக்கியங் களுக்கு இருக்கிறது. இம்மொழியிலுள்ள படைப்புகளின் நுட்பமும் ஆழமும் (இந்தியாவின் நவீன இலக்கியத்துக்கு முந்தைய காலகட்டத்தில் அடித்தள மக்களைப் பற்றிப் பேசியவை தமிழ் இலக்கியங்கள் மட்டுமே) உலகளாவிய தன்மையும் உலகச் செவ்விலக்கியங்கள் மற்றும் பாரம் பரியங்களில் ஒன்றாகும் தகுதியைத் தமிழுக்குத் தருகின்றன. உலக அளவில் அறவியலைப் பற்றிய பெரும்நூல்களில் ஒன்றாகத் திருக்குறளை அனைவரும் அறிவார்கள். இது, தமிழ்ச் செவ்வியல் மரபின் பலவகைப் பட்ட பல பெரும் நூல்களில் ஒன்று மட்டுமே. இப்பெரும் இலக்கியம் ஆராயாத, தெளிவு ஏற்படுத்தாத மனித வாழ்வின் எந்த ஒரு பகுதியும் இல்லை.

இறுதியாக, நவீன இந்தியாவின் கலை மற்றும் மரபு பற்றி அறியத் தற்சார்புடைய முதன்மை ஆதாரங்களுள் தமிழ் ஒன்று. சமஸ்கிருதக் கவிதை மரபின்மீது தென்னக மரபின் செல்வாக்குப் பற்றி நான் விரிவாக எழுதி யிருக்கிறேன். இதற்குச் சமமான முக்கியத்துவத்துடன் கவனிக்கப்பட வேண்டியது சங்க காலத்திலிருந்து தொடங்குகிற தமிழிலுள்ள இந்துமத நூல்களாகும். வேதங்களுக்கு நிகராகப் புனிதமாகக் கருதப்படுகிற,



படிப்பகம்

தனக்கே உரிய பல படைப்புகளைத் தமிழ் பெற்றுள்ளது. இவற்றின் கருத்துகளைச் சமஸ்கிருதம் தவிரத் தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளும் பாகவத புராணம் முதலான நூல்களும் பெற்றுக்கொண்டுள்ளன. அவை திருப்பதி போன்ற பெரிய வைணவக் கோயில்களில் வேத மந்திரங்களோடு பாராயணம் செய்யப்படுகின்றன. நவீன இந்தோ - ஆரிய மொழிகளுக்கான ஆதாரமாக சமஸ்கிருதம் இருப்பதைப் போலவே, தற்காலத் தமிழ் மற்றும் மலையாள மொழிகளுக்கான ஆதாரமாகச் செந்தமிழ் இருக்கிறது. இந்தோ -ஆரிய மொழிகளில் மிகவும் மரபு சார்ந்த, மிகவும் குறைவான மாற்றத்துக்கு உள்ளான மொழியாகச் சமஸ்கிருதம் இருப்பதைப் போலவே, திராவிட மரபு சார்ந்ததாகத் தமிழ் இருக்கிறது. திராவிடத்தின் இயல்பையும் வளர்ச்சியையும் புரிந்துகொள்வதற்கு மொழியியலாளர்கள் பயன்படுத்தவேண்டிய உரைகல்லாகவே தமிழ் இருக்கிறது.

தமிழ் ஏன் ஒரு செம்மொழியாக அங்கீகரிக்கப்படவில்லை என்பதைப் புரிந்துகொள்ள முயலும்போது, அரசியல் காரணத்தை மட்டுமே என்னால் உணர முடிகிறது. செம்மொழியாகத் தமிழ் அறிவிக்கப்பட்டால் பிற இந்திய மொழிகளும் அதே அந்தஸ்துக்கு உரிமை எழுப்பும் என்னும் அச்சம். இது தேவையற்ற கவலை. தற்கால இந்திய மொழிகளின் செழுமை குறித்த புரிதல் எனக்கு உண்டு. இன்று பேசப்படுகிற மிகவும் வளமான, தொன்மை வாய்ந்த, படைப்பாற்றல் மிக்க மொழிகளில் அவையும் அடங்கும். உலகிலுள்ள முக்கியமான இலக்கியங்களுடன் பேசப்படுமளவுக்குத் தற்கால, இடைக்காலச் செழுமையான இலக்கியங்களை அவை கொண்டிருக்கின்றன. எனினும், அம்மொழிகளில் எதுவும் செம்மொழியல்ல. ஆங்கிலம் மற்றும் பிற தற்கால ஐரோப்பிய மொழிகளைப் போல (கிரேக்க மொழியைத் தவிர) முன்பே இருந்த மரபுகளிலிருந்து தாமதமாகவும் இரண்டாம் ஆயிரமாண்டில் வளர்ச்சியடைந்தவை. கிரேக்கம் உலகம் முழுவதும் ஒத்துக்கொள்ளும் விதத்தில் செம்மொழியாக அங்கீகரிக்கப்பட்டபோது, பிரெஞ்சோ ஆங்கிலமோ செம்மொழி அந்தஸ்தைக் கோரவில்லை.

செம்மொழியாகக் கருதப்படுவதற்கு ஒரு மொழி பல தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும். அம்மொழி பழமைவாய்ந்ததாக, இன்னொரு பாரம்பரியத்திலிருந்து கிளைத்ததாக அல்லாமல், பெருமளவு தன்னியலாக எழுந்ததாகத் தற்சார்புடையதாக இருக்க வேண்டும். மிகப் பெரிய அளவிலான, வளமான, தொன்மையான இலக்கியத்தைப் பெற்றிருக்க வேண்டும். இந்தியாவிலுள்ள பிற தற்கால மொழிகளைப் போல அல்லாமல் தமிழ் இவை ஒவ்வொன்றையும் நிறைவேற்றுகிறது. தமிழ் - லத்தீனைப் போல, அரபு மொழியைவிட - பழமையானது. சமஸ்கிருதத்தாலோ பிற மொழிகளாலோ எந்தத் தாக்கத்திற்கும் உள்ளாகாமல் முற்றிலும் சுதந்திரமான மரபாக எழுந்தது. மேலும், தமிழின் பழங்கால இலக்கியம் விவரிக்க முடியாத அளவுக்கு விரிவும் வளமும் கொண்டது.

தமிழ் ஒரு செம்மொழி என்பதை வலியுறுத்திக் கூறும் ஒரு கட்டுரையை எழுத வேண்டியுள்ள நிலை எனக்கு வினோதமாகத் தோன்றுகிறது. இந்தியா ஒரு பெரிய நாடு, இந்துமதம் உலகின் பெரும் மதங்களில் ஒன்று என்பன போன்றவற்றை நிறுவ முயல்வதை ஒத்ததுதான் இதுவும். உலகின் செம்மொழிகளில் ஒன்று தமிழ் என்பது அம்மொழியைப் பற்றி அறிந்த எவருக்கும் ஆதாரபூர்வமாகத் தெளிவான ஒரு விஷயம். தமிழுக்குச் செம்மொழி என்ற சிறப்பை மறுப்பது, இந்தியப் பண்பாட்டின் உயிராதாரமான பெருமையையும் வளத்தையும் மறுப்பதாகும்.

*(2000, ஏப்ரல் 11இல் எழுதியது)*

தமிழில்: **ஆனந்த் செல்லையா**

# தமிழ் செம்மொழியான பிறகு . . .



**வேங்கடாசலபதிக்கு ஜார்ஜ் எழுதிய கடிதம்:**

அன்புள்ள சலபதி,

தமிழ் ஒரு செம்மொழி அல்ல என யாராவது நினைப்பார்கள் என்பதே வினோதமாகத் தோன்றுகிறது. ஒரு பிரச்சினை என்னவென்றால் தமிழர்கள் கொஞ்சம் - பல நேரங்களில் கொஞ்சம் அதிகமாக - தங்களுக்குள் ஆழ்ந்தவர்கள், சுயபெருமை மிக்கவர்கள். இதன் விளைவு, எந்த அளவுக்குப் பிறர் தமிழர்களைத் தீவிரமாகப் பொருட்படுத்தியிருக்க வேண்டுமோ அந்த அளவிற்குப் பொருட்படுத்தவில்லை. அரசியலும் இதற்கு உதவவில்லை. தமிழகத்துக்கு வெளியில் இருப்பவர்கள் தமிழின் வளம் தொடர்பான கருத்துகளை அரசியல் தம்பட்டமாகக் கண்டுவந்திருக்கிறார்கள். லெமூரியா போன்ற சல்லித்தனமான கருத்தாக்கங்களும் உதவவில்லை. தமிழைச் செம்மொழியாக அறிவித்தது குறிப்பிடத்தகுந்த விளைவுகளை ஏற்படுத்தும் என நம்புகிறேன். குறைந்தபட்சம், நீண்ட காலம் அச்சில் இல்லாதிருக்கும் பெரும் படைப்புகளை வெளியிட நிதி ஒதுக்கப்படலாம். அண்ணாமலைப் பல்கலைக்கழகக் கம்பன் பதிப்பைப் பற்றி உங்களோடு விவாதித்தது ஞாபகம் வருகிறது. வை. மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியாரின் உரைகள் பெரும் பயனுள்ளவை; அவ்வை துரைசாமிப் பிள்ளையின் நற்றிணை உரை பற்றி மிகச் சிலருக்கே தெரியும். இவை போன்ற நூற்றுக்கணக்கான படைப்புகளைச் சுட்டலாம். (கழகம் தன் பாரம்பரியத்தை முற்றிலும் கைவிட்டுவிட்டதாகத் தெரிகிறது.) பனுவல்களைக் கணிப்பொறியில் பதிவுசெய்வதன் துரதிருஷ்டமான ஒரு விளைவு, அவற்றை அச்சிடுவதை வருவாயற்ற காரியமாகச் செய்துவிடுகிறது. எப்படியிருப்பினும், பெரும் புலமையை வெளிப்படுத்தும் இவற்றில் சில வாசகர்களுக்குக் கிடைக்கலாம். வெகுமக்கள் ஊடகங்களின் பிடியிலிருந்து சில தமிழர்கள் விடுபட்டு, அவர்களது பாரம்பரிய இலக்கியத்தில் ஆர்வம்கொள்ளலாம். தமிழுக்குச் செம்மொழித் தகுதி வழங்குதல் உண்மையில் நற்புலமையையும் தங்கள் வளமான மரபுச் செல்வத்தையும் பேணுவதில் தமிழர்களை அக்கறைகொள்ளச் செய்யுமானால், அது நல்லதுதான்.

– ஜார்ஜ்
ஜூன் 15, 2004

**ஓவியப் போட்டி**

காலச்சுவடு ஓவியப் போட்டிக்கான இறுதித் தேதி ஜூலை 31வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. கவிதைப் போட்டிக்கான தேதியில் (ஜூன் 30) மாற்றமில்லை. **–ஆ. கு.**




தமிழ் செம்மொழி ஆகும் தருணத்தில்...

# நாம் செய்ய வேண்டியது என்ன?

**முனைவர் சு. துரை**

**1918**ஆம் ஆண்டு முதல் முன்வைக்கப்பட்ட தமிழ் செம்மொழி அங்கீகாரம் பெற வேண்டும் என்ற கோரிக்கை 2004இல் நிறைவேறும் தருணத்தில் இது தொடர்பாகச் சிலவற்றைப் பொறுப்புடன் விவாதிப்பது தமிழர்கள் அனைவரது கடமை.

1946இல் நாகபுரியில் நடைபெற்ற அகிய இந்தியக் கீழைத்தேய மொழியியல் மாநாட்டில் திராவிட மொழிப் பகுதிக்குத் தலைமை தாங்கிப் பேருரை ஆற்றிய பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை திராவிட மொழிகளுக்கு முதன்முறையாக இப்பொழுதுதான் தனியான ஒரு துறை உருவாக்கப்பட்டுள்ளது என்று மகிழ்ச்சி தெரிவித்து, திராவிட மொழிகளிலேயே மூலத் தன்மையைத் தன்னுள் பெருமளவு பெற்றுள்ள தமிழ் மொழியில் நாம் செய்ய வேண்டிய பல வேலைகளை 36 பக்கங்களில் சுட்டிக் காட்டி எழுதினார். அவர் சுட்டிக்காட்டிய பல பணிகளில் சுமார் 75% இன்னும் செய்யப்படாமலேயே உள்ள நேரத்தில் தமிழ் செம்மொழி என்னும் அறிவிப்பை எதிர் நோக்குகின்றோம்.



திராவிட மொழிகளில் முதன்மையானதாக உள்ள தமிழின் தகவமைப்பிற்குத் தேவையான பணிகளை நாம் நிறைவேற்றாமல்விட்டது இன்று திராவிட மொழி பேசும் மற்றவர்கள் தமிழை முழுமையாக அங்கீகரிக்க இயலாமல் செய்துவிட்டது. இத்தகைய தொரு நிலை செம்மொழியாகும் தமிழுக்கு நிகழக் கூடாது. அதற்கு நாம் உடனடியாகச் செய்ய வேண்டிய பணிகள் பலவற்றுள் அடிப்படையானவை என்று எங்களுக்குத் தோன்றிய சிலவற்றைச் சுட்டிக்காட்டிச் செயல்பாட்டுக்குத் தூண்டுவது பொருத்தமானது எனக் கருதுகிறோம்.

செம்மொழித் தகுதி பெற்ற மொழிகளான கிரேக்கம், இலத்தீன், சீனம், அராபி முதலிய மொழிகளின் தகுதிக்கு ஆதாரமான நூல்கள் பிறமொழிகளில் வந்துள்ளதாக அறிகிறோம். குறிப்பாக சமஸ்கிருதத்தில் 19ஆம் நூற்றாண்டிலேயே வேதங்கள், காவியங்கள், இலக்கண நூல்கள் முதலியவற்றின் செம்பதிப்புகளும் வடமொழி இலக்கண இலக்கிய வரலாறுகள், தர்ம சாத்திரத்தின் வரலாறுகள் போன்ற ஏராளமான கருவி நூல்கள் மேனாட்டார்களாலேயே எழுதப்பட்டதன் விளைவாக மாக்ஸ் முல்லர் போன்ற ஜெர்மன் நாட்டு அறிஞர்கள் இந்தியா வராமலேயே வேத விற்பன்னர்களாக - வடமொழிப் பேரறிஞர்களாக - ஆகும் வாய்ப்பு ஏற்பட்டது. இத்தகைய நிலை தமிழுக்கு அமைய மேற்குறித்தது போன்ற அடிப்படைக் கருவி நூல்கள் உருவாக வேண்டும்.

செம்மொழித் தகுதி தமிழுக்கு உண்டு என்பதை மெய்ப்பிக்கக்கூடிய, அனைவராலும் ஒப்புக் கொள்ளக்கூடிய பழந்தமிழ் நூல்களின் செம் பதிப்புகள் உடனடியாகத் தகுதிவாய்ந்த அறிஞர் குழுக்களைக் கொண்டு வெளியிடப் பட வேண்டும். உ. வே. சா. பதிப்புகள் வந்த பின்பும் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை, ‘ஆராய்ச்சிக் குறிப்புகளுடன் முன்னுரை, உரை, செய்யுள் முதற்குறிப் பகராதி, சொல்லகராதி, பொருளகராதி முதலியவற்றுடன் கூடிய சிலப்பதிகாரப் பதிப்பு வெளிவர வேண்டும்’ என்கிறார். உ. வே. சா. பதிப்பிற்குப் பின்னும் சிலம்பிற்கு ஒரு பதிப்பு வேண்டும் என்று பேராசிரியர் சுட்டும்போது செம்மொழித் தகுதிக்கு ஆதாரமான தொல்காப்பியம் நம்முடைய நினைவுக்கு வருகிறது. இன்றுவரை தொல்காப்பியத்திற்கு ஆராய்ச்சி முன்னுரை, பாட வேறுபாட்டுக் குறிப்புகள், உரையாசிரியர்களின் முரண்கள், சொல்லகராதி, பொருளகராதி, மேற்கோள் விளக்க அகராதி, விளங்கா மேற்கோள் அகராதி என்று பன்முகத் தன்மை உள்ள ஒரு பதிப்பேனும் வெளிவரவில்லை. இத்தருணத்தில் இந்தப் பணி உடனே மேற்கொள்ளப்பட வேண்டும். இத்தகைய ஆராய்ச்சிப் பதிப்பின் மொழி பெயர்ப்பும் உடனடியாக வெளியிடப்பட வேண்டும்.

இத்தகைய பதிப்பின் கூடுதல் அம்சமாகத் தொல்காப்பிய இலக்கணத்திற்கும் வடமொழி இலக்கணத்திற்குமான ஒப்பீட்டு ஆய்வுகள் பிற திராவிட மொழிகளின் இலக்கணத்திற்கும் தொல்காப்பியத்திற்குமான ஒப்பீடு

www.padippakam.com



கள், நவீனமொழியியலின் பார்வையில் தொல்காப்பிய ஆய்வுகள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

சங்க இலக்கிய நூல்களான எட்டுத்தொகை, பத்துப் பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு போன்றவற்றின் பழைய உரையுடன் கூடிய ஆய்வுப் பதிப்புகள், எல்லோ ராலும் ஒப்பக்கூடிய அவற்றுக்கான மொழிபெயர்ப்பு கள் போன்றவை உடனடியாகச் செய்யப்பட வேண்டும்.

நவீன காலத்திற்கு ஏற்பான நுண்மையும் விரிவும் பொருந்திய, அறிவியல் அடிப்படையிலான, உலகம் முழுமையும் உள்ளவர்களின் ஏற்பையும் நம்பகத்தன்மை யையும் பெறுகின்ற தமிழ் இலக்கண வரலாறு, இலக்கிய வரலாறு, கலை வரலாறு போன்றவை எழுதப்பட வேண்டும்.

உலகின் பிற மொழியினர் தமிழை எளிமையாக நுட்பத்துடன் கற்பதற்கு வாய்ப்பாக அமையும் பல்வேறு வகையிலான அகராதிகள், சொற்களஞ்சியங்கள் உருவாக்கும் பணி தொடங்கப்பட வேண்டும்.

ஜி. யு. போப் போன்ற பன்மொழி அறிஞர்களால் வியந்து பார்க்கப்பட்ட சமயம் சார்ந்த (சைனம், பௌத்தம், சைவம், வைணவம்) இலக்கியத் தொகுப்பு களைத் தன்னிடம் கொண்ட மொழி தமிழ். அச்சமய இலக்கியங்கள் மதவியல் கண்ணோட்டம் இன்றி ஒப்பிலக்கியக் கண்ணோட்டத்தில் நவீன கால ஆய்வுகளுடன் கூடிய பதிப்புகள் வெளிவர வேண்டும். சான்றாக, மணிமேகலை போன்ற காவியம் இன்றைய பௌத்த அறிவின் வெளிச்சத்தில் ஒப்பிடப்பட்டு ஆய்வுக் குறிப்புகளுடன் வெளிவர வேண்டும்.

தமிழ்நாட்டில் ஏற்கனவே தொகுக்கப்பட்டுள்ள ஆயிரக்கணக்கான கல்வெட்டுகள், செப்பேடுகள் முதலியவை துறைபோகிய அறிஞர்களின் முறையான ஆய்வுக் குறிப்புகளுடன் அறிவியல் அடிப்படையிலான பதிப்பு முறையில் வாசகர்கள் அனைவருக்கும் எளிதில் கிடைக்கும்படி வெளியிடப்பட வேண்டும். இதேபோல இன்னும் அச்சு வடிவம் பெறாமல் பாதுகாக்கப்பட்டு வரும் ஓலைச்சுவடிகள் அனைத்தும் உடனடியாக நூல்வடிவில் வெளியிடப்பட வேண்டும்.

இந்தியத் துணைக்கண்டத்தில் பழங்காலத்தில் வழக்கில் இருந்த பாலி, பிராகிருதம், சமஸ்கிருதம் போன்றவற்றுடன் தமிழும் ஒன்று. எனவே இம்மொழிகளுடன் தமிழ்மொழி கொண்டி ருந்த உறவினை விளக்கும் ஆய்வுகளும் அகராதிகளும் வெளியிடப்பட வேண்டும். பிற்காலத்தில் தோன்றிய கன்னடம், தெலுங்கு, மலையாளம் முதலிய மொழிகளுக்கும் தமிழுக்கும் உள்ள உறவை விளக்கும் ஆய்வு களும் அகராதிகளும் வெளிவர வேண்டும். சான்றாக 'குணகாங்கியம் என்னும் கருநாடகச் சந்தம்' என்னும் நூல் யாப்பருங்கலக்காரி கையில் குறிப்பிடப்படுகிறது. இன்று கன்னடத் தில் அந்நூல் இல்லை. இத்தகையதொரு நூல் இருந்ததாக இன்றைய கன்னட மொழி யில் குறிப்புகள் இல்லை. மலையாள மொழி யில் முதன்முதலாக 16ஆம் நூற்றாண்டு வாக்கில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள பகவத் கீதை, தமிழில் பட்டர் என்பவரால் மொழிபெயர்க்கப்பட்ட பகவத் கீதையின் நேரடி மொழிபெயர்ப்பு என்பது தெ. பொ. மீயின் முடிவு. இத்தன்மைத்தான திராவிட மொழி களின் இலக்கண இலக்கிய விடு படல்கள் தமிழின் வழியான ஆய்வு களால் நிறைவுபெற வாய்ப்பு உள்ளது.




இந்தியக் கலைகளின் வரலாற்றில் தமிழின் பங்களிப்பு என்பது உரிய இடத்தைப் பெறவில்லை என்ற மனக் குறை தமிழர்களிடையே உள்ளது. ஆனால் அதை நிறைவு செய்வதற்கான செயல்பாடுகள் போதுமான அளவுக்குத் தமிழில் நிகழவில்லை. மகாராஷ்டிர அரசர் 13ஆம் நூற்றாண்டில் எழுதிய இசை, நாட்டியம் தொடர்பான தன் நூலைத் திருவரங்கத்தில் உள்ள தமிழ் நாட்டியப் பெண்களுக்காக எழுதுவதாகக் கூறியுள்ளார். சாரங்கதாரர் குறிப்பிடும் பல இசை நுட்பங்கள் தமிழில் உள்ளதை யாவரும் அறிவர். ஆனால் இத்தகையவற்றைத் தொகுத்து முறையாக விளக்கும் கலை ஆய்வு நூல்கள் தமிழில் இல்லை.

தமிழ் இலக்கியத்திலும் தமிழ்நாட்டு வரலாற்றிலும் ஆய்வுகள் நிகழ்த்திய கமில் சுவலபில், ஜார்ஜ் எல். ஹார்ட், பர்டன் ஸ்டெயின் போன்றவர்களின் அரிய ஆய்வு நூல்கள் இன்றுவரை தமிழில் மொழிபெயர்க்கப்பட வில்லை. அனைத்துலகப் பார்வையிலான தமிழாய் வைத் தமிழறிஞர்கள் கற்று வளப்படுத்திக்கொள்ளும் வாய்ப்பை இழந்துள்ளனர். சான்றாகப் பன்மொழிப் புலவரான கிரிகரி ஜேம்ஸ் எழுதிய 'சொல்பொருள்' என்ற தமிழகராதிகள் பற்றிய ஆங்கில நூலில், 'தமிழ் மொழியில் உள்ளதுபோன்ற சொல்வளம் நானறிந்த வேறு உலக மொழிகளில் இல்லை' என்கிறார். தமிழின் சிறப்பை அறிவியல் அடிப்படையில் எடுத்துக்காட்டும் இத்தகைய நூல்கள் தமிழாக்கம் செய்யப்பட வேண்டும் என்ற அக்கறை, தமிழ்மொழி செம்மொழி ஆவதில் பெருமைகொள்வோருக்கு இருக்க வேண்டும்.

தமிழில் 18ஆம் நூற்றாண்டிலிருந்து வெளிவந்து தமிழ்நாட்டில் அறியப்படாத பல அரிய நூல்கள் பிரிட்டிஷ் அருங்காட்சியகத்தில் இன்றும் பாதுகாக்கப் பட்டு வருகின்றன. அபி துபே என்ற பிரெஞ்சுக்காரர் பாண்டிச்சேரியில் பதிப்பித்த 1000 பக்கங்கள் உள்ள

இந்தியத் துணைக்கண்டத்தில் பழங்காலத்தில் வழக்கில் இருந்த பாலி, பிராகிருதம், சமஸ்கிருதம் போன்றவற்றுடன் தமிழும் ஒன்று. எனவே இம்மொழிகளுடன் தமிழ்மொழி கொண்டிருந்த உறவினை விளக்கும் ஆய்வுகளும் அகராதிகளும் வெளியிடப்பட வேண்டும்.





படிப்பகம்

தேம்பாவணி போன்ற பல நூல்கள் அங்கு உள்ளன. இதுபோன்ற நூல்களைத் தாய்நாட்டிற்குக் கொண்டு வந்து வெளியிடும் முயற்சியை மேற்கொள்ள வேண்டும்.

தமிழ்ச் சமூகத்திற்குத் தொன்மையான வரலாறு இருந்தும் அதற்கான ஆதாரங்களைப் போற்றிப் பாதுகாக்கும் பண்பு தமிழர்களிடம் மிகவும் குறைவு. இனியும் இதுபோன்ற உணர்வு தொடருமானால் மற்ற சமூகங்களிலிருந்து நமக்குக் கிடைக்க வேண்டிய மரியாதையை இழக்க நேரிடும். ஆவணங்கள் என்பன சொத்துப் பத்திரங்கள் போன்றவை. பத்திரம் இல்லாத சொத்திற்கு உரிமைகொண்டாடுவது பாமரத்தனமானது. எனவே எல்லாத் துறைத் தரவுகளையும் ஆவணப்படுத்தி எளிதில் ஆய்வாளர்களுக்குக் கிடைக்கும் வகைசெய்ய வேண்டும்.

புலம்பெயர்ந்த தமிழர்களால் இணையத்தில் உலகம் முழுமையும் குறிப்பிடத்தக்க அளவில் தமிழ் பயன்படுத்தப்பட்டு வருகிறது. பழம் இலக்கியத்தில் ஆர்வம் உள்ள பலரும் தங்கள் விருப்பத்திற்கு உட்பட்டுத் தேர்ந்தெடுத்த இலக்கியங்களை இணையத்தில் ஏற்றி வருகின்றனர். அதற்கு அவர்கள் தங்கள் கண்ணில்படும், கைக்குக் கிடைக்கும் பிரதிகளைப் பயன்படுத்துகின்றனர். பைபிள் போன்ற நூல்களுக்கு வந்துள்ள தரப்படுத்தப் பட்ட பொதுப் பதிப்புகளைப் போலப் பழந்தமிழ் நூல்களுக்கும் அனைத்துத் தரப்பினராலும் ஏற்கப்படும் பொதுப் பதிப்புகள் இருந்தால்தான் எதிர்வரும் காலத்தின் தலைமுறையினர் குழப்பமற்ற அறிவியல் அடிப்படையிலான ஆய்வுகளை மேற் கொள்ள இயலும்.

இந்நாள்வரை வெளிவந்துள்ள தமிழ் நூல் பதிப்புகளை ஒரு மறுபரிசீலனைக்கு உட்படுத்தவேண்டிய நிலையிலும் உள்ளோம். மதுரைப் பல்கலைக்கழகத்தால் வெளியிடப்பட்டுள்ள 'திருக்குறள் பரிமேலழகர் உரையும் விளக்கமும்' என்ற நூல் தெ. பொ. மீயின் ஆசிரியரான கோ. வடிவேலுச் செட்டியார் அவர்களின் விளக்க உரையோடு ஓர் ஆங்கில மொழிபெயர்ப்பையும் கொண்டுள்ளது. அதில் உள்ள மொழிபெயர்ப்பு, செட்டியார் அவர்களின் நண்பரால் எழுதப்பட்டதாகச் செட்டியாரால் குறிப்பிடப்பட்டுள்ளது. உண்மையில் அந்த மொழிபெயர்ப்பு ட்ரு (Rev. W. H. Drew) அவர்களின் மொழிபெயர்ப்பு ஆகும். ஒரு பல்கலைக்கழகமே இதுபோன்ற பிழையைச் செய்தது மட்டுமன்றி 30 ஆண்டுகளாயும் இப்பிழையைக் கண்டுகொள்ள வில்லை என்பது நம்முடைய பதிப்பு வரலாற்றின் பெருமை!

தெய்வப்புலவரால் இயற்றப்பட்டுத் தமிழனின் அடையாளமாகக் கொண்டாடப்படும் திருக்குறளுக்கே இந்தக் கதி என்றால் பிற நூல் பதிப்புபற்றிப் பேசவும் வேண்டுமோ?

அரச பாரம்பரியத்தில் வந்த ஒருவன் காலத்தின் கோலத்தால் ஆண்டியாகப் போய்விட்டான். இன்று அவன் அரசன்தான் என்று கண்டுபிடிக்கப்பட்டு ஏற்பும் வழங்கப்படுகிறது. ஆண்டிக்கோலத்துடன் அவன் அரியாசனத்தில் அமரலாமா?

(இக்கட்டுரை ஆக்கத்திற்குத் துணைபுரிந்த நண்பர்கள் பொ. வேல்சாமி, பெருமாள்முருகன் ஆகியோருக்கு நன்றி.)

வெங்கட் சாமிநாதனுக்கு டொராண்டோ பல்கலைக்கழத்தின் இயல் விருது விழா

## நாற்பதாண்டுகளாக ஒலிக்கும் குரல்

கடந்த ஜூன் 10ஆம் தேதியன்று கனடாவின் டொராண்டோ பல்கலைக்கழகத்தில் தமிழ் கலை இலக்கிய விமர்சகர் வெங்கட் சாமிநாதனுக்கு இயல் விருது வழங்கப்பட்டது. பல்கலைக்கழகத்தின் தெற்காசியப் பிரிவும் டொராண்டோவின் 'இலக்கியத் தோட்டம்' அமைப்பும் இணைந்து வழங்கும் இந்த விருதை அதன் மூன்றாம் வருடத்தில் வெங்கட் சாமிநாதன் பெறுகிறார். தமிழ் இலக்கியத்திற்கு ஆயுட்காலப் பங்களிப்புக்காக வழங்கப்படும் இந்த விருதை முதல் வருடத்தில் பெற்றவர் சுந்தர ராமசாமி. இவரைத் தொடர்ந்து இலங்கை எழுத்தாளர், விமர்சகர் ஏ. கனேஷ் பெற்றார்; இப்போது வெங்கட் சாமிநாதன்.



டொராண்டோ பல்கலைக் கழகத்தின் பாரம்பரியமிக்க ட்ரினிடி கல்லூரி வளாகத்தில் சீலீ அரங்கில் நடைபெற்ற மாலை நேர விழாவிற்கு வந்திருந்தவர்களைப் பல்கலைக்கழகத்தின் ஆங்கிலத் துறைப் பேராசிரியர் செல்வா கனக நாயகம் வரவேற்றார். தொடர்ந்து எழுத்தாளர் அ. முத்துலிங்கம் இலக்கியத் தோட்டத்தின் பணிகளைப் பற்றி அறிமுகம் தந்தார்.

எழுத்தாளரும் பத்திரிக்கையாசிரியருமான மகாலிங்கம் வெ. சாவைப் பற்றி அறிமுக உரை நிகழ்த்தினார். அறுபதுகள் தொடங்கி இன்றுவரை அதே வேகத்துடன் விமர்சனமாற்றி வரும் வெ. சாவிற்குரிய இடம் தமிழ் இலக்கிய உலகில் கொடுக்கப்படவில்லை என்றார் மகாலிங்கம். "நான் விமர்சகன் அல்லன்; என் அபிப்பிராயங்களை உரத்துச் சொல்லிவருபவன்" என்று தன்னிடத்தை வெ. சா குறைத்துக்கொண்டபோதிலும் அவரது உரத்த அபிப்பிராயங்கள் இலக்கியத்திற்கு மிகவும் முக்கியமானவையாக இருந்து வருவதாகச் சொன்னார்.

பல்கலைக்கழகத்தின் ஆசியப் பிரிவின் இயக்குநர், பேராசிரியர் மைக்கேல் டானலி சாமிநாதனுக்கு விருதை வழங்கி உரையாற்றினார். விருதுபெறும் இந்தக் கணம் தன்னுடைய வாழ்வில் நினைத்துப் பார்க்காதது என்று வெ. சா. தனது நன்றியுரையில் சொன்னார். எதையுமே எதிர்பார்க்காத இயல்பைக் கொண்டிருப்பதால் வாழ்வில் பெரிய ஏமாற்றங்களைத் தவிர்க்க முடிந்ததாகவும் அந்த நிலையில் இது போன்ற கௌரவம் தனக்கு ஆச்சரியம் கலந்த மகிழ்ச்சியைத் தருவதாகவும் சொன்னார்.

'காலம்' ஆசிரியர் செல்வத்தின் நன்றியுரையுடன் விழா முடிவடைந்தது.

**வெங்கட்ரமணன்**

www.padippakam.com



*With Best Compliments*
*from*

தினமலர்
தேசிய தமிழ் நாளிதழ்

# DINAMALAR

National Tamil Newspaper

*Printed simultaneously at*

Chennai ✧ Vellore ✧ Pondicherry

Erode ✧ Salem ✧ Coimbatore

Tiruchi ✧ Madurai

Tirunelveli ✧ Nagercoil

விளம்பரம்


படிப்பகம்

www.padippakam.com



இ. அண்ணாமலை (1938) உலக அளவில் மதிக்கப்படும் மொழியியல் அறிஞர். சிகாகோ பல்கலைக்கழகத்தில் பிஎச். டி. பட்டம் பெற்றவர். மைசூரிலுள்ள இந்திய மொழிகளுக்கான மைய நிறுவனத்தில் (Central Institute of Indian Languages - CIIL) பேராசிரியராகவும் இயக்குநராகவும் பணியாற்றியவர். அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஜப்பான், நெதர்லாந்து முதலான நாடுகளின் உயராய்வு மையங்களில் வருகைப் பேராசிரியராகப் பணியாற்றியிருக்கிறார். எதிர்வரும் கல்வியாண்டில் யேல் பல்கலைக்கழகத்தில் சிறப்புநிலைப் பேராசிரியராக அமர்ந்து, தமிழ்ப் பயிற்சியைத் தொடங்கிவைக்க உள்ளார். 'க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி', 'தற்கால மரபுத்தொடர் அகராதி', 'மொழிநடைக் கையேடு' ஆகியவற்றின் உருவாக்கத்தில் முக்கியப் பங்காற்றியிருக்கிறார். இவர் எழுதிய நூல்கள்: Adjectival Clauses in Tamil; Managing Multilingualism in India; (ed.) Language Movements in India.

2003 ஜூலையில், அமெரிக்க—ஐரோப்பியப் பயணத்தை முடித்துக்கொண்டு மைசூர் திரும்பும் வழியில், சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனத்தில் வைத்து நிகழ்ந்த நேர்காணல் இது. உடனிருந்து உதவியவர் ஆனந்த் செல்லையா. நேர்காணலின் ஒலிநாடாப் பதிவைப் பெயர்த்தெழுதியவர் சரவணன்.



கோட்டோவியம்: சிவா

# இ. அண்ணாமலை

# "தமிழுக்குச் செம்மொழித் தகுதி கோரும்போது எச்சரிக்கையாக இருக்க வேண்டும்"

**தமிழில் இதுதான் முதல் பேட்டி என்று நினைக்கிறேன். முதலில் உங்கள் பெற்றோர், குடும்பப் பின்னணி, ஊர்ச்சூழல் பற்றியெல்லாம் சொல்லுங்களேன்.**

நான் பிறந்தது அருப்புக்கோட்டையில். எங்கள் குடும்பம் ஒரு வணிகக் குடும்பம். எங்கள் அய்யாப்பா காலத்தில் லேவாதேவிக் கடை நடத்தினார்கள். எங்கள் அப்பாவும் அதைத் தொடர்ந்து நடத்தினார். அம்மாவின் சொந்த ஊர் மதுரை. அவர் கல்யாணமாகி அருப்புக் கோட்டை வந்தபோது, அவர் அங்கே எஸ்.எஸ்.எல்.சி. படித்த ஒரே நாடார்ப் பெண்மணி என்று சொல்வார்கள். ஆனால் சமூக மரபுகளை ஏற்றுக்கொண்டவர், அவற்றைக் கேள்விக்கு உட்படுத்தாதவர். என் மனைவி நாகேஸ்வரி ராமநாதபுரத்தைச் சேர்ந்தவர். சிவகாசி பூர்வீகம். குடும்பத் தலைவியாக இருந்துகொண்டே பெங்களூர்ப் பல்கலைக்கழகத்தில் சமூகவியலில் டாக்டர் பட்டம் பெற்றார். என் முதல் மகள் மெல்லியல் கணினித்துறையில் டாக்டர் பட்டம் பெற்றிருக்கிறாள். இளைய மகள் அணியிழை மருத்துவவியல் டாக்டர். என் குடும்பம் வணிகச் சூழலிலிருந்து விலகி வந்துவிட்டது.

நான் 1938இல் முதல் பிள்ளையாகப் பிறந்தேன். எங்கள் வீட்டுக்கு எதிரிலேயே சைவ சத்திரிய உயர் நிலைப்பள்ளி இருந்தது. அங்குதான் படித்தேன். பள்ளிப்

**சந்திப்பு: ஆ. இரா. வேங்கடாசலபதி**

படிப்பகம்

www.padippakam.com



படிப்பு முடித்த பிறகு நான், மத்தியதர வகுப்பினர் எதிர்பார்ப்பின்படி, பொறியியல் படிக்க வேண்டு மென்பது என் அப்பாவின் ஆசை. எனக்கு அதில் விருப்பம் இல்லை. மதுரை அமெரிக்கன் கல்லூரியில் நான்காண்டுகள் கணிதம் படித்தேன். அதில் எனக்குப் பிடிப்பு இல்லை. அப்போது தமிழ்த்துறையில் ப. ஜோதி முத்து பேராசிரியராக இருந்தார். கணிதத்தில் பி. ஏ. முடித்த பிறகு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து தமிழ் எம். ஏ. படித்தேன். ஹானர்ஸில் இரண்டா மாண்டு சேர்ந்து படித்தேன். அது 58இலிருந்து 60வரை அப்போது தெ. பொ. மீனாட்சி சுந்தரம் அங்கே பேராசிரி யராகச் சேர்ந்திருந்தார். அவர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கு மொழியியலைப் புதிதாகக் கொண்டுவந்திருந்தார். மொழியியலைத் தனி டிப்ளமோ வாகப் பாடம் நடத்தினார்கள். அதை விரும்பி எடுத்துப் படித்தேன். அங்கு எம். ஏ. படித்து முடித்த பிறகு, இரண்டு ஆண்டுகள் தமிழ்த் துறையில் ஆசிரியராக அங்கேயே பணியாற்றினேன். அதன் பிறகு மொழியியல் துறை என்று தனியே வந்தது. அதில் விரிவுரையாள ராகச் சேர்ந்தேன். அதற்குத் தெ. பொ. மீதான் முக்கியக் காரணம். அவர் மொழியியல்மீது எனக்கு ஈடுபாட்டை உருவாக்கியதோடு, தனிப்பட்ட முறையிலும் என்மீது அன்புகாட்டினார். கணிதம் படித்துவிட்டு மொழியைப் படிக்கும்போது கணிதத்தில் இருக்கும் ஒரு rigour, இலக்கியம் படித்ததினால் வந்த நுண்ணுணர்வு. இந்த இரண்டையும் சேர்ந்து செய்வதற்கு மொழியியல் நல்ல துறையாக இருந்தது.

**நீங்கள் மதுரையில் படித்துக்கொண்டிருந்தபோது ஏ. கே. இராமானுஜன் அங்கு இருந்தாரா?**

அப்போதே அவர் மதுரையைவிட்டுப் போய்விட்டி ருந்தார். சிகாகோ போன பிறகுதான் அவருடைய பரிச்சயம் கிடைத்தது. சிகாகோவில் தமிழ் சொல்லிக் கொடுக்க அவர் ஒருவரைத் தேடிக்கொண்டிருந்தார். தெ. பொ. மீயிடம் அவர் ஹெரால்டு ஷிப்மன் மூலம் கேட்டபோது, அவர் என் பெயரைச் சொன்னார். சிகாகோ பல்கலைக் கழகத்துக்குப் போய் ஐந்தாண்டு கள் தமிழ் சொல்லிக்கொடுத்தேன்.

**எந்த ஆண்டு?**

65இலிருந்து 71வரை. அங்கேயே மொழியியலில் பிஎச். டி. பட்டமும் வாங்கினேன். 57இலிருந்து மொழி யியலில் நோம் சாம்ஸ்கியின் தாக்கம் அதிகம். அவருடைய மொழிக் கொள்கை, முக்கியமாக இலக் கணத்தைப் பற்றிய கொள்கை, மொழியை அணுகும் முறையில் ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது. சிகாகோவில் அந்தப் புதிய மொழிக்கொள்கைகளைத் தீவிரமாகப் பின்பற்றிப் பாடங்களை நடத்தினார்கள்.


**உங்களுடைய ஊர் அருப்புக்கோட்டை. அந்தப் பகுதியில் 1920களில் திராவிட இயக்கச் செல்வாக்கு அதிகமாக இருந்தது. பு. ராசதுரை இதுபற்றி மிகவும் விரிவாகவே எழுதியிருக்கிறார். அந்த ஊரில் இளமைக்காலம் முழுக்கக் கழித்திருக்கிறீர்கள். அங்கேயிருந்த திராவிட இயக்க அரசியல், பண்பாட்டுச் சூழலின் தாக்கம் பற்றிக் கூறுங்கள். உங்கள் குடும்பத்தில் யாராவது சுயமரியாதை இயக்கத்தில் இருந்திருக்கிறார்களா?**

அப்பா பெரிய காங்கிரஸ்காரர். எப்போதும் கதர் தான் உடுத்துவார். காந்தியையும் விவேகானந்தரையும் போற்றியவர். தாகூர் மீதும் மதிப்பு வைத்திருந்தவர். ஆனால் பிராமணரல்லாதவர்களுக்கு ஊக்கம் தந்த ஓர் இயக்கம் என்ற முறையில் சுயமரியாதை இயக்கத் தின் மேல் அவருக்குப் பற்று உண்டு. நான் பள்ளியில் படித்த காலத்தில் எனக்கு அந்த இயக்கத்தின் பரிச்சயம் இருந்தது. முக்கியமாக, கழகத்தினருடைய பேச்சினைக் கேட்டதன் மூலமான தாக்கம் அது. அதனுடன் மார்க்சியத் தாக்கமும் இருந்தது. என் சிந்தனைகள் சில இந்த இரண்டு இயக்கங்களுடைய தாக்கத்தினால் வந்த விளைவுகள் என்று சொல்லலாம். மொழியைச் சமூகமும் பொருளாதாரமும் எப்படிக் கட்டமைக் கின்றன என்கிற பார்வை வருவதற்கு மார்க்சியம் உதவியாக இருந்தது என்று சொல்லலாம். அதே நேரத்தில் மொழிக்கும் கலாச்சாரத்திற்கும், மொழிக்கும் அரசியலுக்கும் இடையிலுள்ள தொடர்பு என்ன என்பது திராவிட இயக்கத்திலிருந்து படித்துக்கொண்டது என்று நினைக்கிறேன். இந்த இரண்டுவிதமான நோக்கிலும் மொழியை அணுகுவதற்கு அந்தப் பள்ளிப் பருவத்தில் ஏற்பட்ட அனுபவங்களும் படித்த நூல்களும் துணைசெய்தன என்று நினைக்கிறேன்.

**பழைய தலைமுறைத் தமிழாசிரியர்களைப் பற்றிப் பொதுவாகச் சொல்கிற விமர்சனம், அவர்களுக்கு நவீனத் தமிழ் இலக்கியங்களைப் பற்றி ஒன்றுமே தெரியாது. பழைய தமிழிலக்கியங்களில்தான் ஆர்வம் காட்டினார்கள்; படிப்பித்தார்கள். நவீன இலக்கியம் தெரியாமலேயே நன்றாகத் தமிழ்ப் பாடம் நடத்தினார்கள், நவீன இலக்கிய ஈடுபாடு இல்லாதது ஒரு பெரிய குறை என்ற இந்த இரண்டு கருத்துகளையும் இன்றைக்கு எப்படிப் பார்க்கிறீர்கள்?**

பாடத்திட்டத்தில் நவீன இலக்கியத்துக்கு அன்று இடம் இல்லை. அதனால் பாடத்திட்டத்தின்கீழ் நவீன இலக்கியம் பற்றி அவர்கள் பேசியதில்லை. ஆனால் நான் அப்போதே நவீனத் தமிழ் இலக்கியம் படித்தேன். மற்ற மாணவர்களும் படித்தார்கள். நவீன இலக்கியத்தின் மீது பகைமையோ வெறுப்போ இருந்தால் அவற்றைப் படித்திருக்க மாட்டார் கள் என்று நினைக்கிறேன். பாடத்திட்டத்தில் இல்லாவிட்டா லும் மாணவர்களிடையே அதைப் படிப்பதற்கு ஆர்வம் இருந்தது என்றுதான் சொல்ல வேண்டும். இப்போது நவீன இலக்கியத்தைப் பாடத்திட்டத்தில் வைத்துப் படிக்கிறார்கள். அதனால் நவீன இலக்கியத்தை அணுகுகிற முறையிலோ அதைப் புரிந்துகொள்கிற முறையிலோ பெரிய மாற்றம் வந்திருக்கிறதா என்று என்னால் சொல்ல முடியவில்லை. சமூகம் சார்ந்த இலக்கிய அணுகுமுறை பரவலானதற்குப் பாடத்திட்டம் காரணமில்லை என்று நினைக்கிறேன். நான் படித்த காலத்திற்கும் அதற்குப் பின்னால் வந்த காலத்திற்கும் இடையில் உள்ள ஒரு பெரிய வித்தியாசம் தமிழ்க் கல்வி பரவலாக ஆனது. இலக்கணம், பழைய இலக்கியம்,

**தமிழினால் தங்களுடைய துறைக்கு வரக்கூடிய அறிவையோ ஒளியையோ பற்றிப் பிறமொழியினருக்குத் தெரியாமல் போய்விட்டது. அதற்குத் தமிழைத் தனிமைப்படுத்தி ஆராயும் கல்விமுறை முக்கியக் காரணம்.**





படிப்பகம்

www.padippakam.com



இன்றைய இலக்கியம் என்று மட்டும் இல்லாமல் இதழியல், நாட்டுப்புறவியல் என்று தமிழ்ப் பாடத்திட்டம் அமைந்துள்ளது. பலவகைகளில் அது நல்ல மாற்றம். ஆனால் அது பழைய இலக்கிய அறிவை எந்தளவிற்குப் பாதித்தது என்று நம்மை நாமே கேட்டுக்கொள்ள வேண்டும். இப்போது புதிய இலக்கியத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் சங்க இலக்கியம் போன்ற இலக்கியங்களிலிருந்து எந்த அளவு உந்துதல் பெற்றிருக்கிறார்கள் என்று சொல்ல முடியவில்லை. இக்கால இலக்கியத்திற்கு மேலை நாட்டில் இருக்கக் கூடிய இலக்கியங்களிலிருந்து வருகிற உந்துதல் அளவிற்குப் பழைய தமிழிலக்கியங்களிலிருந்து வருவதாகச் சொல்ல முடியாது. பழைய தமிழ் இலக்கியத்திற்கும் புதிய தமிழ் இலக்கியத்திற்கும் இடையில் பெரிய இடைவெளி இருக்கிற மாதிரி தெரிகிறது. சங்க இலக்கியத்திலிருந்து படித்துக்கொள்வதற்கு எவ்வளவோ இருக்கிறது. ஏ.கே. ராமனுஜன் இதை எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

நவீன இலக்கியத்தில் நான் அப்போது விரும்பிப் படித்த ஆசிரியர்கள் புதுமைப்பித்தன், ஜானகிராமன், சுந்தர ராமசாமி, லா.ச.ரா. போன்றவர்கள். யாரும் சொல்லிக்கொடுத்து இவர்களைப் படித்ததாக ஞாபகம் இல்லை. நானாக நூலகத்திலிருந்து எடுத்துப் படித்து அதில் ஆர்வம் வந்து படித்த மாதிரிதான் நினைவிருக்கிறது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு வந்த பிறகு சி. சு. செல்லப்பாவுடன் தொடர்பு ஏற்பட்டது.

**திராவிடம், திராவிட மொழிக் குடும்பம் என்பவை கல்வித் துறையில் ஆழமாக ஊன்றிவிட்ட ஒரு கோட்பாடாக இருக்கிறது. ஆனால் திராவிட மொழிகளிடையே புலமைத் தொடர்புகள் கிட்டத்தட்ட இல்லையென்றுதான் சொல்லுவேன். இதனுடைய பின்புலம் என்ன? விளைவுகள் என்ன? இதைச் சரிசெய்ய வேண்டுமா? எப்படிச் சரிசெய்வது? தமிழகத்திற்கு வெளியே அதிகமான புலமைத் தொடர்பு கொண்டவர் என்ற முறையில் இது பற்றி உங்களுடைய கருத்து என்ன?**

நீங்கள் சொல்வது சரிதான். திராவிட மொழிக் கலாச்சாரம் என்று பேசினாலும் எல்லாத் திராவிட மொழிகளின் இலக்கியங்களையும் சேர்த்துப் பார்க்கிற ஒரு கல்வி முறை ரொம்பக் குறைவாகத்தான் இருக்கிறது. அது தமிழுக்கு இழப்பு என்றுதான் சொல்வேன்.

**மற்ற மொழிகளுக்கு இழப்பு இல்லையா?**

மற்ற மொழிகளுக்கும் இழப்புதான். தமிழுக்கு ஏன் அதிகமான இழப்பென்றால், இந்தியக் கலாச்சார வரலாற்றைப் பார்க்கும்போது ஒரு பக்கம் சமஸ்கிருதம், இன்னொரு பக்கம் தமிழ். இந்த இரண்டு தூண்களை வைத்துத்தான் இந்தியக் கலாச்சாரத்தை நிலைநிறுத்த முடியும். மற்ற திராவிட மொழிகளில் தமிழினுடைய இலக்கிய, கலாச்சாரச் செல்வாக்கு எப்படியிருக்கிறது என்று பார்ப்பது இதற்கு அவசியம்; இந்தியக் கலாச்சாரத்தில் தமிழின் பங்களிப்பு இதனால் பெரிதுபடும் என்று சொல்லுவேன். இன்னொன்று, மற்ற திராவிட மொழிகள், இலக்கியம், கலாச்சாரம் படிப்பவர்களிடம் திராவிட மொழி, இலக்கியம் அல்லது கலாச்சாரத்தில் தமிழினுடைய இடம்பற்றி ஒத்துக் கொள்ளக்கூடிய தன்மை குறைவாகத்தான் இருக்கிறது. அது தமிழுக்கு இழப்பு. தமிழைத் திராவிடக் கலாச்சாரத்துக்குப் பிரதிநிதித்துவப் படுத்திப் பார்ப்பதால், திராவிட மொழிகளில் தமிழ்ப் பங்களிப்புப் பற்றிச் சொல்கிறோம். இந்தப் பங்களிப்பை மற்ற இந்திய மொழிகளோடும் பார்க்க வேண்டும்.

தமிழ்க் கல்விமுறையை இன்று நாம் பொருள் சார்ந்து அகலப்படுத்தியிருக்கிறோம். அதாவது தமிழ் என்றால் இலக்கியம், இலக்கணம் மட்டுமல்ல; வேறு சில அறிவுத் துறைகளும் அதில் வரும் என்ற முறையில் தமிழ்க் கல்வி பரவலாகியிருக்கிறது. ஆனால் இந்திய அளவில் மற்ற மொழிகள் அவற்றின் இலக்கியங்கள், கலாச்சாரங்கள், ஆகியவற்றின் இடையில் தமிழை வைத்துப் பார்க்க வேண்டும் என்கிற அளவில் தமிழ்க் கல்வியின் பரப்பு இன்னும் அமையவில்லை.

**இந்த எண்ணம் பிறமொழி அறிஞர்களிடம் இருக்கிறதா? தமிழைப் பற்றி ஆழமாக ஆராய்ச்சி செய்ய வேண்டும் என்று சொல்கிற ஆராய்ச்சியாளர்கள், தமிழ் மட்டும் படித்தால் போதாது, வடமொழி படிக்க வேண்டும்; திராவிட மொழிகளில் ஏதோ ஒன்றோ இரண்டோ படித்திருக்க வேண்டும். அப்படிப் படித்தால் நல்லது என்கிற மாதிரி ஒரு கருத்து இருக்கிறது. நடைமுறையில் இது இருக்கிறதோ என்னவோ, கருத்தளவில் இதை எல்லோரும் ஏற்றுக்கொள்கிறார்கள். அவ்வை துரைசாமிப் பிள்ளை போன்றவர்களெல்லாம் வடமொழி எல்லாம் படித்தவர்கள்தான். இன்னொரு புறமும் நாம் பார்க்க வேண்டியிருக்கிறது. இந்தச் சிந்தனை பிறமொழி அறிஞர்களிடம் இருக்கிறதா? வடமொழி அறிஞர்களை ரொம்ப நாள் பார்த்துக்கொண்டிருக்கிறோம் - தமிழைப் பற்றிய அவர்களது அறிவு மிகவும் மேலோட்டமானதாகவும் ஒரு வகையில் உதாசீனப்படுத்துவதாகவும்கூட இருக்கிறது. இந்தச் சூழ்நிலையையும் நாம் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும் இல்லையா?**



சாதியைப் பற்றிச் சொல்லும்போது அதன் செல்வாக்கு, பல துறைகளிலும் உள்ளது. தமிழ்க் கல்வித் துறைக்கு மட்டும் அது உரியது என்று எப்படிச் சொல்ல முடியும்?

www.padippakam.com



**இந்தியாவில் முந்தைய காலத்திலிருந்தே மொழியியல் ஈடுபாடு இருந்திருக்கிறது. ஆனால் இது பெரிய மொழிகளைப் பற்றியே இருந்தது. பழங்குடி மொழிகளைப் பற்றிய ஆர்வம் யாரிடமும் இல்லை.**



பிறமொழி இலக்கிய, கலாச்சார அறிஞர்களிடம் சமஸ்கிருதம் கற்றுக்கொள்ள வேண்டுமென்கிற எண்ணம் இருக்கிறது. கல்வித் துறையிலும் அதற்கான வாய்ப்பு இருக்கிறது. ஆனால் தமிழைப் பற்றிய அத்தகைய எண்ணம் இல்லாததற்குத் தமிழ்த் துறையை வளர்த்த விதம் ஒரு காரணம் என்று சொல்வேன். தமிழ்த் துறையில் தனிமைப்படுத்துதல் (exclusiveness) வந்திருக்கிறது. இதனால் மற்றவர்களுக்குத் தமிழால் தங்களுடைய துறைக்கு வரக்கூடிய அறிவையோ ஒளியையோ பற்றித் தெரியாமல் போய்விட்டது. அதற்குத் தமிழைத் தனிமைப்படுத்தி ஆராய்ச்சி செய்யும் கல்விமுறை வலுத்தது முக்கியமான காரணம்.

**உங்கள் மாணவப் பருவத்தில் மு. வ., தெ. பொ. மீ. இருவரும் இரண்டு துருவங்களாக இருந்தார்கள். அவர்களுக்குள் ஆளுமை மோதல் இருந்தது. அவர்களுடைய மாணவர்களிடையே போட்டி இருந்தது. மு. வவினுடைய மாணவர்கள்தான் தமிழ்க் கல்வி நிறுவனங்களைக் கைப்பற்றினார்கள். தெ. பொ. மீ. மாணவர்கள் விலகிப் போய்விட்டார்கள். அதிகாரப் போட்டியில் அவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை எனப் பொதுவாக ஓர் எண்ணம் இருக்கிறது. இதைப் பற்றி அந்தக் காலத்தில் படித்தவர் என்கிற முறையிலும் தெ. பொ. மீயின் மாணவர் என்ற முறையிலும் உங்களுடைய அனுபவம் என்ன?**

அவர்களுடைய தனிப்பட்ட உறவைப் பற்றி, நீங்கள் சொல்கிற மோதல் பற்றி எனக்குத் தெரியாது. மு. வ. தமிழ் மொழி மற்றும் கலாச்சாரத்தைப் பற்றிக் கொண்டிருந்த கருத்துக்களுக்கு ஒரு பரவலான அங்கீகாரம் இருந்தது; அது அரசியல் அளவிலும் இருந்தது. பொது மக்கள் அளவிலும் இருந்தது. அரசியல் அளவில் இருந்த அங்கீகாரம் அவருடைய மாணவர்கள் வேலை வாய்ப்பு பெறுவதில் உதவியிருக்கலாம். இந்திய அளவில் பார்க்கும்போது ஆய்வுலகில் தெ. பொ. மீயுடைய மாணவர்களுக்கு ஓர் இடம் இருக்கிறது என்று சொல்லலாம். இது தெ. பொ. மீ., மு. வ. என்கிற தனிப்பட்ட மனிதர்களுக்கு இடையில் இருந்த போட்டி என்று சொல்லமாட்டேன். தமிழைப் பற்றிய பல அணுகுமுறைகள் இருந்தன; தெ. பொ. மீ. அணுகுமுறைக்கு ஓர் அரசியல் அங்கீகாரம், கலாச்சார அங்கீகாரம் இல்லையென்று சொல்லலாம்.

**போட்டியை அன்றைக்கு நீங்கள் உணர்ந்தீர்களா? உங்கள் நினைவு என்ன?**

தனிப்பட்ட போட்டி இருந்த மாதிரி எனக்கு நினைவு இல்லை. வகுப்பிலோ தெ. பொ. மீயுடன் பேசிக்கொண்டிருந்தபோதோ இந்த மாதிரி ஒரு பிரிவு இருந்தது என்ற நினைவும் இல்லை. ஆனால் தெ. பொ. மீ. மாணவர்கள் சிலபேரிடமேகூடத் தெ. பொ. மீயின் அணுகுமுறையை ஏற்றுக்கொள்ளாத நிலைமை இருந்தது உண்மை.

**யாரிடம் அப்படியிருந்தது?**

பழ. நெடுமாறனையே சொல்லலாம். அவர்களெல்லாம் தெ. பொ. மீ. வருவதற்கு முன்பாக அ. சிதம்பரநாதன் செட்டியாரிடம் படித்தவர்கள். அவருடைய கருத்துப்போக்கும் மு. வவினுடைய கருத்துப்போக்கும் ஒத்துப்போகும். தெ. பொ. மீ. வந்த பிறகு அவருடைய புதிய கருத்துப் போக்கை ஏற்றுக்கொள்வதில் கொஞ்சம் சிக்கல் இருந்தது. அதோடு தெ. பொ. மீயுடைய மாணவர்கள் பலரிடம் திராவிட இயக்கத்தின் சாயல் இருந்தது. தெ. பொ. மீயிடம் தேசிய இயக்கத்தின் சாயல் இருந்தது. தெ. பொ. மீ. மாணவர்கள் என்பதாலேயே அவர்கள் கல்வித்துறையில் அவருடைய தேசிய வழியைப் பின்பற்றுபவர்கள் என்று சொல்ல முடியாது.

**மு. வ. தன் சாதியைச் சேர்ந்த மாணவர்களுக்குச் சார்பாக நடந்துகொண்டார் என்பது பரவலாக எல்லோரும் சொல்கிற செய்தி. தெ. பொ. மீ. மதுரைப் பல்கலைக் கழகம் சென்ற பிறகு தம் சாதியைச் சார்ந்தவர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பணிகள் போட்டுத் தந்தார் என்றும் சொல்வார்கள். பொற்கோவுக்கு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் இடம்கொடுத்துவிடக்கூடாது என்று மு. வ. கருதியதாகவும்கூடச் சொல்வார்கள். பார்ப்பனர்கள் தமிழாசிரியராக இருந்தபோது பெருமளவு பிற சாதி மாணவர்களை உதாசீனப்படுத்தியிருக்கிறார்கள். 1950 - 60களில் பார்ப்பனர்களின் ஆதிக்கம் பெருமளவில் தமிழ்த்துறையில் குறைந்து, பிறசாதியினர் வரக்கூடிய சூழ்நிலை வருகிறது. அப்பொழுது தமிழ்க் கல்வி உலகத்தில் சாதி எப்படியிருந்தது?**

இந்தக் கேள்வி இவர்களைக் குறுகிய வட்டத்துக்குள் அடைக்கிறது. அந்த மாதிரி ஒரு நினைவோ அனுபவமோ எனக்கு இல்லை. மு.வ. பற்றி இப்படிச் சிலர் சொல்ல நானும் கேள்விப்பட்டிருக்கிறேன். எனக்கு அனுபவம் இல்லை. தெ. பொ. மீயைப் பற்றி நான் இப்படிக் கேள்விப்பட்டதில்லை. இப்போது நீங்கள் சொல்லித்தான் கேட்கிறேன். தெ. பொ. மீ. அப்படிச் செய்யக்கூடியவர் இல்லையென்று தான் நினைக்கிறேன். அவருடைய பிறரறிந்த மாணாக்கர்களான துரை அரங்கசாமி, தா. ஏ. ஞானமூர்த்தி, ம. ரா. போ. குருசாமி முதலியோர் அவர் சாதியைச் சேர்ந்தவர்கள் என்று நினைக்கிறேன். மதுரைப் பல்கலைக்கழகத்தில் அவர் நியமித்த தமிழ்த் துறைத் தலைவர், உயிரியல் தலைவர் முதலியோர் அவர் சாதியைச் சேர்ந்தவர்கள் அல்ல. சாதியைப் பற்றிச் சொல்லும்போது, அதன் செல்வாக்கு பலதுறைகளிலும் உள்ளது. தமிழ்க் கல்வித் துறைக்கு மட்டும் உரியது என்று எப்படிச் சொல்வது?

**மொழியியல் என்ற புதிய அறிவுத்துறை தமிழுக்கு எப்படி வந்தது?**

மொழியைப் பற்றி அறிந்துகொள்வதற்குரிய ஆர்வம் ரொம்பப் பழைய ஆர்வம். மதத்தைச் சார்ந்தும் தத்துவத்தைச் சார்ந்தும் மொழியில் ஓர் ஆர்வம் பழங்காலத்திலேயே இருந்திருக்கிறது. தற்காலத்தில் இதில் சில முக்கியமான மாறுதல்கள் ஏற்பட்டன. காலனி ஆதிக்கத்தின்போது பல மொழிகளை எதிர் கொண்டபோது மொழிகளுக்கு இடையேயுள்ள தொடர்புகளைப் பற்றி அறியும் ஆர்வம் எழுந்தது. அந்த ஆர்வத்தின் விளைவாக வரலாற்று மொழியியல்



படிப்பகம்

பிறந்தது. இந்திய - ஐரோப்பிய மொழிகளைப் பற்றித் தெரிந்துகொள்வதில் கவனம் ஏற்பட்டது.

ஆங்கிலேயக் காலனிய ஆதிக்கம் ஆசியாவில் காலூன்றியபோது அங்குள்ள மொழிகளுக்கு இடையே இருந்த தொடர்பு பற்றிய ஆர்வத்தைத் துண்டியது. அமெரிக்கக் காலனிய ஆதிக்கம் அமெரிக்காவிலிருந்த பழங்குடி மக்களின் மொழியைப் பற்றித் தெரிந்து கொள்ளும் ஆர்வத்தை ஏற்படுத்தியது. இந்த ஆர்வம் ஓரளவு வரலாற்றுப் பார்வை கொண்டதாக இருந்தாலும் முக்கியமாக அந்த மொழிகளின் இலக்கணத் தன்மைகளைப் பற்றி ஆராயக்கூடிய அறிவாக வளர்ந்தது. மானிடவியலின் ஒரு பகுதியாகவே மொழியியலின் வளர்ச்சியும் அமைந்தது. மொழி ஒரு கலாச்சாரத்தின் அங்கம் என்ற முறையில் கலாச்சாரத்தைப் படிக்கும்போது மொழியையும் படிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அமெரிக்க இந்திய மொழிகளை ஆராய்ச்சி செய்தவர்கள் அமைப்பு மொழியியல் என்ற ஒன்றை அமெரிக்காவில் உருவாக்கினார்கள். ஐரோப்பாவிற்கும் அது பரவியது. நாம் இன்று மொழியியல் என்று சொல்லும்போது குறுகிய நிலையில் காலனிய ஆதிக்கக் காலத்தில் தோன்றிய மொழி பற்றிய ஆய்வையே குறிக்கிறோம்.



இந்தப் புதிய மொழியியல்தான் 50களில் இந்தியாவுக்கு வந்தது. அதற்கு அமெரிக்கக் கல்வி நிறுவனங்கள் ஒரு முக்கியமான காரணம். ராக்பெல்லர் பவுண்டேஷன் என்ற அமெரிக்க நிறுவனம் இந்தியர்கள் புதிய மொழியியல் பயிற்சி பெற, பூனாவில் உள்ள டெக்கான் கல்லூரியில் கோடைக்காலப் பயிற்சிகளை நடத்தியது. இந்தியர்களுடைய பார்வையில் சுதந்திரம் வந்த புதிதில் மொழிப் பிரச்சினைகள் பெரிதாக உருவெடுக்கும் என்ற நிலையில் அவற்றைத் தீர்ப்பதற்காக இந்திய மொழிகளைப் பற்றித் தெரிந்துகொள்வதற்குப் புதிய மொழியியல் பயன்படும் என்ற கருத்து இருந்தது. இந்தியாவில் முந்தைய காலத்திலிருந்தே மொழியியல் ஈடுபாடு இருந்திருக்கிறது. ஆனால் இந்த ஈடுபாடு இலக்கிய வளம் உள்ள பெரிய மொழிகளைப் பற்றியே இருந்தது. பழங்குடி மக்களுடைய மொழியைப் பற்றி அறியும் ஆர்வம் யாரிடமும் இல்லை. இந்தப் புதிய மொழியியலை, அமெரிக்காவிலுள்ள பழங்குடி மக்களைப் படித்து அதிலிருந்து வளர்ந்த மொழியியலை, இந்தியாவிலும் பயன்படுத்தலாம் என்கிற எண்ணத்தில் அதற்கு வரவேற்பு இருந்தது. இந்தக் கோடைப் பள்ளிகளில் பல மொழித் துறைகளிலிருந்து சென்றவர்கள் பயிற்சி பெற்றார்கள். ஆங்கில மொழித் துறையிலிருந்தும் பயிற்சி பெற்றார்கள். இது நடந்தது 50களிலும் 60களிலும். அமெரிக்காவிலிருந்து பேராசிரியர்கள் வந்து கற்றுத் தந்தார்கள். கோடைப் பள்ளியில் படித்தவர்களில் நல்ல மாணவர்களைத் தேர்ந்தெடுத்து அமெரிக்காவிலே டாக்டர் பட்டம்பெற அனுப்பிவைத்தார்கள். அப்படித்தான் இந்தியாவிலிருந்து பலபேர் கார்னல் பல்கலைக்கழகம், இந்தியானா பல்கலைக்கழகம் முதலியவற்றுக்குப் போனார்கள்.

**தமிழ்நாட்டிலிருந்து போன முதல் ஆள்கள் யார்?**


மு. சண்முகம் பிள்ளை. வ. அய். சுப்பிரமணியம். அகத்தியலிங்கம் பின்னாளில் போனார். கர்நாடகத்திலிருந்து ஏ. கே. ராமானுஜன் போனார்.

**அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தைத் தவிர 60களில் வேறு எங்கெல்லாம் மொழியியல் துறை படிப்பாகவோ பாடமாகவோ இருந்தது?**

தமிழ்நாட்டில் வேறு பல்கலைக்கழகங்களில் எங்கும் இது தனித் துறையாக இல்லை. சில இடங்களில் தமிழ்த் துறையில் ஒரு பாடமாகச் சேர்த்தார்கள். அந்தக் காரணத்திற்காகத்தான் மு.வ. மொழிநூல் எழுதினார். மொழியியல் பயிற்சி பெற்று இந்தியாவுக்குத் திரும்பியவர்கள் மொழியியல் மாணவர்களை உருவாக்கினார்கள். மொழியியல் ஆராய்ச்சியும் செய்தார்கள். அதன் பிறகே புதிதாக மொழியியல் துறைகள் தொடங்கப்பட்டன.

மொழியியலுக்குத் தமிழகத்தில் வரவேற்பு அவ்வளவு நன்றாக இல்லை. மொழியியல் என்றால் இலக்கணம்; தமிழில் ஏற்கெனவே நல்ல இலக்கணங்கள் இருக்கின்றன; நல்ல இலக்கணப் பாரம்பரியம் இருக்கிறது. எனவே புதிதாகத் தெரிந்துகொள்வதற்கு ஒன்றும் இல்லையென்ற ஒரு கருத்து நிலவியது. நம் முன்னோர்களுக்குத் தெரிந்ததைத்தான் இப்போது ஆங்கிலத்தில் பேசுகிறார்கள் என்ற மனப்பாங்கும் இருந்தது. இரண்டாம் காரணம், பழங்குடி மக்களின் மொழிகளைப் பற்றி அடங்கிய மொழியியலில் பேச்சுமொழிக்கு முக்கியத்துவம் தரப்பட்டது. இது தமிழ் மரபுக்குப் புறம்பானது; இலக்கணம் எழுதிப் பேச்சு மொழிக்கு உன்னதம் தருகிறார்கள் என்றும் கருதப்பட்டது. இந்த எதிர்ப்பு உணர்ச்சி இப்போது அதிகமாக இல்லையென்று நினைக்கிறேன்.

மொழியியலை மரபுத் தமிழறிஞர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தில், மொழியியல் அறிஞர்கள் பழைய இலக்கணங்களை மொழியியல் பார்வையில் திரும்பப் பார்த்தார்கள். அதில் சிலருடைய ஆராய்ச்சி தமிழ் இலக்கண மரபைப் புகழ்வதாக இருந்தது. இதனால் மொழியியலுக்கு இருந்த எதிர்ப்பு கொஞ்சம் குறைந்தது என்று நினைக்கிறேன். தமிழ்ப் பெருமை பேசும் மரபின் வழியே, புதிய மொழியியலில் சொல்லியிருக்கிற கருத்துகள் பழைய இலக்கண மரபிலும் இருக்கிறது என்று சொல்கின்ற போக்கும் இருந்தது. இதனால் மொழியியலின் உண்மையான தாக்கம் மரபிலக்கண ஆய்வில் ஏற்படவில்லை. அதாவது மரபு வழியாக இலக்கணத்தை ஆய்கின்றவர்கள் மொழியியலோடு பழக்கம் ஏற்பட்டதால் சில புதிய அணுகு



**தமிழ் மொழியியலாளர்கள் - என்னையும் சேர்த்து - எழுதியுள்ள இலக்கணங்கள் மொழியைப் பயன்படுத்துபவர்களுக்காக அல்லாமல் மொழியியல் வல்லுநர்களுக்காக எழுதப்பட்டவையாக இருக்கின்றன.**

www.padippakam.com



**ஏ.கே. ராமானுஜனுடைய சங்க மொழிபெயர்ப்பைப் பொறுத்தவரையில் ஒரு கலாச்சாரத்தில் தோன்றிய கவிதையை மற்றொரு கலாச்சாரத்தின் மொழியில் புரியும்படி கொண்டுவந்தது அவருடைய சாதனை.**



முறைகளை மேற்கொண்டார்கள் என்று சொல்ல முடியவில்லை. அதே மாதிரி மொழியியலுக்குச் சில புதிய உண்மைகளைக் கொண்டுவந்தார்கள் என்றும் சொல்ல முடியவில்லை. அதனால் மொழியியலின் தாக்கம் தமிழ்க் கல்வியைப் பொறுத்தளவில், முக்கியமாக உயர் கல்வியைப் பொறுத்தவரையில், குறைந்தளவே இருக்கிறதென்று சொல்லலாம்.

ஆனால், மொழியியல் வழியாகத் திராவிடக் குடும்பத்தைச் சார்ந்த பல பழங்குடி மக்களைப் பற்றிய இலக்கண விவரணைகளும் தமிழின் வட்டார மொழிகள் பற்றிய இலக்கண ஆய்வுகளும் நமக்குக் கிடைத்திருக்கின்றன. புதிய மொழியியல், இலக்கணத்தை மட்டுமே ஆய்வதல்ல. மொழியினுடைய சமூகக் கூறுகள், மொழியினுடைய கலாச்சாரக் கூறுகள் எனப் பல நிலைகளில் மொழியை ஆராயும். இந்த வகையில் மொழியியல் பயிற்சியின் மூலம் மொழியைப் புறவயமாகப் பார்க்கின்ற முறை நிலைபெறும். அது தமிழில் அவ்வளவு வேரூன்றவில்லை. மொழியியலின் தாக்கத்தினால் தமிழ்க் கல்வியில் புதிய மாற்றம் வந்திருக்கிறது என்று சொல்ல முடியாது. மொழித்துறை வளர்ச்சியும் இப்போது குன்றிவிட்டது. இது எல்லாச் சமூக அறிவியல் துறைகளுக்கும் நேர்ந்துவருகிற கதிதான்.

தமிழ்நாட்டைப் பொறுத்தளவில், மொழியியல் வளர்ச்சியில் எனக்கொரு வருத்தம் என்னவென்றால் தமிழ்நாடு தன் இலக்கணப் பாரம்பரியத்தைப் பயன்படுத்தி மொழியியலைப் புதிய வழிகளில் எடுத்துச் செல்லவில்லை. தமிழில் மொழியியல் ஆராய்ச்சி செய்யும்போது ஒவ்வொரு வட்டார மொழியையும் எடுத்துக்கொண்டு ஒவ்வொருவரும் பிஎச். டி. செய்யும் போது Assemblyline production போல ஆகிவிட்டது. தமிழ் இலக்கணத்தை ஆழமாக, புதிதாக அறிந்துகொள்ள இது உதவவில்லை.

தமிழ்நாட்டில் மொழிக்கும் அரசியலுக்கும் உள்ள தொடர்பைத் தளமாக வைத்துத் தமிழ் மொழியியலாளர்கள் ஒரு கொள்கையை உருவாக்கியிருக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. இங்கு உருவாக்கப்பட்ட கொள்கையை மற்ற மொழியியலாளர்கள் மற்ற இடங்களில் பொருத்திப் பார்த்தார்கள் என்று சொல்லும்படி ஒன்றும் இல்லை. அதுபோலத் தமிழுக்குத் தேவையான வற்றையும் மொழியியல் நிரப்பவில்லை. தமிழுக்கு ஓர் அகராதி தேவை. அது மொழியியல் துறையிலிருந்து வரவில்லை. தமிழ் மொழியியலாளர்கள் - என்னையும் சேர்த்து - எழுதியுள்ள இலக்கணங்கள் மொழியைப் பயன்படுத்துபவர்களுக்காக அல்லாமல் மொழியியல் வல்லுநர்களுக்காக எழுதப்பட்டவையாக இருக்கின்றன.

**சிகாகோ பல்கலைக்கழகத்தில் உங்கள் பணி என்ன?**

சிகாகோ பல்கலைக்கழகத்தில் தென்னாசியத் துறை பெயர்போனது. தமிழ் சொல்லிக்கொடுப்பதற்காக அங்கு 1965இல் போனேன். இந்தியாவைப் பற்றிப் படிக்க வேண்டுமென்றால், முக்கியமாகத் தமிழ் - சமஸ்கிருதம் இரண்டையும் படிக்க வேண்டுமென்ற ஒரு கருத்து அங்கு உண்டு. ஆகவே, அங்கு சமஸ்கிருதமும் தமிழும் கற்றுக்கொடுக்கிறார்கள். இங்குத் தமிழ் படிக்கும் மாணவர்கள் பலரும் பிறதுறை மாணவர்களாக இருப்பார்கள். மானிடவியல், சமூகவியல், மொழியியல் படிப்பவர்கள். தமிழ்நாட்டையோ தமிழையோ அடிப்படையாகக் கொண்டு ஆய்வுசெய்ய வேண்டுமென்று மொழியைப் படிக்க வருவார்கள். ஒன்றிரண்டு பேர் தமிழிலக்கியத்தையும் படிக்க வருவார்கள். அல்லது இந்திய இலக்கியத்தில் ஒரு பகுதியாகத் தமிழிலக்கியத்தைப் படிக்க வருவார்கள். அந்த மாணவர்களுக்குத் தமிழைக் கற்றுக்கொடுக்கும்போது தமிழின் சில நுண்மைகள் புரியவந்தன. இதுவரை இலக்கணத்தைப் பற்றிக் கேட்காத கேள்விகளையெல்லாம் புதிய மாணவர்கள் கேட்டார்கள். ஆகவே தமிழ் இலக்கணத்தைப் பற்றிப் புதிய முறையில் சிந்திப்பதற்கு ஒரு வாய்ப்பு ஏற்பட்டது. தென்னாசியத் துறையில்தான் ஏ.கே. ராமானுஜன் பணிபுரிந்தார். அவரும் நானும் சேர்ந்து Tamil Reference Grammar எழுதினோம். (மொழியியல் பயிற்சி இலக்கிய மொழி பற்றிய அறிவைக் கூர்மைப் படுத்த உதவியிருக்கிறது என்று அவர் சொல்லியிருக்கிறார். மொழியைப் பற்றிய உணர்வு இல்லாமல், அதை அக்கு வேறாக ஆணி வேறாகப் பிரித்துப் பார்ப்பார்கள் மொழியியலாளர்கள் என்ற தவறான எண்ணம் உண்டு. இது எல்லா மொழியியலாளர்களுக்கும் பொருந்தாது.)

அண்மையில் நானும் ரோனால்டு ஆஷரும் சேர்ந்து எழுதிய Colloquial Tamil என்ற பாடப்புத்தகத்தை ரௌட்லஜ் பதிப்பகத்தார் வெளியிட்டிருக்கிறார்கள்.

**ஏ. கே. ராமானுஜன் சங்க இலக்கியத்திற்கு உலக அரங்கில் பெருமை சேர்த்தவர். அவருடைய தமிழ்ப் படிப்பும் பயிற்சியும் எந்த அளவிற்கு இருந்தன? அவருடைய மொழிபெயர்ப்புகளைப் படிக்கும்போது ஆங்கிலம் சிறப்பாக இருக்கிறது. ஆனால் தமிழைப் புரிந்துகொள்வதில் பல பிழைகள் செய்திருக்கிறார். அவரைக் குறைகாணும் நோக்கத்தில் இதைச் சொல்லவில்லை. அவருக்கு எந்தளவிற்குத் தமிழ்ப் பயிற்சி இருந்தது? உரைகளை வைத்துக்கொண்டுதான் அவர் மொழிபெயர்ப்பு செய்தாரா?**

அவர் எழுத்துத் தமிழைப் படித்தது சிகாகோவுக்குப் போன பிறகுதான். அங்குச் சென்ற பிறகு இந்தியாவைப் புரிந்துகொள்வதற்குத் தமிழறிவின் தேவையை உணர்ந்தார். அவராகத் தமிழைப் படித்தார். அப்போது அவருக்குத் துணை நிலையிலிருந்த கௌசல்யா ஹார்ட் மிகவும் உதவி செய்தார். அவர் உதவியோடுதான் சங்க இலக்கியத்தையும் அதன் உரைகளையும் அவர் படித்தார். மைசூரில் அவர் வீட்டிலும் மதுரைத் தெருவிலும் தமிழ் காதில் விழுந்ததால் தமிழினுடைய ரிதம் அவருக்குத் தெரியும். இந்தியப் பண்பாட்டுச் சூழலில் வளர்ந்ததால் தமிழ் இலக்கியத்தின் அடிநாதம் அவருக்குப் புரியும். அவரே ஒரு கவிஞனாகவும் இருந்ததால், கவிதையின் துடிப்பும் அவருக்குத் தெரியும். இந்த மூன்றும் சேர்ந்துதான் அவரை ஒரு நல்ல மொழிபெயர்ப்பாளராக ஆக்கியிருக்கின்றன.

**அவரது Interior Landscape-இற்கு முதன் முதலில் மதிப்புரை எழுதியவர் நீங்கள்தான் என்று நினைக்கிறேன்.**



படிப்பகம்

ஆமாம். அதில் மூலபாடங்கள் சில மொழிபெயர்ப்பி லிருந்து வேறுபட்டு இருக்கின்றன என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறேன். ஒன்று சங்கத் தமிழைச் சரியாகப் புரிந்துகொள்ளாமல் அல்லது தமிழ் இலக்கிய மரபில் பரிச்சயம் இல்லாததால் இப்படி நேர்ந்திருக்கலாம். மற்றொன்று அவர் அமெரிக்க வாசகர்களுக்காக மொழி பெயர்த்தார். அவர்களுக்கு உகந்ததாக இருக்கிற மாதிரி யும் சில மாற்றங்களைச் செய்திருக்கிறார். அவருடைய சங்க மொழிபெயர்ப்பைப் பொறுத்தவரையில் ஒரு கலாச்சாரத்தில் தோன்றிய கவிதையை மற்றொரு கலாச்சாரத்தின் மொழியில் புரியும்படி கொண்டு வந்தது அவருடைய சாதனை. மற்றொன்று பழைய காலக் கவிதையை இக்கால மொழியில் கொண்டு வந்து பலரை அதில் ஈடுபடவைத்தது. பலரும் அவரு டைய மொழிபெயர்ப்புகளைப் பாராட்டுவதற்குக் காரணம், சங்க இலக்கியத்தை அவர் நவீனக் கவிதை போலத் தந்ததுதான். இன்றைய கவிஞர்களின் எதிர் பார்ப்புகள் சங்க இலக்கியத்தில் காணக்கிடைக்கின்றன என்று அவர் மொழிபெயர்ப்பு காட்டுகிறது. அவ்வகையில் ராமானுஜன் செய்தது மொழிபெயர்ப்புக்கு மட்டுமல்ல, ஆங்கிலம் பேசுபவர்கள் தமிழ்க் கவிதையை விரும்பிப் படிப்பதற்கும் உரிய கொடை என்று சொல்லலாம்.

**சிகாகோவில் படித்து முடித்த பிறகு அங்கேயே பணிபுரிய வாய்ப்புக் கிடைத்தும் தமிழ்நாட்டில் பணிபுரிய வேண்டு மென்கிற நோக்கத்தோடு இங்கு வந்ததாகக் கேள்விப் பட்டிருக்கிறேன். ஆனால் தமிழ்நாட்டில் பணிபுரியாமல் CIILக்குப் போய்ப் பணியாற்றினீர்கள். என்ன காரணம்?**

இந்தியாவுக்கு வரவேண்டுமென்கிற ஆர்வம் எனக்கு இருந்தது. எனக்கு இந்தச் சமூகம் நிறையச் செய்திருக் கிறது; திரும்ப நானும் செய்ய வேண்டும் என்று எண்ணினேன். CIILஇல் பழங்குடி மக்களுக்கு அவர்கள் மொழி மூலம் கல்வி தந்தது ஓரளவு இதை நிறைவேற்றி யது. டெல்லி பல்கலைக்கழகத்தில் பி.பி. பண்டிட் என்பவர் மொழியியல் துறையில் ரீடராகப் பணிபுரிய வரச் சொன்னார். அதையடுத்து உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்துக்கு வருமாறு சுப்பையா பிள்ளை கேட்டிருந் தார். நான் முடிவெடுக்க ஏற்பட்ட தாமதத்தால் எனக்கு அந்த வேலை இருக்கிறதா இல்லையா என்றே தெரியாத நிலை ஏற்பட்டது. அந்தச் சமயத்தில்தான் மைசூரிலிருந்து வாய்ப்பு வந்தது. சரியென்று ஏற்றுக் கொண்டேன். இந்தியாவுக்கு வரவேண்டுமென்கிற ஆசை நிறைவேறியது. இதில் இழப்பு என்னவென்றால், தமிழ்நாட்டில் நடந்த நிகழ்வுகளோடு என்னை இறுக்க மாக இணைத்துக்கொள்ள முடியவில்லை. ஆனால் தமிழ்நாட்டிலிருந்து விலகிநின்று பார்க்கக்கூடிய நிலை வந்தது; அதில் சில நன்மைகள் கிடைத்தன.


CIILஇல் சேர்ந்தது என்னுடைய வாழ்க்கையில் முக்கியமான திருப்பம். சிகாகோ பல்கலைக்கழகத்தில் சாம்ஸ்கியன் மொழியியல் படித்தேன். இதன் அடிப் படையான தத்துவம் மொழியை அதன் உளவியல் அடிப்படையில் பார்ப்பது. மொழியை mental product என்ற முறையில் பார்ப்பது அது. எப்படி மொழி மனித மனத்தை வேறு மிருகங்களிடமிருந்து வேறு படுத்திக் காட்டுகிறது என்பதிலிருந்து எப்படி மனிதன் தன்னிச்சையாக இயங்க முடிகிறது என்பதுவரை மொழியை மனத்தோடு இணைத்துப் பார்க்கிறது. சிகாகோவில் இருந்தவரை மொழியை ஒரு social product என்று பார்க்கும் வகையில் நான் பயிற்சி பெற வில்லை. அது மைசூருக்கு வந்தபிறகுதான் கிடைத்தது. மைசூர் நிறுவனம் இந்தியாவிலுள்ள மொழிப் பிரச்சினை களை ஆராய்வதற்காக ஏற்பட்ட ஒரு நிறுவனம். ஆகவே மொழி எவ்வாறு சமூகப் பூசல்களைப் பிரதி பலிக்கிறது, சமூக உறவுகளைக் கட்டமைக்கிறது என்பது போன்ற சமூக மொழித் தத்துவங்களைக் கற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இன்னொரு பெரிய நன்மை, இந்தியாவை முழுமையாகப் பார்க்கக்கூடிய வாய்ப்பு இந்த அனைத்திந்திய நிறுவனத்தினால் எனக்குக் கிடைத்தது.

**மத்திய அரசு தமிழ் மொழியைப் பாரபட்சமாக நடத்து கிறது என்று பொதுவாகக் கருதப்படுகிறது. சமஸ் கிருதத்துக்குச் செலவிடப்படும் தொகையில் சிறு பகுதி கூடத் தமிழுக்குச் செலவிடப்படுவதில்லை. இந்திய அரசு சமஸ்கிருதத்தையும் பாரசீகத்தையும் அராபியையும் செம்மொழியாகக் கருதுகிறது. இன்றைக்கும் தமிழ் மொழியை ஏற்றுக்கொள்ளவில்லை. மைய அரசு நிறுவனத்தில் பணிபுரிந்தவர் என்கிற முறையில் கேட்கிறேன், மத்திய அரசு தமிழ் மொழியைப் பாரபட்ச மாக நடத்துவது உண்மையா?**

தமிழை மட்டுமல்ல; சமஸ்கிருதம், ஹிந்தி தவிரப் பிற எல்லா இந்திய மொழிகளிடமும் மத்திய அரசு பாரபட்சமாக நடந்துகொள்கிறது என்று சொல்லலாம். அவர்கள் அதற்குச் சொல்லும் காரணம், இந்திய அரசியல் சட்டத்தின்படி அரசுக்கு சமஸ்கிருதத்தைப் பாதுகாக்கவும் வளர்க்கவும் இந்தியை வளர்க்கவும் பொறுப்பு இருக்கிறது; மற்ற இந்திய மொழிகளை வளர்க்கின்ற பொறுப்பு அந்தந்த மாநில அரசுடையது என்பது. ஆனால் இந்தி எதிர்ப்புக்குப் பிறகு நிறை வேற்றிய Official Language Actஇல் மற்ற இந்திய மொழி களுக்கும் இந்திய அரசுக்குப் பொறுப்பு இருக்கிறது என்ற நிலை தரப்பட்டிருக்கிறது. அதன் ஒரு விளை வாகத் தான் மைசூரில் நிறுவனம் தொடங்கப்பட்டது. இந்த நிறுவனத்தின் மூலம் செய்யக்கூடியதும் செய்ய முடிந்ததுமாகப் பல திட்டங்கள் வகுக்கப்பட்டன. இவை தமிழுக்காக மட்டுமல்ல. இந்திய மொழிகளை வளர்ப்பதில் பெரும்பங்கு உள்ள மாநில அரசுகளுடன் சேர்ந்து திட்டங்களை நிறைவேற்றுகிறது.

**தமிழ் ஒரு செம்மொழி என்று கல்வித் துறையில் உலகம் முழுக்க ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் இன்னமும் இந்திய அரசு அந்த அங்கீகாரத்தைத் தமிழ் மொழிக்குத் தரவில்லை. அதைப் பற்றி உங்களுடைய நிலைப்பாடு என்ன? தமிழுக்குச் செம்மொழி அந்தஸ்து வழங்கினால் என்ன பயன்கள் கிடைக்கும்?**

நாம் தமிழுக்குச் செம்மொழி என்னும் தகுதி வேண்டுமென்று கேட்கும்போது கொஞ்சம் எச்சரிக்கை யாக இருக்க வேண்டும். தமிழ் செம்மொழி மட்டுமல்ல, நவீன மொழியும்கூட. செம்மொழி என்கிற தகுதி வரும்போது, நவீனமொழி என்கிற தகுதி போய்விடாமல்



தமிழ்நாட்டு நிகழ்வுகளோடு என்னை இணைத்துக்கொள்ள முடியவில்லை என்பது ஓர் இழப்புத்தான். ஆனால் தமிழ்நாட்டிலிருந்து விலகிநின்று பார்க்கும் நிலை வந்தது; அதில் சில நன்மைகள் கிடைத்தன.

www.padippakam.com



**தமிழ் செம்மொழி மட்டுமல்ல, நவீன மொழியும் கூட. தமிழுக்குச் செம்மொழி என்கிற தகுதி வரும்போது, நவீனமொழி என்கிற தகுதி போய்விடாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது மிகவும் முக்கியமானது.**



பார்த்துக்கொள்ள வேண்டும். இந்திய அரசைப் பொறுத்த வரையில், செம்மொழிகளுக்குப் பணம் ஒதுக்கும் முறையே வேறு. நவீன மொழிகளுக்கு ஒதுக்கப்பட்ட பணம் முத்தமிழுக்குத் தேவையென்றால், தமிழ் நவீன மொழி என்ற தகுதியையும் காத்துக்கொள்ள வேண்டும். தமிழைச் செம்மொழி என்று அரசு அங்கீகரிப்பதில் உள்ள ஒரே நன்மை அந்த அங்கீகாரத்தினால் வரக் கூடிய ஒரு பெருமை. ஒரு மொழி செம்மொழி என்று சொல்லும்போதே ஒன்று அது இக்கால மொழி இல்லை என்றாகும், அல்லது கிரேக்கம் போல் இக்கால மொழியிலிருந்து வேறுபட்டது என்றாகும். தமிழ் தொல்காப்பியக் காலத்திலிருந்து மாறவில்லை என்றும் தமிழ் செம்மொழி என்றும் ஒரே மூச்சில் சொல்வதில் முரண்பாடு இருக்கிறது.

**செம்மொழியாக இந்திய அரசு அங்கீகரிக்குமானால், வேறு வகையான பயன்கள், அதாவது பணம் ஒதுக்கீடு, விருதுகள் சிலது கிடைக்கும். உதாரணத்திற்கு மத்திய அரசு சமஸ்கிருத, அரபு, பாரசீக மொழி அறிஞர்களுக்கு விருது அளிக்கிறது. தமிழ் அறிஞர்களுக்குக் கிடைப்ப தில்லை. இதைத் தவிர உலகியல் பயன் கிடைக்குமா? மத்திய அரசு தன் ஆளுகைக்குள் இருக்கின்ற பல்கலைக் கழகங்களில் தமிழ் இருக்கைகளை ஏற்படுத்துமா? இது போன்று என்ன பயன்கள் கிடைக்கும்?**

பொதுவாகச் செம்மொழி என்பது அரசு அங்கீகாரம் அல்ல. அது கலாச்சார அங்கீகாரம்; கல்வித்துறை சார்ந்த அங்கீகாரம். கல்வித்துறையைப் பொறுத்தவரை தமிழுக்கு அந்த அங்கீகாரம் இருக்கிறதென்று சொல்ல லாம். சங்க இலக்கியத்தை classical literature என்று சொல்வோமானால் அது எழுதப்பட்டுள்ள மொழி classical language தான். கல்வித்துறையில் இருப்பவர்கள் தமிழ் செம்மொழியாகவும் நவீனமொழியாகவும் இருக் கிறது என்ற உண்மையை ஏற்றுக்கொள்கிறார்கள். மத்திய அரசைப் பொறுத்தவரை, பண உதவித் திட்டங் கள் classical Indian languages-க்கு என்றும் modern Indian languages-க்கு என்றும் பிரிக்கப்பட்டிருக்கின்றன. தமிழ் பணஉதவி பெற வேண்டுமானால், மேலே சொன்னது போல இரண்டிலும் இடம்பெற வேண்டும்.

**உங்கள் எழுத்துகளைப் பார்த்தால், கடந்த 60 ஆண்டு களில் தமிழில் ஏற்பட்ட மாற்றங்களை - முக்கியமாக தூய்மைவாதம் - எதிர்மறையாகப் பார்ப்பதுபோல் தெரி கிறது. உங்கள் பார்வையைத் தெளிவுபடுத்த முடியுமா?**

நவீனத் தமிழ் உருவாக்கத்தில் பல சக்திகள் பங்கேற்றி ருக்கின்றன. அதில் பல நிலைகள் இருக்கின்றன. தமிழைத் தூய்மைப்படுத்துதல் என்பது ஒரு நிலை. அதேபோல, விளிம்பு நிலையிலுள்ள மக்களிடமிருந்து சொற்களையும் பொருள்களையும் கொண்டு வரவேண்டு மென்பது மற்றொரு சக்தி நிலை. இவ்வாறு பல சக்திகளின் ஊடாட்டத்தில்தான் நவீனத் தமிழ் பிறக் கிறது. தூய்மைப்படுத்துதல் என்பது சில சமூக நிகழ்வு களுக்கு எதிர்வினை. ஆகவே. அதை மொழி இயக்கமாக மட்டுமல்லாமல், சமூக இயக்கமாகவும் பார்க்க வேண்டும். தமிழ்நாட்டின் சமூக வரலாற்றைப் பார்க்கும் போது போன நூற்றாண்டின் தொடக்கத்தில் தூய்மைப் படுத்தும் தேவை இருந்தது. அந்தத் தேவை ஒரு corrective action என்ற முறையில் இருந்தால் தமிழுக்கு நல்லது என்பது என் எண்ணம். அதுவே தமிழ் முழுவதுமாக ஒரு preventive action ஆக விடக்கூடாது. அது தமிழை நவீனமயமாக்குவதைத் தடைபடுத்தும் என்பது என் கருத்து.

ஒரு மொழியை நவீனப்படுத்துவது பல வகைகளில் நடக்கிறது. பழமைப்படுத்துதல் (classicalization) என்ற முறையிலும் நடக்கலாம். வட்டாரப்படுத்துதல் (dialectalization) என்ற முறையிலும் நடக்கலாம். என்னைப் பொறுத்தவரையில் மொழியை நவீனப்படுத்துவது என்பது, நவீன சமூகத்துக்கு ஏற்ற மொழியாக ஆக்குவது, அந்தச் சமூகத்துக்கு ஏற்றமுறையில் மாற்றுவது. அப்போது மொழிக்குச் சில தேவைகள் ஏற்படுகின்றன. சொற்கள் தேவைப்படலாம். பழைய இலக்கியங்களி லிருந்து எடுத்து இந்தத் தேவையை நிரப்புவது ஒரு வழி; ஆங்கிலம் போன்ற உலக மொழிகளிலிருந்து எடுத்து நிரப்புவது ஒரு வழி; பேச்சு மொழியிலிருந்து எடுத்து நிரப்புவது ஒருவழி. எல்லாவற்றுக்கும் அடிப் படையாக இருக்க வேண்டியது சாதாரண மனிதன் இந்த நவீனச் சமூகத்தில் இயங்குவதற்கு உதவுகிற மொழியாக இருக்க வேண்டும். தூய்மைப்படுத்துதல் இந்த வகையில் நவீனத்துவத்துக்குத் துணைபோகிறதா என்பது முக்கியமான கேள்வியாக இருக்க வேண்டும். மக்களுடைய வழக்கில் எது பழக்கமாயிருக்கிறதோ அதுதான் எளிமையாக இருக்கும். வேர்ச்சொல் தமிழாக இருந்தால் அது எளிமை என்கிற கருத்தை விட்டு விட்டோமானால், தூய தமிழ்ச் சொற்கள் மக்களுடைய மொழிப் பயன்பாட்டுக்கு எந்த அளவு உதவுகின்றன என்று பார்ப்பது முக்கியமாகும். அப்படிப் பார்க்கும் போது வேற்றுமொழிச் சொற்களுக்கு, வட்டார வழக்கு களுக்கு நாம் இடம்கொடுக்க வேண்டியிருக்கும்.

**அயல்நாட்டின் பெரிய பல்கலைக்கழகப் பதிப்பகங்கள் மூலமாக உங்கள் எழுத்துக்கள் வந்திருக்கின்றன. ஆனால் நீங்கள் அங்கொன்றும் இங்குகொன்று மாகத்தான் தமிழில் எழுதியிருக்கிறீர்கள். ஏன்?**

நான் தமிழ்நாட்டிலிருந்து விலகியிருந்தது இதற்கு ஒரு காரணம். என்னைத் தமிழ்நாட்டு நிகழ்வோடு இணைத்துக்கொள்ளக்கூடிய கட்டாயம் குறைவாக இருந்தது. இன்னொன்று, கல்வித் துறையின் நிர்ப்பந்தம்; ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட வேண்டும், கல்வித் துறையில் பெயர்பெற வேண்டும் என்கிற நிர்ப்பந்தம். இங்குக் கல்வித் துறை மொழியியல்; அதற்கு ஆங்கிலம் துணை செய்தது. என்னைப் போன்றவர்கள் இரண்டு பக்கம் இழுக்கப்படுகிறார்கள். ஒன்று உன் துறைக்கு என்ன செய்திருக்கிறாய் என்ற கேள்வி. அதை ஆங்கிலத் தில் செய்வதில் மேலே சொன்ன நன்மை இருக்கின்றது. மற்றொன்று, உன் சமூகத்துக்கு என்ன செய்திருக்கிறாய் என்ற கேள்வி. அதற்குத் தமிழிலே எழுத வேண்டும். இப்போது ஓய்வு பெற்றுவிட்டதால், முன்பு சொன்ன நிர்ப்பந்தங்கள் இல்லை. அதனால் தமிழில் எழுத வேண்டுமென்று நினைக்கிறேன். அதற்கான வாய்ப்பு களைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று நினைக்கிறேன். □



படிப்பகம்

# உடன்படுக்கை மீடியா

கண்ணன்

**(மையச் சாகித்திய அகாதெமியும் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகமும் நெல்லையில் ஜனவரி 20, 21 மற்றும் 22 தேதிகளில் நடத்திய கருத்தரங்கில் படித்த கட்டுரையின் விரிவுபடுத்திய வடிவம்)**

'இலக்கியத் திறனாய்வு' என்று தலைப்பிட்ட இக்கருத்தரங்கில் மீடியா எழுத்துகள் பற்றிக் கட்டுரை வழங்குவதன் பொருத்தம் குறித்து முதலில் யோசிக்கலாம். பல்வேறு வகை எழுத்துகளுக்கிடையிலான வேறுபாடுகள் நவீனக் கோட்பாடுகளால் தகர்க்கப்பட்டுவிட்டன என்று நாம் பேசினாலும் எந்த உன்னதப் பத்திரிகையாளனும் பாரதிக்கும் புதுமைப் பித்தனுக்கும் இணையான இடத்தைத் தமிழ்ப் பண்பாட்டுப் பரப்பில் பெறவில்லை. டி. எஸ். சொக்கலிங்கம், ஏ. என். சிவராமன் போன்றோர் மீது இருக்கும் மரியாதைக்கும் முன்னோடிப் படைப்பாளிகள் பெறும் முக்கியத்துவத்திற்கும் இடையே வேறுபாடு உள்ளது. படைப்பூக்கம் மிக்க பத்திரிகையாளனுக்குச் சாகித்திய அக்காதெமி பரிசு கொடுக்கப்படுவதில்லை.

அதே நேரத்தில் இலக்கியத்தையும் இதழியலையும் இணைக்கும் கண்ணிகள் பல உண்டு. தமிழின் முன்னணிப் படைப்பாளர்கள் பலர் இதழியலாளர்களாகப் பணியாற்றியுள்ளனர். பாரதி, புதுமைப்பித்தன் என்று தொடங்கும் இந்த வரிசை இன்றுவரை சிதையாமல் தொடர்ந்துகொண்டிருக்கிறது. இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் இயங்கிய பல படைப்பாளிகளிடம் காணக் கிடைக்காத அரசியல் பிரக்ஞை பாரதியிடமும் புதுமைப்பித்தனிடமும் இருந்ததற்கு அவர்களின் இதழியல் துறை அனுபவங்களும் துணை நின்றிருக்கும். (இன்று பெரும்பான்மையான இதழியலாளர்களுக்குக்கூட அரசியல் பிரக்ஞை இல்லை.) மேலும் அவர்களுடைய உரைநடையின் உருவாக்கத்திலும் இதழியல் துறை அனுபவத்தின் தாக்கத்தைக் காணலாம்.

ஹெமிங்வேயின் விறுவிறுப்பான நடைக்கு அவரது பத்திரிகைத் துறை அனுபவமே காரணமாகச் சொல்லப்பட்டது. ஜார்ஜ் ஆர்வல் படைப்புகளில், அவர் இரண்டாம் உலகப்போர்க் காலகட்டத்தில் இதழியலாளராகப் பணியாற்றிய அனுபவத்தின் தாக்கம் வெளிப்படுகிறது. போர்க்காலப் பிரச்சாரத்தின் பொய்மையை அணுகிக் கண்ட அனுபவம் ஆர்வலின் படைப்புகளில் தாக்கம் ஏற்படுத்தியுள்ளது தெளிவு[1]. இதழியலுக்கும் படைப்புக்குமான இடைப் பிரதேசத்தில் பல வித்தைகளை நிகழ்த்திக் காட்டியிருப்பவர் மார்க்குவஸ்.

உலகின் முன்னணி இதழ்களில் ஒன்றான Granta வில் 1983க்கும் 1992க்கும் இடையில் பிரசுரிக்கப்பட்ட நீண்ட செய்திக் கட்டுரைகள் ஒரு நூலாகத் தொகுக்கப்பட்டுள்ளன.[2] இதிலுள்ள சில கட்டுரைகள் இதழியல், இலக்கியமாக முடியும் என்பதற்கு உதாரணங்களாக உள்ளன. இந்திய இதழ்களில் இலக்கியத் தரம் வாய்ந்த இதழியல் கட்டுரைகளை வெளி

> பாபர் மசூதி இடிக்கப்பட்ட காலத்திலும் மும்பை குண்டு வெடிப்பின்போதும் குஜராத் கலவரத்தின் காலத்திலும் பிராந்திய மொழி மீடியாக்கள் மிகக் கொடூரமான முறையில் செயல்பட்டுள்ளன. தடா, பொடா போன்ற எல்லாச் சட்டங்களையும் மீடியா இன்று நேரடியாகவும் மறைமுகமாகவும் ஆதரிக்கிறது.



www.padippakam.com


யிடும் இதழ்கள் இன்று கிட்டத்தட்ட இல்லை. அத்தகைய சில பதிவுகள், இப்போது நின்றுவிட்ட, The Illustrated Weekly of Indiaவில் வெளிவந்துள்ளன.

❑

ருஷ்யத் திரைப்பட இயக்குநர் ஸானுசி (Krzysztof Zanussi) தன்னுடைய சமீபத்திய திரைப்படம் ஒன்றுக்கு வைத்திருந்த தலைப்பு சுவாரசியமானது. இத்தலைப்பை ஐரோப்பாவில் தாம் கண்ட ஒரு சுவரெழுத்திலிருந்து எடுத்தாண்டதாக ஸானுசி குறிப்பிடுகிறார்[3]. அந்தத் தொடர் 'Mankind is a sexually transmitted disease' என்பது. 'மனித இனம் பாலுறவின் வழி பரவுகிற ஒரு நோய்.' மிகவும் மனவிரக்தியடைந்த நிலையிலிருக்கும் ஒருவர் எழுதிய வாசகம் இது என்பது வெளிப்படை. இன்று மீடியாவை அதிலும் குறிப்பாகத் தமிழ் மீடியாவைத் தொடர்ந்து கவனித்துவரும் ஒருவருக்கு மேற்படி சுவரெழுத்து வாசகத்தை எழுதியவரின் உணர்வுகளை ஒத்த ஒரு மனநிலை ஏற்படக்கூடும். எனவே இன்றைய மீடியாவை வாசிப்பின் வழி அல்லது பார்த்தலின் வழி பரவும் ஒரு நோயாகவும் அணுகலாம். இன்று ஊடகங்களின் நிலை அவ்வளவு மோசமானதாகவும் ஆபத்தானதாகவும் இருக்கிறது.

அர்ஜென்டீனர் எழுத்தாளர் ஃபெர்னான்டோ ஸோரன்டினோ 'சின்னக்கிளிகளின் ராஜ்ஜியம்' (Empire of Parakeets) என்ற சிறுகதையை எழுதியுள்ளார்.[4] இக்கதையை ஊடகங்கள் பற்றிய விமர்சனமாக வாசிக்க இடமிருக்கிறது. உலகின் கலாச்சாரமிக்க அனைத்து நாடுகளையும் இந்தச் சின்னக்கிளிகள் கைப்பற்றிவிட்டன என்றும் பிற்படுத்தப்பட்ட நாடுகளிலும் ஏழை நாடுகளிலும் மட்டுமே இவற்றின் ஆதிக்கமில்லை என்றும் அவர் குறிப்பிடுகிறார். இதே நாடுகளை வெகுஜன ஊடகங்களும் அண்டவில்லை என அவர் குறிப்பிடுவது இந்த வாசிப்பிற்கான அடிப்படையாக அமைகிறது. மேலும் அவர்,

> "படிக்கவோ உண்ணவோ நினைப்பவர்களுக்கு அவை பெரிய சித்திரவதைதான். உங்கள் முகத்திலும் கண்ணிலும் அவை மோதும். சூப்பில் மூழ்கும். எழுத்தை ஈஷிவிடும். உங்கள் முள்கரண்டியில் நடைபயிலும் ஐந்தாறு சின்னக்கிளிகளைத் தட்டி விடுவதற்கு முன்னால் இன்னொரு டஜன் சின்னக் கிளிகள் உங்கள் காதிலும் மூக்கிலும் நுழைந்துவிடும்."

என்று எழுதுகிறார். இந்தச் சின்னக்கிளிகளின் தாக்கமாக அவர் குறிப்பிடுவது:

> "ஐந்நூறு அல்லது ஆயிரம் சின்னக்கிளிகள் தொடர்ந்து ஒரு மனிதனை நச்சரிப்பது – கண் காதினுள் நுழைவது, கழுத்தில் ஊர்வது – மூலம் அவனைச் சிந்திக்க, எழுத, வாசிக்க, தூங்கவிடாமல் செய்யமுடியும். மூளை குழம்பிய நிலைக்கு அவனைத் தள்ளமுடியும் – இதுதான் இப்போது நடந்துவருகிறது."

❑

மீடியா ஒரு ஜனநாயக அமைப்பின் நான்காம் தூண் என்ற ஒரு மூடநம்பிக்கை உண்டு. அரசின் வரம்பு மீறல்களை மக்கள் கவனத்திற்குக் கொண்டுவந்து, மக்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்வை உருவாக்கி ஜனநாயகத்தைப் பேணுவது மீடியாவின் கடமையாகக் கருதப்பட்டது. ஆனால் இன்று ஊடகங்கள் அந்தக் கடமையை ஆற்றுகின்றனவா என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இன்று அத்தகைய எந்தக் கடமையையும் மீடியா பொதுவாகப் பேணுவது இல்லை என்பது மட்டுமல்ல, அவசர நிலை போன்ற இந்திய ஜனநாயகத்திற்கு மிகப் பெரிய நெருக்கடிகள் உருவான காலத்திலும் மீடியாவின் பெரும்பகுதி, குறிப்பாகத் தமிழ் மீடியா, ஜனநாயகத்தைப் பேணும்முகமாகச் செயல்பட்டதில்லை. இது தமிழ் மீடியாவின் பிரச்சினை மட்டுமல்ல. பாபர் மசூதி இடிக்கப்பட்ட காலத்திலும் மும்பை குண்டு வெடிப்பின்போதும் குஜராத் கலவரக் காலத்திலும் பிராந்திய மொழி மீடியாக்கள் மிகக் கொடூரமான முறையில் செயல்பட்டுள்ளன.

இந்நிலைக்கு மிக முக்கியமான காரணம் நமது மீடியாவின் பெரும்பகுதி 'உடன்படுக்கை' (embedded) மீடியாவாகவும் பெரும்பான்மை இதழியலாளர்கள் அதிகார வர்க்கத்துடன் சல்லாபிக்கத் துடிப்பவர்களாவும் இருப்பதுதான்.

மக்களின் அடிப்படை உரிமைகளைப் பறிக்கும் தடா, பொடா போன்ற எல்லாச் சட்டங்களையும் மீடியா இன்று நேரடியாகவும் மறைமுகமாகவும் ஆதரிக்கிறது. பயங்கரவாதிகளாகச் சித்தரிக்கப்படுவோரின் அடிப்படை மனித உரிமைகள் போலீசாரால் மீறப்படுவதை மீடியா ஆதரிக்கிறது. அவர்கள் சித்திரவதை செய்யப்படுவதை ஆதரிக்கிறது. போலீசாரின் 'என்கவுண்டர்' கொலைகளை மீடியா ஆதரிக்கிறது. அரசின் அராஜகத்தைக் கேள்வி கேட்போரைத் தேச விரோதிகளாக மீடியா சித்தரிக்கிறது.

தனது வன்முறையை மறைக்க அதிகாரவர்க்கம் செய்யும் பல தந்திரங்களில் ஒன்று சொற்களைச் சாதுரியமாகப் பயன்படுத்துவது. இந்தத் தந்திரத்திற்கு மீடியா முழு ஆதரவு வழங்குகிறது. அதிலும் குறிப்பாகத் தமிழ் மீடியா. V. D. என்ற பாலியல் நோயின் மீடியா தமிழாக்கம்: இன்ப சுக நோய். பாலியல் தொழிலில் ஈடுபடும் பெண்கள் அழகிகள். வன்முறையைச் சர்க்கரைச் சொற்களால் பொதிந்து நமக்கு உண்ணத் தருவது மீடியாவின் தந்திரமாக உள்ளது. போலீசார் சித்திரவதையைத் தமிழ் மீடியா, 'லேசாக வாட்டினார்கள்', 'தகுந்த சிகிச்சை அளித்தார்கள்' போன்ற வருணனைகளின் மூலம் ஏற்கத்தக்க ஒன்றாக வாசகருக்கு வழங்குகிறது. பாலியல் தொழிலாளர்களை 'அழகிகள்' என்று வருணிப்பது அத்தொழிலின் கொடுமைகளை மழுங்கடித்து அவர்களைப் பற்றிய சுகந்தமான எண்ணங்களை வாசகர்கள் மனத்தில் உருவாக்குகிறது. 'இன்ப சுக நோய்' என்ற தொடருக்கு இணையான ஒரு தொடரை உலகின் வேறு எந்த மொழி மீடியாவும் உருவாக்கியிருக்கும் என்று தோன்றவில்லை. தாமரைக்கனி அ. தி. மு. க. ஆதரவாளராக இருந்த காலத்தில் பண்ருட்டி ராமச்சந்திரனை அடித்தபோது அதைச் சபாநாயகர் காளிமுத்து 'ஒங்கித் தட்டினார்' என்று கூறியது வன்முறையை மென்மையான சொற்களில் பொதிவதற்கு ஒரு சிறந்த உதாரணம்.


படிப்பகம்

www.padippakam.com

ஈராக்கிலும் ஆப்கானிஸ்தானிலும் போர்க் கைதிகளை அமெரிக்க ராணுவத்தினர் கையாண்ட முறைகளை மிகத் தத்ரூபமாகக் காட்சிப்படுத்தும் புகைப்படங்கள் வெளியான பின்னரும் அதைக் குறிக்க, 'சித்திரவதை' என்ற சொல்லைப் பயன்படுத்தாமல், அமெரிக்க ஊடகங்கள், ஆங்கிலத் தொடர்களின் பெரும் ஊற்றையே கண்டெடுத்திருக்கின்றன.

சட்ட விரோதமாகச் சித்திரவதையில் ஈடுபடும் போலீசாரை அம்பலப்படுத்தாமல் அவர்களின் வன்முறை மக்களுக்கு ஏற்புடையதாக மாற்ற முயல்கின்றன நமது மீடியாக்கள். 'மயிலே மயிலே இறகுபோடு என்றால் போடுமா' எனப் போலீசாரின் சித்திரவதைக்கு இவை வக்காலத்து வாங்குகின்றன. உலகின் பல நாடுகளில் போலீசார் தடிக்குப் பதிலாக அறிவைப் பயன்படுத்தி நமது போலீசாரைவிட வெற்றிகரமாகக் குற்றவாளிகளைப் பிடித்துவருகின்றனர். அறிவுக்கு ஒருபோதும் தடி மாற்றாக அமைய முடியாது என்பதை நமது மீடியா சுட்டிக் காட்டுவதில்லை. தமிழ் இதழ்களில் போலீஸ் சித்திரவதையை வெளிப்படையாக ஆதரிப்பதில் துக்ளக்கின் பங்கைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்.



அரசின் வன்முறையை ஆதரிப்பதோடு ஊடகங்கள் நிற்பதில்லை. தங்கள் வியாபார நலனுக்காக அரசுக்கு எதிரான, மக்களுக்கு எதிரான அனைத்து வன்முறைகளையும் அவை ஆதரிக்கின்றன. ஊடகங்கள் இல்லாமல் பயங்கரவாதம் சாத்தியம் இல்லை என்று கூறப்படுவதுண்டு. பயங்கரவாத நடவடிக்கைகளை மீடியா ஊதிப் பெருக்கி மக்கள் மத்தியில் பீதியைப் பரப்பவில்லையெனில் பயங்கரவாதிகளின் செயல்பாடுகள் அர்த்தமிழந்துவிடும். ஆக, பயங்கரவாதிகள் மக்களுக்கு எதிராகவும் அரசுக்கு எதிராகவும் மேற்கொள்ளும் படுகொலைகளை ஆதரிப்பது, அரசு மக்களுக்கு எதிராக ஈடுபடும் வன்முறைகளை ஆதரிப்பது எனத் தனது வியாபார நோக்கங்களுக்காக எல்லா வன்முறைகளையும் பரப்பும் விதமாக மீடியா செயல்படுகிறது. சமூகத்திற்குக் கேடான காலங்களில் - போர், தேர்தல், தொற்றுநோய், மதக்கலவரம் போன்றவைகளின் காலங்களில்தான் - மீடியா பரவலாக்கம் பெறுகிறது.

செப். 11 தாக்குதலுக்குப் பிறகு அமெரிக்காவில் பெரும் பொருளாதாரப் பின்னடைவு ஏற்பட்டது. பங்குச் சந்தையில் எல்லாப் பங்குகளின் விலைகளும் சரிந்தன. ஆயுதம் தயாரிக்கும் கம்பனிகள் மற்றும் மீடியாக் கம்பனிகளின் பங்குகள் மட்டும் உயர்ந்தன. சமூகத்தின் கேடுகாலம் மீடியாவின் பொற்காலம். அதேபோலச் சமூகத்தில் சிவில் யுத்தம், போர், மதக் கலவரம், சாதிக் கலவரம் போன்றவை இல்லாத சுபிட்சமான நிலை நிலவுமெனில் மீடியா பெரும் சரிவைச் சந்திக்கும். இலங்கையில் அமைதி உடன்படிக்கைக்குப் பிறகு பத்திரிகைகளின் விற்பனை கடுமையான சரிவைக் கண்டுள்ளது இதற்கு ஒரு நல்ல உதாரணம்[5]. அங்கு அமைதி நீடிப்பதில் மீடியாவின் பங்கு என்னவாக இருக்கும் என்பதை ஊகிக்கக் கற்பனை வளம் அவசியமில்லை.

இந்தத் தேர்தலில் மத்தியில் எந்தக் கட்சிக்கோ கூட்டணிக்கோ அறுதிப் பெரும்பான்மை இல்லாத குழப்பமான நிலை, மீடியாவுக்கு ஏற்படுத்திய குதூகலத்தை வெளிப்படையாகப் பார்த்தோம். 24 மணிநேரச் செய்தி நிலையங்கள் செய்திக்குப் பஞ்சமில்லாமல், நாட்டுக்கும் பங்குச் சந்தைக்கும் ஏற்பட்ட குறுகியகாலக் குழப்ப நிலையைத் திகட்டத் திகட்ட அனுபவித்தன. தேர்தலுக்கு முந்தைய நாள்களில், தொங்கு நாடாளுமன்றம் உருவாகும் என்று கருத்துக் கணிப்புகள் தெரிவித்த நிலையில் NDTV வியில் அதன் நட்சத்திரங்களில் ஒருவரான ராஜ்தீப் சர்தேசாய் மீடியாவுக்கும் செய்தியாளர்களுக்கும் நல்லகாலம் வரப்போகிறது என்று வெளிப்படையாகவே தெரிவித்தார்.

குவைத் மீது ஈராக் படையெடுத்துப் பெரும் அழிவை ஏற்படுத்திய காலத்தில் அந்தப் போரை ஒரு காட்சிப் பொருளாக மாற்றி உலகெங்கும் தொற்றுநோய் போலப் பரப்பியது CNN. போரை ஒரு வீடியோ விளையாட்டுப்போலச் ரசனைக்கு உரிய ஒன்றாக அது மாற்றியது. போரின் வன்முறையைவிட இரவில் ஏவுகணைகள் வாணவேடிக்கைபோலச் சென்று வெடிக்கும் காட்சிகளிலும் பிற வண்ண மயமான காட்சிகளிலுமே CNN அதிகக் கவனம் செலுத்தியது. ஈராக் போரின் காட்சிப்படுத்தலை, உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியைப் போல, CNN குத்தகைக்கு எடுத்திருந்தது. இது ஒரு 'மீடியா போர்' என்று வருணிக்கப்பட்டதையும் அமெரிக்க நேரப்படி தொலைகாட்சிகளின் prime timeஇல் போர் தொடங்கியதையும் நாம் நினைவுபடுத்திக்கொள்ளலாம். ஈராக்கிய ஏவுகணைகளை அமெரிக்க ஏவுகணைகள் நடுவானில் சந்தித்துச் சிதறடிக்கும் - நமது இராமாயண, மகாபாரத சின்னத்திரைத் தொடர்களை நினைவூட்டும் - காட்சிகள் பல Computer graphicsஐப் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்டவை என்பது பின்னர் வெளிப்பட்டது.

'ஸ்டார் வேல்ட்' சானலில் அமெரிக்க 'போலீஸ் வீடியோ' ஒளிபரப்பப்படுவதைப் பார்த்திருப்பீர்கள்.

மேற்படி வீடியோக்களில் பார்வையாளர்களுக்கு மிகவும் பிடித்தவை அனுமதிக்கப்பட்ட வேக அளவைத் தாண்டிச் செல்லும் கார்களைப் போலீசார் விரட்டிப் பிடிப்பது. ஹாலிவுட் படங்களின் புகழ்பெற்ற 'சேஸ்' காட்சிகளை நினைவூட்டும் பதிவுகள் இவை. மேற்படி வீடியோக்கள் ஒளிபரப்பப்படுவது தொடங்கிய பின்னர் டி.வியில் 'ஹீரோ'வாக விரும்பும் பலர் இக்குற்றத்தில் ஈடுபடுவது அதிகரித்துள்ளது. 'பதினைந்து நிமிடப் புகழுக்காக' இதில் பலர் விளையாட்டுப் போல ஈடுபடத் தொடங்கி யிருப்பது பொது மக்களுக்கு ஆபத்தானது என்பது வெளிப்படை. மீடியா எப்படிக் குற்றத்தைத் தூண்டு கிறது என்பதற்கு இது ஒரு நேரடி உதாரணம்.

அதேபோலக் கடந்த ஆண்டு வாஷிங்டன் பகுதியில் மறைந்து நின்று அப்பாவிகளைச் சுட்டுக் கொல்லும் தொடர் 'sniper' கொலைகள் நடைபெற்றன. இதை அடுத்து மீடியா மிகப் பெரிய அளவில் அமெரிக்க மக்களிடையே பீதியைத் தூண்டிவிட்டது. மிகப் பெரிய மீடியாவின் கவனம் காரண மாக அமெரிக்காவின் வேறு பகுதிகளில் மேற்படி கொலை யாளியை நகல்செய்யும் கொலை யாளிகள் (Copy cats) உருவாயினர். இவர்களின் வருகை, மீடியா கவனத்திற்காக மீடியா கவனத்தால் மீடியாவே தூண்டிய நிகழ்வு என்பது வெளிப்படை.

❑

இதழியல், மதத்திற்குப் பதிலீடாக உருவாகிவருகிறது என்கிறார் பேராசிரியர் ஜான் காரே.[6] இது எவ்வாறு என்பதை அவர் விளக்கி யுள்ளார்.

◆ நவீன மனிதனுக்கு அவனுக்கு 'அப்பாலான' நடப்புகள் பற்றிய செய்திகளைத் தொடர்ந்து அளிப்பதன் மூலம் ஒருவிதப் பாதுகாப்பு உணர்வை மீடியா ஏற்படுத்துகிறது.

◆ அன்றாடப் பிரச்சினைகளில் உழலும் அற்பத் தனத்திலிருந்து மனிதனை விடுவித்து 'பேருண்மை' யுடன் தொடர்புகொண்டுள்ளதான மாயையை மீடியா ஏற்படுத்துகிறது.

◆ மீடியா மதத்தைப் பதிலீடு செய்வதால்தான் அது மரணத்தைப் பற்றிப் பெரும் கரிசனம் கொள்கிறது. கொலை, படுகொலை, விபத்து, பேரழிவு, போர் என மரணத்தின் எல்லாப் பரிமாணங்களையும் மதத்தைப் போலவே மீடியாவும் பிரதானப்படுத்துகிறது.

இந்தப் பின்னணியில் தமிழ்ப் புலனாய்வு இதழியலின் செயல்பாடுகளைப் பார்க்கலாம்.

புலனாய்வு இதழியலின் அசலான நோக்கம் அரசின் ஊழல்களை அம்பலப்படுத்துவது. தமிழ் இதழியலில் இது பிரபலங்களின் அந்தரங்கங்களை ஆராயும் இதழியலாகச் சுருங்கிவிட்டது. நடிகையின் 'உண்மை'த் தொடர், மனோதத்துவ அறிஞரின் பாலியல் 'அறிவியல்' கிளுகிளுப்பு ஆகியவற்றோடு இணைத்துப் படிக்கத் தக்கதாக இந்தப் புலனாய்வு இதழியல் செயல்பட்டு வருகிறது. மர்மமான முறையில் இறந்துகிடந்த ஓர் அடாவடி நபரைப் பற்றிய நமது ஒரு புலனாய்வு இதழ் செய்தியின் தலைப்பு 'செத்து ஒழிந்தான் செக்ஸ் சைக்கோ'.



செப்.11 தாக்குதலுக்குப் பிறகு அமெரிக்காவில் பெரும் பொருளாதாரப் பின்னடைவு ஏற்பட்டது. பங்குச் சந்தையில் எல்லாப் பங்குகளின் விலைகளும் சரிந்தன. ஆயுதம் தயாரிக்கும் கம்பனிகள் மற்றும் மீடியா கம்பனிகளின் பங்குகள் மட்டும் உயர்ந்தன. சமூகத்தின் கேடுகாலம் மீடியாவின் பொற்காலம்.


புலனாய்வு இதழியலில் எல்லோரும் அறிந்த ஆனால் எங்குமே பதிவு செய்யப்படாத ஒரு முக்கியமான பகுதி, அவ்விதழாளர்கள் சகஜமாக ஈடுபடும் பிளாக் மெயில் குற்றம். பல புலனாய்வு இதழ்கள் பணக்காரர்களையும் முன்னணிக் கம்பனிகளையும் மிரட்டிப் பணம் பிடுங்குகின்றன. பணம் தர மறுப்பவர்களின் உண்மையான மற்றும் கற்பனை யான இரகசியங்களை இவ்விதழ்கள் அம்பலப்படுத்துகின்றன. சில இதழ் கள் தமது இதழியலாளர்களுக்கு அடையாள அட்டையை மட்டும் வழங்குகின்றன. சம்பளம் தருவ தில்லை. மாறாக இதழியலாளர் பிளாக்மெயில் மூலம் பெறும் பணத் தில் ஒரு பகுதியை இதழ் உரிமை யாளருக்குக் கொடுக்க வேண்டும் என்பதே ஏற்பாடு. புலனாய்வு இதழி யல் இதைவிடச் சீரழிவது சாத்திய மில்லை. மேற்படி நடவடிக்கைகள் மதம், ஆன்மீகம் போன்ற புனிதச் சொற்களின் ஒளிவட்டத்தின் கீழ் நடைபெறும் அராஜகங்களுக்கு இணையாக இருப்பது வெளிப்படை. மீடியாவும் ஒரு புனிதச் சொல்லாகி வருவதையே இது உணர்த்துகிறது.

"மக்கள் கேள்வி எதுவும் கேட்காமல் தொடர்பு ஊடகங்கள் சொல்வதை நம்புகின்றனர்; ஏற்றுக்கொள்கின்றனர். முஸ்லிம்கள் தீவிரவாதிகள் எனத் திரும்பத் திரும்பச் சொல்லப்படும்போது அவர்களை அவ்வாறே பார்க்கத் தோன்றுகின்றது . . .

"ஓர் இனத்துக்கு எதிராக இன்னொரு இனத்தை, ஒரு மதத்தவருக்கு எதிராக இன்னொரு மதத்தவரை ஒரு சாதியினருக்கு எதிராக இன்னொரு சாதி யினரை மோதவிடுவது நாளடைவில் சமூக அளவில் பெரும் முரண்பாடுகள் தோன்ற வழி வகுக்கும். இந்தியாவைப் பொறுத்த அளவில் இத்தகைய மீடியாச் சித்தரிப்புகள் சமூகச் சீர்கேட்டையே தூண்டி வந்துள்ளன'."

தமிழ் மொழி உரைநடையின் வளர்ச்சிக்கு நேற்றைய தமிழ் இதழியலின் பங்களிப்பு குறிப்பிடத்தகுந்தது. ஆனால் இன்றைய மீடியா தமிழ் மொழிமீது பெரும் அராஜகத்தைக் கட்டவிழ்த்துள்ளது என்றுதான் சொல்ல வேண்டும். தமிழ் மொழியின் பிராந்திய

www.padippakam.com



வேறுபாடுகளும் அழகுகளும் நறுமணங்களும் சென்னையை மையப்படுத்தி இயங்கிவரும் மீடியாவின் தாக்கத்தில் சிதிலமடைந்துவருகின்றன. தமிழில் ஆங்கிலக் கலப்பு என்பது மீடியாவால் அறிமுகப் படுத்தப்பட்டுப் புற்றுநோய்போல் இன்று பரவிவருகிறது. ஒரே பொருளைத் தமிழிலும் பின்னர் ஆங்கிலத்திலும் மீண்டும் மீண்டும் கூறியவாறு பேசும் சென்னை மேட்டுகுடியினருக்குரிய, உலகில் வேறு எங்குமே நாம் காணமுடியாத, நகைப்புக்குரிய, நேரத்தையும் ஊக்கத்தையும் விரையப்படுத்தும் பழக்கமும் தமிழ் ஊடகங்களின் வழி பரவிவருகிறது. எல்லோரும் மேஜர் சுந்தரராஜன் போலப் பேசும் காலத்தை நினைத்தே பார்க்க முடியவில்லை.

❑

**உ**லக மீடியாவிலும் அகில இந்திய மீடியாவிலும் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியிருக்கும் இன்னொரு போக்கு 'feel good journalism'. குஷிப்படுத்தும் இதழியல். இதற்குத் தமிழில் இன்னும் சரியான உதாரணம் இல்லை. ஆனால் அமெரிக்காவில் வெற்றிபெறும் எந்த ஒரு போக்கும் இங்குப் பின்னர் நகல் செய்யப்படும் என்பதால் ஒரு முன்னெச்சரிக்கையாக இதைப் பற்றிப் பார்க்கலாம். அமெரிக்காவில் வெகுஜன இதழியலின் ஒரு பெரும்பான்மைப் போக்கு இதழியலை ஒரு entertainment ஆகப் பார்க்கிறது. அதாவது இதழியலாளன், மக்களைக் குஷிப்படுத்தும் பட்டிமன்றப் பேச்சாளர், நகைச்சுவை நடிகர், கனவுக் கன்னி போன்ற ஒரு பிரகிருதி. அவர்களுக்குச் சமூகப் பிரக்ஞையோ அரசியல் பிரக்ஞையோ தேவையில்லை என்பது மட்டுமல்ல இருக்கவும் கூடாது. இந்தப் போக்கைப் பின்பற்றும் நாளிதழ்களில் 'கெட்ட' செய்திகள் அதிகம் இடம் பெறுவதில்லை. காலையில் நாளிதழைப் படிப்பவர்கள் நாட்டில் எல்லாம் சுபிட்சமாக உள்ளது என்றே நினைக்க விரும்புகின்றனர் என்றும் அவர்கள் உணர் வுக்குத் தீனி போடுவதே பத்திரிகையாளனின் வேலை என்றும் இந்த 'குஷிப்படுத்தும் இதழியல்' போக்கு போதிக்கிறது. மரணம், கொலை, சாவு, தற்கொலை போன்ற செய்திகள் நாளிதழில் அதிகமாக இடம்பெறுவதை இப்போக்கு தவிர்க்கிறது. இவர்களுக்கு 'மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு'. இந்தியாவில் Times of India இந்தப் போக்கைப் பின்பற்றி விற்பனையில் பெரும் சாதனை படைத்துவருகிறது.

கடந்த பதினைந்து ஆண்டுகளில் இந்தியாவின் 80 சதவீதம் மக்களின் வருமானம் அதிகரிக்கவில்லை. ஆனால் நமது தேசம் எங்கும் நம்பிக்கையும் புத்துணர்ச்சியும் பொங்கி வழிவதாகவும் இந்தியா சுடர்விட்டுப் பிரகாசிப்பதாகவும் நமது ஆளும்வர்க்கம் அறிவுறுத்தி வருகிறது. இந்தியர்கள் என்பதற்காக நாம் பெருமைப் படலாம் எனவும் இவர்கள் போதிக்கின்றனர். இந்தக் குஷியான நேரத்தில் பட்டினிச் சாவு, குடிநீர்ப் பிரச்சினை, லாக்கப் மரணம் என்றெல்லாம் அபச்சாரமாகப் புலம்பிக்கொண்டிருக்காமல் உற்சாகமான 'வெற்றி'ச் செய்திகளை வெளியிடுவது மேட்டுக்குடி மற்றும் நடுத்தரவர்க்க மக்களைக் கவர்வதோடு அரசியல் வாதிகளையும் திருப்திப்படுத்துகிறது.

❑

**வெ**குஜன மீடியாவின் எல்லா அம்சங்களும் கண்டனத்திற்கு உரியவையா என்றால் இல்லை. குஜராத் படுகொலையின்போது NDTV செய்த பணி ஆக்கபூர்வமானது. செப். 11க்குப் பிறகு அல் ஜஸீரா என்ற கத்தார் நாட்டு அரபிக் சானல் பிரபலமடைந் துள்ளது. மேற்கத்திய மீடியாவிற்கு மாற்றான செய்திகளை அரபுலகிற்கு வழங்கிவரும், பெருமளவிற்குச் சுதந்திரமாகச் செயல்பட்டுவரும் இதன் பரவலாக்கத்தை வரவேற்கலாம்.

The Hindu நாளிதழை Times of India வுடன் ஒப்பிட்டு, பிரித்தானிய இதழியல் முறையைப் பின்பற்றி நடக்கும் ஒரு பொறுப்பு மிக்க இதழுக்கும் 'குஷிப்படுத்தும் இதழியல்' என்ற தூய வணிகப் போக்கிற்கும் இடையிலுள்ள வேறுபாட்டை நாம் உணரலாம். The Hindu அதன் வாசகர்களின் உணர்வுகளுக்குத் தீனிபோடு வதையே தன் கடமையாக நினைப்பதில்லை. இந்து மேட்டுக்குடியைச் சார்ந்த அதன் பெரும்பான்மை வாசகர்களால் அது The Anti-Hindu என்றே கருதப்படு கிறது. இருப்பினும் தன் வாசகர்களின் பார்வையில் ஒரு மாற்றத்தை, ஒரு தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற அணுகுமுறையை The Hindu பின்பற்றிவருகிறது. The Hinduவின் பல அம்சங்கள் பழைமைவாதக் கறை படிந்தவையாக இருந்தாலும் தமிழ்ப் பண்பாட்டிலிருந்து அது பெருமளவிற்கு அந்நியப்பட்டு நின்றாலும், இந்திய நாளிதழ்களின் வரிசையிலும் உலக நாளிதழ்களின் வரிசையிலும் முழுவதுமாக வியாபர நலன்களை மையப்படுத்தி இயங்காத ஒரு சில நாளிதழ்களில் The Hindu வும் ஒன்று.

தமிழ் நாளிதழ்களில் தினமணி, பலவிதங்களிலும் ஆக்கபூர்வமாக இயங்கி வருகிறது. தினத்தந்தியில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் நம்பிக்கை ஏற்படுத்தக் கூடியவை. வெகுஜன இதழ்களில் கல்கியின் தலையங் கங்கள் பொருட்படுத்தக்கூடியவை.

தினமணி ஓரளவிற்கும் தினமலர் கடுமையாகவும் அவற்றின் செய்திகளில் இயங்கும் கருத்தியலுக்காக


படிப்பகம்

www.padippakam.com



விமர்சிக்கப்பட்டாலும் இன்று தமிழ் நாளிதழ்களில் போலீஸ் செய்தியை மட்டும் நம்பாமல் நேரடியாகக் களத்திலிருந்து ஆய்வுச் செய்திகளை வெளியிடும் நாளிதழ்கள் இவை இரண்டும்தான் என்பதையும் குறிப்பிட வேண்டும்.

❑

**க**டந்த தேர்தல் மீடியாவின் வரையறைகளைத் துலக்கமாக வெளிப்படுத்தியுள்ளது. நமது மீடியா நிபுணர்கள் யாருக்குமே வாக்காளர் மனப்போக்கை அறியமுடியவில்லை என்பது மீடியா எந்த அளவுக்கு அந்நியப்பட்டு நிற்கிறது என்பதற்கான சான்றாகும். அத்தோடு மீடியாவை அரசு திட்டமிட்டுக் கைவசப்படுத்தினாலும் ஓர் அளவுக்குமேல் வாக்காளர்களைத் திசைதிருப்ப முடியாது என்பது நம்பிக்கை அளிக்கும் செய்தி.

ஆனால் பொதுவாக மீடியாவின் தாக்கம் சமூகத்தில் ஓர் இருளாக வலுத்துவருகிறது. இதழியலின் ஆக்கபூர்வமான அம்சங்கள் தொடர்ந்து பலவீனப்பட்டு வருகின்றன. மராத்திய தலித் எழுத்தாளர் ஊர்மிளா பவார் தன் தாயாரைப் பற்றிக் கூறுகையில் இவ்வாறு குறிப்பிடுகிறார்:

"அம்மாவிடம் ஒரு குணம்: யாரிடமாவது ஒரு விஷயம் கேட்டால் அதை அடுத்த ஆளிடம் சொல்லவே மாட்டாள். (அவள்) ஒரு நியூஸ் பேப்பர் அச்சு மாதிரி. எல்லா விஷயமும் வரும். ஆனால் வெளியே சொல்லாது[8]."

கருத்துகளின், செய்தியின் வெளிப்பாட்டுக் களமாக அல்லாமல் ஒரு சுய தணிக்கை மையமாக மீடியா மாறிவருகிறது.

மீடியாவின் வழி பிரசுரமாகும் செய்திகளும் மீடியா முதலாளிகளின் கொள்கைக்கு ஏற்ப, பிறழ்வுபட்டே பிரசுரம் பெறுகின்றன. உதாரணமாக இன்று ஆங்கிலத்திலோ தமிழிலோ வெகுஜன மீடியாவில் காஞ்சி ஸ்வாமிகளை விமர்சனம் செய்வது கிட்டத்தட்ட சாத்தியமில்லை.

இந்நிலையில் இணையம் ஒரு சுதந்திரமான மாற்று மீடியாவாக உருப்பெற்றுள்ளது. செப். 11க்குப் பிறகு அமெரிக்காவின் செயல்பாடுகள் பற்றிய விமர்சனபூர்வமான கருத்துகளுக்கு இணையத்தையே நாட வேண்டியிருந்தது. இலங்கையின் மறைக்கப்பட்ட மனித உரிமை மீறல்கள், படுகொலைகள் பற்றி உலகம் அறிவது அதிகமும் இணையம் மூலமே சாத்தியப்பட்டு வருகிறது. சிங்கப்பூர், மலேசியா போன்ற மீடியா சுதந்திரமற்ற நாடுகள் பற்றிய செய்திகளுக்கும் விவாதங்களுக்கும் இணையத்தையே நாட வேண்டியிருக்கிறது.

அதே நேரத்தில் ஆதாரமற்ற செய்திகள், அவதூறுகள், வசைகள், கற்பனைச் செய்திகள் எல்லாம் இணையத்தில் கருத்துச் சுதந்திரம் என்ற ஜனநாயக வேடத்தில் நடமாடிவருகின்றன. இணையத்தில் செயல்படும் போலி ஜனநாயகமும் போலி கருத்துச் சுதந்திரமும் ஆபத்தானவை. இணையம் யாராலும் இன்னும் குத்தகைக்கு எடுக்கப்படவில்லை என்பதால் அவ்வூடகத்தைப் பொறுப்புணர்வுடன் கையாண்டு ஒரு மாற்று மீடியாவாகத் தக்கவைத்துக்கொள்ளும் பிரக்ஞை சுதந்திரச் செயல்பாட்டில் அக்கறை உள்ள அனைவருக்கும் இன்றியமையாதது.

'அக்கறைகொள்ளும் இதழியல்' இதழியலின் ஆரோக்கியத்திற்கு இன்றியமையாதது. சமூகத்தின் கேடுகளை - பேரழிவுகள் முதல் சாதிய ஒடுக்குமுறைவரை - பரபரப்பான செய்தியாகப் பார்க்காமல், இருப்பு நிலையை மாற்றுவதற்கான ஒரு கருவியாகப் பார்க்கும் அணுகுமுறையை அக்கறைகொள்ளும் இதழியல் என்று வரையறுக்கலாம். அரசாங்கத்தை இயங்கவைக்கவும் சமூக நீதியைச் சட்டமாக்கவும் சட்டத்தை அமல்படுத்தவும் வாசகர்களின் பிரக்ஞையை வளர்க்கவும் அவசியமான அதிகாரம் நமது ஊடகங்களுக்கு உண்டு. ஆனால் இன்று அந்த அதிகாரம் பெருமளவிற்குப் பயன்படாமலேயே உள்ளது.

மீடியாவைப் பற்றிய நுட்பமான நேரடியான நேர்மையான விமர்சனங்களின் மூலம் அதை வளப்படுத்த முடியும். நுண்ணுணர்வு கொண்ட மீடியா ஓர் ஆக்கபூர்வமான சக்தியாகவும் செயல்படும் என நம்பலாம்.

❑



சமூகத்தின் கேடுகளை – பேரழிவுகள் முதல் சாதிய ஒடுக்குமுறைவரை – பரபரப்பான செய்தியாகப் பார்க்காமல், இருப்பு நிலையை மாற்றுவதற்கான ஒரு கருவியாகச் செய்தியைப் பார்க்கும் அணுகுமுறையை அக்கறை கொள்ளும் இதழியல் என்று வரையறுக்கலாம்.

**அடிக்குறிப்புகள்:**

1. இந்தியாவில் பிறந்த ஜார்ஜ் ஆர்வல் பின்னர் இரண்டாம் உலகப் போர்க்காலத்தில் நேதாஜி ஜெர்மனிய ரேடியோவில் செய்த உரைகளுக்குப் பதில் வழங்கும் பணியைச் செய்துவந்தார் என்பது ஓர் ஆர்வமூட்டும் செய்தி. 'மிருகங்கள் பண்ணை' என்ற நாவல் மூலம் உலகப் புகழ்பெற்ற ஆர்வலின் பூர்வீக இந்திய வீடு ஒரு மாட்டுப் பண்ணையாக இருக்கிறது!
2. The Granta Book of Reportage, Granta Publications, 1998.
3. Krzyszof Zanussi: The Dichotomy of Life and Death: The Death of Western and Eastern Worlds, The Katha Lecture, Katha Utsav 04.
4. காலச்சுவடு, 43, செப். – அக். 2002
5. போர்ப் பிரதேசத்தில் அமைதி திரும்பிய பிறகு தமிழ் மீடியா பரவலாக்கம் பெற்றுவருவது தனியாகப் பார்க்க வேண்டிய செய்தி.
6. John Carey, Faber Book of Reportage,1997
7. தொடர்புச் சாதனங்கள், அரும்பு, மார்ச் 2004 இதழின் இலவச இணைப்பு.
8. 'சொல்லாத கதைகள்', ஸ்பாரோ, ஜூலை 2001.



படிப்பகம்

www.padippakam.com

பாஞ்சாலி சபதம்

# இலக்கைத் தவறவிட்ட புலியின் பாய்ச்சல்

தேவிபாரதி



தமிழ் நவீன நாடக மேடைகளில் திரும்பத் திரும்ப ஒலிக்கும் குரல் பாஞ்சாலியினுடையது. மகாபாரதக் கதையாடலின் மையவிசையான பாஞ்சாலி சபதம் தொடர்ந்து தமிழ்ச் சிந்தனை மரபில் பல தாக்கங்களை ஏற்படுத்தி வந்துள்ளது. பாஞ்சாலியின் துக்கமும் ஆவேசமும் நிரம்பிய குரலும் கலைத்துப் போடப்பட்ட கூந்தலும் பெண் எழுச்சியின் குறியீடுகளாகக் கலை இலக்கியத்தில் இன்றுவரையிலும் தனது இருப்பை நிலைநிறுத்திக்கொண்டுள்ளது. பாழ்பட்டு, தாழ்வுற்றுக் கிடந்த தமிழ் மனத்தில் விடுதலை உணர்வைக் கிளர்ந்தெழச் செய்வதற்குப் பாஞ்சாலியின் கதையைப் பாரதி, பயன்படுத்தினான். ஆற்றலும் எழுச்சியும் மிகுந்த தனது கவிதையின் மொழியில் பாஞ்சாலியின் சுடரும் விழிகளுக்குள் பீறிட்டுத் தெறிக்கும் கண்ணீரையும் வெஞ்சினத்தையும் அழுத்தமான கோடுகளாலான ஒரு நவீன ஓவியமாகத் தீட்டினான். அவிழ்ந்து தொங்கும் கூந்தலின் அலைவுகளினூடே ஓயாமல் ஒலிக்கும் அறவியல் மற்றும் அரசியல் சார்ந்த கேள்விகள் அக்காப்பியத்தைத் தமிழ் விடுதலைப் போராட்டக்கால இலக்கியத்தின் சாதனைகளில் ஒன்றாக இன்றுவரையிலும் நீடிக்கச் செய்திருக்கிறது.

பின்நவீனத்துவச் சிந்தனையாளர்களில் பலரும் தொடர்ந்து பாஞ்சாலியை முன்னிறுத்திப் பல்வேறு கேள்விகளை எழுப்பிவந்துள்ளனர். வேறெந்தக் கதாபாத்திரத்தைவிடவும் பெண்ணிய வாசிப்புக்கு மிக நெருக்கமானது பாஞ்சாலியின் பாத்திரம். பாரதியின் காப்பியத்தை நேர்த்தியானதொரு நாடகமாகத் தயாரித்துள்ளது கூத்துப்பட்டறை. சென்னை அலயான்ஸ் பிராங்ஸேஸும் கூத்துப்பட்டறையும் இணைந்து அஞ்சனா பூரியின் இயக்கத்தில் தயாரிக்கப்பட்ட இந்நாடகம் 2004, மே 23, 27 தேதிகளில்அலயான்ஸ் பிராங்ஸேயின் கலையரங்கில் மேடையேற்றப்பட்டது. அதிர்வுகளை ஏற்படுத்தும் பின்புலச் சப்தங்களோடு பேராசிரியர் ரவீந்திரன் வடிவமைத்த திரவம் போலக் கசிந்து பரவும் ஒளிப்படலத்திற்குள், புராதனச் சிற்பங்களைப் போலப் பிரவேசிக்கும் நடிகர்களைப் பார்த்தவுடனேயே பார்வையாளர்களுக்கு நாடகம் பற்றிய ஒரு எதிர்பார்ப்பு தோன்றிவிடுகிறது.

இரு கூறுகளாகப் பிளக்கப்பட்டுத் தைல வண்ணங்களால் வெவ்வேறு சாயைகள் கொண்டவையாக மாற்றப்பட்ட முகங்களில் தென்படும் பாவங்கள் மேடைக்கு ஓர் அமானுஷ்யத் தன்மையை வழங்குகின்றன. உடைகளும் ஒப்பனையும் நடிகர்களின் அசைவுகளும் நாடகத்திற்குப் பொம்மலாட்டத்தின் சாயலைத் தருகின்றன. சில தருணங்களில் பொம்மலாட்டமாகவும் சில தருணங்களில் கழைக்கூத்தாகவும் கேளிக்கைக் காட்சியாகவும் தோற்றம் தரும் இந்நாடகம் மகாபாரதக் கதையாடலை முன்வைத்துச் சமூக அரசியல் தளத்தில் பல கேள்விகளை எழுப்பியிருக்க முடியும். பாஞ்சாலி சபதத்தில் பாரதி எழுப்பிய கேள்விகளுக்கிணையான – ஒரு வேளை அதைவிடவும் வலுவான – கேள்விகளை எழுப்புவதற்கான ஆற்றல் மிக்க மொழியைக் கைக்கொண்டிருந்தும், காலம் சார்ந்த தேடல் இயக்குநருக்குப் போதிய அளவுக்கு இல்லாததால் நாடகம் பல விதங்களிலும் ஏமாற்றமளிக்கும் நிகழ்வாகிவிட்டது. எந்தவொரு நவீனக் கலையாக்க முயற்சிக்கும் இன்றியமையாததாகக் கருதப்படும் தேடல் இது.

தெளிவும் லயமும் கொண்ட குரல் வளமும் ஒருங்கிணைந்த தொனியும் வாய்க்கப்பெற்ற கூத்துப்பட்டறையின் நடிகர்களுக்குப் பாரதியின் வீச்சும் வேகமும் கொண்ட தார்மீகச் சக்தியின் உக்கிரத்தை வெளிப்படுத்த இயலாமல் போனதற்கான காரணம் ஆராயப்பட வேண்டிய ஒன்று. கூத்துப்பட்டறை நடிகர்களின் ஐரோப்பியத் தன்மைகொண்ட மந்தமான உடலியக்கங்களும் பாரதியின் தொனியும் ஒன்றோடொன்று ஒத்துப்போகவில்லை. மூலப்பிரதியை மேடையின் தேவைக்கேற்றபடி மாற்றியமைக்காமல் முழுச் சுமையையும் நடிகர்களின் தலையில் கட்டிவிட்டிருக்கிறார் இயக்குநர். தனது சுருக்கமான அறிமுக உரையில் அஞ்சனா பூரி குறிப்பிட்ட சமகாலப் பிரக்ஞையும் உலகு தழுவிய பார்வையும் மேடையாக்கத்தில் தென்படவில்லை.

சகுனியின் வஞ்சனை, திருதிராஷ்டிரனின் மௌனம், யுதிஷ்டிரரின் சங்கடம், துரியோதனனின் வன்மம் போன்ற உணர்வுகள் அழுத்தமாகப் பதிவு பெற்ற அளவுக்குப் பீமார்ச்சுனர்களின் ஆவேசமும் பாஞ்சாலியின் துக்கமும் மேடையில் வெளிப்படவில்லை. புதிய கேள்விகள் ஏதுமற்றதாய் உடைந்து சிதறுகிறது பாஞ்சாலியின் துக்கம். பிதாமகர் பீஷ்மரும் ஆச்சாரியார் துரோணரும் விதுரனும் நிரம்பிய சபையை முன்வைத்து வரலாறு சார்ந்த வலுவான விவாதங்களை உருவாக்கியிருக்க முடியும்.

பாஞ்சாலி சபதம் மூலம் பாரதி எழுப்பிய கேள்விகள் வரலாற்று ரீதியில் இன்னமும் தமது முக்கியத்துவத்தை இழந்துவிடவில்லை. இயக்குநர் அந்தப் பிரக்ஞையோடு இந்நாடகத்தை மறு வாசிப்புக்கு உட்படுத்தியிருந்தால் தமிழுக்கு மிக முக்கியமான ஒரு நாடகம் கிடைத்திருக்கும். உடை, ஒப்பனை, ஒளியமைப்பு, நடிப்பு முதலிய அம்சங்களில் பல புதிய பரிமாணங்களைத் தொட்டிருக்கும் இந்நாடகம் தன் இலக்கைத் தவறவிட்ட புலியின் பாய்ச்சலை நினைவூட்டுகிறது. ◘

www.padippakam.com




# நிர்வாகயியலில் புனைகதை

திரைக்கதை எழுதுவதைப் பயிற்றுவிக்கும் கலாசாலைப் பேராசிரியர்களில் ராபர்ட் மகீ (Robert McKee) என்ற அமெரிக்கர் உலகில் இன்று பெரிதும் மதிக்கப்படுபவர். அவருடைய மாணவர்கள் 19 ஆஸ்கார் விருதுகள் மற்றும் 109 எம்மி (தொலைக்காட்சி) விருதுகள் பெற்றிருக்கிறார்கள். மகீ இன்று வேறொரு துறையிலும் தேவைப்படுபவராக இருக்கிறார். பெரிய கம்பெனிகள் தங்கள் உயர் நிர்வாகிகளுக்குக் கதை சொல்வதில் தேர்ச்சி இருப்பது நிறுவனத்துக்கு நல்லது என்று நினைக்கின்றன. பயிற்சி பெறும் நிர்வாகிகளிடையே இந்தப் புதிய நிர்வாகக் கோட்பாடு, சில கேள்விகளைத் தோற்றுவிக்கிறது. மகீ அக்கேள்விகளுக்கு மிக எளிய சொற்களில் விடை தருகிறார்.

**கதை என்பதுதான் என்ன?**

வாழ்க்கை மாற்றங்கள் எப்படி எதற்கு நேருகின்றன என்பதைத் தொகுக்க முயலுவதுதான் கதை. உலகின் மகத்தான கதாசிரியர்கள் ஒரு விஷயத்தைத்தான் திரும்பத் திரும்பக் கூறியிருக்கிறார்கள். எல்லா மனிதர்களுக்கும் எதிர்பார்ப்புகள் இருக்கின்றன. ஆனால் யதார்த்தம் நிர்தாட்சண்யமானது. ஈவு இரக்கமற்றது. எதிர்பார்ப்புகளுக்கும் யதார்த்தத்திற்குமிடையே நிகழும் போராட்டம்தான் வாழ்க்கை.

**ஒரு கதையை நல்லது என்று எப்படிக் கண்டுகொள்வது?**



ஆரம்பத்திலிருந்து முடிவுவரை சொல்லுவது நல்ல கதையல்ல. அப்படிச் சொல்லப்படுவது சோர்வையும் மலின உணர்வையும்தான் தரும். மனித மனத்தின் ஆர்வம் மற்றும் எதிர்பார்ப்புகளுக்கும் இவ்வளவுதான் சாத்தியம் என்று நிர்ணயிக்கும் சூழ்நிலைக்கும் இடையே எழும் முரண்பாடும் போராட்டமும்தான் கவனத்தைப் பெற வேண்டும். அதைப் பதிவுசெய்வதுதான் நல்ல கதை.

**கதை என்பது மிகைப்படுத்தலும் உண்மையைத் திரித்தலும் ஆகாதா?**

இல்லை; கதை என்றாலே பொய்யாகத்தான் இருக்க வேண்டும் என்ற எண்ணம் பெரும்பாலானோருக்கு இருக்கிறது. ஆனால் புள்ளிவிவரங்கள் என்று கூறப்படுபவையில் உள்ள பொய்களைவிடக் கதைகளில் குறைவு. கம்பெனிகளின் ஆண்டு அறிக்கைகளில் உள்ள திரித்தலும் மிகைப்படுத்தலும் கதைகளைத் தோற்கடித்துவிடும். நம் பிரச்சினைகள் என்ன, குறைபாடுகள் என்ன என்று நாம் தெளிவுபெற உதவும் சாதனங்கள் கதைகள். பிரச்சினைகள், குழப்பங்கள், குறைபாடுகள், முரண்பாடுகள் இவைபற்றிய நல்ல கதைகள் இருப்பதால் பொதுவாகக் கதைகளில் வாழ்க்கையின் இருண்ட பகுதிகள்தான் அதிகம் காணப்படுகின்றன.

**இருண்ட பகுதிகளைப் பற்றியே சிந்திப்பதில் தோல்வி மனப்பான்மைதானே உறுதிப்படும்?**

அப்படிக் கூறுவதற்கில்லை. இது மனப்பான்மை சம்பந்தப்பட்டதல்ல. இன்றைய உலகில் மனிதன் அவநம்பிக்கைச் சாயலுடையவனாகத்தான் இருக்க முடியும். ஒருவர் சொன்னார், எங்கோ எப்போதோ சொல்லப்பட்டது என்று இன்றைய மனிதன் எதையும் நம்பிக்கையில் எடுத்துக்கொள்ள முடியாது. இந்த அவநம்பிக்கைப் போக்குதான் ஒரு கதாசிரியனின் முதல் சாதனம்.

**இருண்ட பகுதிகளைப் பற்றிக் கூறும் கதைகள் கேட்போர்(அல்லது வாசிப்போர்)களுக்குச் செயலாக்கம் தருமா?**

இக்கதைகள் நான் முன்பு கூறியபடியே ஒரு முக்கியமான முரண்பாட்டைப் பற்றியவை. உலகத்தின் மிகச் சிறந்த தலைவர்கள் இந்த முரண்பாட்டைச் சந்தித்தவர்கள்தான்.

**தான் படைக்கத்தக்கது என நல்ல கதைகளை ஒருவர் எப்படிக் கண்டுகொள்வது?**

ஒரு நல்ல கதாசிரியன் அடிப்படைக் கேள்விகளைத் தனக்குத்தானே கேட்டுக்கொள்கிறான். மனிதனின் ஆசைப்படும் தன்மைதான் கதையின் சதையும் ரத்தமுமாகும். எது ஒரு மனிதனை எதையோ அடையத் துரத்துகிறது? அந்த ஆசை அவனுள்ளேயே உண்டானதா? அவனுடைய நிச்சயமின்மையா? பயமா? குழப்பமா? நண்பர்கள், குடும்பம், சக ஊழியர்களுடன் ஏற்படும் உரசலா? சதைப் பசியா? இயற்கை உபாதைகளா? எவ்வளவு விஷயங்கள் சற்றும் எதிர்பாராது நடந்துவிடுகின்றன? வியாதி... வண்டி ஒழுங்காகக் கிளம்ப மறுத்தல்...

**நன்றாகக் கதை சொல்லக் கூடியவன் நல்ல தலைவன் அல்லது நிர்வாகியாக முடியுமா?**

உறுதியாகச் சொல்லமுடியாது. ஆனால் கதை சொல்வதன் அடிப்படைகளை நன்கு உணர்பவன் முதலில் தன்னைப்பற்றி நன்கு உணர்ந்துகொள்ள முடியும். உண்மையில் இந்தப் பயிற்சியின் மிகப்பெரிய விளைவு தன்னையறிதல்தான். இது எவருக்கும் தன்னம்பிக்கையையும் தெளிவையும் மன வலிமையும் தரக்கூடியது. கதை சொல்வதற்குப் புத்திக்கூர்மை வேண்டும். ஆனால் புத்திக்கூர்மையோடு வாழ்க்கை அனுபவத்தையும் மகத்தான திரைப்பட டைரக்டர்கள் இணைத்துக்கொள்கிறார்கள்.

தன்னையறிதலே கதை புனைதலின் மகத்தான அடிப்படை. தன்னிலிருந்துதான் கதாசிரியன் அவனுடைய பாத்திரங்கள் அனைவரையும் உருவாக்குகிறான். "இப்பாத்திரத்தின் நிலையில் நான் இருந்தால் என்ன செய்திருப்பேன்?" என்ற கேள்வியோடுதான் அவனுடைய பாத்திரப்படைப்பு தொடங்குகிறது. தன்னைப் பற்றி நன்கு அறிந்துகொள்வதன் முதல் விளைவு மனித இனத்தைப் புரிந்துகொள்வது எளிதும் ஆழமும் கொண்டதாகிறது. மகத்தான கதாசிரியர்கள் மகத்தான அவநம்பிக்கைவாதிகள். இந்த அவநம்பிக்கை தன்னுடைய முகமூடியுடன் பிறர் முகமூடிகளையும் களைய உதவுகிறது. ஒரு மகத்தான தலைவனின் பண்பு முகமூடிகளையும் திரைகளையும் உடுருவிப் பார்ப்பதுதான்.

*தமிழ் வடிவம்:* **அசோகமித்திரன்**



படிப்பகம்

www.padippakam.com

# சேரன் கவிதைகள்



## செம்மணி

சாவும் வாழ்வும் நிறைந்திருந்த பெருந்தெருவில்
திரும்பி வந்தது காற்று
பாலத்தைத் தாண்டியதும்
சற்றே தயங்கியது

பாலத்தின் கீழ் ஒளியில் மினுங்கும் நீர்
நீலமாகவும் பச்சையாகவும் சிவப்பாகவும்
இருந்த நாள்களை இந்தக் காற்று அறியும்

இரக்கமில்லாமல் கடல்நீர் ஏரி மீது
மழை பொழிந்த இரவில்
பீதியும் பெரும் பயமும் விரட்டிய கொடுநடையில்
தாயின் கால் சோர
நீரில் தவறி விழுந்தது குழந்தை
தாத்தாவைத் தாங்கி வந்த கட்டிலே பாடையாக
மழைவிட்டும் ஈரக்காற்று ஓயாத சிறு பொழுதில்
தெருவோரமே சுடலையாகிற்று.

எல்லோரும் கடந்து சென்ற பிற்பாடும்
கிராமங்களை நிறைக்கிறது நாயின் ஓலம்

நூறாயிரம் கதைகளைச் சுமந்து
உரம்பெற்றது பாலம்

பாலத்தின் அப்புறம்
சேற்றின் கீழ்ப் புதையுண்டிருந்தவர்களின்
மண்டை ஓடுகளும் எலும்புகளும்
இறகு முளைத்துப் பறந்த பொய்யுரைகள்
வெளியை நிறைக்கின்றன

என்றாலும்
இப்போது

வெய்யில் பொன் உருக்குகிற மாலை
எல்லாம் தகர்ந்திருந்தாலும்
வெளி அப்படியேயிருக்கிறது
என்கிற தோற்ற மயக்கம்


கைவிலங்குகளுடன் வரும் சமாதானத்
தேவதையின்
ஒரு காலடியிலே மறைகிறது வெளி
வெளியில் எழுகின்றது
கடற்கரையை வேலிபோட்டுக்
காவல் இருப்பவனின்
புன்முறுவல் தாங்கிய முகம்

அந்த முகத்தருகே
காற்றையும் நீரையும் காசுக்கு விற்கப்
பெருநிதி சொரிந்து
நிலத்தையும் வளத்தையும் விழுங்குகின்ற
இன்னொரு பிசாசு முகத்தையும் கண்டேன்

பனையளவு உயரத்தில் திடீரென முளைக்கின்றன
முகங்கள் விளம்பரப் பலகைகளாக

செம்மணியை மூடியது
செல்ஃபோன்


நூறாயிரம் கதைகளைச் சுமந்து
உரம்பெற்ற பாலத்தை
இப்போது
உடைத்துவிடுகிறது ஒரு கண்ணீர்த் துளி.




படிப்பகம்

www.padippakam.com





# மூத்தோன்

மரங்களற்ற பனிக் காட்டில்
தனித்தேன்

நகரத்தின் பெரும் அங்காடிகளில்
வாங்கிப் புனைந்த தடித்த காலணிக்குள்
பாதம் வெடிக்கிறது

குருதிக் காட்சியில் நிலைகுலையும்
என் சித்தம் என்பதில்
பெருகும் அச்சத்துடன்
மிகுந்த தயக்கத்துடன்
என் காலடிகளைத் திரும்பிப் பார்க்கிறேன்

அவையோ
மறுமொழி தெரியாத கேள்விகளைத்
தொடர்ந்து வீசிய வண்ணம் உள்ளன

முன்னே
பனிப்பாறைகள் அடர்ந்து
நீர் கண்ணாடி இழைகளாய்த் தூங்கும் வெளியோ
என்னை ஊடுருவு
துருவிச் செல்
வெளிபடா இரகசியம் வெளிக்கும்
என்று உறுமுகிறது

மரங்களற்ற வெள்ளைப் பனிக்காட்டில்
தனித்தேன்

உயிர் பிழிந்து உருகிக் குரல் எழுப்பினாலும்
கேட்பவர் இல்லை

‘ பயந்த தனிவழிக்குத் துணையென
எவ்வெழுத்தும் இல்லை.’

திடீரென்று
என் எதிரே வருகிறான்
நரை படர்ந்த நீண்ட கூந்தலில்
பனிப் பூக்கள் சொரிந்திருக்க
கழுகின் இறகுகள் சூடி
முகத்திலும் மார்பிலும் வண்ணங்கள் தீட்டிக்
கையில் நெருப்புச் சட்டியுடன் வருகிறான்
அவன்: மூத்தோன்.

சிறு புகை மூட்டி
இறகுகளை அதில் தோய்த்து
என் பாதங்களை வருடுகிறான்
வலியும் குருதியும் விறைப்பும்
தொலைந்துபோகின்றன

என் காலணிகளைத் தூர வீசி எறிகிறேன்

சினம் மிக்க உன்பாடல்களை எறி
அவை நெருப்பு மூட்டும்
அந்த நெருப்பில் நடந்து
இந்த வெளியை மீறு

என்று திரும்பி நடக்கிறான்

பனிக் காற்றில் அவனுடைய நீண்ட கூந்தல்
அலைகிறது
புன்னகையுடன் என் காலடியைத்
திரும்பிப் பார்க்கிறேன்

□



படிப்பகம்

www.padippakam.com


## மூன்று தெருக்கள்

கடவுளரும் பிசாசுகளும் இணைந்து புரிந்த
இனப் படுகொலையின் ஒரு குருதித் துளி
பாலைப் பட்டினத்தின் ஒதுக்குப் புறத்தில்
தெறித்து வீழ்ந்தது

அந்தப் புள்ளியிலிருந்து
மூன்று தெருக்கள் கிளை பிரிந்தன

ஒன்று தெற்கே போயிற்று
எவரும் திரும்பி வர முடியாத தெரு அது எனப்
போனவர்க்குத் தெரியாது
அவர் சாம்பலையும் காணோம்


இன்னொன்று மேற்கே போயிற்று
கடலும் காடுகளும் தாண்டி
இரவல் முகங்களுடன்
குளிர் காலத்து ஆறுகளின் குறுக்கே நடந்து
எல்லைக் காவலர்களின்
கொள்ளிக் கண்களுக்கும் தப்பி
இரவுப் பயணங்களில்
புதிய நாடுகளுக்குச் சென்றோம்

எங்களுடைய கறுப்பு முகங்களில்
அவர்களுடைய வெள்ளை அநியாயம்
படிந்தது.

திரும்பி வரும் கனவுகள்
தொலைந்துபோக
வந்து சேர்ந்த வழியும் மறந்துபோய்த்
திசை கெட்டது உலகம்

மூன்றாம் தெரு
கிழக்கே கானகத்துக்குப் போயிற்று
போனவர்கள் போர்க் குரலுடன் திரும்பி
வந்தனர்

மூன்று தெருக்களிலிருந்தும்
மூன்று உலகங்கள் பிறந்தன
மூன்று உலகங்களிலிருந்தும்
முந்நூறு பார்வைகள் விரிந்தன
முந்நூறு பார்வைகளிலிருந்தும்
மூன்று கோடி முகங்கள் □



## இந்தக் கவிதையை எழுதி முடிக்க முடியாது

இந்தக் கவிதையை எழுதி முடிக்க முடியாது
இந்தப் பாடலை நிறைவு செய்ய முடியாது
இந்த வேட்கையைத் தீர்த்துவிட முடியாது

எந்த நினைவும் அழிய மறுக்கிறது
எந்த நிலமும் விளைய மறுக்கிறது
எந்த முகமும் நிலைக்க மறுக்கிறது

உள்ளேயா வெளியேயா நான் எனத்
தெரியாவிட்டாலும்
கலைய மறுத்துத் தொடர்கிறது
எப்போதும் ஒரு கனவு

அலைவும் நிலையாமையும்
முடிவற்ற கவர்ச்சிக் கதிர்களை வீசுகின்றன

கசப்பு சேர்ந்திராத தனிமையின் இனிமையை
மற்றவர்களுக்கும் ஊட்டு என்று
இந்தக் கவிதையை அன்றி
வேறு எதை நான் அனுப்ப? □

## பொழுது சாய்ந்தது


பொழுது சாய்ந்தது
வயல்வெளிக்கு அப்பால்
பொழுது சாய்ந்தது
காட்டின் நிழலிலே
பொழுது சாய்ந்தது
இன்னும் பொழியாத மழையின்
கோபத்துக்குப் பின்னால்,
மண்ணில் புரண்டிருக்கும் நூற்றுக்கணக்கான
உடல்களின் மேல்,
கரையில் ஒதுங்கிய துண்டிக்கப்பட்ட
ஒரு காலின் மீது.
பொழுது சாய்ந்தது
இழப்பையும் துயரத்தையும்
எங்குக் குவிப்பது என்று தெரியாமல்
கோள அறைக்குள் பதுங்க ஒரு
மூலையைத் தேடித் துடித்த சிறு பறவையின்
ஒடிந்த இறக்கைகள் மீது
எனது கண்ணீருக்குள் பொழுது சாய்ந்தது.

காலையில்
தயங்கித் தயங்கி வந்து சொல்கிறார்கள்;
உடல் கிடைக்கவில்லை. □

www.padippakam.com



# துண்டிக்கப்பட்ட காலின் கதை



துண்டிக்கப்பட்ட காலின் கதையை எழுதுகிறேன்

மலைகளிலிருந்து இறங்கிப்
பாலை வெளியூடாக நகரம் நோக்கிச்
செல்கிற தெரு ஒன்று
இப்போது குற்றுயிராகக் கிடக்கிறது

போரின் வரலாறு குருதியில் குழைத்துத்
தூவிவிட்டிருக்கிற சித்திரங்கள்
தெருவின் மீது துயர் தீராத
ஆவியாய்த் தொடர்கின்றன

காயம்பட்ட மரங்களின் கண்ணீர்
உதவி தர வந்த வெளிநாட்டாரின்
வாகனங்கள் விட்டுச் செல்கிற
தடங்களின் மீது படிகிறது

உரிமை கோரப்படாத உடலை
அசிரத்தையுடன் மூடும் பிண
அறைப்பணியாளனைப் போல

புழுதி கண்ணீரை மூடுகிறது

படை எடுப்புகளால் துவண்டாலும்
தெரு இருக்கிறது.
கண்டேன்.
தெரு
வழி பிரியும் சந்தியொன்றில்
பாதி உடைந்திருந்த வழிகாட்டிக் கல் ஒன்றை

அதன்மீது
குந்தி இருந்தது ஒரு மண்டை ஓடு.
நீரற்ற நெடுந்தெருவில்
தாகம் பெருக்கெடுக்கக்
காட்டின் உயிர் நாடியை நோக்கித்
திரும்பியபோது
கண்டேன்:
பாலை மரத்தின் கீழ்
துண்டிக்கப்பட்ட கால் ஒன்றை.
எவ்வித முறைப்பாடுகளுமற்றுக் கிடந்த
அந்தக் காலிலிருந்து
ஆயிரம் கதைகள் எழுந்து
காடுகளை நிறைத்தன.

நினைவறியாப் பொழுதொன்றில் காடுகள்
உருவானபோது
அவற்றுடன் கூடப் பிறந்த
மாயத் தோற்றங்களையும் ஐதீகங்களையும்
இந்தக் கதைகள்
இப்போது இடம் பெயர்த்துவிட்டன.

இடம்பெயர்ந்த மாயக்கதைகளும் ஐதீகங்களுமோ
புலம் பெயர்ந்த நாடுகளில்
தமிழர் கோவில்களிலும் வாழ்க்கைக்
கோலங்களிலும்
பாவச் சின்னங்களாகத்
தொங்கிக்கொண்டிருக்கின்றன
அவற்றின் கீழ்
இருட்டறைகளில் கழிவிரக்கமும்
தொலைவு தரும் பொறுப்பின்மையும் படர
உலவிவரும் நடைப் பிணங்களைக்
கண்டேன்.

கண்டேன்
வலி, வீரம், துன்பம், கொடுமை,
ஆற்றாமை—எல்லாவற்றினதும்
தாங்கு நிலமாக இருந்த காட்டில்
துண்டிக்கப்பட்ட கால் ஒன்றை.

கண்டேன்,
எனது கனவின் கல்லறைகள்மீது
தனது கதைகளை
மௌனமாக எறிந்துகொண்டேயிருக்கும்
துண்டிக்கப்பட்ட கால் ஒன்றை. □



படிப்பகம்

www.padippakam.com

# கண்ணாடி மழை

திருப்பங்களற்று நெடுந்தூரம் நீளும்
தெருவின் இரு முனைகளையும்
பேய் அறைந்த அச்சம்
இறுக மூடியிருக்கிறது

எதுவும் நுழையா இரும்புப் போர்வை
அதற்குமேலே

தெளிவான மொழியில்
சிறப்பு ஆணைகள் தரப்படுகின்றன
பிற்பாடு
எழுத்துப் பிழையற்ற பெயர்ப்பட்டியல்களைக்
கைகளில் தாங்கி
சீரான நடை சீரான உடையில்
ஒரு சீரான அழிவு
அகலக் காலடி எடுத்துவைக்கிறது

தெருவின் இரண்டு பக்கமும்
ஜன்னல்களும் கதவுகளும் உடைந்து வீழ்கின்றன
கனவு தடம்புரள
விழித்து அலறியவர்கள்மீது
சுவர் இடிந்து சரிகின்றது
நொருங்கிய கண்ணாடி மழை எழுப்பும் ஓலம்
காதுகேளாத பெரும் சங்கீதக்காரனின்
இசைக் கோர்வைகளைக்
குலைத்துப்போடுகையில்

திருப்பங்களற்ற தெரு
நீண்டு, நீண்டு
இப்போது ரயில் பாதையாகின்றது:
முகாம்களுக்குச் செல்லும் ஒருவழிப்பாதை

அதில்
நேரகாலமற்று விசித்திரமான அவல ஒலியுடன்
விரைகின்றன ரயில்கள்

இருளும் பகலும் வெளியும் நிலவும்
காடும் கடந்துபோவதை அறியாமல
மூடப்பட்ட பெட்டிகளுள்
நெரிபடுகின்ற மனிதர்களின் கண்கள்
மெல்ல மெல்ல ஒளியிழக்கின்றன

முதலில் சென்ற ரயிலில்
அடைபட்டிருந்தவர்களுக்கு
என்ன நடந்தது எனத் தெரியாது
ஆனால்
முகாமுக்குச் சென்ற கடைசி ரயிலில்
குழந்தைகள் மட்டுமே இருந்தன
அவர்களிடமும் குரல் கெஞ்சவில்லை

எஞ்சியவை

நெருப்புக்காளவாய்க்குத் தப்பிய கொஞ்சம்
பொம்மைகள்
கொத்துக் கொத்தாய்த் தலைமுடி
வாயிலோன் களவாட மறந்த தங்கப் பல்
எரிய மறுத்த ஒரு புகைப்படம்
நொருங்கிய கண்ணாடித்துண்டுகளின் கீழ்
இரவில்
காற்றில் அலையாத சாம்பல்
இறந்தாலும்
மூடமறுத்த இரண்டு கண்கள்.

ஓவியங்கள்: **சந்தோஷ்**


**வெளிவந்துவிட்டது**




**ஆங்!**
**உதயன் கார்ட்டூன்ஸ்**

## அழிய மறுக்கும் அழுத்தமான கோடுகள்

உதயனின் கார்ட்டூன்களில், உறுத்துகிற அளவுக்குக் கோடுகள் வன்மையும் உறுதியும் பெறுவது எதேச்சையான விஷயம் அல்ல. தொட்டால் சுடுகின்ற அதன் கொதிப்பும் உருவாக்கப்பட்டது அல்ல. அவை இரண்டும் உதயனின் இயல்புகள். தன்னைப் பிரதி எடுத்து, கூடுதல் குறைவு இல்லாமல் வரைந்தவர் அவர். அவர் கார்டுன்களின் ஒட்டு மொத்த இயல்பு - ஒரு வார்த்தையில் சொன்னால், ரௌத்திரம். ரௌத்திரம் என்பது கோபம் அல்ல. ஆத்திரம் அல்ல. அது தனிநபரின் தனிப்பட்ட கோபதாபத்தின் க்ஷணநேர வெளிப்பாடும் அல்ல. மனக் கணப்பில் போடப்பட்டு, சாவதானமாக எரிகிற, சமூகம் சார்ந்த மாற்றத்தைக் கோரும் ஓர் உக்கிரமான மனநிலை. தன் வாழ்நாள் நெடுகிலும் உதயன், ரௌத்திரத்துடன் வாழ்ந்தார். வேறு வகையாக அவரால் வாழ முடியாது என்பதை, அவரை அறிந்தவர்கள் அறிவார்கள்.

- முன்னுரையில் **பிரபஞ்சன்**

பொன் விழா கண்ட
எமது
நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம்
கார்ல் மார்க்ஸ் எழுதிய

**'மூலதனம்'**

என்ற பெருநூலைத்

தமிழில் இரண்டாம் பதிப்பாக
வெளியிட்டுள்ளது.

முதலாளித்துவ வளர்ச்சி விதிகளைத்
தோலுரித்துக் காட்டிய
மூலதனத்தின் இன்றைய பொருத்தப்பாடு
ஐயத்துக்கு அப்பாற்பட்டது. அதிலும் குறிப்பாக
இந்த உலகமயமாக்கக் காலத்தில்
முதலாளித்துவம் உலகமயமாகி வரும்போது
அதனைப் புரிந்துகொள்ளவும் முறியடிக்கவும்
மனித குலத்திற்கு, தமிழ்ச் சமுதாயத்திற்கு
**கார்ல் மார்க்ஸ்** தந்த **மூலதனம்** தேவை.

**மூன்று பாகங்களும் சேர்ந்து**
**5 புத்தகங்கள்**
**உரிய விலை ரூ.1200**
**கார்ல் மார்க்ஸ் பிறந்த தினத்தை முன்னிட்டு**
**5-5-2004 முதல் 30-9-2004 வரை**
**சிறப்புச் சலுகை விலை ரூ. 750**

**வாங்கிப் பயன் பெறுக!**

**New Century Book House (P) Limited**
41-B, SIDCO Industrial Estate
Ambattur, Chennai - 600 098
Tamil Nadu, South India
Phone: 044 - 26251968, 26258410, 26359906
E-mail: ncbhbook@yahoo.co.in

**நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின்**
**சிறப்பு வெளியீடு**

## சங்க இலக்கியம்

பத்துத் தொகுதிகள்: 8200
பக்கங்கள்

### இவ்வெளியீட்டின் தனிச்சிறப்புகள்

1. சங்க இலக்கியம் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை என்னும் பதினெட்டு நூல்கள் – 2381 செய்யுட்கள், மூலம் மற்றும் பழைய உரைகளைத் தழுவிய உரை, விளக்க உரையோடு ஒரு கோவையாக, பத்துத் தொகுதிகளாக வெளிவருகின்றது.
2. பல்லாண்டுகள் பல்கலைக்கழகங்களில், கல்லூரிகளில் சங்க இலக்கியம் பயிற்றுவித்த பேராசிரியர்களின் முயற்சியில் உருவான அரிய தொகுப்பு.
3. இத்தொகுதிகள் பாட்டும் பொருளும் மட்டும் கொண்டன அல்ல.
   - எல்லார்க்கும் விளங்கும் வகையில் பதம் பிரித்து எழுதப்பட்ட மூலம்
   - திணை, துறை, கூற்று விளக்கம்
   - பாடல்களுக்கான உரை, உரை விளக்கம்
   - அருஞ்சொற்பொருள்
   - பிற இலக்கிய ஒப்புமைப் பகுதிகள்
   - உள்ளுறை, இறைச்சி விளக்கம்
   - தொகுப்பின் இறுதியில் அருஞ்சொற்பொருள் நிரல், பாட்டு முதற்குறிப்பு, பாடினோர், பாடப்பெற்றோர் விவரங்கள் அனைத்தும்.
4. இந்நூல்களுக்கு அமைந்த பழைய உரைகள் (இந்தத் தலைமுறையினரால் படித்துப் புரிந்துகொள்ளக்கூடியன அல்ல) எளிமையாக்கப் பெற்றுள்ளன; நெடுந்தொடர்கள் பல சிறுதொடர்களாக ஆக்கப்பெற்றுள்ளன. மாறுபட்ட பொருள், பாடபேதங்கள் தேவையான இடங்களில் குறிக்கப் பெற்றுள்ளன. இதுவரை உரை விளங்காத இடங்கள், உரை விளக்கம் பெற்றுள்ளன.
5. இத்தொகுதிகளின் உரை ஆழமும் விரிவும் உடையது. கற்பவர், கற்பிப்பவர்க்குப் பெருந்துணையாய் அமையக் கூடியது. சங்க இலக்கியமா, பழந்தமிழாயிற்றே என்று எவரும் கருதத் தேவையின்றி எவரும் படிக்கலாம் என்ற அளவில் அனைத்துத் துறையினர்க்கும் ஏற்ற அரிய தொகுப்பு.
6. இத்தொகுதிகளுக்கு அயல்நாடுகளில் உள்ளோர் சலுகை விலை 85 அமெரிக்க டாலருடன் அஞ்சல் செலவு சேர்த்து அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.

**சங்க இலக்கியம் - 10 தொகுதிகளில்**
**(உரை, உரை விளக்கம், ஒப்புமை, அகர நிரலுடன்)**
**உரிய விலை ரூ.3000**


விளம்பரம்

**கிளைகள் போன்:**

**Chennai - ✆ 044 - 28604563, Thiruvanmiyur - ✆ 044 - 24404873, Trichy - ✆ 0431 - 2700885, Madurai - ✆ 0452 - 2344106, 2350271, Tirunelveli - ✆ 0462 - 2323990, Coimbatore - ✆ 0422 - 2380554, Salem - ✆ 0427 - 2450817, Vellore - ✆ 0416 - 2234495, Thanjavur - ✆ 04362 - 231371, Pondicherry - ✆ 0413 - 2357403, Dindigul - ✆ 0451 - 2432172, Ooty - ✆ 0423 - 2441743.**

# புத்தர் தேசம்

ரவிக்குமார்


தியாகனூரில் கோயிலுக்குள் உள்ள புத்தர்

தியாகனூருக்குச் சென்று அங்கிருந்த புத்தர் சிலைகளைப் பார்த்தபோது தமிழ்நாட்டின் பல கிராமங்களில் மேலும் புத்தர் சிலைகளைப் பார்க்க முடியுமென்று நான் கற்பனையும் செய்திருக்கவில்லை. தியாகனூர்ப் புத்தரின் படத்தை முதலில் நான் மயிலை சீனி. வேங்கடசாமியின் 'பௌத்தமும் தமிழும்' நூலில் (1972ஆம் வருடத்திய பதிப்பு) பார்த்தேன். 'சேலம் மாவட்டம் ஆத்தூர்த் தாலுகா தியாகனூரில் உள்ள புத்தர் உருவச்சிலை' என்ற குறிப்போடு செம்பழுப்பு நிறத்தில் அந்தப் புத்தர் சிலையின் புகைப்படம் அச்சிடப்பட்டிருந்தது. அதுதவிர அந்தச் சிலை பற்றிய வேறு குறிப்பு எதுவும் அந்த நூலில் இல்லை.

சில ஆண்டுகளாக மனத்தை அரித்துக் கொண்டிருந்த ஆசை கடந்த மார்ச் மாதம் நிறைவேறிற்று. நண்பர் ஜவஹர் மூலம் வழி அறிந்து தியாகனூருக்குப் போனேன். ஆத்தூர் செல்லும் சாலையில் தலைவாசல் என்ற ஊருக்குச் சற்று முன்பாகவே இடது புறம் பிரியும் பாதை தியாகனூருக்கு இட்டுச் செல்கிறது. ஆறகழூர் என்ற நல்ல தமிழ்ப் பெயர்கொண்ட ஊரைத்தாண்டிச் சென்றால் அரச மரத்தடியில் அந்தச் சிறிய புத்தர் கோயில் உள்ளது. இப்போதுள்ள கோயில் சமீபமாகத்தான் உருவாக்கப்பட்டதென்பதை நாம் எளிதில் விளங்கிக்கொள்ள முடிகிறது.

தியாகன் என்பது புத்தரின் பெயர்களுள் ஒன்று. தியாகனின் ஊர் என்பதால் தியாகனூர் எனப் பெயர் வந்திருக்கலாம். கோவிலின் மையமாக இருக்கும் மண்டபம் பழைய காலத்தைச் சேர்ந்தது என்பதை அந்த மண்டபத்துத் தூண்களின் அமைப்பு எடுத்துக்காட்டுகிறது. கருங்கல்லில் செதுக்கப்பட்ட அந்தச் சிலை தமிழ்நாட்டுப் புத்தருக்கே உரிய 'உஸ்னிஷா'வுடன் (தலை உச்சியில் அறிவுச் சுடரைக் குறியீடாக உணர்த்தும் வடிவம்) காட்சியளிக்கிறது.

சுமார் நூறு குடும்பத்தினர் வாழும் அந்தச் சிறிய கிராமத்தில் அதிகம் நாயுடுகள் வசிக்கின்றனர். முத்தரையர் சாதியைச் சேர்ந்த ஒரு மூதாட்டியே இப்போது அந்தப் புத்தர் கோயிலைப் பராமரித்து வருகிறார். (புத்தர் முகத்தில் மஞ்சளும் குங்குமமும் பூசுவது வாசலில் நீர் தெளித்துக் கோலம் போடுவது, இன்ன பிற) அவருடைய கணவர் உயிரோடு இருந்தவரை கோயிலில் உள்ள ஒரே கதவின் சாவி அவரிடம் இருந்ததாம். சித்ரா பௌர்ணமி அன்று பொங்கல் வைத்துப் படையல் செய்வது தவிர வேறு பூசைகள் எதுவும் நடப்பதில்லையென ஊர்க்காரர்கள் தெரிவித்தனர்.

கோவில் சாலையோரத்தில் உள்ளது. அதற்குச் சற்று தொலைவில் வயல்வெளி நடுவில் மரத்தடியில் புதர் மண்டிய இடத்தில் இன்னொரு புத்தர் சிலை உள்ளது. அது வெண்ணிறக் கல்லில் செதுக்கப்பட்டுள்ளது. இரண்டும் ஒரேவிதமாக உள்ளன வென்றாலும் வயல்வெளியில் இருக்கும் சிலை சுமார் 5 அடி உயரமும் கோவிலில் உள்ளது சுமார் 7அடி உயரமும் உள்ளன.

தியாகனூர் ஒரு காலத்தில் மிகமுக்கியமான பௌத்த மையமாக விளங்கியுள்ளது. காஞ்சிபுரம் பதினேழு காத தொலைவில் உள்ளதாகக் கூறும் கல்வெட்டு ஒன்று. அது ஆறகழூர்க் காமநாதர் கோவிலில் இப்போதும் உள்ளது. இது காஞ்சிபுரத்துடன் தியாகனூர் கொண்டிருந்த தொடர்பை எடுத்துக்காட்டுவதாகக் கொள்ளலாம். ஏழாம் நூற்றாண்டில் யுவான் சுவாங் இந்த ஊருக்கு வந்து சென்றதாகக் கூறப்படுகிறது.

வயல்வெளியில் கிடக்கும் சிலையிலிருந்து மிக அருகாமையிலேயே தொன்மையான கோவில் ஒன்று உள்ளது. மலை மண்டலப் பெருமாள் கோவில் என இப்போது அறியப்படும் கோவிலின் வெளிப்புறச் சுவர் நெடுகிலும் ஏராளமான கல்வெட்டுகள் காணப்படுகின்றன. அந்தக் கல்வெட்டுகள் கல்வெட்டுத்துறையினரால் படியெடுக்கப்பட்டிருப்பதாகவும் ஆனால் அது இன்னும் பதிப்பிக்கப்பட்டதாகத் தெரியவில்லையென்றும் கல்வெட்டியல் அறிஞர் திரு. சுப்பராயலு தெரிவித்தார். இக்கோவிலில் உள்ள கல் ஒன்றில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு 12ஆம் நூற்றாண்டில்

வானகோவராயன் என்ற மன்னன் இக்கோவிலுக்கு நிவந்தமாக நிலம் அளித்ததைக் கூறுகிறது (Salem Cyclopaedia, Busnagi Rajannan, 1992).

தியாகனூருக்குச் சென்று வந்ததற்குப் பிறகு மேலும் பல புத்தர் சிலைகளைப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் உந்தத் தஞ்சை, பெரம்பலூர், நாகப்பட்டினம் மாவட்டங்களுக்கு ஒரு பயணம் மேற்கொண்டேன். (நண்பர் ஆனந்தின் தயவு).

கடலூருக்கு அருகிலுள்ள திருவதிகை வீரட்டானேஸ்வரர் கோயிலின் உள்ளே ஒரு மூலையில் வைக்கப் பட்டுள்ள புத்தர் சிலையையும் பெரண்டாக்கோட்டை விக்கிரமங்கலம், பெரியதிருக்கோணம், ஜெயங் கொண்டம், பரவாய், ஒகளூர் முதலிய ஊர்களிலிருந்த புத்தர் சிலைகளையும் பார்க்க முடிந்தது.

விக்கிரமங்கலம், பெரியதிருக்கோணம், பரவாய், ஒகளூர் ஆகிய ஊர்களில் வன்னியர் தெருக்களின் அருகில் அல்லது நடுவில் புத்தர் சிலைகள் அமைந் துள்ளன. பெரண்டக் கோட்டையில் மட்டும் அது பறையர் வாழும் தெருவுக்கருகில் உள்ளது. விக்கிர மங்கலம், ஒகளூர், தியாகனூர் முதலான ஊர்களில் புத்தர் சிலைகள் இருக்கும் இடங்களுக்கு அருகிலேயே பெருமாள் கோவில்கள் உள்ளதைப் பார்க்க முடிந்தது.

பெரண்டக் கோட்டையில் புத்தரின் தலை மட்டுமே உள்ளது. சாம்பான் ஐயனார் என்ற பெயரில் அந்தச் சிலையைத் தலித் மக்கள் வணங்கிவருகின்றனர். சாம்பான் என்ற பெயர் சாம்புதல் என்ற சொல்லிலிருந்து வருகிறது. சாம்புதல் என்றால் ஒடுங்குதல் எனப் பிங்கல நிகண்டு பொருள் கூறுகிறது. தவத்தால் உடல் ஒடுங்கிய புத்தர் அப்பெயரால் அழைக்கப்பட்டதோடு பௌத்தர்களை அதே பெயரால் அடையாளப்படுத்தியிருக்கக்கூடும். பறையர் சாதியினரைச் சாம்பான் என அழைக்கும் வழக்கம் உள்ளதையும் இத்துடன் இணைத்துப் பார்க்கலாம். தோற்கடிக்கப்பட்ட பௌத்தர்களே தீண்டாதாராக்கப்பட்டனர் என்று அயோத்திதாசப் பண்டிதரும் பின்னர் அம்பேத்கரும் கூறிய கருத்து பெரண்டக் கோட்டை சாம்பான் ஐயனாரைப் பார்த்தபின் மேலும் எனக்கு உறுதிப்பட்டது.

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நிகர்நிலைக் கண்காணிப்பாளராகப் பணிபுரியும் பா. ஜம்புலிங்கம் 'சோழநாட்டில் பௌத்தம்' என்ற தலைப்பில் ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றுள்ளார். அவர் அறுபது இடங்களில் புத்தர் சிலைகளைக் கண்டறிந்து பட்டியலிட்டுள்ளார். தமிழ்நாட்டின் பிற மாவட்டங்களுக்கு அந்த ஆய்வை நீட்டித்தால் ஆயிரக் கணக்கான புத்தர் சிலைகளைக் கண்டறிய முடியும்.

சமீபத்தில் (2004 பிப்ரவரி மாதத்தில்) திருவாரூர் அருகே ஒரே இடத்தில் நாற்பத்தைந்து புத்தர் சிலைகள் கிடைத்ததை இங்கு நினைவுபடுத்திப் பார்க்கலாம்.

நான் கண்ட புத்தர் சிலைகளையும் அவை காணப் படும் இடங்களையும் கொண்டு எனக்குச் சில அபிப் பிராயங்கள் திடப்பட்டன. தலித்துகள் மட்டுமின்றி இன்று வன்னியர்கள் என அறியப்படும் மக்களதும் பூர்வ மதமாக பௌத்தமே இருந்திருக்கக்கூடும்.

பௌத்தம் குறித்து இப்போது கிடைத்துள்ள ஆதாரங்கள் பெரும்பாலும் சைவ, வைணவக் கோவில் களின் அருகிலேயே கண்டெடுக்கப்பட்டுள்ளன. அத்துடன், இன்றுள்ள பல இந்துக் கோவில்கள் ஏற்கனவே பௌத்தக் கோவில்களாக இருந்தவைதாம் எனப் பல்வேறு அறிஞர்களும் கூறியுள்ளனர். புத்தர் சிலை களுக்கு அருகே கோவில்கள் அதிலும் குறிப்பாகப் பெருமாள் கோவில்கள் இருப்பது இந்த உண்மைகளை வலுப்படுத்துவதாக உள்ளது. தமிழ்ப் பௌத்தம் குறித்த ஆய்வுகள் இன்று சமூகத்தில் ஒடுக்கப்பட்டோராக வைக்கப்பட்டுள்ளவர்களது பூர்வ வரலாற்றை வெளிப்படுத்திவிடும் என்று அஞ்சியே இது காறும் புறக்கணிக்கப் பட்டுள்ளன என்று எனக்குத் தோன்றுகிறது.




வயல்வெளியில் கிடக்கும் புத்தர். அருகே தெரிவது பெருமாள் கோவில்

"தமிழ்நாட்டிலே பௌத்தமதம் பரவியமை பற்றிய மிக முற்பட்ட நம்பகமான குறிப்பு கி. மு. 3ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அசோகன் கல்வெட்டுகளில் காணப்படுகின்றது. தனது பிரசித்தி பெற்ற 13ஆம் பாறைச் சாசனத்திலே தனது தர்மவிஜயத்தைப் பற்றி அதாவது பிற நாடுகளிலே தூதர்கள் மூலமாகச் சாத்வீகமான முறையிலே புத்த தர்மத்தைப் பரப்புவதற்காக நடத்தப்பட்ட இயக் கத்தைப் பற்றிக் கூறுமிடத்து அந்தத் தர்மவிஜயம் தெற்கிலே சோழர், பாண்டியர், தாமிரபரணியர் ஆகியோர் மத்தியில் நடத்தப்பட்டதாக அசோகன் குறிப்பிட்டுள்ளான்..." என கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி எழுதியுள்ளார். (தமிழ்நாட்டில் பௌத்தம், சிந்தனை ஜூலை - அக்டோபர் 1968, பேராதனை, இலங்கை)

"புத்தமதம் சோழப் பேரரசின் வீழ்ச்சியின் பின்பும் காஞ்சிபுரத்தில் நிலைத்திருந்தது" எனக் கூறும் நீலகண்ட சாஸ்திரி அதற்குக் கல்வெட்டுச் சான்றுகள் உள்ளதாகக் கூறி NO. 13 of 1934 / 35; 607 of 1919 ஆகிய கல்வெட்டுகளை உதாரணங்களாகச் சுட்டியுள்ளார்.

தமிழ்நாட்டுப் பௌத்தமத வரலாற்றுக்குக் குறிப் பிடத்தக்க மூலாதாரங்களாக ஈழத்துச் சாசனங்களும் பாலி நூல்களும் உதவுகின்றன.... இவற்றுள் (பாலி நூல்களுள்) முக்கியமானவை ஸூஹளவத்துபகரண, ஸஹஸ்ஸவத்துபகரண, மஹாபங்ஸ, தீபவங்ஸ, மஹா

www.padippakam.com



ரூபஸித்தஸந்நய, வீமதிவினோதினி, விநயஸாரத்தீபனீ, மோஹவிச்சேதனீ, ஜிநாலங்கார, பரமத்தவிநிச்சய, மதுரத்தவிலாஸினி ஆகிய நூல்களாகும். 12, 13ஆம் நூற்றாண்டுகளில் சோழநாட்டில் வாழ்ந்த பிரபல பௌத்த அறிஞர்களைப் பற்றியும் அங்கிருந்த விஹாரை களைப் பற்றியும் இந்நூல்களிலிந்து அறிய முடிகின்றது" என நீலகண்டசாஸ்திரி குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கருத்துகள் ஏற்கனவே அயோத்திதாசப் பண்டிதரால் வலியுறுத்தப்பட்டவைதாம். ஆனாலும் கூட 'பௌத்தமும் தமிழும்' நூலை எழுதிய மயிலை சீனி. வேங்கடசாமியோ அல்லது நீலகண்ட சாஸ்திரியோ அதற்குப் பிறகு ஆய்வுகளை மேற்கொண்ட அறிஞர்களோ அயோத்திதாசரின் படைப்புகள் குறித்து எங்கும் பேசாதது வியப்பளிக்கிறது. சீனி. வேங்கடசாமியின் நூல் பல இடங்களில் அயோத்திதாசர் எழுதியவற்றைத் திருப்பி எழுதியதாக உள்ளதை இரண்டு நூல்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால் அறியலாம்.

தமிழ்நாட்டில் பௌத்தம் அழிந்துவிட்டது என்று சொல்வதே தவறு. அது இப்போதும் வேறு வடிவங்களில் தொடர்ந்து பின்பற்றப்பட்டே வருகிறது என வாதிடும் அயோத்திதாசர் கார்த்திகை, தீபாவளி போன்ற பண்டிகைகள், பிறப்பு இறப்புச் சடங்குகள், விவசாயம் தொடர்பான சடங்குகள், திருமணச் சடங்குகள் எனப் பலவற்றிலும் பௌத்தத்தின் அடையாளங்களைக் கண்டு வெளிப்படுத்தியுள்ளார். அவற்றைக் கண்டும் காணாமல் புறக்கணித்துவிட்டுத் தத்தம் நிலைப் பாடுகளை வலியுறுத்துவதையே வரலாற்றாளர்கள் கடைபிடித்துவருகின்றனர்.

இந்திய அளவில் தமிழ்நாட்டில்தான் பௌத்தம் வெகுகாலம் ஆற்றலோடு இருந்தது எனப் பல்வேறு வரலாற்று அறிஞர்களும் ஒப்புக்கொண்டுள்ளனர். ஆனால் அது பற்றிய ஆய்வுகள்தாம் செய்யப்படவே இல்லை. அவை செய்யப்பட்டால் இப்போதுள்ள பல இந்துக் கோவில்கள் பௌத்தக் கோவில்களை இடித்துக் கட்டப்பட்டவைதாம் என்பது தெரியவரும். தஞ்சைப் பெரிய கோவிலேகூட அப்படி இடித்துக் கட்டப்பட்டதுதான் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். அந்தக் கோவிலில் உள்ள புத்தர் சிற்பங்கள் அதற்கு ஆதாரங்களாக உள்ளன.

தஞ்சைப் பெரிய கோவிலில் காணப்படும் புத்தர் சிற்பங்கள், புத்தர் ஞான உணர்ச்சி பெற்றதை வெளிப் படுத்துவதாக நீலகண்ட சாஸ்திரி குறிப்பிடுகிறார். அவை ராஜராஜ சோழனின் சமயப்பொறைக்கு உதாரணங்கள் எனச் சதாசிவப் பண்டாரத்தார் பாராட்டு கிறார் (பிற்காலச் சோழர் வரலாறு, 1974). ஆனால் அவை புத்தர் கோவில் ஒன்றை இடித்து அந்த இடத்தில் தான் பெரியகோவில் கட்டப்பட்டது என்பதற்கான சான்றுகள் எனக் கலை வரலாற்று அறிஞர் சுரேஷ் பிள்ளை விளக்கமளிக்கிறார். (Introduction to the Study of Temple Art, Suresh B Pillai, 1976)

பழைய கோயிலொன்றை இடித்து அதன்மீது கற்றளி யாக எழுப்பப்பட்டதே தஞ்சைப் பெரியகோயில் எனச் சதாசிவப் பண்டாரத்தார் ஒப்புக்கொண்ட போதிலும் பௌத்தக் கோவிலை இடித்துக் கட்டப் பட்டதெனக் கூறவில்லை. தமிழ்நாட்டுக் கோயில்களில் காணப்படும் சிற்பங்கள், கட்டிட அமைப்புகள், வேலைப் பாடுகள் முதலியவற்றின் அடிப்படையிலும் கோவில் களுக்குள் சிற்பிகள் சிற்பங்களின் வாயிலாகச் செதுக்கி விட்டுச் சென்றுள்ள ரகசியச் சமிக்ஞைகளைக் கட்ட விழ்ப்பதன் மூலமாகவும் சுரேஷ் பிள்ளை வெளிப் படுத்தும் உண்மைகள் அயோத்திதாசர் ஓயாமல் வலியுறுத்திய உண்மைகளோடு பொருந்திச் செல்கின்றன.

தமிழ்நாட்டில் தன்னார்வக் குழுக்களும் சில தான்தோன்றி அறிவுஜீவிகளும் இப்போது புத்தரின் பெயரை மென்று துப்பிக்கொண்டுள்ளனர். பணம், புகழ் ஈட்டும் குறுக்கு வழியாக இப்போது புத்தரின் பெயர் மாற்றப்படுகிறது. இவற்றைத் தாண்டித் தமிழ்ப் பௌத்தத்தின் வரலாற்றை மீட்டெடுத்து முன்வைக்க வேண்டிய கடமை வரலாற்றறிஞர்களுக்கு உள்ளது. தமிழ்நாடெங்கும் சிதறிக்கிடக்கும் புத்தர் சிலைகள் குறித்த தகவல்களை ஆவணப்படுத்துவது இந்த ஆய்வில் முதல் பணியாக இருக்கும்.

இதுவரையில் தமிழ்ப் பௌத்தம் குறித்துச் செய்யப் பட்ட அறிவுத்துறைப் பங்களிப்புகள் பெரும்பாலும் கல்வித்துறை சாராத சிந்தனையாளர்களாலேயே செய்யப் பட்டுள்ளன என்பதைக் கவனத்தில் கொண்டால் வரலாற்றறிஞர்களைக் காட்டிலும் சமூக அர்ப்பணிப்பு கொண்ட சிந்தனையாளர்கள் செய்ய வேண்டிய பணிகளே இதில் அதிகம் எனப்படுகிறது.

தியாகனூர் புத்தர் அவர்களுக்காகத்தான் காத்திருக் கிறார்போலும்.

புகைப்படங்கள்: **புதுவை இளவேனில்**

www.padippakam.com





# மலையாள ரகசியங்கள்



சக்கரியா

மலையாள மொழியின் இன்றைய நிலை, தமிழ்ச் சகோதரி சகோதரர்கள் புரிந்துகொள்ள வேண்டிய ஒன்றாக எனக்குத் தோன்று கிறது. வரலாற்று நோக்கில், தமிழிலிருந்துதான் மலையாளம் உருவானது என்பதில் சந்தேகமில்லை. ஆனால், இடைக்காலக் கன்னடத்தைச் சேர்ந்த அக்கமகாதேவி போன்ற கவிஞர்களைப் படிக்கும்போது, மலையாளத்துக்கு இரண்டு அன்னையருண்டோ என்று தோன்றும். மலையாளத்துடன் அந்தக் காலத்துக் கன்னடம் அந்த அளவுக்கு நெருக்கம் கொண்டிருக்கிறது. எதுவானாலும், பழைய மொழியுடன் காலப்போக்கில் ஏராளமான சமஸ்கிருதம், கொஞ்சம் அரபி, போர்த்துக்கீஸ், டச்சு, ஆங்கிலம் எல்லாமும் கலந்து இன்று நாம் அறிந்திருக்கும் மலையாளம் உருவாகியிருக்கிறது.

மலையாள உரைநடை உருவாகிக் குறுகிய காலமே ஆகியுள்ளது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில்தான் சி.வி. ராமன்பிள்ளை மலையாளத்தின் முதல் நாவலான 'மார்த்தாண்ட வர்மா'வை எழுதுகிறார். அதற்கு முன்பு எல்லாம் கவிதை மயம். மேற்கத்திய போதகர்கள்தான் உரைநடையை உருவாக்கி பயன்படுத்தத் தொடங்கினர். மதப்பிரச்சாரம் செய்வதே அவர்களது தேவை. போதகர்கள்தான் முதன் முதலாக 18, 19ஆம் நூற்றாண்டுகளில் செய்திப் பத்திரிகைகளையும் ஆரம்பித்தார்கள். மதத்தைப் பற்றியவையே பிரதானமான செய்திகள். ஒருவேளை, இந்தியாவிலேயே முதலாவது வெளிநாட்டுப் பயணக் கட்டுரையும் மலையாளத்தின் இலட்சணம் பொருந்திய முதல் உரைநடை நூலுமான 'வர்த்தமான புஸ்தகத்'தை மத்தியத் திருவிதாங்கூர்க்காரரான கிறித்தவப் பாதிரியார் பாறமேக்கல் தோமா கத்தனார் பதினெட்டாம் நூற்றாண்டில் எழுதினார். கேரளத்தில் அன்று வாழ்ந்த உள்ளூர்க் கிறித்தவர்களைப் போர்த்துக்கீசிய போதகர்கள் துன்புறுத்தியதையும் அடக்குமுறைக்கு ஆளாக்கியதையும் பற்றிப் போப்பாண்டவரிடம் புகார் செய்வதற்காகத், தோமா கத்தனார் கப்பலேறிப் போன கதை அது. கழுதை மேலேறிக் கொல்லம், குளச்சல் தாண்டித், தமிழ்நாட்டின் கிழக்குக் கடற்கரை வழியே, பாண்டிச்சேரியில் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்கும் நடக்கும் உக்கிரமான யுத்தத்துக்கு நடுவில் சென்னை சென்று ஆசாமி கப்பலேறினார். ஏறத்தாழ ஒன்றரை வருடத்தில் லிஸ்பன் துறைமுகத்தை அடைந்தார். அங்கிருந்து குதிரையேறியும் படகேறியும் ரோமை அடைந்தார். போப்பாண்டவரின் ராஜ ஆடம்பரத்தையும் அகங்காரத்தையும் பார்த்து, இன்றைய கத்தோலிக்க புரோகிதர் எவரும் வெளிப்படையாகச் சொல்லத் துணியாத ஓர் அபிப்பிராயத்தைக் கத்தனார் பதிவு செய்திருக்கிறார்: 'இத்தனை மட்டரகமான மனிதனா சபையின் தலைவனென்றும் யேசுவின் பிரதிநிதியென்றும் நாம் போற்றுகிற போப்பாண்டவர்?'

இன்று நடைமுறையிலுள்ள மலையாள எழுத்துகளின் முதல் வடிவம் ஐரோப்பாவில் கல் அச்சில் உருவாக்கப்பட்டது; மலையாள பைபிள் அச்சிடுவதற்காக அது அங்கிருந்து கொச்சி வந்துசேர்ந்தது. அப்போதெல்லாம் மொழியின் தந்தையான (பாஷா பிதா) எழுத்தச்சனின் மலையாள இராமாயணமும் மலையாள மகாபாரதமும் தறவாடுகளில் ஓலைச்சுவடிகளிலேயே முடங்கிக்கிடந்தன. மொழியின் தந்தை என்று எழுத்தச்சனைச் சொன்னாலும் அவர் மலையாளக் கவிதையின் தந்தை மட்டுமே. வாழும் மொழியாக மலையாளத்தை இன்றும் நிலைநிறுத்தும் உரைநடையின் பிறப்பில் அவருக்குப் பங்கில்லை. உரைநடைக்குத் தகப்பன்மார் ஏராளம் என்பதே உண்மை. கில்லாடியான கள்ளச் சந்ததியினர் வேண்டுமென்றால் அச்சு மை புரண்ட காகிதத்தில்தான் அதன் பிறப்பு என்றும் சொல்லிக்கொள்ளலாம். தகப்பன் ஸ்தானத்தில் அணிவகுத்து நிற்பவர்கள் சுதேசிகளும் அதைவிட அதிகம் விதேசிகளும். சுருக்கமாகச் சொன்னால் உரைநடை நவீனத்துவத்தின் குழந்தை. அதற்கு ஆரம்பம் முதலே ஒரு காஸ்மோபாலிடன் இயல்பு உருவாகியிருந்திருக்கிறது. ஆனால் ஒரு துர்ப்பாக்கியம் நிகழ்ந்தது.




படிப்பகம்

www.padippakam.com



இருபதாம் நூற்றாண்டின் முதல் பதிற்றாண்டுகளில்தான் அச்சாக்கம் மலையாளத்தில் பிரபலமானது. அப்படியாக மலையாளத்தில் 'இலக்கியம்' பிறந்தது. ஓலைச் சுவடிகளிலிருந்து வெளியேறிக் காகிதத்தின் வெகுமக்கள் தன்மைக்குள் புகுந்ததோடு 'இலக்கியம்' எல்லோருக்கும் கைக்கெட்டும் ஒன்றாயிற்று. ஆனால் சாதியமைப்பின் பலத்தில் சமஸ்கிருத நிபுணர்களான உயர்வகுப்பினர் தமது பிடியை இறுக்கினர். கவிதையே 'மகத்தான' இலக்கியமாயிற்று. 'உரை நடை' சூத்திரனாயிற்று. அப்போது உரைநடை என்ன செய்தது? மகத்துவம் கைவரப் பெறுவதற்காகக் கவிதையின் ஒப்பனைகளை அணிந்துகொள்ளத் தொடங்கியது. அப்படியாக இருபதாம் நூற்றாண்டு மலையாள உரைநடைக்குப் பைத்தியம் பிடிக்கத் தொடங்கியது. பெண்வேஷம் கட்டி ஆடுகிற ஆணைப்போல அது ஆனது. நல்ல உரை நடை என்றால் கவிதை 'போல' இருக்க வேண்டும் என்ற நிலை ஏற்பட்டது. தமிழ் வாசகர்கள் நம்புவார்களா என்று தெரியவில்லை! இந்த 2004ஆம் ஆண்டிலும் உரைநடை நூல்களுக்கு விமர்சகர்கள் எழுதும் மிக உயர்ந்த பாராட்டுகளில் ஒன்று, "மொழி கவித்துவமானது" என்பதே. இந்த இரண்டும்கெட்டான் உரைநடைக்குத்தான் மலையாளத்தில் இன்றும் கூடுதல் மரியாதை. கவிதையின் வழக்கமான உவமைகள், அடைமொழிகள், அலங்கார வார்த்தைகள், உயர்வு நவிற்சி, உணர்ச்சிக் கொந்தளிப்பு இவை எல்லாம் கலந்து திகட்டுகிற இனிப்புப் பாயாசத்தைத்தான் மலையாள உரைநடை என்ற பெயரில் பின்நவீனத்துவவாதிகள் என்று சொல்லப்படுபவர்கள்கூட எழுதிக் கொண்டிருக்கிறார்கள்.

கவிதையின் முந்தானையைப் பிடித்துத் தொங்கிக்கொண்டிருந்ததால் உரைநடை வளர முடியவில்லை. அது மரபுசார்ந்த கவிதையின் குறுகிய உணர்வுகளிலும் அனுபவப் பிரதேசங்களிலும் கிடந்து உழன்றது. அறிவும் சிந்தனையும் சார்ந்த, தேடல் சார்ந்த ஒரு துறையை உருவாக்க முடியாமல் போயிற்று. அறிவும் சிந்தனையும் தத்துவமும் தேவைப்படுபவர்களின் வாசிப்பு ஆங்கிலத்துக்குக் குடியேறியது. கேரளத்திலுள்ள பெரும் பதிப்பாளர்களின் புத்தக வெளியீட்டுப் பட்டியலை எடுத்துப் பாருங்கள். நூறு பக்கமிருந்தால் அதில் 95 பக்கமும் நாவல், கதை, கவிதை போன்ற இலக்கிய சமாச்சாரங்களே நிறைந்திருக்கும். மிச்சமிருக்கிற 5 பக்கங்களில்தான் சரித்திரம், தத்துவம், அறிவியல் சிந்தனை எல்லாமும். மலையாளிகளுக்கு எழுத்தறிவு உண்டு; கல்வியறிவு கிடையாது என்பது இதனால்தான். எந்தச் சமூகமாவது இலக்கியத்தால் மட்டும் கஞ்சி குடிப்பதாகக் கேட்டதுண்டா? மலையாளிக்குக் கஞ்சி இல்லாமல் போனதன் முக்கியக் காரணங்களில் ஒன்று மொழியை இலக்கியத்தின் கவர்ச்சியான வாக்குறுதிகளில் சிக்க



வைத்ததுதான். அதன் மூலம் வேறு வேலைகள் எதையும் செய்யவிடவில்லை. மலையாளத்தில் 'அறிவு ஜீவி' என்றால் கவிதையும் நாவலும் கதையும் வாசிப்பவன், எழுதுபவன் என்றே பொருள். அறிவு, யுக்தி, சிந்தனை, ஆய்வு, தேடல், விசாரணை எல்லாவற்றையும் அவன் கதையிலும் கவிதையிலும் ஒதுக்கிவிடுவான். ஒரு கருணாகரனும் ஆண்டனியும் காலாவதியான ஸ்டாலினிசமும் அமிர்தானந்தமயியின் வெற்றுச் சர்க்கரை வார்த்தைகளும் மலையாளிகளைப் பந்தாட முடிவதன் காரணமும் இவைதான். நர்சரியில் சேருகிற மூன்றரை வயது மலையாளிக் குழந்தை 'அ ... ஆ ... இ ... ஈ' என்று கற்றுக்கொள்வதற்குப் பதில் 'ஏ ... பி ... சி ... டி' என்று படிப்பதும் இதனால்தான்.

அப்படியானால் மலையாளத்தால் கஞ்சி குடிப்பவர்கள் யாருமில்லையா? இருக்கிறார்கள். சிலர் இருக்கிறார்கள். 1. மலையாள ஆசிரியர்கள், 2. எழுத்தாளர்கள், 3. ஊடக உரிமையாளர்களும் ஊடகப் பணியாளர்களும். 4. அரசியல்வாதிகள், 5. மதங்கள்.

ஆசிரியர்களுக்குச் சம்பளம் கிடைக்கிறது. அவர்களில் பெரும்பான்மையோர் இயந்திரத்தனமாக மொழியைக் கற்பித்துப் பொறுப்பைத் தீர்க்கிறார்கள். எழுதிப் பிழைப்பது எளிதல்ல. எனினும் மலையாள எழுத்தாளர்களின் வாழ்க்கை சுபிட்சம்தான். ஊடக முதலாளிகள்தான் இன்று கேரளத்தில் பெரும் தனியுடைமையாளர்கள். ஊடகப் பணியாளர்கள் சம்பளம் மட்டுமல்ல; ஏராளமான சலுகைகளும் பெறுகிறார்கள். ஹிந்து, கிறித்தவ, இசுலாமிய மதங்களும் அவற்றின் சூழலில் வேரோடும் வெவ்வேறு ஆன்மீக இயக்கங்களும் குருக்களும் மலையாளத்தால் பிழைப்பவர்கள். இசுலாமில் அரபு மொழியும் இந்து மதத்தில் சமஸ்கிருதமும் பயன்படுத்தப்படுகின்றன. ஆனாலும் விசுவாசிகளைப் பிடித்துக்கட்ட மலையாளக் கயிறு வேண்டும்.

மலையாளம் மூலம் சாம்ராஜ்ஜியங்களையே வென்றெடுப்பது அரசியல்வாதிகள்தான். அவர்களைவிட வாழ்க்கை வெற்றிகளுக்காக மலையாள மொழியைப் பயன்படுத்துபவர்கள் வேறு எவருமில்லை. அவர்களுடைய நல்ல பகுதியையும் சொல்ல வேண்டுமில்லையா! என்னுடைய அபிப்பிராயத்தில், கேரளத்தில் மிகக் காரியார்த்தமாகவும் எளிமையாகவும் பயன்பாட்டு நோக்கிலும் மலையாளத்தைப் பயன்படுத்துபவர்கள் அரசியல்வாதிகள் மட்டுமே. அவர்கள் சொல்வதெல்லாம் பச்சைப் புளுகுகளாக இருக்கலாம். ஆனால் அதைச் சரியாகச் சொல்ல அவர்களுக்குத் தெரியும். கேரளத்தில் அதிகாரத்தின் உண்மையான மொழி மலையாளம்தான் என்று அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆங்கிலத்தில் பேசி கேரளத்தில் ஒரு தேர்தலில் வெற்றி பெற முடியுமா? (இரண்டு மூன்று

படிப்பகம்

www.padippakam.com



பேர் அப்படியும் செய்ததுண்டு. வி.கே. கிருஷ்ணமேனோன், மலபாரில் முஸ்லிம் லீக் நாடாளு மன்ற வேட்பாளர்களாகப் போட்டி யிட்டு தொடர்ந்து வெற்றி பெற்ற மகாராஷ்டிர மாநிலத்தைச் சேர்ந்த இப்ராஹிம் சுலைமான் சேட், ஜிஎம். பனாத்வாலா போன்றவர்கள். இதில் கடைசி இருவரும் வேட்பு மனு தாக்கல் செய்ய மட்டுமே தொகுதிக்கு வந்திருந்தார்களாம். சொற்பொழிவிலோ வேறு நடவடிக் கைகளிலோ ஈடுபட்டு மெனக் கெட்டதில்லை) மலையாளிகளிடம் மலையாளத்தில் பேசினால் மட்டுமே அவர்களை அதிகாரம் செய்ய முடியும். மலையாளமே கேரளத்தில் அதிகார சாம்ராஜ்ஜியத் தின் திறவுகோல். அரசியல்வாதிகள் அதன் பாதுகாவலர்கள்.

அப்படியானால் ஆங்கில மீடியம் பள்ளிகள் எதற்கு என்று கேட்கலாம்! அவற்றின் நோக்கம் மலையாளிகள் கேரளத்திலிருந்து ஏற்றுமதியாவதற்கான பாஸ்போர்ட் தயார் செய்வதே. ஐம்பத்தைந்து வருடங்களாக அரசியல்வாதிகள் இங்கே உருவாக்கி வைத்திருக்கும் வேலையில்லா நரகத்திலிருந்து வெளியேற ஆங்கிலம்தான் அவர் களது பாஸ்போர்ட். தவிர இந்தியா வின் நகர்ப்புற மத்திய வர்க்கம், உயர் மத்திய வர்க்கங்களின் அதிகாரத் தட்டுகளில் பங்கேற்க ஆங்கிலம் அவசியம்.

இங்கிலீஷ் மீடியம் பிள்ளை களிடமிருந்துதான் ஐ.ஏ.எஸ். காரர் கள் வருகிறார்கள். இந்திய மத்திய வர்க்கம் சொர்க்கத்துக்குச் சமமாகக் கருதுகிற ஒரு பதவி - ஐ.ஏ.எஸ். அவர்கள் கேரளத்துக்குத் திரும்ப வரும்போதுதான் விஷயங்கள் விநோதமாகின்றன. ஆங்கில மேலாதிக்கம் குப்புறக் கவிழ்கிறது. இரண்டு வார்த்தை பொட்டை இங்கிலீஷைவிட்டால் மீதி மலை யாளம் மட்டுமே தெரிந்த, எட்டாம் வகுப்பும் குஸ்தியும் கற்று வைத் திருக்கிற அரசியல்வாதியின் தாசானுதாசனாக ஐ.ஏ.எஸ். சொர்க்கவாசி மாறிவிடுகிறான். நாட்டு மொழியின் மாயாஜாலம் இது. மலையாளம் செத்துப்போகுமா என்று கேட்பவர்களிடம் நான் சொல்லும் பதில் இதுதான்: கேரளத்தில் அரசியல் இருக்கும் காலம்வரை மலையாளம் சாகாது.

விநோதமான இன்னொரு பக்கமும் இருக்கிறது. மலையாளமே ஆட்சி மொழி என்பது நியதி. ஆனால், முக்காற்பங்கு அரசுப் பணிகள் நடைபெறுவது ஆங்கிலத் தில்தான். அதிகாரிகளிடமிருக்கிறது இதன் இரகசியம். ஒருபக்கம், இங்கிலீஷைக் காட்டித்தான் அவர்கள் மந்திரிகளை விரட்டு கிறார்கள். மறுபக்கம், சாதாரண மக்களை ஏமாற்றவும் சிரமப் படுத்தவும் அவர்கள் இங்கிலீ ஷையே பயன்படுத்துகிறார்கள். அப்படியாக, அதிகாரிகள் ஆங்கிலத்தை உபயோகித்துத் தங்களது காட்டாட்சி, ஊழல், பொறுப்பின்மையின் சாம்ராஜ்ஜி யத்தைப் பாதுகாக்கிறார்கள். எல்லாம் வெளியே சொல்லக்கூடிய இரகசியங்களல்ல. எனினும், நாம் அண்டை வீட்டுக்காரர்களாயிற்றே, பரவாயில்லை.

*தமிழில்:* சுகுமாரன்


# தத்துவப் பேராசிரியர் டாக்டர் க. நாராயணன் எழுதிய நூல்கள்

1. **அரசியல் சிற்பிகள்** (பக். 488) விலை ரூ. 200/–
உலக வரலாற்றுப் பின்னணியில் அரசியல் கோட்பாடுகளை நிரல்படக் கூறுகிறது. பழங்காலம் முதல் அண்மைக்காலம்வரை உலகின் தலைசிறந்த அரசியல் சிந்தனையாளர்களின் எண்ணங்களை இயம்புகிறது.
2. **சித்தர் சிவவாக்கியர்** (பக். 208) விலை ரூ. 90/–
சித்தர்களை அடையாளம் காண ஓர் இலக்கண வரையரையைத் தேட முற்படுகிறது. சிவவாக்கியரின் வாழ்க்கைக் குறிப்பையும் கால்சச் சூழலையும் தொகுத்துத் தருகிறது.
3. **தமிழர் அறிவுக் கோட்பாடு** (தமிழக அரசின் முதற்பரிசு) (பக். 112) விலை ரூ. 50/–
தமிழ் இலக்கியங்களில் பயின்றுவரும் சொற்கள், சொற்றொடர்கட்குப் புதிய கோணத்தில் விளக்கங்கள்.
4. **சித்தர் தத்துவம்** (தமிழக அரசின் முதற்பரிசு) (பக். 232) விலை ரூ. 100/–
சித்தர் பாடல்கட்குத் தத்துவ விளக்கம், சித்தர் யார் என்பதற்கான ஓர் இலக்கணம்; சித்தர்களின் ஆன்மீக நெறி. தாவோக்கள், சூஃபிகள் போன்ற பிற நாட்டுச் சித்தர்கள் பற்றிய அரிய விளக்கங்கள்.
5. **மேலை நாட்டு மெய்ப்பொருள்** (சேலம் அறக்கட்டளை முதற்பரிசு) (பக். 320) விலை ரூ. 120/–
சாக்கரடீசு முதல் சார்த்தர் வரையிலான தத்துவ அறிஞர்களின் வாழ்க்கைக் குறிப்பு, காலச்சூழல், தத்துவ விளக்கங்களைத் தெளிவாகக் கூறுகிறது.
6. **ஆய்வு எது? ஏன்? எப்படி?** (பல்கலைக்கழகப் பாட நூல்) (பக். 206) விலை ரூ. 60/–
அனைத்துத் துறைகட்கும் பொருந்தும் பொதுவான ஆய்வு நெறிகளின் அடிப்படைகளை அழகுத் தமிழில் தருகின்றது. ஆய்வின் இலக்கணம், இயல்பு, வகை, ஆய்வேடு அமைத்தல் போன்றவற்றைப் பற்றிய விளக்க நூல்.

**நூல்கள் விற்பனை உரிமை:**

**புஸ்தக் மந்திர்** (புத்தக விற்பனையகம்)

66, ஸ்ரீ அரவிந்தர் வீதி (மாடி), காந்தி வீதி சந்திப்பு, புதுச்சேரி–605 001. செல்: 3151558

விளம்பரம்




படிப்பகம்

www.padippakam.com

# இலங்கை: மரணமும் வாழ்வும்

## இலங்கை இனப் பிரச்சினையின் இன்றைய நிலையும் இந்தியாவின் பங்கும்

எஸ். கே. விக்னேஸ்வரன்

கிழக்கு மாகாணப் பத்திரிகையாளர் ஐயாத்துரை நடேசன் நடுத்தெருவில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் இலங்கை ஊடகவியலாளர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சி அலைகளைத் தோற்று வித்துள்ளது. அவரது படுகொலையைக் கண்டித்து நாடளாவிய ரீதியில் பரவலாக ஊடகவியலாளர் அமைப்புகளால் எதிர்ப்புக் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

ஆயினும் தமிழீழ விடுதலைப் புலிகளின் வன்னித் தலைமையின் கருத்துகளுக்கு ஆதரவாக இருந்தவரான பத்திரிகையாளர் நடேசன் அவர்களின் படுகொலை நடைபெற்றபோது அவருக்கு உதவவோ அவரை வைத்தியச் சாலைக்கு இட்டுச் செல்லவோ உடனடியாக யாரும் முன்வர வில்லை. ஒருவகை அச்சம் உறைந்த சூழ்நிலை அந்த வீதியில் நிலவியது.

புலிகளின் ஆதரவாளர்கள் தொடர்பாக மட்டக்களப்பில் ஏற்பட்டுவருகின்ற மாற்றம் என்ன என்பதைத் தெளிவு படுத்துகின்ற இரண்டாம் சம்பவமாக இது அமைந்துள் ளது. ஏற்கெனவே கிழக்குப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கலாநிதி கு. தம்பையா அவர்களும் வன்னிப் புலிகளுக்குச் சார்பானவர் என்ற காரணத்திற்காகப் படுகொலை செய்யப்பட்டமை தெரிந்ததே.



சுட்டுக்கொல்லப்பட்ட பத்திரிகையாளர் ஐயாத்துரை நடேசனின் இறுதிச் சடங்கு

கிழக்கில், குறிப்பாக மட்டக்களப்பில், வன்னிப் புலிகளுக்குச் சார்பானவர்களைக் களையெடுக்கும் முயற்சி தொடங்கிவிட்டது என்பதை இக்கொலைகள் தெளிவுபடுத்துகின்றன. கொழும்பில் நடைபெற்ற நடேசன் அவர்களின் கொலைக்கெதிரான கண்டனக் கூட்டத்தில் பங்குபெற வந்திருந்த கிழக்கைச் சேர்ந்த பத்திரிகை யாளர்கள் கிழக்கு நோக்கித் திரும்பத் தயங்குவதும் அங்குள்ள சூழல் அச்சம் தருவதாக உள்ளது என்று அபிப்பிராயப்படுவதும் நிலைமையின் பாரதூரத் தன்மையைத் தெளிவாக இனங்காட்டுகின்றன. இவ்விரு படுகொலைகளும் புலிகளின் வன்னித் தலைமைக்குச் சார்பாகச் செயற்படுபவர்களை எச்சரிக்கும் நோக்குடன் செய்யப்பட்டவை மட்டுமல்ல, வன்னித் தலைமையின் கருத்துகட்குக் கிழக்கில் எந்த இடமும் இல்லாமல் செய்யும் நோக்கத்தையும் உள்ளடக்கியவை என்பது தெளிவு. மட்டக்களப்பில் புலிகளின் முன்னாள் தளபதி கருணாவின் அணியினர் இன்னமும் நகரில் அச்சுறுத்தும் விதத்தில் நடமாடுவதும் பத்திரிகையாளர்கள், அரசியல் வாதிகள், புத்திஜீவிகளுக்கு அச்சுறுத்தலாக இருப்பதும் பகிரங்கமாகப் பேசப்படாத உண்மைகளாக உள்ளன.

புலிகளின் வன்னித் தலைமை, மட்டக்களப்பைத் தமது கட்டுப்பாட்டுக்குக் கீழ்க் கொண்டுவந்துவிட்ட தாகக் குறிப்பிடுகின்றபோதும் நடைமுறையில் அவர்களுக்கு ஆதரவான செயற்பாடு களைச் செய்ய முடியாமல் இருப்பதையும் முன்னின்று செய்யக்கூடிய நபர்கள் பின் வாங்குவதையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அந்த வகையில் மட்டக்களப்பில் புலிகளின் ஆதிக்கத்தைப் பலவீனப்படுத்தி, இல்லாமல் ஆக்கும் இலங்கை அரசாங் கத்தின் நோக்கம் கணிசமான அளவு வெற்றி பெற்றிருக் கிறது என்றே சொல்ல வேண்டும்.

பத்திரிகையாளர் நடேசனின் படுகொலை மிகவும் மோசமான கண்டனத்துக்குரிய மன்னிக்க முடியாத செயல் என்பதில் யாருக்கும் வேறு கருத்து இருக்க முடியாது.

❑

புலிகள் அமைப்பில் ஏற்பட்ட கருணா தலைமை யிலான பிளவை அவர்கள் ஆரம்பத்தில் கையாண்ட விதமும் கிட்டத்தட்ட இதே மாதிரியான தன்மை யையே கொண்டிருந்தது. பேராசிரியர் திருச்செல்வம், அரச அதிபர் மோனகுருசாமி ஆகியோர் மீதான சூட்டுச் சம்பவங்கள் கருணா சார்பு அரசியல் கருத்து

www.padippakam.com



களை 'அடக்கம்' பண்ணும் நோக்குடன் செய்யப்பட்டவை என்பதை ஊகிக்க அதிக அனுபவம் தேவையில்லை.

தமிழ் ஊடகங்கள் இந்தப் பிளவு சம்மந்தமான அறிக்கையிடலின்போது நடந்துகொண்ட முறையானது வழமையான பக்கச்சார்புத்தன்மை கொண்டதாகவே அமைந்திருந்தது. கருணாவின் அணியினரால் சுட்டிக் காட்டப்பட்ட பிரதேச அரசியல் சார்ந்த பிரச்சினைகளின் முக்கியத்துவம் கணக்கெடுக்கப்படாமலேயே அவரது தனிப்பட்ட நடத்தைகள் அம்பலப்படுத்தப்பட்டன. அவரது அணிக்கு ஆதரவாக இருந்து செயற்பட்டவர்களது வாய்கள் மௌனமாக்கப்பட்டன. தமிழ் ஊடகங்கள் இந்தக் குரல்வளை நசுக்கலை இட்டுப் பாராமுகமாக நடந்துகொண்டன. இன்று இலங்கை அரசினது படைகளின் பக்கபலத்துடன் கருணா அணியினர் அதே முறையில் செயற்படத் தொடங்கிய பின் இவ்வூடகங்கள் மிகவும் தீவிரமாக எதிர்ப்புத் தெரிவித்துவருகின்றன.

இந்த இரட்டைத்தன்மை, ஊடகங்கள் மத்தியில் தொடர்ச்சியாக இருந்துவரும் ஒரு போக்காக உள்ளது. இவர்கள் புலிகளுக்கு ஆதரவாக இருந்துவருவதாகக் காட்டிக்கொள்வது உண்மையில் தமிழ்த் தேசியம் மீதான பற்றினாலோ விடுதலைப் புலிகள் என்ற அமைப்பின் மீதான அக்கறையினாலோ அல்ல. மாறாக, தமது தொழில் இலாபம் கருதியே என்பதை அவதானமாகக் கவனிப்பவர்களால் இலகுவாக அடையாளம் கண்டுகொள்ள முடியும். உண்மையில் வன்னித் தலைமை பலம்பெற்றதற்குப் பதிலாகக் கருணா அணியினர் பலம் பெற்றவர்களாக மாறி இருந்தால் இவ்வூடகங்கள் இன்று அவர்கள் கொண்டுள்ள நிலைப்பாட்டுக்கு எதிரான நிலைக்குப் போயிருக்க மாட்டார்கள் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

❑

இப்போது இந்திய அரசாங்கத்தில் ஏற்பட்ட மாற்றத்தை அடுத்து இலங்கைத் தமிழ் ஊடகங்கள் மற்றும் புத்திஜீவிகள் மத்தியில் புதிய போக்கு ஒன்று உருவாகியுள்ளது. அண்மைக்காலம்வரை இந்தியாவைத் தீவிரமாக விமர்சித்துவந்த பலருடைய பேனாக்கள் தற்போது இந்தியாச் சார்பாக எழுதத் தொடங்கியுள்ளன.

டிக்சிற் அவர்கள் தேசியப் பாதுகாப்பு ஆலோசகராக நியமிக்கப்பட்டதும் புதிய அரசாங்கம் இலங்கை தொடர்பாகத் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருப்பதும் அவர்களுக்குப் புதிய நம்பிக்கைகளைக் கொடுத்துள்ளது. இதன் காரணமாக இவர்கள் இந்திய அரசாங்கம் இலங்கையின் இனப் பிரச்சினையில் தமிழர்களுக்குச் சாதகமாக நடந்துகொள்ளும் என்ற நம்பிக்கையைத் திரும்பவும் மக்கள் மத்தியில் விதைக்கவும் புலிகள்மீது செல்வாக்குச் செலுத்தும் விதத்தில் இக்கருத்தைப் பேசவும் தொடங்கியுள்ளனர்.

**மதச் சிறுபான்மையினர் என்ற பதத்தின் கீழ் முஸ்லிம் பிரச்சினையைக் கையாள விரும்பினால் அது மிகவும் வருத்தத்துக்குரிய விதத்தில் இரத்தம் சிந்தலையும் தோல்வியையுமே தரும். இலங்கை வாழ் முஸ்லிம்களது பிரச்சினை, மொழி சார்ந்ததோ, மதம் சார்ந்ததோ அல்ல. அது இனம் சார்ந்தது.**

கடந்த வாரம் கொழும்பிலிருந்து வரும் ஒரு தமிழ்த் தினசரியின் ஞாயிறு இதழில் வெளியான கட்டுரை ஒன்று தமிழ் ஊடகவியலாளர்கள் கூறும் புத்திஜீவிகள் மட்டத்தில் ஏற்பட்டுள்ள மனோநிலை மாற்றத்தைத் தெளிவாக இனங்காட்டுவதாக அமைந்துள்ளது.

இந்தியாவில் பதவிக்கு வந்துள்ள புதிய ஐக்கிய முற்போக்கு அணி ஈழப் பிரச்சினையில் 'ஆக்கப்பார்வை' யுள்ள அணுகுமுறையைக் கடைப்பிடிக்கப்போகிறது என்று இக்கட்டுரை சிலாகிக்கிறது.

இந்தியாவின் புதிய அரசாங்கம் தயாரித்திருக்கும் குறைந்தபட்சத் தொழிற்பாட்டுக்கான நிகழ்ச்சி நிரலில் இலங்கை பற்றிய "ஐயம் திரிபுகட்கு இடம் கொடாத ஒரு தனி வாசகம்" காணப்பட்டதாக அக்கட்டுரை சுட்டிக்காட்டுகிறது. அவ்வாசகம் இதுதான்:

"ஐக்கிய முற்போக்கு அணி இலங்கையில் தமிழர்களின் சட்டபூர்வ உரிமைகளுக்கும் மதச் சிறுபான்மையினர் உரிமைகட்கும் இடமளிக்கும் விதத்தில் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு ஆதரவளிக்கும்."

இந்த வாசகத்தில் உள்ள 'ஐயம் திரிபுகட்கு இடம் கொடாத' புதிய வாசகம் என்ன என்பதைக் கட்டுரையாளர் விளக்கியுள்ள விதம், ஈழத் தமிழர்கள் இந்தியாவில் முற்று முழுதாக நம்பிக்கைவைத்து, அதன் அனுசரணையுடன் தீர்வைப் பெற்றுக்கொள்ளலாம் என்று போதிப்பதாக அமைந்துள்ளது. இவ்வாசகத்தில் உள்ள 'சட்டபூர்வ உரிமைகள்' மற்றும் 'மதச் சிறுபான்மையினர்' என்ற பதங்கள் முன்னொருபோதும் பேசப்படாத புதிய விடபங்கள் என்று அக்கட்டுரை சிலாகிக்கிறது. இன்னும் ஒருபடி மேலேபோய் அது, 'மதச் சிறுபான்மையினர்' பற்றிப் பிரஸ்தாபித்திருப்பது இந்திய அரசியல், ஹிந்துத்துவப் பிடியிலிருந்து விடுபட்டுவிட்டதைக் காட்டுகிறது என்றும் கூறுகிறது. இந்த மாற்றம் இந்திரா காலத்துக் கொள்கையை நோக்கிச் செல்வதாகக் கூறிக் கட்டுரையாளர் புளகாங்கிதம் அடைந்துள்ளார். புலிகளும் தமிழ் மக்களும் எப்படி இந்தியாவுக்கு எதிராகச் செயற்படமாட்டோம் என்றும் இந்தியாவின் நலன்களுக்கு நாம் எதிரானவர்கள் அல்ல என்றும் வலியுறுத்தும் விதத்தில் சொல்லவும் செய்யவும் வேண்டும் என்றும் கட்டுரை போதிக்கின்றது.

இந்தக் கட்டுரை ஓர் உதாரணம் மட்டுமே. இந்தக் கருத்துதான் இன்று பரவலாக அனைத்துத் தமிழ் ஊடகங்களிலும் அரசியல்வாதிகள் மத்தியிலும் அடிநாதமாக நிலவிவருகிறது.


இலங்கையில் இனப் பிரச்சினையை இந்திய அரசு கையாண்ட விதம் தொடர்பாக எந்த விமர்சனமும் இன்றி, புதிய



படிப்பகம்

www.padippakam.com

அரசாங்கத்தின் ஓரிரு வார்த்தை மாற்றங்களை மட்டும் வைத்துக்கொண்டு, அது முற்றாகவே மாறிவிட்டது என்ற அடிப்படையில் பேசுவதை வெறும் கண்மூடித் தனமான ஒரு செயல் என்று ஒதுக்கிவிட முடியாது. அது இந்திய அரசு தொடர்பான நல்லபிப்பிராயத்தை உருவாக்கும் திட்டமிட்ட முயற்சியின் ஓர் அம்சம் என்றும் உயர் ஸ்தானிகர் நிருபம் சென் அவர்களது இடையறாத முயற்சிக்குக் கிடைத்துள்ள ஒரு வெற்றி என்றுமே சொல்ல வேண்டும். இலங்கைத் தமிழ் அரசியல்வாதிகள், புத்திஜீவிகளின் விலைபோகும் இயல்பு அவரது வெற்றியை இலகுவாக்கிவிட்டிருக்கிறது. நிருபம் சென் அவர்களின் தொடர்ச்சியான இலங்கைத் தமிழ் ஊடகங்கள் மீதான விமர்சனமும் அணுகுமுறையும் அவரது நோக்கில் அவரை வெற்றிபெறச் செய்துள்ளன.



கிழக்கு மாகாணத்தில் நடத்த வன்முறைக்குப்பின்

இதில் வேடிக்கை என்னவென்றால், "சர்வதேசப் பிரகடனங்களில் வார்த்தைகளுக்கு மட்டுமல்ல நிறுத்தக் குறிகளுக்கும்கூட அர்த்தமும் உள்ளர்த்தமும் உண்டு" என்று குறிப்பிடும் மேற்படி கட்டுரையாளர், தான் மேற்கோள்காட்டிய வாசகத்திற்கு முதலில் இருந்த 'இலங்கையின் இறையாண்மை மீறும் ஆட்புல ஒருமைப் பாட்டுக்குக் குந்தகமில்லாத விதத்தில்' இந்திய அரசு செயற்படும் என்ற வாசகத்தை வசதியாக மறந்து விட்டார். மறந்துவிட்டது மட்டுமல்லாமல், தான் விரும்பியபடி வார்த்தைகட்குப் புதிய அர்த்தங்களைக் கற்பிக்கவும் முற்பட்டுள்ளார்.

உண்மையில், இந்திய அரசு இலங்கையின் இனப் பிரச்சினை தொடர்பாக வைத்துள்ள அணுகுமுறையில் 'ஐயம் திரிபுகட்கு அப்பாற்பட்ட விதத்தில்' தெரியும் உண்மை என்னவென்றால் அதன் அணுகுமுறையில் எந்தப் புதிய மாற்றமும் அடிப்படையாக ஏற்படவில்லை என்பதுதான். இலங்கையின் இறைமை மீறும் ஆட்புல ஒருமைபாட்டுக்குக் குந்தகம் ஏற்படாத விதத்தில் ஒரு தீர்வைக் காண்பதற்கான முயற்சியில் 'தமிழர்களின் சட்டபூர்வ உரிமைகள்' என்ற பதத்திற்கு என்ன அர்த்தம் இருக்க முடியும்? எந்தச் சட்டத்தின் கீழான 'சட்டபூர்வ உரிமைகள்' அவை?

ஒற்றை ஆட்சி முறையின் கீழ்த் தமிழ்த் தேசியத்தின் பிரச்சினைக்கு ஒரு நியாயபூர்வமான தீர்வைக் காண முடியாது என்பது திரும்பத் திரும்ப மெய்ப்பிக்கப் பட்டுள்ளது. இந்திய அரசின் முயற்சியால் கொண்டு வரப்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்தமும் இதன் நடைமுறை வடிவமாக வந்த மாகாணசபைகள் திருத்தச் சட்டமும்கூட எந்தவிதமான பலனையும் அளிக்கவில்லை. அது கடந்த பதினான்கு ஆண்டு காலமாகக் கிடப்பில் போடப்பட்டுக் கிடக்கிறது என்பது யாவரும் அறிந்ததே. அரச பாதுகாப்பு ஆலோசகராக நியமிக்கப்பட்ட டிக்ஸிற் அவர்கள் சமஷ்டி முறையிலான தீர்வு பற்றி வலியுறுத்தி இருப்பதை மிகவும் புளகாங்கிதத்துடன் மீள ஒப்பிக்கும் எமது பத்திரிகையாளர்கள், சமஷ்டி என்ற சொல்லில் தீர்வு அடங்கிவிடாது; அது எமது நாட்டு அரசியல் நிலைமைக்கு ஏற்ற விதத்திலான அதிகாரப் பகிர்வை உள்ளடக்கியதாக அமையும்போதே அதற்கு அர்த்தம் கிடைக்கிறது என் பதையும் மறந்துவிடுகிறார்கள்.

❑

இலங்கைப் பிரச்சினையில் கால் வைத்ததை அடுத்துப் பல கசப்பான அனுபவங்கள் இந்திய அரசுக்கு ஏற்பட்டிருக்கின்றன. அது தமது பிராந்தியப் பாதுகாப்பில் கவனமாக இருப்பது குறித்து யாரும் கேள்வி எழுப்பவில்லை. ஆனால் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கான தீர்வினைக் குழம்பிய குட்டையில் மீன் பிடிப்பதுபோலத் தமது நலன்களுக்கு வாய்ப்பாகப் பயன்படுத்த முயல்வதும் அதற்கேற்ற விதத்தில் தமிழர்களை அடங்கிப்போகுமாறு சொல்வதும் எந்த விதத்திலும் ஏற்கக்கூடிய ஒன்றல்ல. இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் இந்திய அரசு இனப் பிரச்சினையைப் பயன்படுத்தி இலங்கை அரசாங்கத்தைத் தனக்கு ஒத்துப்போகச் செய்ததும் தனக்குச் சாதகமான பேரங்களை நடத்திக்கொண்டதும் இதற்குப் பிரதியுபகாரமாகத் தமிழ் மக்களுக்கு, இலங்கை அரசு விரும்பிய அற்ப அதிகாரங்களை வழங்கிக் கண்துடைப்புச் செய்ததுடன் அவற்றை ஏற்குமாறு ஆயுத முனையில் நிர்ப்பந்தித்ததும் தெரிந்ததே. இந்திய அரசு பெரும் கசப்பான அனுபவங்களைப் பெறக் காரணமாக அமைந்தது அதன் முற்றுமுழுதான சுயநல நோக்கிலான செயற்பாடே.

இலங்கையில் நிலவும் இன முரண்பாடு தொடர்பான துல்லியமான கணிப்பீடோ வரலாறு பற்றிய அக்கறையான பரிசீலனையோ மக்களது மனோநிலை தொடர்பான புரிதலோ இல்லாமல் ராஜீவ் தலைமையிலான அரசு மேற்கொண்ட முடிவு பாரிய பின்விளைவுகளுக்கு இட்டுச்சென்றது. இன்று சிலாகிக்கப்படும் புதிய நிகழ்ச்சி நிரல்கூட இந்த விடயத்தில் பூரணப் புரிதலுடன் தயாரிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. குறிப்பாக மதச் சிறுபான்மையினர் என்ற பதத்தின் கீழ் முஸ்லிம் பிரச்சினையைக் கையாள விரும்பினால் அது மிகவும் வருத்தத்துக்குரிய விதத்தில் இரத்தம் சிந்தலையும் தோல்வியையுமே தரும் என்பது வெளிப்படை. இலங்கை வாழ் முஸ்லிம்களது பிரச்சினை, மொழி சார்ந்ததோ, மதம் சார்ந்ததோ அல்ல. அது இனம் சார்ந்தது என்பது தமிழ்க் கட்சிகளாலேயே ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ள ஒரு சூழலில், இந்தியா இத்தகைய அபிப் பிராயத்தைக் கொண்டிருப்பது பழைய பாணியிலே அதன் முயற்சிகள் தொடரவே வழி வகுக்கும்.

முஸ்லிம்கள் தம்மை ஒரு தனித்துவமான தேசிய இனமாக அடையாளம் காணத் தொடங்கி ஒரு தசாப்த காலம் கடந்துவிட்ட பின்னரும் அதைக்

www.padippakam.com



கவனிக்காமல் இருப்பது ஆபத்தானது. இவற்றைத் தமிழ் ஊடகங்கள் கவனத்தில் எடுக்கின்றனவோ இல்லையோ இந்திய அரசு அவசியம் கவனத்தில் எடுத்தாக வேண்டும். இலங்கையின் இனப் பிரச்சினையில் ஒரு நியாயமான தீர்வு எய்தப்படுவதில் இந்தியாவுக்கு உண்மையான அக்கறை இருக்குமானால் அது கவனத்தில் எடுக்க வேண்டிய சில அடிப்படையான விடயங்கள் உள்ளன:

1. இந்திய அரசு தான் விரும்பும் ஒரு தீர்வை, தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற அடிப் படையில் செயற்படுவதை நிறுத்த வேண்டும். அதற் காகக் காய்களை நகர்த்துவது, உள்ளூர் அரசியலில் அத்துமீறித் தலையிடுவது என்பவற்றை நிறுத்த வேண்டும். இன்று கருணா அணியைத் தூண்டிவிட்டிருப்பது அவர்களால் நடத்தப்படும் தாக்குதல்களுக்குத் திரை மறைவில் ஊக்கம் தருவது போன்ற செயல்களில் இலங்கை அரசுடன் கூட்டாக இந்திய அரசின் கைகளும் உள்ளன என்ற பரவலான கருத்து தமிழ் மக்கள் மத்தியில் நிலவுவதைக் கணக்கில் எடுக்க வேண்டும்.

2. இலங்கையில் இனப் பிரச்சினையை இந்திய அரசுக்கும் இலங்கை அரசுக்கும் இடையிலான ஒரு பேரம் பேசுதலுக்காகப் பயன்படுத்தக் கூடாது. அபக்கி யாதி பெற்ற இலங்கை இந்திய ஒப்பந்தம் மூலம் நடந்தது அரசுகளுக்கிடையான சுத்தமான பேரம்தான் என்பது வெளிப்படை.

3. பேச்சுவார்த்தையின்போது முன்வைக்கப்படும் கருத்துகளையும் இலங்கை அரசுக்கும் தமிழ்த் தரப் புக்குமிடையிலான உடன்பாடுகளையும் ஏற்கும்போதும் மறுக்கும்போதும் இந்தியா தனது அபிப்பிராயங்களை வெளிப்படையாக அறிவிக்க வேண்டும். இரகசிய மிரட்டலில் ஈடுபடக்கூடாது.

4. இந்தியா சமாதான முயற்சியில் நேரடியாகப் பங்கு பெறும் நோக்கம் இருப்பின் இலங்கையின் அரசியல் பொருளாதார சமூக நிலைமைகள் பற்றிய தெளிவு கொண்டவர்களை மட்டுமே இந்தப் பேச்சு வார்த்தையைக் கவனிக்கும் பொறுப்பிற்கு நியமிக்க வேண்டும். அவர்களுக்கு இருதரப்பின் மீதும் செல்வாக்குச் செலுத்தும் அதிகாரம் இல்லாதிருத்தல் அவசியம்.

கடந்தகால அனுபவங்கள் இந்திய அரசு இத்தகைய ஒரு நிலையை நோக்கி வருமா என்ற சந்தேகத்தை மக்கள் மனத்தில் ஏற்படுத்திவந்துள்ளன. 14 வருட காலமாகப் பரணில் போடப்பட்டிருந்த வடகிழக்கு மாகாண சபையை மீள இயக்கும் நோக்குடன் மாகாண ஆளுநர் 22 தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களையும் அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்த முயல்வதில்கூட இந்திய அரசின் பங்கு நிலவுகிறதா என்ற சந்தேகங்கள் உள்ளன. தமது தீர்வு என்பதற்காகப் பழைய மாகாணச் சபையையே, புலிகளின் இடைக்கால நிர்வாகச் சபை கோரிக்கைக்குப் பதிலாக முன்மொழிய இந்தியா முயலக்கூடும் என்ற அச்சமும் நிலவிவருகின்றது.

இந்திய அரசு ஈழத்தமிழ் மக்கள் மத்தியில் இழந்து போன தமது செல்வாக்கை மீளப் பெறுவதற்கும் அரை நூற்றாண்டுகளுக்கு மேலாக நிலவிவரும் நம் பிரச்சினைக்குச் சுமுகமான தீர்வு காண்பதற்கும் விரும்புமானால் இந்த விடயங்களில் இருந்து விடுபட்டு நின்று நேர்மையுடன் செயற்பட வேண்டும்.ள ◻





# அசோகமித்திரன் சிறுகதைகள்

**(இரு தொகுதிகள்)**

சாகித்திய அகாதெமி விருது உட்பட பல விருதுகளைப் பெற்ற திரு. அசோகமித்திரன், நவீனத் தமிழ் இலக்கியத்தில் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படும் எழுத்தாளர்களில் ஒருவர். ஏறத்தாழ அறுபதாண்டு காலமாகத் தொடர்ந்து எழுதிவருபவர். சாதாரண மக்களின் வாழ்க்கையை நுணுக்கமாக ஆராய்ந்து ஆழத்துடன் எழுதி வருபவர். தமிழ்ச் சிறுகதையைத் தன்னுடைய எழுத்துகள்மூலம் இன்னொரு தளத்திற்குக் கொண்டுசென்றவர். எழுத்தாளர் என்ற முறையில் பல நாடுகளுக்குப் பயணம் சென்று வந்தவர்.

ஜெயகாந்தனைத் தொடர்ந்து — ஓர் ஆசிரியரின் மொத்தச் சிறுகதைத் தொகுப்பு என்ற வரிசையில், அசோகமித்திரன் எழுதியுள்ள எல்லாச் சிறுகதைகளையும்கொண்ட முழுத் தொகுப்பு இந்நூல்.

இது ஓர் எழுத்தாளரின் சிறுகதைகளை ஒருசேரப் படிக்கிற வாய்ப்பாக அமைவதோடு, தமிழ்ச் சிறுகதை வளர்ச்சியில் பங்குபெற்ற எழுத்தாளரின் சிறுகதைகளைப் படிக்கவும் வழிவகை செய்கிறது.

**கவிதா**
**பப்ளிகேஷன்**
தபால் பெட்டி எண்: 6123
8, மாசிலாமணி தெரு, பாண்டிபஜார்
தி. நகர், சென்னை – 600 017.
தொலைபேசி: 24364243

**இரு தொகுதிகளும் சேர்த்து மொத்தப் பக்கங்கள் 1488; விலை ரூ. 750.**




படிப்பகம்

ஜன்னல்



செந்த் – எக்சுபெரி

# குழந்தைகளுக்கு மட்டும் தெரியும்



—வெ. ஸ்ரீராம்—

இந்த வருடம் ஏப்ரல் 7ஆம் தேதி பி. பி. சி. தொலைக்காட்சி அலைவரிசையில் ஒரு செய்தி அறிவிக்கப்பட்டது. 1944ஆம் ஆண்டு ஜூலை 31ஆம் தேதி மத்தியதரைக் கடல் மீது நொறுங்கி விழுந்து காணாமல் போய்விட்ட Lightning P-38 என்ற போர் விமானத்தைப் பற்றிய தகவல் அது. கடலின் ஆழத்திலிருந்து கடந்த ஆண்டுதான் அது கண்டெடுக்கப்பட்டது. அதன் சில பாகங்களைப் பரிசோதனை செய்தபிறகு, அது அந்த விமானம்தான் என்பது ஏப்ரல் 7ஆம் தேதி அதிகாரபூர்வமாக ஊர்ஜிதம் செய்யப்பட்டது. அந்த விபத்தில் கடலில் மூழ்கி இறந்துவிட்டதாகக் கருதப்பட்ட பிரபல பிரெஞ்சு விமானி மறைந்து ஐம்பது ஆண்டுகள் நிறைவுற்றதை நினைவுகூரும் வகையில் 1994ஆம் ஆண்டு பிரெஞ்சு அரசாங்கம் 50 பிராங்க் மதிப்புடைய கரன்ஸி நோட்டில் அவருடைய உருவப் படத்தை அச்சிட்டுக் கௌரவித்தது. இன்று பிரான்ஸின் கரன்ஸியாக யூரோ வந்துவிட்ட பிறகு, ப்ராங்க் நோட்டுகள் புழக்கத்திலிருந்து மறைந்துவிட்டன. ஆனால் ஒரு சிறந்த இலக்கியப் படைப்பாளியாகவும் திகழ்ந்த அந்தப் பிரெஞ்சுப் போர் விமானி 1943இல் வெளியிட்ட புத்தகம் இன்றும் இலக்கிய வட்டாரங்களில் கொடிகட்டிப் பறக்கிறது. கிட்டத்தட்ட நூறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட பெருமையும் அதற்கு உண்டு. அந்த விமானி ஆசிரியர்: ஆன்த்வான் தெ செந்த் – எக்சுபெரி (Antoine De Saint Exupery). புத்தகம்: குட்டி இளவரசன் (Le Petit Prince).

பி. பி. சி. வானொலியின் ‘தமிழோசை’ அலைவரிசையிலிருந்து ரமேஷ் என்பவர், தொலைபேசி மூலம் ஏப்ரல் 7ஆம் தேதி மதியம் என்னுடன் தொடர்புகொண்டார். செந்த் – எக்சுபெரியின் விமானம் பற்றித் ‘தமிழோசை’யில் செய்தி வாசிக்கப்போவதாகவும் அது சமயம் ‘குட்டி இளவரசனைத்’ தமிழில் மொழிபெயர்த்தவர் என்ற முறையில் தொலைபேசி வாயிலாக என்னுடன் சிறிய நேர்காணல் நடத்தப்போவதாகவும் சொன்னார். நெகிழ்ச்சியாக இருந்தது. அவருடைய புத்தகத்திலிருந்து சில வரிகள் நினைவுக்கு வந்தன. “நான் இறந்துபோய்விட்டதைப்போல இருக்கும். ஆனால் அது உண்மையல்ல” என்கிறான் குட்டி இளவரசன் விமானியிடம். இது தீர்க்க தரிசனமோ என்று வியக்கிறார் செந்த் – எக்சுபெரியின் வாழ்க்கை வரலாற்று ஆசிரியர் பால் வெப்ஸ்டர் (Paul Webster). இதுதவிர, குட்டி இளவரசனிடம் நரி சொன்ன வார்த்தைகளும் நினைவுக்கு வந்தன: “என் இரகசியம் இதுதான். இது மிகச் சாதாரணமானது: இதயத்திற்குத்தான் பார்வை உண்டு. முக்கியமானது; கண்களுக்குத் தென்படாது”.

செந்த் – எக்சுபெரியின் வாழ்க்கை முழுவதும் ஒரு தீவிரத் தேடல் இருந்தது. “இருக்கிற இடத்தில் யாரும் ஒருபோதும் மகிழ்ச்சியாக இருப்பதில்லை” என்று சொல்லும் சிக்னல் மேனிடம் குட்டி இளவரசன் சொல்கிறான்: “குழந்தைகளுக்கு மட்டும் தெரியும், எதைத் தேடுகிறோம் என்று”. விமானியாகப் பல துணிகர முயற்சிகளை மேற்கொண்டு சில விபத்துகளையும் பல வெற்றிகளையும் அவர் சந்தித்தார். ஆனால் அவருடைய

www.padippakam.com



காதல் விவகாரங்களும் திருமண வாழ்க்கையும் திருப்திகரமாக இருக்கவில்லை.

1942இல் தன் மனைவி கான்சுலோவைப் (Conseulo) பிரிந்து நீண்ட காலம் அமெரிக்காவில் இருந்தபோது அவர் எழுதிய 'குட்டி இளவரசனில்' வரும் ரோஜா மலர்தான் அவருடைய மனைவி என்றும் அந்தப் புத்தகமே பல பரிமாணங்களைக்கொண்ட ஒரு காதல் காவியம் என்றும் பல விமர்சகர்கள் கருதுகிறார் கள். கான்சுலோவுக்காக அவர் எழுதிய ஒரு கவிதை:

"எனக்குத் தெரியும்
நான் காயமுற்றால்
யார் குணப்படுத்துவார் என்று
நான் இறந்துவிட்டால்
காலமற்ற வெளியில்
யாருக்காகக் காத்திருப்பதென்று
நான் திரும்பி வந்தால்
யாரிடம் திரும்பி வருவேன் என்று".

இது தவிர, மனைவிக்கு அவர் எழுதிய நூற்றுக் கணக்கான கடிதங்களில் அவருடைய ஆழ்ந்த காதல் வெளிப்பட்டது. அந்தக் கடிதங்களைப் பிரசுரிக்க கான்சுலோ அனுமதி அளிக்காமலேயே இருந்தார். இருந்தாலும் விமானங்கள் பற்றிய வரலாற்று ஆசிரியர் எட்மோன் பெத்தியிடம் (Edmond Petit) அவர் காண்பித்த ஒரு கடிதத்தில் செந்த் - எக்சுபெரி மனைவிக்கு எழுதியிருந்தார்: "உனக்குத் தெரியுமா? நீதான் அந்த ரோஜா மலர். சில சமயங் களில் உன்னைப் போற்றிப் பாதுகாக்க எனக்குத் தெரி யாமல் இருந்திருக்கலாம், ஆனால் எனக்கு நீ எப் பொழுதும் அழகாகவே இருந்தாய்". இன்னொரு கடிதத்தில், 'குட்டி இள வரசன்' புத்தகத்தைக் கான்சுலோவுக்குச் சமர்ப்பிக்காமல் போனதற்காகத் தான் மிகவும் வருந்துவதாகவும் எழுதியிருந்தார்.




எல்லாவற்றையும்விட, பெரியவர்களானதும் குழந்தைப் பருவத்தின் வெகுளித்தனத்தை இழக்க நேரிடுவதைப் பெரிய சோகமாகக் கருதினார். தன்னுடைய குழந்தைப் பருவத்தையும் தன் அன்னை யின் அன்பையும் அரவணைப்பையும் வாழ்நாள் முழுவதும் மறக்காமல் இருந்தார். "குழந்தைப் பருவத் தைத் தாண்டி நான் வாழ்ந்திருக்கிறேனா என்றே எனக்கு நிச்சயமாகத் தெரியவில்லை" என்று ஒருமுறை தன் அன்னைக்குக் கடிதம் எழுதியிருந்தார். எழுத்தில் அவருக்கு இருந்த இயல்பான திறமையையும் ஆர்வத் தையும் ஊக்குவித்ததே அவருடைய அன்னைதான். அவர் இறுதியாக மறைந்துபோய் ஒரு வருடம் ஆகியும் அவரைப் பற்றி எதுவும் தெரியாத நிலையில், ஏப்ரல் 1945இல் அவருடைய அன்னை எழுதிய ஒரு கவிதை:

"எங்கெல்லாம் தேடுகிறேன் என் குழந்தையை
அவனை இந்த உலகுக்கு அளித்த
பிரசவ நாளன்று நான் கத்தியிருக்கிறேன்
அவனைப் பற்றித் தகவல் எதுவுமின்றி
எதுவுமே, ஒரு கல்லறைகூட இல்லாத இன்றும்
அழுதுகொண்டிருக்கிறேன்
அவனோ, "அளவு கடந்த ஒளிப் பசியினால்
மேல் நோக்கிப் பயணித்துவிட்டான்"
நட்சத்திர மண்டல யாத்திரிகனாய்
விண்வெளியின் யாத்திரிகனாய்
ஆண்டவரின் ஜோதியை அடைந்திருப்பானோ
ஆ, அது மட்டும் தெரிந்தாலே போதும்
முகத்திரைக்குள் என் அழுகை குறையும்."

உடல் நலமற்றோ அல்லது ஒரு விபத்தில் காய முற்றோ படுத்த படுக்கையாக ஓய்வெடுத்துக்கொண் டிருந்தபோதெல்லாம் செந்த் - எக்சுபெரியின் சிந்தனை தீவிரமாகச் செயல்பட்டது. 1941இல் அமெரிக்காவில் ஒரு மருத்துவமனையில் இதுபோன்று பல நாள்கள் அவர் அனுபவித்த தனிமையில் உருவானதுதான் 'குட்டி இளவரசன்'. அர்ஜென்டைனாவிலிருந்து 1930இல் அவர் அன்னைக்கு எழுதினார்: "பால்வீதி நட்சத்திர மண்டலங்களிலிருந்தும் வான வெளியிலிருந்தும் கடல் பரப்புகளிலிருந்தும் எல்லையற்ற பிரமாண்டங்களைப் பற்றி நான் பெறாத உணர்வு களை, உடல் நலமில்லாத போது உன்னருகில் குழந்தை யாக நான் தூங்கிக்கொண் டிருந்த சிறு கட்டிலில் பெற்றிருக்கிறேன்".

செந்த் - எக்சுபெரியின் உரைநடையின் செறிவைப் பற்றி நீண்ட கட்டுரையே எழுதலாம். 1931இல் வெளி வந்த Night Flight என்ற நாவலிலிருந்து ஒரு மாதிரி: நாவலில் வரும் பாத்திரமான விமானி ஃபாபியன் அர்ஜென்டைனாவின் ஒரு சிறிய விமான தளத்திலிருந்து இரவில் கிளம்புகிறான் ...

"...... கரும்புகையைப் போல மேலெழும்பிக் கொண்டிருந்த இரவின் இருள் ஏற்கனவே பள்ளத் தாக்குகளை நிரப்பிவிட்டிருந்தது. அவற்றையும் சம வெளிகளையும் இனம்பிரித்துக் காண முடியாமல் ஆகிவிட்டிருந்தது. ஆனால் கிராமங்களில் ஏற்கனவே விளக்குகள் எரிய ஆரம்பித்து அவற்றின் அந்த நட்சத்திர மண்டலங்கள் பதிலளித்துக்கொண்டி ருந்தன. ஃபாபியனும் தன் விமானத்தை அடையாளம் காட்டும் விளக்குகளைத் தன் விரலால் ஏற்றியும் அணைத்தும் கண்சிமிட்டச் செய்து கிராமங்களுக்குப் பதிலளித்துக்கொண்டிருந்தான். கடலை நோக்கிச் சுழன்று திரும்பும் கலங்கரை விளக்கத்தின் விளக்கைப் போல, இரவின் பிரமாண்ட இருளை நோக்கி ஒவ்வொரு வீடும் தன் நட்சத்திரத்தை ஏற்றிவைக்க, பூமி முழுவதிலும் ஒளிமயமான அழைப்புகள் பரவி யிருந்தன. ஒரு மனித வாழ்க்கையை உள்ளடக்கியிருந்த ஒவ்வொரு அம்சமும் அங்கே மின்னிக்கொண்டிருந்தது. இம்முறை இரவுக்குள் விமானத்தின் நுழைவு, ஒரு துறைமுக நுழைவைப் போல, மெதுவாகவும் அழகாகவும் அமைந்ததை ஃபாபியன் வியந்து ரசித்தான் ...."



படிப்பகம்

www.padippakam.com



## கண்டதும் கேட்டதும்

**பார்வை**

எழுத்தாளர் கி. ராஜ நாராயணன், கவிஞர் பழமலய் போன்றோர் நாட்டுப்புறங்களைச் சொர்க்கமென இலக்கியத்தில் சித்தரித்துப் பாவம் செய்திருக்கிறார்கள். இதையொட்டி ஒரு பெரும்படையே வாய்க்கால் வரப்பு என்று கிராம வாழ்க்கையைச் சலிப்பூட்டும் விதத்தில் அசைபோட்டது.

கிராமத்து வாழ்க்கைக்கு ஏங்கி அசைபோடும் இந்தப் படைப்பாளிகளின் உணர்ச்சி, பொய் என்கிறோம். பல நூறு வசதிகள் குவிந்திருக்கும் பட்டணத்தில் வாழ்ந்துகொண்டே, இனியும் அங்கேயே வாழ்வதாக உறுதி எடுத்துக்கொண்டே கிராமத்து வாழ்க்கையைச் சப்புக்கொட்டுவது நாணயமான உணர்ச்சியல்ல.

புதிய கலாச்சாரம், மே 2004

**தெனாவட்டு**

'புளிமுட்டைபோல் ஒன்றுக்குமேல் ஒன்று இடித்துக்கொண்டு (கவிதைகள்) நிற்கின்றன'. இது விமர்சகனின் அத்து மீறிய அடாவடித்தனம்; எல்லை மீறிய அதிகப்பிரசங்கம். எப்படி அச்சுக் கோர்ப்பது, அட்டை போடுவது என்பது ஒரு பதிப்பாளனின் விருப்பம். பக்கங்களைக் குறைப்பதற்காகச் செய்த செயல். இதில் வாலாட்டுவது வரம்பு மீறியது. விலை இடுவதும் விற்பதும் எங்கள் இஷ்டம்.

(தீராநதியில் நகுலன் கவிதைகள் நூலுக்கு எஸ். ராமகிருஷ்ணன் எழுதிய மதிப்புரைக்கு எதிர்வினையாக 'காவ்யா' சண்முக சுந்தரம் எழுதிய கடிதத்திலிருந்து)

தீராநதி, மார்ச் 2004

**சவடால் அல்லது மரண சர்ட்டிபிகெட்**

தமிழின் கடைசி சிறுபத்திரிகை

(இந்திய அரசின் மனிதவள மேம்பாட்டுத் துறையின் பண உதவியுடன் வெளிவந்திருக்கும் 'புது எழுத்து' இதழ் 9இன் ஏப்ரல் 2004, பின் அட்டை அறிவிப்பு)

**ராஜாதி ராஜா**

"ராமதாஸுக்கு நாலே மாவட்டம்.. கேப்டனுக்கு நாடே சொந்தம்!"

விஜயகாந்த் – ராமதாஸ் மோதல் குறித்த ஜூனியர் விகடன் கவர் ஸ்டோரி தலைப்பு. 27.06.04

**பொறுக்கி வந்த இசங்கள்**

**கே:** புரிதலுக்கு உட்படாத கவிதைகள் தற்போது பெருகி வருகின்றன. இதன் தாக்கம் / விளைவு எதிர் காலத்தில் எப்படியிருக்குமென நினைக்கிறீர்கள்?

மேலைநாடுகளின் இலக்கியவாதிகள் அந்த 'இசம்' இந்த 'இசம்' என்று பயன்படுத்தித் தூக்கியெறிந்த உத்திகளைப் பொறுக்கிக்கொண்டு வந்து நமது இலக்கியவாதிகள் நம்மைப் பயமுறுத்துகிறார்கள். நமது இலக்கியம் வேறு; பண்பாடு வேறு. அவர்களது இலக்கியம் வேறு; பண்பாடு வேறு.

மேற்கு என்பது மூளை; கிழக்கு என்பது இதயம். மூளைக்கும் இதயத்திற்குமான போராட்டமும் புரியாமையும் எப்போதும் இருந்துகொண்டுதான் இருக்கும். இந்தப் போக்குகளால் நமது பல்லாயிரம் ஆண்டுகளின் வேரோடிய மொழியின் மரபும் சிந்தனை மரபும் சிதைக்கப்பட்டிருக்கின்றன.

"விலங்குகள் உடைத்தெறியும் அவசரத்தில் ஆடைகளையும் அவிழ்த்தெறியும்" (இந்தச் சொற்பிரயோகம் கவிஞர் வைரமுத்துவினுடையது) பெண் மொழியும் பெண் கவிஞர்களும்கூட இன்றைக்கு அந்தப் போக்கினால்தான் உருவாகியிருக்கிறார்கள்.

புரியாமல் எழுதுகிற இலக்கியவாதிகள் படைப்புகள் வேண்டுமானால் புரியாமல் போகலாம். ஆனால் இவர்கள் யாரென்று எல்லோரும் புரிந்து கொள்ள முடியும். புரிந்தால் புறந்தள்ள முடியும்.

பழநிபாரதி
நம்மொழி, மே – ஜூன், 2004


## ஓஷோவின் நூல்கள்

| | |
|---|---|
| தந்த்ரா ரகசியங்கள் | – 250.00 |
| அற்புதத்தில் அற்புதம் | – 132.00 |
| ஞானப்புரட்சி | – 87.00 |
| ஒரு கோப்பைத் தேநீர் | – 96.00 |
| புரட்சி விதை | – 90.00 |
| படிப்படியாகத் தியானம் | – 75.00 |
| வெறும் கோப்பை | – 36.00 |
| புல் தானாவே வளர்கிறது (grass grows by itself) | – 30.00 |
| அன்பின் இருப்பிடம் | – 50.00 |
| அன்பின் அதிர்வுகள் | – 45.00 |

மற்றும் பல நூல்கள்

✣

## இரவீந்திரநாத் தாகூரின் நூல்கள்

| | |
|---|---|
| கீதாஞ்சலி | – 51.00 |
| ஏகாந்தப் பறவைகள் | – 36.00 |

## ஜென் நூல்கள்

| | |
|---|---|
| ஜென் கதைகள் | – 40.00 |
| மீண்டும் ஜென் கதைகள் | – 45.00 |
| 100 ஜென் கதைகள் | – 60.00 |
| ஜென்னும் ஜென் தியானமும் | – 60.00 |

✣

| | |
|---|---|
| வெற்றிபெறச் சிந்தியுங்கள் – *டாக்டர். வால்டர் டோயல் ஸ்டேபிள்* | – 75.00 |
| மனம் தரும் பணம் – *நெப்போலியன் ஹில்* | – 75.00 |
| வெற்றியின் திறவுகோல் – *கிறிஸ்கோல்* | – 195.00 |
| எண்ணங்களை மேம்படுத்துங்கள் – *டாக்டர். எம். ஆர். காப்மேயர்* | – 75.00 |
| எழுச்சி தீபங்கள் – *ஆ. ப. ஜெ. அப்துல் கலாம்* | – 60.00 |
| மனம் ஒரு புனைகதை – *யு. ஜி. கிருஷ்ணமூர்த்தி* | – 60.00 |

✣

**1,50,000 பிரதிகள் விற்று சாதனை படைத்த அக்னிச் சிறகுகள்**

*ஆ. ப. ஜெ. அப்துல் கலாம், அருண்திவாரி* – 100.00
(மலிவு விலை மாணவர் பதிப்பு ரூ. 36.00)

✣

## கண்ணதாசன் பதிப்பகம்

23, கண்ணதாசன் சாலை
தியாகராய நகர்
சென்னை – 600 017.
தொலைபேசி : 24332682 / 5207776

மதுரை – 625 003
தொலைபேசி: 0452 – 2608793

பாண்டிச்சேரி – 605 001
தொலைபேசி: 0413 – 2221332

விளம்பரம்


படிப்பகம்

www.padippakam.com



**அ. முத்துலிங்கம்**



# நூறு வருஷம் லேட்

விமான நிலையத்தின் வரவேற்புக் கூடத்துக்குள் நுழைந்த அந்தக் கணமே அவனைக் கண்டேன். அவன் அணிந்திருந்த ஒரு சைஸ் குறைவான அரக்கை சர்ட்டைப் பல இடங்களில் மீறிக்கொண்டு அவன் உடம்பு கட்டுக்கட்டாகத் தெரிந்தது. காட்டு மரம் ஒன்றில் உருட்டி உருட்டிச் செய்ததுபோல இருந்தான். உடனே ஒரு பழைய பாடல்தான் ஞாபகத்துக்கு வந்தது. நாளுக்கு எட்டுத் தேர் செய்யும் ஒரு தச்சன் பார்த்து பார்த்து, இழைத்து இழைத்து ஒரு மாத காலமாக ஒரு தேர் செய்தானாம். அந்தத் தேர்போல அவன் தேகம் அமைதியாகவும் உறுதியாகவும் அவன் தேர்ந்த இடத்தைக் கச்சிதமாக மறைத்துக்கொண்டும் நின்றது. அவனும் யாருடைய வரவுக்காகவோ காத்துக் கொண்டிருந்தான்.

விமானங்களின் வருகை நேரங்களை அறிவிக்கும் திரையைப் பார்த்தேன். அதில் கறுப்பு வெள்ளைக் கோடுகள் பக்கவாட்டில் ஓடிக்கொண்டிருந்தன. இன்னும் பலரும் திரையைப் பார்த்து ஏமாந்தார்கள். நான் அப்படியே திரையைப் பார்த்துக்கொண்டு நின்றபோது என்னைச் சுற்றித் துப்பரவுப் பணியாளர்கள் சுத்தம் செய்துகொண்டு போய்விட்டார்கள்.

"விசாரணைகள்" என்று கொட்டை எழுத்தில் எழுதிய போர்டு தலைக்கு மேலே தொங்க, மிக அழகாக அலங்கரித்த பெண்ணொருத்தி உயர்ந்த நாற்காலியொன்றில் உட்கார்ந்திருந்தாள். அவள் இடுப்புக்கு மேலே மிக நீண்டுபோய்த் தெரிந்தாள். ஒரு மென்சிவப்பு ஸ்வெட்டரைக் கழுத்து வழியாகப் போட்டுக் கூந்தலை விசிறிவிட்டிருந்தாள். அவளை அணுகி என் விமான இலக்கத்தைக் கூறி அது வரும் நேரத்தை விசாரித்தேன். அவள் கம்ப்யூட்டர் திரையில் அந்தத் தகவலைப் பார்க்கச் சொன்னாள். அவள் அப்படிச் சொன்னபோது அவளுடைய நிறைந்த உதடுகள் மிகவும் கஷ்டப்பட்டு எனக்காகத் திறந்தன. அதிகாலை நேரத்தில் அளவுக்கு அதிகமாக மேக்கப் செய்து எதற்காக எந்த நேரத்திலும் அறுந்து விழும் பலகைக்குக் கீழே காத்திருக்கிறாள்? இதைச் சொல்வதற்காகவா?

"கம்ப்யூட்டர் திரை வேலை செய்யவில்லை" என்றேன். நிமிர்ந்து கேவலமாக என்னைப் பார்த்துவிட்டு, "இல்லையே, வேலை செய்கிறது" என்றாள். அந்த மூன்று வார்த்தைகளையும் உண்டாக்குவதற்கு முன்பற்களையும், நாக்கையும், அப்போதைக்கு வாயில் சேர்ந்திருந்த துப்பலையும் பயன்படுத்தினாள். ஒப்பனைக்கு எடுத்துக்கொண்ட நேரத்தில் ஒரு சில செகண்டுகளை ஒதுக்கி இந்த அற்பத் தகவலை எனக்குத் தந்திருக்கலாம். "பரவாயில்லை, அந்தத் தகவலை நீங்கள் தரலாமே" என்றேன். துப்பலை மிச்சப்படுத்துவதற்காக அவள் வாயைத் திறக்கவில்லை. கம்ப்யூட்டர் திரையில் பாருங்கள் என்று அவள் சொல்வதைக் கேட்பதற்காக இன்னும் நாலு பேர் எனக்கு முன்னால் நின்றார்கள்.

விமானம் ஒரு மணி நேரம் லேட். விமான நிலையத்தில் காத்திருப்பது எனக்கு அலுப்புத் தருவதே இல்லை. ஒரு மிருகக்காட்சி சாலையில் நிற்பதுபோல ஏதாவது புதுமையாக ஒவ்வொரு கணமும் நடந்துகொண்டே இருக்கும். வாசலில் ஒவ்வொருவராகத் தோன்றுவார்கள். நாடகமேடையில் வரும் பாத்திரம் போல ஒரு எதிர்பார்ப்பு உடனே உண்டாகும். நாய்க்குட்டியை இழுத்துப் போவதுபோல ஒரு பெண் தன் சூட்கேசுகளை ஒரு வண்டியில் வைத்துத் தள்ளிக்கொண்டு வந்தார். ஆனால் அவர் உடம்பு முழுவதும் மறைந்துவிட்டது. ஒரு கணம் தூரத்திலே சூட்கேசுக்கு மேலே ஒரு தலை உட்கார்ந்து சவாரி செய்வதுபோலத் தோன்றியது. விநோதமான நீண்ட கருவிகளைக் காவியபடி ஒரு குழு கடந்துபோனது. எதையோ அளப்பதற்கு வந்த விஞ்ஞானிகள்போலத் தோன்றினார்கள். அந்த அதிகாலையிலும் மிக உற்சாகமாக விவாதித்தபடி கலைந்துபோனார்கள்.

நானும் ஓர் இளம் விஞ்ஞானிக்காகக் காத்துக் கொண்டிருந்தேன். என் வயதிலும் அரைவாசிதான்



படிப்பகம்

www.padippakam.com

இருக்கும். அவனுக்கு பெயர் தாசன் என்று. அவனுக்கு நாங்கள் உறவு. இப்பொழுது பி.எச்டி. முடித்துவிட்டு மனித இயல்பு பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தான். மூன்று நாட்கள் ரொறொன்ரோவில் விஞ்ஞானிகள் கருத்தரங்கில் கலந்துகொள்ள வருகிறான். இரண்டு வருடங்களுக்குப் பிறகு சந்திப்பதால் அவன் வரவை நான் ஆவலுடன் எதிர்பார்த்தேன். அவன் வந்தாலே கலகலப்புத்தான். எப்பொழுதும் இவனுடன் எனக்கு விவாதம், சண்டை, பந்தயம் என்று இருக்கும்.

பத்து வருடங்களுக்கு முன்பு ஒரு பந்தயத்தில் தோற்றுப்போனதில் இருந்து அவனிடம் மிகவும் எச்சரிக்கையாக இருப்பேன். கணிதத்தில் கால்குலஸ் என்ற பிரிவைக் கண்டுபிடித்தது லெய்ப்னிஸ் என்ற ஜெர்மன்காரர் என்றேன். அவர் நியூட்டன் என்றான். நியூட்டன் முதலில் கண்டுபிடித்தது மட்டுமல்லாமல் அதைத் தனக்குத்தானே ஏறக்குறைய முப்பது வருடங்கள் ரகஸ்யமாக வைத்திருந்திருக்கிறார், உலகத்துக்கு அறிவிக்காமல். அதுக்கு நான் என்ன செய்வேன். எனவே பந்தயத்தில் எனக்குத் தோல்வி.



தாசன் பயின்ற அட்லாண்டா பல்கலைக்கழக விஞ்ஞானிகள் தான் பேர்பெற்ற குரங்குப் பரிசோதனையை நிகழ்த்தியவர்கள். அதைப் பின்பற்றி இன்னும் பல விஞ்ஞானிகள் ஆராய்ச்சிகளைத் தொடர்ந்தார்கள். இவனும் அப்படியான ஓர் ஆராய்ச்சியில்தான் ஈடுபட்டிருந்தான்.

ஒரு பரிசோதனையில் முன்பின் அறிமுகமில்லாத இரண்டு ஆட்கள் பங்கேற்பார்கள். அதில் ஒருவரிடம் 100 டொலர் தரப்படும். அவர் மற்றவருடன் அந்தக் காசை எப்படியும் பங்குபோட்டுக்கொள்ளலாம். அவர் கொடுக்கும் பங்கை இரண்டாமவர் ஏற்றுக்கொண்டால் இரண்டு பேருமே அந்தப் பணத்தை வைத்துக்கொள்ளலாம். ஆனால் இந்த வாய்ப்பு ஒரு முறையே. மற்றவர் அந்தப் பணத்தை ஏற்றுக்கொள்ளாவிட்டால் இருவருக்குமே பணம் கிடையாது.

இந்தப் பரிசோதனையில் அநேகம் பேர் சரிபாதியாக 50 டொலர், 50 டொலர் என்று பங்குபோட்டுக் கொள்வார்கள். இன்னும் சிலர் 60, 40 என்று பரித்துக் கொள்வதுமுண்டு. ஆனால் 70, 30 என்று பிரிக்கும்போது அநேகமாக இரண்டாவது ஆள் தன் பங்கை ஏற்றுக் கொள்ளமாட்டார். அப்போது இருவருக்குமே பணம் கிடைக்காமல் போய்விடும்.

இதில் ஒரு கேள்வி இருந்தது. விஞ்ஞானிகள் இரண்டாவது ஆளைக் கேட்டார்கள். "உமக்குக் கிடைப்பது முப்பது டொலர்; அதுவும் இலவசம். அதை ஏன் நிராகரித்தீர்?" அதற்கு அவர் சொல்லும் பதில் ஒரே மாதிரி இருக்கும்.

"அது எப்படி, அவர் 70 டொலரை தனக்கு வைத்துக் கொள்ளலாம்?"

"ஆனால் சும்மா வந்த முப்பது டொலரை இழந்து விட்டீரே!"

"அது பரவாயில்லை. அவருக்கு 70 டொலர் கிடைக்கக்கூடாது."

அந்த விஞ்ஞானிகள் மனித உள்ளத்தின் ஆழமான ஒரு நுட்பத்தைத் தொட்டுவிட்டார்கள். ஆதி காலத்தில் இருந்தே மனிதனுக்குச் சமத்துவத்தில் நாட்டமிருக்கிறது. தன் பங்கு அவனுக்குப் பெரிதில்லை. அடுத்தவனுக்கு அநியாயமாக அதிகம் கிடைக்கக்கூடாது. அதுதான் முக்கியம். ஆதியில் தொடங்கிய இந்தப் போராட்டம் தொடரும். எல்லாத் துறைகளிலும் சமத்துவம் கிடைக்கும்வரை மனிதன் நிறுத்தப்போவதில்லை என்பான் தாசன்.

நான் கேட்டேன். "நூறாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மனிதன் கல்லாயுதங்களை உபயோகிக்கக் கற்றுக் கொண்டான். இன்றுவரை இந்த மனித சமத்துவம் ஏற்படவில்லையே? அது ஏன்?"

அதற்கும் அவனிடம் பதில் இருந்தது. ஆதியிலே மெதுவாக ஆரம்பித்த மாற்றங்கள் இப்போது வேகமெடுத்துவிட்டன. பெண்களுக்கு முதலில் சம வோட்டு எங்கே கிடைத்தது. ஃபின்லாண்டு நாட்டில் 1906ஆம் வருடம். ஆப்பிரஹாம் லிங்கன் அடிமை ஒழிப்புச் சட்டம் கொண்டுவந்தது கேவலம் 140 வருடங்களுக்கு முன்னால்தான். சிறார் தொழில் கொடுமை இங்கிலாந்தில் ஒழிக்கப்பட்டுச் சரியாக 60 வருடங்களாகின்றன. அநீதியை எதிர்ப்பது ஆதி மனித இயல்பு. மனித சமுதாயத்தில் வெகுவிரைவில் சமத்துவம் சந்து பொந்தெல்லாம் நிறைந்துவிடும் என்பதில் அவனுக்கு அசையாத நம்பிக்கை.

நான் எதிர்பார்த்த தாசனுடைய விமானம் தரையிறங்கிவிட்டது. நான் வாசலை உன்னிப்பாகக் கவனிக்கத் தொடங்கினேன். எனக்கு முன்னால் காத்திருந்த கட்டழகனும் உசாரானார். ஒரு தாய் தன்னுடைய மூன்று வயது மகனை முன்னே நடக்கவிட்டு அவனுடைய தலையைப் பிடித்துச் சரியான திசைக்குத் திருப்பியபடி வந்துகொண்டிருந்தாள். அவர்களுக்குப் பின்னால் சிவப்புக் கொடி பறக்கும் சக்கர நாற்காலியில் ஒரு மூதாட்டியை யாரோ வழியை ஏற்படுத்தியபடி தள்ளிக்கொண்டு வந்தார்கள். எனக்குப் பக்கத்தில் நின்றவர் கோயில் மணியை எட்டி அடிப்பதுபோலக் எம்பியெம்பிக் கையை அசைத்தார்.

எலுமிச்சை நிற ஆடையில் வெள்ளை கொலர் வைத்த சீருடையை அணிந்த அந்த நாலு விமானப் பணிப்பெண்கள் டக்டக்கென்று எங்களைக் கடந்து

www.padippakam.com



போனார்கள். அவர்களுக்குப் பின்னால் காதிலே நாலைந்து வளையம் மாட்டிய மெலிந்த இளைஞன் ஒரு கனமில்லாத சூட்கேஸைத் தள்ளியபடி வந்து கொண்டிருந்தான். அவனைக் கண்டதும் தேர்க்கால் அழகன் பரபரப்பானான். அந்த வாலிபன் வெளி வந்ததும் ஓடிச் சென்று அவனுக்கு உதட்டிலே முத்தம் கொடுத்து வரவேற்றான். மிக நீண்ட நேரத்துக்குப்பின் ஓர் இடைவெளி வந்தது. பிறகு மீண்டும் அந்த முத்தத்தைத் தொடர்ந்தார்கள். மடோனாவும் பிரிட்னி ஸ்பியர்ஸூம் கொடுத்தது போல அது முடிவில்லாத முத்தமாக இருந்தது.

என் வாழ்நாளில் இப்படியான காட்சியை நான் பார்த்ததில்லை. இந்தப் பரவசம் தந்த அதிர்ச்சியில் நான் ஒரு விஷயத்தை மறந்து விட்டேன். ஒருபால் மணத்தைச் சமீபத்தில் கனடா வின் பாராளுமன்றம் அங்கீகரித்தது. அதைத் தொடர்ந்து நாட்டின் உச்ச நீதிமன்றமும் சாதகமான தீர்ப்பு வழங்கியிருந்தது. அது மாத்திரமல்ல. ஓர் ஆண் தன் காதலனுக்கு நிரந்தர வதிவிடம் கோரி விண்ணப்பிப்பதற்கும் குடிவரவு அனுமதியளித்தது. ஒரு பெண்ணுக்கும் தன் காதலியை வரவழைப்பதற்கு அதே சலுகை. இவர் களைப் பார்த்தால் நீண்ட நாள் பிரிவுத் துன்பத்தை அனுபவித்த காதலர்களாகத் தெரிந்தார்கள்.

அப்பொழுது யாரோ என்னை உற்றுப் பார்ப் பதை உணர்ந்தேன். திரும்பப் பார்த்தால் தாசன். அப்படியே அவனை அணைத்து வரவேற்றேன். நான் பார்த்த திசையில் அவனும் பார்த்துவிட்டு மௌனமாகச் சிரித்தான். பிறகு என்னைப் பார்த்து லேட் என்றான்.

"ஒரு மணிநேரம்தானே, பரவாயில்லை" என்றேன்.

"நான் அதைச் சொல்லவில்லை. நூறு வருடம் லேட்" என்றான்.

"இளம் விஞ்ஞானியே, புதிர்போடாமல் பேசு."

"கனடாவில் தற்போது பாஸ் பண்ணிய சட்டம் லேட் என்று சொல்கிறேன். நூறு வருடங்களுக்கு முன் ஒஸ்கார் வைல்டு என்ற பெரும் எழுத்தாளரை இங்கிலாந்தில் இரண்டு வருடங்கள் சிறையில் போட்டுக் கொடுமைப்படுத்தினார்கள். அவர் வெளியே வந்து எழுதவே இல்லை. சீக்கிரத்தில் இறந்துபோனார். அருமையான இலக்கியப் படைப் பாளியை அநியாயமாகக் கொன்றுவிட்டார்கள். அவர் செய்த ஒரே குற்றம் அவருக்கு ஓர் ஆண் காதலன் இருந்ததுதான்."

நடந்து வந்த தாசன் நின்று அவர்களைப் பார்த்தான். நானும் திரும்பப் பார்த்தேன்.

ஒரு பிரம்மாண்டமான விமான வரவேற்புக் கூடத்தின் நடுவில் நின்று அந்தக் காதலர்கள் முத்தம் பரிமாறினார்கள். சன வெள்ளம் அந்த இடத்தில் ஒரு நதிபோல இரண்டாகப் பிரிந்து மறுபடியும் ஒன்றுகூடி நகர்ந்தது. பல்லாயிரம் ஆண்டுகளாக அடக்கப்பட்டு மெள்ள மெள்ள வளர்ந்த ஒரு தீவு மனித வெள்ளத்தில் அடிபட்டுப் போகாமல் அப்படியே மிதந்து நின்ற காட்சி பார்க்க வெகு அழகாகத்தான் இருந்தது. ◻

## வரப்பெற்றோம்

**முத்த யுத்தம்;** (நாவல்) ❖ எஸ். ஷங்கரநாராயணன் ❖ ரூ.95; பக்.240 ❖ ஏகம் பதிப்பகம், தபால்பெட்டி எண் 2964, 3, பிள்ளையார் கோவில் 2ஆம் சந்து, முதல்மாடி, திருவல்லிக்கேணி, சென்னை 600 005.

**அப்படியே இருந்திருக்கலாம்;** (கவிதைகள்) ❖ தியாக. இரமேஷ் ❖ ரூ.40; பக்.96 ❖ கற்க, 13, ஆர்.என். நம்பியார் தெரு, ரங்கராஜபுரம், கோடம்பாக்கம், சென்னை 600 024.

**நூலகச் சிந்தனைகள்;** (ஆய்வு கட்டுரைகள்) ❖ கு. இராசேந்திரன் ❖ ரூ.; பக்.114 ❖ கிடைக்குமிடம் : திருவாட்டி கு. தனலட்சுமி, எண்.6, திருமூலர் நகர் முதலியார் பேட்டை, புதுச்சேரி 605 001.

**ஒற்றையிலையென;** (கவிதைகள்) ❖ லீனா மணிமேகலை ❖ ரூ.40; பக்.72 ❖ கனவுப்பட்டறை, 1, ப்ளாஸா சென்டர், 129, ஜி.எஸ்.செட்டி ரோடு, சென்னை 600 006.

**ஊருக்கு ஒரு குடி;** (கவிதைகள்) ❖ பட்டி சு. செங்குட்டுவன் ❖ ரூ.40; பக்.96 ❖ ஸ்நேகா, 348, டி.டி.கே. சாலை, இராயப்பேட்டை, சென்னை 600 014.

**தொலைப்புச் செய்திகள்;** (கவிதைகள்) ❖ இரா. நடராசன் ❖ ரூ.35; பக்.80 ❖ ஸ்நேகா, 348, டி.டி.கே. சாலை, இராயப்பேட்டை, சென்னை 600 014.

**இரவுப்பாடகன்;** (கவிதைகள்) ❖ தமிழன்பன் ❖ ரூ.60; பக்.144 ❖ பூம்புகார் பதிப்பகம், 127 (ப.எண்.63), பிரகாசம் சாலை (பிராட்வே), சென்னை 600 018.

**மண், மொழி, மனிதம், நீதி** (கட்டுரைகள்) ❖ இராசேந்திர சோழன் ❖ ரூ.80 ❖ மங்கை பதிப்பகம், 700.எம்.ஐ.ஜி, இரண்டாவது தலைமைச் சாலை, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக் குடியிருப்பு, வேளச்சேரி, சென்னை 600 042

**சிதையும் கூடுகள்** (சிறுகதைகள்) ❖ ரேவதி வர்மா ❖ ரூ.60 ❖ ஸ்நேகா, 348, டிடிகே சாலை, இராயப்பேட்டை, சென்னை 600 014

**இந்து சமய வரலாறு** (வரலாறு) ❖ ந.சி. கந்தையா பிள்ளை ❖ ரூ.40 ❖ விழுதுகள் பதிப்பகம், சென்னை 600 019

**பௌத்த தருமம்** (சமயம்) ❖ ப. ராமஸ்வாமி ❖ ரூ.80 ❖ விழுதுகள் பதிப்பகம், சென்னை 600 019

**எல்வின் கண்ட பழங்குடி மக்கள்** (சுயசரிதை) ❖ வெரியர் எல்வின் (தமிழில்) சிட்டி ❖ ரூ.80 ❖ விழுதுகள் பதிப்பகம், 18, திருநகர் முதல் தெரு, திருவொற்றியூர், சென்னை 600 019

**இந்துத்துவக் காலச் சூழலின் மறுவாசிப்பில் பாரதியின் மெய்ஞ்ஞானம்** (கட்டுரைகள்) ❖ ந. இரவீந்திரன் ❖ ரூ.100 ❖ சவுத் விஷன், சென்னை 600 006

**இந்துத்துவம் இந்து சமயம் சமூக மாற்றங்கள்** (கட்டுரைகள்) ❖ ந. இரவீந்திரன் ❖ ரூ.125 ❖ சவுத் விஷன், சென்னை 600 006

**பின் நவீனத்துவமும், அழகியலும்** (கட்டுரைகள்) ❖ ந. இரவீந்திரன் ❖ ரூ.60 ❖ சவுத் விஷன், 6, தாயார் சாகிப் 2வது சந்து, சென்னை 600 002

**ஒரு நதியின் குரல்** (கவிதைகள்) ❖ நிர்மலா ❖ ரூ.30 ❖ அக்னி, 20/109, தெற்குத் தெரு, கரூர் 639 001

**ஒழுங்கவிழ்ப்பின் தேவைகள் சாத்தியங்கள்** (கட்டுரைகள்) ❖ அ. மார்க்ஸ் ❖ ரூ.70 ❖ அடையாளம், புத்தாநத்தம் 621 310

**கே. டானியல் கடிதங்கள்** ❖ (தொ) அ. மார்க்ஸ் ❖ ரூ.80 ❖ அடையாளம், புத்தாநத்தம் 621 310

**இஸ்லாத்தின் பிரச்சினைகள் ஒரு மறுபார்வை** (கட்டுரைகள்) ❖ அஸ்கர் அலி எஞ்சினியர் (தமிழில்: சு.கிருஷ்ண மூர்த்தி, சிங்கராயர்) ❖ ரூ.80 ❖ அடையாளம், புத்தாநத்தம் 621 310.

**பிரமிள் படைப்புகள்** ❖ (தொ) கால. சுப்ரமணியம் ❖ ரூ.210 ❖ அடையாளம், புத்தாநத்தம் 621 310



படிப்பகம்

www.padippakam.com



மதிப்புரை



# முல்லை
## இலக்கியக் களஞ்சியம்

பதிப்பும் தொகுப்பும்:
**முல்லை மு. பழநியப்பன்**

*வெளியீடு*:
**முல்லை பதிப்பகம்**
323/10, கதிரவன் காலனி
அண்ணாநகர் மேற்கு
சென்னை 600 040
பக். 446; விலை ரூ. 175/–

**பாவண்ணன்**

**1938**ஆம் ஆண்டில் பாரதிதாசனின் முதல் கவிதைத் தொகுதி வெளிவந்தது. அத்தொகுதியின் கவிதைகள் புதுமைப் பித்தன் போன்ற படைப்பாளிகளாலும் மற்ற தமிழறிஞர்களாலும் வரவேற்கப் பட்டன. அதற்கு முன்னர் பிறர் யாரும் காட்டியிராத வேகமும் தடையற்ற ஓட்டமும் சொற்சேர்க்கையும் பாரதி தாசனிடம் வெளிப்பட்டன. அத்தொகுதி யில் இடம்பெற்ற "சிரித்த முல்லை" என்னும் கவிதை முப்பதுகளில் பல ஆர்வலர்களை ஈர்த்தது. அம்மலரின் அழகால் ஐம்புலன்களும் வசப்பட்டுப் போனவிதம் மிக அழகான முறையில் அக்கவிதையில் காட்சிப்படுத் தப்பட்டி ருக்கும். தமிழ்க் கவிதை வாசகர்கள் பலரையும் கவர்ந்த இக்கவிதையால் அக்கால இளைஞரான முத்தையா ஈர்க்கப்பட்டதும் அந்த ஈர்ப்பின் உச்ச மாகத் தான் புதிதாகத் தொடங்கிய இதழுக்கும் பதிப் பகத்துக்கும் "முல்லை" என்று பெயர் சூட்டியதும் மிக இயல்பாக நடந்தேறின.

பாரதிதாசனையும் புதுமைப் பித்தனையும் முக்கியப் படைப்பாளி களாகக் கொண்டு 1946, 1947ஆம் ஆண்டுகளில் "முல்லை" வெளிவந்தது. 1946இல் பத்து இதழ்களும் 1947இல் இரண்டு இதழ்களும் வெளிவந்தன. இதனைப் பதிப்பித்த முத்தையா பிற்காலத்தில் 'முல்லை முத்தையா' என்று அழைக்கப்படும் அளவுக்கு, முல்லை இதழுக்குத் தமிழ்ச் சூழலில் நல்ல வரவேற்பு இருந்தது. ஏறத்தாழ 57 ஆண்டுகள் கழிந்த நிலையில் அவ்விதழ்களின் முழுத்தொகுப்பு நூலை முத்தையாவின் மகன் மு. பழநி யப்பன் பதிப்பித்திருக்கிறார். "முல்லை – ஒரு வரலாற்றுப் பதிவு" என்கிற தலைப்பில் ஆ. இரா. வேங்கடாசலபதி செறிவான முன்னுரையொன்றை எழுதியிருக்கிறார். தமிழ்ப் புத்தக வெளியீடு தொழில்முறையாகத் தொடங் கிய 40களின் இலக்கியச் செயல்பாடு களைச் சுருக்கமாகச் சொல்லி, அந்தப் பின்புலத்தில் மலர்ந்ததாக முல்லையை அறிமுகப்படுத்துகிறார்.

தொடக்கத்தில் தேசிய உணர்வுடன் செயல்பட்டவர் முல்லை முத்தையா. 1943ஆம் ஆண்டில் "கமலா பிரசு ராலயம்" என்னும் பெயரில் பதிப்பக மொன்றைத் தொடங்கி டி. எஸ். சொக்க லிங்கம், ராஜாஜி ஆகியோர் எழுதிய நூல்களை வெளியிட்டவர். "செட்டி நாட்டுப் பதிப்புத்துறை முன்னோடிகள் மூவர்" என்று சோமலெ அடையாளப் படுத்தும் ஆளுமைகளில் ஒருவராக விளங்கியவர். (மற்றவர்கள் சக்தி. வை. கோவிந்தன், தமிழ்ப்பண்ணை சின்ன அண்ணாமலை.) 1944ஆம் ஆண்டில் முல்லைப் பதிப்பகத்தைத் தொடங்கி பாரதிதாசனுடைய "அழகின் சிரிப்பு" கவிதைத் தொகுதியை முதல் நூலாக வெளியிட்டார். பிறகு பாரதி தாசனையே ஆதரவாளராகக்கொண்டு முல்லை இதழ் 1946இல் வெளிவரத் துவங்கியது.

'முல்லை' எட்டுப் பகுதிகளாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது. முதல் பகுதி யில் பாரதிதாசன் எழுதிய கவிதை களும் கதைகளும் அவருடைய கவிதை கள் தரும் வாசக அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும் மற்றவர்களுடைய கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. 'அவனே சேர மன்னன்' கவிதையைச் சுவைத்த விதத்தைப்பற்றி மு. அண்ணா மலை எழுதியிருக்கும் கட்டுரை சுவை யாக உள்ளது. இரண்டாம் பகுதியில் புதுமைப்பித்தனுடைய கட்டுரைகளும் சிறுகதைகளும் இடம்பெற்றுள்ளன. தமிழ்ச் சிறுகதைகளின் தோற்றத் தைப் பற்றியும் வளர்ச்சியைப் பற்றியும் தொகுத்துரைக்கும் புதுமைப்பித்தனின் "இலக்கிய மரபு" என்னும் கட்டுரை செறிவானது. மௌனியைச் "சிறுகதை யின் திருமூலர்" என்று புதுமைப் பித்தன் குறிப்பிடும் வாசகம் இக்கட்டு ரையில்தான் இடம்பெற்றுள்ளது.

மூன்றாம் பகுதியில் கவிதைகளும் நான்காம் பகுதியில் சிறுகதைகளும் ஐந்தாம் பகுதியில் மொழிபெயர்ப்புக் கதைகளும் இடம்பெற்றுள்ளன. கு. அழகிரிசாமியின் "ஏய்த்துவிட்டார் கள்" கவிதையும் நாரணலின் "எது வாழ்க்கை?" கவிதையும் நல்ல வாசக அனுபவம் தரக்கூடியவை. கதைப் பகுதியில் உள்ள 12 சிறுகதைகளில் ரகுநாதனின் "வென்றிலன் என்றபோதும்" என்னும் சிறுகதையும் லா. ச. ராமா மிருதத்தின் "அரவான்" என்னும் சிறுகதையும் அரைநூற்றாண்டைக் கடந்த நிலையிலும் பொலிவு குன்றா மல் உள்ளன.

"வென்றிலன் என்றபோதும்" பாரதப் பின்னணியில் அமைந்திருக்கும் சிறு கதை. குருஷேத்திரப் போரில் உயிர் துறக்கும் கர்ணனின் தோல்வியைப் பற்றியும் அவன் தருமன், திரௌபதை, அர்ஜுனன் என ஒவ்வொருவரின் உள்ளத்திலும் பரவி யாருமறியாத வகையில் அவன் பெற்றிருக்கிற வெற்றியைப் பற்றியும் சிறுசிறு சிற்பங் களாகப் புதுமையான வகையில் படைத்திருக்கிறார் ரகுநாதன். எது வெற்றி என்னும் முடிவுறாத புள்ளியில் நிறைவடைகிறது சிறுகதை. வெற்றிக் கும் தோல்விக்கும் நிரந்தரமானதும் தீர்மானமானதுமான பொருள் எதுவு மில்லை. அந்தந்தத் தருணங்களும் பார்வைக் கோணங்களுமே அதைக் கட்டமைக்கின்றன. ஒரு கோணத் தில் வெற்றியாகப் படுவது மற்றொரு கோணத்தில் தோல்வியாகப்படுகிறது. இப்படிப் பல எதிர் இணைவுகளை (அழகு, அருவருப்பு, செல்வம், வறுமை) உருவாக்கித் தொகுத்து விவாதம் நிகழ்த்துவன் வழியாகக் கதையின் தனம் மேலும் விரிவடையும் சாத்தியம் கொண்டதாகிறது.

லா. ச. ராவின் கதையில் அரவான் உருக்கமான படிமமாகிறான். பாரதத் தில் அரவானின் பலி போரின் வெற்றிக் காகவே கொடுக்கப்படுகிறது. அவனை முதல் பலியாகவும் பிறகு இரண்டு அணிகளையும் சார்ந்த இலட்சக்கணக் கான வீரர்களைத் தொடர்பலிகளாக வும் கொண்ட போரின் முடிவு யாருக் கும் நிம்மதியைக் கொடுக்கக்கூடிய தாக இல்லை. அரவான் பலிக்கு அர்த்தமே இல்லாமல்போகிறது. சிறு கதைக்குள் பட்டணத்துக்குப் பிழைக்க வந்த தம்பதியினரின் குழந்தை இறந்துபோகிறது. தமக்குள் இருந்த தொடர்பைக் குழந்தையின் பிறப்பு காட்டிக்கொடுத்துவிடும் என்கிற எண்ணத்தில் கிராமத்தைவிட்டு நகரத்தை நோக்கி நகர்ந்தவர்கள் அவர் கள். குழந்தையைக் காப்பாற்று வதற்காக வேலை தேடுகிறார்கள். வாடகைத் தாயாகப் பாலூட்டும்

படிப்பகம்


மதிப்புரை

வேலை மனைவிக்குக் கிடைக்கிறது, சொந்தக் குழந்தைக்குக் கிடைக்க வேண்டிய அமுதம் வேறொரு குழந்தையின் வயிற்றை நிறைக்கிறது. சொந்தக் குழந்தையைக் காப்பாற்ற இயலாமல் போகிறது. ராணுவத்தில் சேர முடிவெடுத்த கணவனுக்கும் நிம்மதியில்லை. சொந்தக் குழந்தையைக் காப்பாற்ற முடிவெடுத்து வேலையை உதறி விட்டு வரும் மனைவிக்கும் நிம்மதியில்லை. அர்த்தமே இல்லாத புள்ளியில் வாழ்க்கை உறைந்து நிற்கிறது.

மொழிபெயர்ப்புக்கதைப் பிரிவில் மராத்திய எழுத்தாளரான காண்டேகரின் நான்கு சிறுகதைகளும் குஜராத்தி எழுத் தாளரான மெஹதாவின் ஒரு சிறுகதையும் (மொழிபெயர்ப்பு : கா. ஸ்ரீ. ஸ்ரீ.) தரப்பட்டுள்ளன. உலகச் சிறுகதைத் தோற்றத்திற்கு வித்திட்ட எட்கர் ஆலன்போவின் "இதயத் துடிதுடிப்பு" என்னும் சிறுகதையும் எலின் வாக்னரின் "நொண்டி" என்னும் சிறுகதையும் ரகுநாதனால் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. இவ்விரண்டு சிறுகதைகளும் மிக உயர்ந்த வாசக அனுபவத்தைக் கொடுப்பவை.

இத்தொகை நூலின் மிக முக்கியமான பகுதியாக 45 கட்டுரைகள் கொண்ட பகுதியைச் சொல்ல வேண்டும். திரு. வி. க., மு. வ., சோமசுந்தர பாரதியார், அப்பாத்துரையார் போன்ற தமிழ்ப் பண்டிதர்களும் அரசியல் இயக்கத்தைப் பிரதான செயல்பாடாகக் கொண்ட சி. என். அண்ணாதுரை போன்றவர்களும் தண்டபாணி தேசிகர், எஸ். டி. சுந்தரம் போன்ற பிறதுறையாளர்களும் ரகுநாதன், அழகிரிசாமி, கா. ஸ்ரீ. ஸ்ரீ. போன்ற படைப்பாளிகளும் பற்பல தலைப்புகளில் எழுதிய கட்டுரைகள் இப்பகுதியில் இடம் பெற்றுள்ளன. நம சிவாய முதலியார் என்பவரைப் பற்றி "தமிழ்க் கற்பகம்" என்னும் தலைப்பில் திரு. வி. க. தீட்டியுள்ள சொற்சித்திரம் மிக அழகான சிற்பம்போல உள்ளது. தண்டபாணி தேசிகரின் "இசை இன்பம்" என்னும் கட்டுரை இனிய வாசிப்பனுபவம். அஜந்தா குகையோவியங்களைப் பற்றிய ஈழகேசரியின் கட்டுரையும் "வந்த வாழ்வு" என்கிற தலைப்பில் எஸ். டி. சுந்தரம் எழுதிய கட்டுரையும் நல்ல சித்திரத்தன்மை கொண்டவை. நூலின இறுதிப் பகுதியில் சில கடிதங்களும் புகைப்படங்களும் இடம்பெற்றுள்ளன.

உயர்ந்த தாளில் தரமான முறையில் பிழையற்ற வகையில் நேர்த்தியாக இத்தொகைநூலை உருவாக்கியதற்காகப் பதிப்பகத்தாரைப் பாராட்ட வேண்டும். இலக்கியச் சுவையை விரும்பும் வாசகர்கள் இந்நூலை அவசியம் படிக்க வேண்டும். □



## ஸூஃபிகள் தர்ஹாக்கள்

**சில மாற்று உரையாடல்கள்**

தொகுப்பாசிரியர்: **எச். ஹாமீம் முஸ்தபா**

*வெளியீடு:*

**கீற்று வெளியீட்டகம்,** 1/30H, ஹிரா கார்டன், லைட் ஹவுஸ் மண்டபம் அருகில், அழகிய மண்டபம் முளகுமூடு அஞ்சல், குமரி மாவட்டம் 629 167.

பக். 92; விலை ரூ. 25/–

## களந்தை பீர் முகம்மது

இந்தியச் சமூகத்தின் பல மூடுண்ட நிலைகளுக்கு எதிரான புயலாக வீசி, சாதியக் கட்டுக்கோப்பையும் தகர்த்துத் தன்னை நிலைநிறுத்திக்கொண்ட ஸூஃபித்துவம் தன் சமூகத்துக்குள்ளேயே இன்று கடும் எதிர்ப்பினைச் சந்திப்பதை ஒரு கால விளையாட்டாகத்தான் கொள்ளவேண்டும். ஸூஃபித்துவத்துக்கு எதிரான வஹாபியக் கோட்பாடுகள் இஸ்லாத்தின் அடிப்படைகளைச் சேதமுறாமல் காக்க முற்படுகின்றன. ஆனால் இஸ்லாம் உலகெங்கிலும் வலுவாகப் பரவிட ஸூஃபித்துவமே பெரும் பங்காற்றியுள்ளது. இஸ்லாம் மார்க்கத்தை அந்தந்த மண்ணின் கலாச்சார இயல்புகளுக்கு ஏற்றபடியும் பன்மைத் தன்மையுடனும் இறுக்கமற்ற எளிமையுடனும் இயங்கச் செய்தது ஸூஃபித்துவமே. ஸூஃபித்துவத்தின் பரவல் பல மார்க்க மேதைகளைத் திக்குமுக்காடச் செய்தது. எனவே, ஸூஃபித்துவம் என்பது நபிகள் நாயகத்தின் காலத்தில் இல்லாதது எனவும் அது இதர சமயக் கூறுகளை உள் வாங்கிக்கொண்டிருப்பது எனவும் கூறினார்கள். " இறைவனை நீங்கள் பார்ப்பதாக நினைத்து இறைவணக்கம் செய்யுங்கள்; இந்த நிலை உங்களுக்கு ஏற்படாவிடின் இறைவன் உங்களைப் பார்க்கிறான் என்று நினைத்தாவது வணங்குங்கள்" என்று அஸ்ஹாபுல் ஸுஃப்ஃபா என்கிற திண்ணைத் தோழரிடம் நபிகள் நாயகம் கூறியதே ஸூஃபித்துவத்தின் மூலப்பாதை என்று கருதப்படுகிறது. சகல உயிர்களின் மீதும் அன்பு செலுத்துவதே ஸூஃபிகளை இயக்கிய விதி. இஸ்லாமிய ஆன்மீகத்தையும் சகோதரத்துவத்தையும் உலகிற்கு உணர்த்தியது ஸூஃபித்துவம்; இதனடியாகச் சகமதத்தினர் மீதும் மாற்றுக் குறையாத நேச உணர்வுகளைப் பரிமாறியது. ஸூஃபிகளும் மருத்துவச்சேவைகளைப் புரிந்ததுடன் அன்பினாலும் மக்களை ஈர்க்கும் நல்லொழுக்கத்தாலும் தங்களின் வாழ்வை நிறுவிக்கொண்டனர். சங்கரரின் அத்வைதமும் பசவேசருடைய வீரசைவமும் சித்தர்களின் கோட்பாடும் ஸூஃபித்துவத்தின் தாக்கம் கொண்டவை என்று ' இந்தியக் கலாச்சாரத்தில் இஸ்லாத்தின் பங்கு' என்கிற தன்னுடைய நூலில் டாக்டர் தாராசாத் கூறியிருக்கிறார். ஸூஃபிகளின் அடக்கஸ்தலங்களாகிய தர்ஹாக்கள் பல்வேறு சமயத்தினரின் வழிபாட்டுக்குரிய இடங்களாக மாறியிருப்பது மேலே குறிப்பிடப்பட்ட செய்திகளினாலேதான்.

தவறாகப் புரிந்துகொள்ளப்பட்ட இஸ்லாம் வழியாக முஸ்லிம்கள் இன்று சர்வதேச ரீதியான நெருக்கடியைச் சந்திக்கின்றனர். முன்னொரு காலத்தில் இறையச்சமும் ஐந்து கடமைகளைப் பேணி வருவதும் முஸலிம்களுக்குப் போதுமானதாக இருந்தது. சமீபகாலமாக இந்நிலைமை அப்படியே தலைகீழாக மாறிவிட்டது. பிழைப்பு தேடி வளைகுடா நாடுகளுக்குப் போனவர்களின் மூலம், அரேபியநாட்டுக் கலாச்சாரமும் அங்குள்ள கருத்தாடல்களும் தமிழகத்திற்குக் கொண்டுவரப்பட்டன. அரேபியக் கலாச்சாரத்தைப் பேணுவதின் மூலமே இஸ்லாத்தையும் பேணமுடியும் என்பதான ஒரு மயக்கம் ஊடுருவியது. இதன்மூலம் வஹாபியிசக் கோட்பாடுகள் காலூன்றின. இஸ்லாத்திற்குள் மண்டிக்கிடக்கிற மூடநம்பிக்கைகளை வஹாபியிசம் ஒழித்துக்கட்டுவதான பாவனையில், மார்க்கத்தை ஒரு நூலிழைத் தடமாக்கிவிட்டது. மீண்டும் இறுக்கம் தோன்றுகிறது. இதன் வழியே முஸ்லிம் உலகுக்குத் தலைமைதாங்கச் சவுதிஅரேபியா முயற்சி செய்கிறது. இந்தச் சூழ்நிலைகளைக் கணக்கில்கொண்டு ஸூஃபியிசத்தை அணுகவேண்டிய அவசியம் உண்டாகிறது.

ஸூஃபித்துவம் சற்றே பின்னோக்கிய தன்மையில் தோன்றினாலும் அது ஜனநாயகத்தன்மையுடன் இயங்கி வருகிறது. அந்தந்த மண்ணுக்கேற்ற இஸ்லாமிய நடைமுறைகளுக்கு அது வழிகாட்டுகிறது. 'ஸூஃபிகள், தர்ஹாக்கள் – சில மாற்று உரையாடல்கள்' என்கிற இந்நூல் ஒரு பொருத்தமான காலகட்டத்தைத் தேர்ந்தெடுத்து வெளிவந்திருக்கிறது. இஸ்லாம் சந்திக்கிற நெருக்கடியை மனந்திறந்து விவாதிப்



படிப்பகம்

www.padippakam.com



படுத்துகிறது. ந. முத்துமோகன், டி. தருமராஜன் ஆகியோரின் கட்டுரைகள் மிகமிக முக்கியமானவை. நூலைப் படிக்கத் தொடங்கும்போது ந. முத்துமோகன், டி. தருமராஜன், ஹெச். ஜி. ரசூல் என வரிசைப்படுத்திப் பிறகு இதரக்கட்டுரைகளை வாசிப்பதன் மூலம் சூஃபியிசத்தைப் புரிவதற்கான பெரும்வெளி ஒன்று கிடைக்கும். இஸ்லாம் என்றால் அமைதி, சமாதானம், பணிவு என்று கூறப்படுவதின் காரணம் என்னவென்பதை வரலாற்று நோக்கில் ஆய்வு செய்திருக்கிறார் முத்துமோகன். இந்தப் பொருள்கூறல்கள் ஏன் தேவைப்பட்டன என்பதற்கு அராபியச் சூழலில் வாணிபம் மற்றும் தனியுடைமை உறவுகள் பற்றிய ஆய்வாக விரித்தளாவுகிறது அவர் கட்டுரை. கூடவே இஸ்லாமியச் சமூகத்தின் தோற்றக் காலத்தையும் சங்ககாலத் தமிழ்ச் சமுதாயம் வணிக வளர்ச்சியை முன்னிறுத்திய இருவமான அறவியலுக்கு மாறிச் சென்ற காலத்தையும் ஒப்பிடும் முறை வியப்பூட்டுகிறது. ஏகத்துவ இறைக்கொள்கை பழந்தமிழகத்தில் தோன்றுவதற்கு அவசியமில்லாத சூழலில் அரேபியாவில் அது தோனறிய விதம் பற்றிய நுட்பமான ஆய்வும் இக்கட்டுரையில் தென்படுகிறது.

டி. தருமராஜனின் கட்டுரையானது தமிழ் இஸ்லாமியச் சமூகத்துக்குள் நாட்டார் மரபுகள் ஊடுருவிய விதத்தை விளக்குகிறது. பின்பு இவை இஸ்லாமியச் சமூகமரபுகளாகின்றன. இந்த மரபுகள் வலுவாக ஊன்றிக்கொள்ளச் சூஃபித்துவம் இடமளிக்கும்போதே, அந்த மரபுக்குள் சூஃபித்துவமும் இரண்டறக் கலந்துவிடுகிறது.

இந்த வரலாற்று ஒளியினூடாகக் கான்சாகிபுவின் (மருதநாயகம் என்றழைக்கப்படுபவர்) சமாதி, தர்க்காவாக மாறிய பின்னணியை விளக்குகிறார். கான்சாகிபு சாதிய அடையாளம் இல்லாதொரு வாழ்க்கையை வாழ்ந்து காட்டியவர். வர்ணாஸ்ரம கர்மம் வேரூன்றிய சாதியச் சமூகத்தில் அந்தத் தளைகள் இல்லாமல் கான்சாகிபு வாழ்ந்திட இஸ்லாம் எந்த அளவிற்குக் காரணமாக இருந்தது என்று தருமராஜன் விளக்குகிறார். ஆனாலும் தமிழ் மரபுகளை இன்னும் தெளிவான சித்தத்துடன் இஸ்லாமும் பேச மறுக்கிறது என்கிற தர்மராஜனின் கூற்று கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதுதான். அதே சமயத்தில் இதை முஸ்லிம்கள் முன்னெடுத்துப் பேசுவதைவிடவும் தர்மராஜன், முத்துமோகன் போன்றோர் முன்னெடுப்பதே சிறப்பாக இருக்கும். வரலாற்றியல் முறையில் இப்படியான ஆய்வுகளைச் செய்யக்கூடிய தளம் இன்னும் தமிழ் இஸ்லாமியத்தில் இல்லவே இல்லை. மேலும் முஸலிம் அறிஞர்கள் இதைப் பேச முனைந்தால் ஏற்கனவே தேர்ந்தெடுத்துக்கொண்ட முடிவுக்குச் சாதகமான அம்சங்களை மட்டுமே தேடிச் செல்வார்களே தவிர, புதிய திசையைத் தேடிச் செல்ல அவர்களால் முடியாது. தங்களது தேர்வுக்கு மாறான செய்திகள் கிடைத்தால் அவற்றைக் கைநழுவ விட்டுவிடும் அபாயமும் இருக்கிறது.

ஹெச். ஜி. ரசூலின் கட்டுரை வஹாபிசத்தின் அராஜகமுகத்தை வெட்ட வெளிச்சமாக்குகிறது. நபிகளின் அடக்கத்தலத்தை அகற்றுவிக்கும் விதமாக வஹாபிய வம்சத்தைச் சேர்ந்த அரசர் பிரிட்டிஷ் படையினரின் (இதனை மத ரீதியாகக் கிறிஸ்தவர்கள் என்று அடையாளப்படுத்திக்கொள்வது நல்லது.) துணையுடனே அவ்வாறு செயல்பட்டுள்ளார். ஆதாரபூர்வமான ஹதீஸ்களை முன்னும் பின்னுமாகக் கத்தரித்துத் தங்களுக்கேற்ற வகையில் வஹாபிகள் திரித்துக்கொண்டனர். இந்தக் கட்டுரையையொட்டி உரூஸ்களின் புனிதம் பற்றிய கட்டுரை இடம்பெற்றுள்ளது. சமூகச் சூழல்களில் இறுக்கம் அடைந்த மனோநிலை சற்று ஆசுவாசம் கொள்வதற்கான சாத்தியப்பாடுகள் உரூஸ்களில் அதிகம் தென்படுகிறது எனவும், நம்பிக்கைவாதியானவன் விழாவின் உட்பகுதியான ஆதிகாலத்துக்குள் சென்றுவிடுகிறான் எனவும் கட்டுரையில் கூறப்படுகிறது. இது விவாதத்திற்குரியதே. தர்ஹாக்களின் தரவுகளோடு உரூஸ்களையும் அவை மீதான கொண்டாட்டங்களையும் இணைப்பது வியப்பாகவே இருக்கிறது. உரூஸ்களின் மீதான சமூக மனோநிலை உருவ வழிபாட்டுக்கு இட்டுச்செல்வதையும் அதன்மீது அதீதமான நம்பிக்கைகள் வெளிப்படுத்தப்படுதலையும் கவனித்தால் இஸ்லாமிய வழிபாட்டு முறைகளுக்கு அவை இசைவானவையல்ல என்றே கூறமுடியும். உரூஸ்களையொட்டி வேறுபட்ட கலாச்சாரச்சூழல் நிலவுவதைக் கவனிக்க வேண்டும். வஹாபிகளை மிகவும் ஆத்திரமூட்டக்கூடிய செயல் இது.

சூஃபித்துவத்தின் தேடலில் தமிழ் மரபில் நிலவும் பல கருத்தாடல்கள் கையாளப்படுகின்றன. சக்தி – சிவன் என்று பயன்படுத்தப்படும்பொழுது அதுபற்றிய பார்வையை இந்துக்களின் வழபாட்டு மரபுகளோடு இணைத்துப் பார்க்கிற போக்கும் நிலவுகிறது. சக்தியுஞ்சிவனென்று சொல்லுவது என்னடிக் கண்ணே / அது தகதக வென்று வரும் அகார உகரம் பொன்னே / அகார உகாரமென்று வஸ்தைச் சொல்லலாம் கண்ணே / அது அன்பான லாமலி பாகிய முச்சுடர் பொன்னே! என இப்பாடல் சரக்கலை பல்லார் பீரப்பாவின் மெய்ஞான அமிர்தகலையில் இடம்பெறுள்ளது. அரபுமொழி வார்த்தைகளை ஞானத்தின் வழியாகவே தமிழ்ச் கருத்தாடல்களின் மூலம் விளக்க முடிகிறது. ஞானத் தேடல் சமயம் கடந்த நிலைக்கு அழைத்துச்செல்கிறது. இவ்வாறாக சூஃபிசமும் தர்ஹாக்களும் சமூகத்தில் நிலைநிறுத்திக்கொண்டுள்ள சகல பரிமாணங்களையும் மிகவிரிவாக ஆராய்வதற்குப் பல வரலாற்றுச் செய்திகளை அறிவதற்கும் இந்நூல் உதவுகிறது. சூஃபித்துவத்தின் மீது எழுந்துள்ள கேள்விக்குறிகளையும் இச்சிறிய நூல் ஒதுக்கித் தள்ளிவிடுகிறது. □


**சலுகை விலையில் அருணன் நூல்கள்**

**பொங்குமாங்கடல்** ரூ. 150
(கால் நூற்றாண்டு காலக் கலை–இலக்கியக் கட்டுரைகள்)

**நிழல்தரா மரம்** ரூ. 100
(கழுகுமரத்தில் சமணர்கள் சிந்திய ரத்தத்தில் முகிழ்த்த நாவல்)

**பூரு வம்சம்** ரூ. 60
(மகாபாரதத்தை அடிப்படையாகக் கொண்ட சமூக நீதி நாவல்)

**சரயூ** ரூ. 50
(ராமாயணத்தின் புறக்கணிக்கப்பட்ட மாந்தர்கள் வழி நாவல்)

ரூ. 360 விலையுள்ள இந்த நான்கு நூல்களும் ரூ. 250க்குத் தரப்படுகின்றன. மணி ஆர்டர்/டி. டி. மூலம் பணம் அனுப்புங்கள். நூல்கள் வீடு தேடி வரும். தபால் செலவை வெளியீட்டகமே ஏற்கிறது.

வசந்தம்
**வசந்தம் வெளியீட்டகம்**
69/24A, அனுமார் கோவில் படித்துறை
சிம்மக்கல், மதுரை – 625 001.
தொலைபேசி: 2641 997 / 2625 555
மின்னஞ்சல்: vasanthamtamil@yahoo.co.in

விளம்பரம்



சத்யஜித்ரே
**பதேர்பாஞ்சாலி அகாந்தக்**
செழியன்

விலை: ரூ. 125 பக்கம்: 216

**சத்யஜித்ரேயின் முதல் மற்றும் கடைசித் திரைக்கதைகள், சில அரிய கட்டுரைகள், நேர்காணல்கள் உள்ளடக்கியது இந்நூல்.**

வெளியீடு:
**அன்னம்**
மனை எண். 1, நிர்மலா நகர்
தஞ்சாவூர் 613 007.

விளம்பரம்

www.padippakam.com







நினைவோடை – கிருஷ்ணன் நம்பி

# மார்கழிக் குளிர் இதமான வெந்நீர்

**எம். எஸ்.**

**கி**ருஷ்ணன் நம்பியை நான் முதலில் சந்தித்தபோது அவர் அழகிய நம்பி என்ற பெயரில் மாணவராயிருந்தார். நான் படித்த எஸ். எம். ஆர். வி. பள்ளியில் ஃபோர்த் பார்ம் படித்துக்கொண்டிருந்தார். என்னைவிட மூன்று நான்கு வருடம் இளையவர். அவருடைய கிளாஸ்மேட் ஒருவன் என் ஊரான திருப்பதிசாரத்தில் இருந்ததால் அவனைப் பார்க்க நம்பி அடிக்கடி அங்கு வருவார். நாங்கள் ஒரே ஸ்கூல் என்பதாலும் எனக்கும் புத்தகம் படிப்பதில் ஆர்வம் இருந்தது என்பதாலும் எங்களுக்குள் பழக்கம் ஏற்பட்டது. அப்போது எங்கள் ஊரில் ஒரு நல்ல நூல்நிலையம் இருந்தது. நிறையப் புத்தகங்கள். எல்லாம் அபூர்வமானவை. பல புத்தகங்களை நான் நம்பிக்குப் படிப்பதற்காக எடுத்துக் கொடுத்திருக்கிறேன். விரைவாகவே படித்துவிட்டுத் தன் அபிப்பிராயத்தைச் சுருக்கமாகச் சொல்லுவார். அது கூர்மையான விமர்சனமாக இருக்கும். தயவு தாட்சண்யம் காட்டமாட்டார். பலதடவை என் அபிப்பிராயத்துக்கு மாறாக இருந்தாலும் எவ்வளவு ஆழ்ந்து படித்திருக்கிறார் என்று வியப்படைவேன். பழையாற்றின் மணல் பரப்பில் உட்கார்ந்து இருட்டும்வரை பேசிக்கொண்டிருப்போம்.

வேலை விஷயமாக நான் வெளியூர் சென்றுவிட்டு மீண்டும் நாகர்கோவில் வந்தபோது நம்பி ஓர் உரக்கடை வைத்திருந்தார். முதன்முதலில் அந்தக் கடைக்குள் நுழைந்த போது எனக்கு மூச்சுத் திணறியது நினைவிருக்கிறது. உரத்தின் வாடையைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. "கொஞ்சம் பழகினால் சரியாகப் போய்விடும்" என்றார் நம்பி. இரண்டொரு நாளில் எனக்கும் பழகிவிட்டது. வாரத்தில் மூன்று நான்கு நாள்கள் கடைக்குச் சென்று நீண்டநேரம் பேசிக்கொண்டிருப்பேன்.

ஐம்பதுகளின் பிற்பகுதியில் சிறுகதை எழுதத் தொடங்கிய நம்பி சுமார் 20 கதைகள் எழுதியிருக்கிறார். 'நீலக்கடல்', 'காலை முதல்' என்ற தொகுதிகளில் அவை வெளிவந்தன. 'காலை முதல்', 'வருகை', 'கணக்கு வாத்தியார்' போன்ற கதைகள் மிக நல்ல கதைகள். எனக்குப் பிடித்தது 'மருமகள் வாக்கு'தான். அப்புறம் அவரது குழந்தைப் பாடல்கள். சசிதேவன் என்ற பெயரில் அவர் எழுதிய குழந்தைப் பாட்டுகளே அவருக்கு அதிகப் புகழைத் தந்தன என்று சொல்வார்கள். 'யானை என்ன யானை' என்ற தொகுதியில் வந்திருக்கும் சுமார் 40 பாடல்களும் அவரது எளிமையான குழந்தை மனத்தைப் பிரதிபலிப்பவை. உலகின் ஒவ்வொரு பொருளையும் வியப்புடனும் மகிழ்ச்சியுடனும் பார்க்கும் ஒரு குழந்தையின் வெளிப்பாட்டை அக்கவிதைகளில் காணலாம்.

அபூர்வமான இரசனையும் எதையும் இலகுவாக எடுத்துக்கொள்ளும் சுபாவமும் அற்புதமான நகைச்சுவை உணர்வும் குழந்தை மனமும் கொண்ட நம்பிக்குத்தான் அந்தத் துயரமிக்க சோதனை வந்தது. கான்சர் காரணமாக ஒரு காலை முழங்காலிலிருந்து எடுக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. ஆயினும் அதை அவர் இயல்பாகவே எடுத்துக்கொண்டார். அல்லது தன் மன வேதனையைக் காட்டிக்கொள்ள விரும்பாதவராக இருந்தார்.

ஆப்பரேஷனுக்குப் பிறகு ஒரு நாள் அவரைப் பூதப் பாண்டி சென்று சந்தித்துப் பேசிக்கொண்டிருந்தேன். திரும்பி வரும்போதுதான் அவருடைய காலைப்பற்றி எதுவுமே பேசிக்கொள்ளவில்லை என்பது நினைவுக்கு வந்தது. அடுத்த தடவை அவரைப் பார்த்தபோதுதான் ஆப்பரேஷன் பற்றிய விவரங்களைக் கூறினார். மற்றொரு தடவை பேசும்போது வெட்டியெடுத்த கால் இன்னும் அங்கேயே இருந்துகொண்டிருப்பதுபோல உணர்வதாகச் சொன்னார். உள்ளங்காலில் அரிக்கிறது; சொறிந்துவிட வேண்டும்போல் தோன்றுகிறது என்றார்.

எல்லோரையும்விட நம்பியுடன் நெருங்கிப் பழகிய சு. ராவின் நினைவோடையைப் படிக்கும்போது பலருக்கும் நம்பியுடன் கழித்த நேரங்கள் நினைவுக்கு வரும். பல நிகழ்ச்சிகள் மனத்தை அழுத்தும். இந்த நினைவோடை வரிசை தமிழுக்குப் புதிது. இவை வெறும் வாழ்க்கைக் குறிப்புகள் அல்ல என்பதுதான் இவற்றின் சிறப்பு. நிறை குறைகளோடு அவர்கள் மனிதர்களாக உயிர்த் துடிப்போடு காட்டப்படுகின்றனர்.

இந்த வரிசையில் வந்திருக்கும் நான்கு புத்தகங்களிலும் நம்பியைப் பற்றிய புத்தகம் சற்று வித்தியாசமானது. க. நா. சு., ஜீவா, செல்லப்பா மூவரும் சு. ராவைவிட மூத்தவர்கள்; அனுபவம் மிக்கவர்கள். அவர்களைச் சற்று மரியாதையுடனும் ஒருவித வியப்புடனும்தான் சு. ரா. அணுகியிருக்கிறார். அவர்களைப் பற்றிய நினைவுக் குறிப்பு களிலும் இது வெளிப்படத்தான் செய்கிறது. அவர்களோடு சு. ராவுக்குள்ள பழக்கமும் அளவில் சிறிதுதான். ஆனால் நம்பி வயதில் இளையவர். சு. ராவை வியப்போடு பார்க்கும் ரசிகன் நிலையில் இருந்து உயர்ந்து நெருங்கிய நண்பனாக மாறியவர். எனவே நம்பியைப் பற்றிய நினைவுகள் சற்று உணர்ச்சிமிக்கவையாக, உள்ளத்தைத் தொடுபவையாக அமைந்திருப்பதில் வியப்பில்லை.

இதைப் படித்தபோது மிகவும் நெகிழ்ச்சியடைந்தேன். நம்பியைப் பற்றிய ஒரு முழுமையான சித்திரம் தீட்டப் பட்டிருக்கிறது. அவரை ஒரு கதாசிரியர், கவிஞர் என்பதைவிட நல்ல நண்பராகக் காண்கிறோம்.

இப்புத்தகத்தை நம்பியே படித்தால் எப்படியிருக்கும் என்று நினைக்கத் தோன்றியது. தன் வழக்கமான குழந்தைச் சிரிப்புடன், "ராமசாமி எவ்வளவு சுவாரஸ்யமாகச் சொல்லி யிருக்கிறார் பாருங்கள். மனத்தைத் தொட்டுவிடும்படி. சின்னச் சின்ன விஷயங்கள்கூட அவருடைய வார்த்தையில் மொட்டுகள் விரிவதுபோல மலர்கின்றன. மார்கழிக் குளிரில் இதமான வென்னீரில் குளிப்பதுபோல் சுகமாக இருக்கிறது" என்று சொல்லுவார் என்று நினைத்துக்கொண்டேன்.

எனக்கும் அப்படித்தான் சொல்ல வேண்டும் எனத் தோன்றுகிறது.

*(நாகர்கோவில் சுதர்சன் புக்ஸூம் ஒளிவெள்ளம் காலாண்டிதழும் இணைந்து 28 டிசம்பர் 2003 அன்று நடத்திய நூல் வெளியீட்டரங்கில் ஆற்றிய உரையின் சுருக்கம்.)*



படிப்பகம்

அஞ்சலி



# டேவிட் பாக்கியமுத்து

(20.6.1923 – 04.06.2004)

# சமய எல்லை தாண்டி

'பாக்கியமுத்து சார்' என இலக்கிய ஆர்வலர்களால் அழைக்கப்பட்ட திரு. டேவிட் பாக்கியமுத்து 04. 06. 2004 அன்று இதயத் தாக்குதலுக்கு ஆளாகித் தமது 81ஆம் வயது நிறைவடையும் தறுவாயில் காலமானார். பாளையங்கோட்டை புனித யோவான் கல்லூரியில் பேராசிரியராகத் தம் பணியைத் தொடங்கிச் சென்னைக் கிறித்தவ இலக்கியச் சங்கத்தின் (CLS) பொதுச் செயலாளராகவும் அஸ்ஸாமில் செயல்பட்டுவந்த கிறித்தவ இலக்கிய மையத்தின் இயக்குநராகவும் பணி யாற்றி ஓய்வு பெற்றவர். ஓய்வு பெற்றபின் பாளையங் கோட்டையில் குடியேறி 'நண்பர் வட்டம்' என்ற மாத இதழை நடத்திவந்தார்.

கிறித்தவ இலக்கியச் சங்கத்தின் பொதுச் செயலாளராக இவர் பணியாற்றியபோது 'நண்பர் வட்டம்' என்ற பெயரில் ஆண்டுதோறும் தற்காலத் தமிழ் இலக்கியம் தொடர்பான கருத்தரங்கினைப் பொங்கல் விழாவையொட்டி நடத்தி வந்தார். சமய எல்லையைத் தாண்டிப் பல்வேறு சிந்தனைப் போக்குடைய அறிஞர்களை அழைத்துவந்தார். கருத்தரங்கக் கட்டுரைகளைத் தொகுத்து நூலாகவும் வெளியிட்டு வந்தார். 'வளரும் தமிழ் இலக்கியம்', 'இன்றைய தமிழ் இலக்கியத்தில் மனிதன்', 'விடுதலைக்குப் பின் தமிழ் நாவல்கள்', 'தமிழ் நாவல்களில் மனித விமோசனம்', 'இலக்கியத்தில் பெண் கள்', 'தமிழ் நாவல்களில் குடும்ப சக்தி, சமுதாய மாற்றம்', 'நூறாண்டு தமிழ் நாவல் தரும் செய்தி', 'தமிழ் நாவல்களில் மனித உரிமைகளும் மக்கள் போராட்டமும்' என்பன இவர் பதிப்பித்து வெளியிட்ட கட்டுரைத் தொகுப்புகள்.

தமிழின் தொடக்ககால நாவலாசிரியர்களுள் ஒருவரான அ. மாதவையாவின் 'கிளாரிந்தா', 'சத்தியநாதன்' என்ற இரு ஆங்கில நாவல்களையும் தமிழ் மொழிபெயர்ப்பாக CLS வாயிலாக வெளியிட்டார். இவ்விரு நாவல்களையும் அவரது துணைவியார் சரோஜினி பாக்கியமுத்துதான் தமிழாக்கம் செய்தார். சீர்திருத்தக் கிறித்தவ சமயத் தொடர் பான நூல்களையே வெளியிட்டும் விற்பனை செய்தும் வந்த CLS நிறுவனத்தை நவீனத் தமிழ் இலக்கியத்தின் பக்கம் திருப்பியதில் இவருக்கு முக்கியப் பங்குண்டு. அவரது இறுதிக் காலத்தில் தமிழ்நாட்டில் கிறித்தவம் பரவிய வரலாற்றை எழுதுவதில் ஆர்வம் காட்டிவந்தார். அவரது ஆர்வம் சமய எல்லையைத் தாண்டி வரலாறு சார்ந்ததாக இருந்தது. திருநெல்வேலியில் கிறித்தவத்தைத் தழுவிய குடும்பங்களின் வரலாற்றை வெளிப்படுத்தும் வகையில் 'குடும்ப வரலாற்றுக் கருத்தரங்கம்' ஒன்றை 1998இல் நடத் தினார். இக்கட்டுரைகளைத் தொகுத்து 'புதியதோர் சமுதாயம்' என்ற தலைப்பில் நூலாகப் பின்னர் வெளியிட்டார்.

விஸ்கான்சின் பல்கலைக்கழகப் பேராசிரியரான இராபர்ட் எரிக்ஃபிரிக்கன்பெர்க் என்பவர் இந்நூலின் முன்னுரையில், 'இத்தொகுப்பு மேனாட்டுப் போக்கில் அமைந்தது அல்ல. நமது நாட்டை மையப்படுத்தி, நமது நோக்கில், நமது அணுகுமுறையில் தயாரிக்கப்பட்டது. வரலாறும் நமது பார்வையிலிருந்தே சொல்லப்படுகிறது' என்று எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது. தமது 80ஆம் பிறந்த நாளில், 'திருநெல்வேலிக்குக் கிறித்தவம் வந்தது' என்ற நூலை வெளியிட்டார். இந்த ஆண்டு தமது 81ஆம் பிறந்த நாளில் (20. 06. 2004) 'சென்னைக்குக் கிறித்தவம் வந்த வரலாறு' என்ற நூலை வெளியிடத் திட்டமிட்டி ருந்தார். அதற்குள் அவர் மறைந்துபோனது வருந்துதற்குரியது.

**ஆ. சிவசுப்பிரமணியன்**



பதிவுகள்

## உதயன் கார்ட்டூன் நூல் வெளியீட்டு விழா

# கோடுகளின் கோபம்

கார்ட்டூனிஸ்ட் உதயனின் நினைவு அறக்கட்டளைத் தொடக்க விழாவும் காலச்சுவடு பதிப்பகம் வெளியிட்ட உதயனின் கார்ட்டூன் தொகுப்பு நூல் வெளியீட்டு விழாவும் 12.06.04 மாலை சென்னைத் தென்னிந்திய நடிகர் சங்க வளாகத்தில் நடைபெற்றது.

ஓவியர் அரஸ் வரவேற்புரையும் புகழேந்தி அறிமுக உரையும் ஆற்றிய பிறகு பிரபல கார்ட்டூனிஸ்ட் மதன் நூலை வெளியிட முதல் பிரதியைப் பெற்றுக்கொண்டார் சாரதா அம்மாள் (உதயனின் தாயார்). உதயனின் போர்க்குணத்தையும் எதற்கும் யாரிடமும் சமரசம் செய்துகொள்ளாத அவரது போக்கையும் மதன் சுட்டிக்காட்டினார். பேச்சாளர்கள் அனை வரும் உதயனின் இந்த குணத்தைப் பற்றிப் பேசினார்கள்.

எழுத்தாளர்கள் பிரபஞ்சன், விக்கிரமன், தீம்தரிகிட ஞாநி, தினமணி பொன் தனசேகரன், தஞ்சைத் தமிழ்ப் பித்தன், கா. கலைக்கோட் உதயம், காலச்சுவடு அரவிந்தன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமா வளவன், நக்கீரன் கோபால் ஆகியோர் விழாவில் உரை யாற்றினார்கள். உதயனின் 5000 கார்ட்டூன்களையும் தொகுத்து, ஓர் இணைய தளத்தை உருவாக்க வேண்டும்; உதயனின் பெருமையை உலகெல்லாம் கொண்டு சேர்க்க இது உதவும் என்றார் திருமாவளவன். உதயனை ஊக்குவித்து ஆதரித்தவர்களில் ஒருவரான நக்கீரன் கோபால், இந்த நூலைத் தான்தான் முதலில் வெளியிட்டிருக்க வேண்டும் என்றும், 'பொடா'வில் உள்ளே போய்விட்டதால் அது முடியாமல்போய்விட்டதென்றும் வருத்தப்பட்டுக்கொண்டார். காலச்சுவடு பதிப்பகம் உதயனின் கார்ட்டூன்களை அழகாக வெளியிட்டிருக்கிறது என்று பாராட்டிய கோபால், நக்கீரன் இதழ்களில் வெளிவந்த உதயனின் கார்ட்டூன்களை (சுமார் 500) ஒரு நூலாக வெளியிட இருப்பதாகவும் கூறினார்.

உதயனின் நினைவு நாளையொட்டி ஆண்டுதோறும் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்குக் கார்ட்டூன்கள் வரையப் பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்போவதாக அறிவிக்கப்பட்டது. விழாவில் அறக்கட்டளைக்காகவும் உதயனின் குடும்ப நலத்திற்காகவும் நிதி திரட்டினார்கள். விழாவின் ஆரம் பத்திலிருந்து உதயனின் தாயார் சாரதா அம்மாள் கண்ணீர் சிந்தியபடியே இருந்தார். விழாவை முன்னின்று நடத்தியதுடன் அறக்கட்டளை முதலான பணிகளையும் மேற்கொண்டு வரும் ஓவியர் அரஸ், புகழேந்தி ஆகியோரின் உழைப்பும் ஈடுபாடும் பாராட்டப்பட வேண்டியவை. ஆனால் இவர்கள் இருவரும் ஒவ்வொரு பேச்சாளரும் பேசி முடித்தவுடன், மைக்கைப் பிடித்து ஒரு குட்டி உரையை ஆற்றியது மட்டும் தாங்க முடியாததாக இருந்தது.

வீரியம் மிகுந்ததொரு கார்ட்டூனிஸ்டின் நினைவாக நடத் தப்பட்ட நிகழ்ச்சி, சிறப்பான சில உரைகளாலும் நெகிழ்ச்சி யான சில தருணங்களாலும் நினைவில் நிற்கும் நிகழ்வாக அமைந்தது. கார்ட்டூனிஸ்டுகள் உழைக்கும் பத்திரிகையாளர் என்ற வரையறைக்குள் அடங்குவார்களா பணியின்போது இறக்கும் பத்திரிகையாளர்களுக்குத் திருமணமாகியிருந்தால் தான் அவர் குடும்பத்திற்கு அரசின் நிதி உதவி கிடைக்குமா என்பது போன்ற பிரச்சினைகள் கூர்மையாக அலசப் பட்டதும் கூட்டத்தின் ஆரோக்கியமான அம்சங்களில் ஒன்று.

**வர்ஷினி**


www.padippakam.com



### டாம் மொரைஸ்

# நிலைகொள்ளாத வாழ்வு

## பி. ஏ. கிருஷ்ணன்



1938 – 2004

**“நாம் வெள்ளைக் கூழாகத் தொடங்கிச் சாம்பலாக முடிகிறோம்”**

**நா**ன் சமீபத்தில் படித்த மிக மோசமான புத்தகங்களில் ஒன்று டாம் மொரைஸும் சரயு ஸ்ரீவாத்ஸாவும் (தமிழ்ப் பெண்) சேர்ந்து எழுதிய The Long Strider (பெருநடையன்) என்ற பெங்குவின் வெளியீடு. புத்தகத்தில் படிக்கத் தகுந்த ஒரே பகுதி மொரைஸின் உடல் நலம் பற்றி எழுதப்பட்ட பகுதி. அவர் புற்றுநோயால் பீடிக்கப்பட்டிருக்கிறார் என்பது அப்போதுதான் எனக்குத் தெரியவந்தது. சில வாரங்களுக்கு முன்னால் அவர் எழுதிய மிகக் காரமான ஒரு புத்தக விமரிசனத்தை Outlook இதழில் படித்த போதுகூட மரணம் அவர் பின்னால் நின்றுகொண்டிருந்ததை உணர முடியவில்லை. புற்று நோயைத் துச்சமாக நினைத்து அதை அங்கீகரிக்க மறுத்த மிகச் சிலரில் டாம் மொரைஸும் ஒருவர். சிகிச்சையால்படும் அவதிகளைவிட மரணத்தை எதிர்கொள்வது மேல் என்பதில் அவர் திடமாக இருந்தார். அவரது மரணத்தின் காரணம் புற்று நோய் அல்ல. தூங்கும்போது ஏற்பட்ட மாரடைப்பு.

பதினைந்து வயதில் அவர் எழுதிய கவிதைகள் W. H. Auden போன்ற பெருங்கவிஞர்களையும் கவர்ந்தன. பத்தொன்பதாம் வயதில் பார்டன் அச்சகம் – டைலன் தாமஸ் கவிதைகளை வெளியிட்ட அச்சகம் – அவரது 'A Beginning' என்ற கவிதைத் தொகுப்பை வெளியிட்டது. இந்தப் புத்தகம் ஹாத்தார்ன்டன் பரிசை வென்றது. இதனை வென்ற ஒரே ஆங்கிலேயர் அல்லாதவரும் மிக இளயவரும் டாம் மொரைஸ்தான். முப்பதாம் வயதில் சுயசரிதை – "My Son's Father". கடந்த நாற்பது ஆண்டுகளில் பல திருமணங்கள்; பல விவாகரத்துகள்; முப்பதிற்கும் மேற்பட்ட புத்தகங்கள் – கவிதைத் தொகுப்புகள், பயண நூல்கள், கட்டுரைகள், வாழ்க்கை வரலாறுகள். நிலைகொள்ளாமல் அலைந்தே முடிந்த வாழ்க்கை அவருடையது.

இந்தியாவின் மீது அவர் கொண்டிருந்த அளவு கடந்த காதலும் தாங்க முடியாத வெறுப்பும் அவரது நூல்களில் வெளிப்பட்டிருக்கின்றன. கோவா விடுதலை பெற்றபோது இந்திய இராணுவம் கோவாவில் நுழைந்ததற்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்தியக் குடியுரிமையை வேண்டாம் என்று உதறித் தள்ளினார். ஆறே ஆண்டுகளில் இந்தியா திரும்ப வேண்டும் என்ற உந்துதலைத் தாக்குப்பிடிக்க முடியாமல் மும்பை வந்தடைந்தார். இவரது அரசியல் கருத்துகள் முதிர்ச்சியற்றவை. மும்பையில் இருக்கும் நடுத்தரவர்க்க மக்களின் கண்ணாடி கொண்டு உலகை நோக்குபவை. இவர் எழுதிய இந்திரா காந்தியின் வாழ்க்கை வரலாறு அம்மையாருக்கு மிகக் கோபத்தை வரவழைத்தது என்று சொல்வார்கள். காரணம் புத்தகத்தின் தரமாகவும் இருக்கலாம். ஆனால் சல்மான் ரஷ்டி இந்திய எழுத்தாளர்களின் தரத்தைக் குறை கூறி எழுதியபோது மொரைஸ் சொன்னார்: He should either read them or meet them.

மனிதகுலத்தைப் போரும் மதக்கலவரங்களும் சீரழிப்பதை அவர் வன்மையாக எதிர்த்தார். அல்ஜீரியப் போர், இந்தோனேசியாவில் சுகார்த்தோ நடத்திய அழித்தொழிப்பு, வியட்நாம் போர் போன்ற உலகை உலுக்கிய நிகழ்வுகளை நிருபராகச் சென்று, பார்த்து உலகின் புகழ் மிக்க பல இதழ்களில் தன் அனுபவங்களை எழுதினார். அவரது முயற்சியால் இந்தோனேசியாவில் ஏழாயிரத்திற்கும் மேற்பட்டவர் விடுதலை செய்யப்பட்டனர். குஜராத் கலவரம் அவருக்கு மிகுந்த துயரத்தைக் கொடுத்தது. ஆனாலும் இறப்பதற்கு முன்னால் அவர் எழுதிய கவிதைகள் நம்பிக்கையின் பக்கம் நிற்பவை. அவற்றில் எதிர்காலம் ஒரு சிறுமியாகச் சித்தரிக்கப்படுகின்றது. அழிவுகளுக்கு நடுவில் நின்றுகொண்டிருந்தாலும் அவளால் அழகான குரலெடுத்துப் பாட முடிகிறது.

அவரது Letter to My Mother என்ற கவிதையின் அவசரத் தமிழாக்கம்:

(மொரைஸுக்கு ஏழு வயதுதான் இருக்கும். அவரது தாய் மனப்பிறழ்வுற்று மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். பிறழ்ச்சியின் பிடியிலேயே அவரது வாழ்நாள்கள் முழுவதும் கழிந்துபோயின.)

**என் அம்மாவுக்குக் கடிதம்**

என் தனிமைப்பட்ட அம்மாவிற்கு
உனக்கு மட்டும் எழுதுகிறேன்
உனக்கு என்னைப் புரியவில்லை.
நான் என் வாழ்க்கையைச்
சீர்படுத்திக்கொண்டிருக்கிறேன்.

இந்த குளிரடர்ந்த, சீரான நாட்டில்
என் சிறிய அலமாரியை என்
புத்தகங்களால் நிரப்பிக்கொண்டிருக்கிறேன்.

நான் அழுதுகொண்டிருக்கும்போது நீ பார்த்தால்
நான் குழந்தையாக இருக்கும்போது அடிக்கடி
பார்த்திருப்பாயே அதேபோல் –

உனக்கு என் அழுகைக்குக் காரணம் இருப்பது
தெரியும்.

என்னை நினைத்தே நான் வெட்கப்படுகிறேன்
உன்னை நினைத்து நான் வெட்கப்படுவதால். □



படிப்பகம்

அஞ்சலி

**காசியபன்**

# விடுதலை பெற்ற பறவை



(1920 – 2004)

**அசோகமித்திரன்**

"**கா**சியபனை எனக்குத் தெரியும்... வாழ்க்கையில் ஒரு நீண்ட இடைவெளிக்குப் பிறகு நவீனத் தமிழ் இலக்கியத்தைப் படிப்பதில் அவர் கவனம் திரும்பியிருக்கிறது. 53ஆம் வயதில் எழுதத் தொடங்கினார். அவரைப் பொருத்தவரை எழுத்து என்பது ஒரு யோகம், ஒரு யாகம், ஒரு கடின உழைப்பு..." என்று நகுலன் சுமார் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு எழுதினார். ஆதலால் காசியபன் என்ற டி.பி. குளத்துவின் படைப்புகளுக்கும் இருபத்தைந்து ஆண்டுகள் தொடர்ச்சியிருக்கிறது.

காசியபனை – அவருடைய எழுத்தை முதலில் படித்த ஒரு சிலரில் நானும் ஒருவன். சுமார் 200 பக்கங்களுடைய கையெழுத்துப் பிரதியுடன் அவர் என்னைச் சென்னையில் சந்தித்தார். என்னை அவர் வந்து பார்ப்பார் என்று நகுலன் கடிதம் எழுதியிருந்தார். முதல் சந்திப்பின்போதே அவர் சில விஷயங்களுக்காக வற்புறுத்தியது என்னை அவரிடமிருந்து சற்று விலகியிருக்கவே செய்தது. என் கதை ஒன்றின் பாத்திரத்தையும் அக்குடும்பத்தையும் அவர் அறிந்திருந்தார். பாத்திரத்திலிருந்து முன்மாதிரியை அடையாளம் கண்டுகொள்வது ஒரு தனித் தேர்ச்சியின் பேரில் வருவது.

காசியபனுக்குப் பல தேர்ச்சிகள் இருந்தன. அவருடைய எழுத்து நகைச்சுவை எழுத்தாளர் தேவனுடையதைப் போன்றது. இந்தியச் சுதந்திரத்துக்கு முன்பு இந்திய மொழிகளில் எழுதவேண்டும் என்ற ஆர்வம் கொண்டவர்கள் அனைவருக்கும் சில ஆங்கில எழுத்தாளர்கள், ஆங்கில மொழிபெயர்ப்பில் வெளிவந்திருந்த மிகச் சில ஐரோப்பிய எழுத்தாளர்கள்தான் ஆதர்சமாக இருந்தது அடிப்படையில் உலக மனித சமூகம் அனைத்துக்கும் பலப் பொதுச் சரடுகள் உண்டு என்பதற்கு இந்திய மொழிகளின் நவீன படைப்புகளின் முன்னோடிகள் கண்கூடான ஆதாரம்.

காசியபன் உந்துதலுக்குத்தான் ஆங்கில எழுத்தாளர்களைப் பயன்படுத்தினார். ஆனால் அவருடைய பாத்திரங்கள், நிகழ்ச்சிகள், சூழ்நிலை முற்றும் முதலுமாக அவருக்கே உரியவை. அவருடைய கதைகள் 'கல்கி', 'ஆனந்த விகடன்' போன்ற இதழகளில் வெளிவந்திருக்கும். அதற்கான முயற்சி எடுக்கக்கூடிய வயதை அவர் தாண்டிவிட்டார். இது தரத்தைக் குறிக்கும் கருத்து அல்ல. காசியபனுக்குப் பரவலான வாசகர்களுடன் பகிர்ந்துகொள்ள நிறைய விஷயங்கள் இருந்திருக்கிறது.

காசியபன் அந்த நாளில் 'காலச்சுவடு', மதுரை–திருநெல்வேலி – கோயில்பட்டி சிற்றிதழ்களில் பங்கு பெற்றிருந்தால் அவருக்கு ஓர் உயர்புருவ மதிப்புக் கிட்டியிருக்கும். அவர் மௌனியையும் சு.ரா.வையும் முக்கியமாகக் கருதியதாக நகுலன் தெரிவித்தாலும் காசியபன் எளிய, சுவாரசியமான வெளிப்பாட்டையே பின்பற்றினார். அவர் ரசமாகவும் யதார்த்தமாகவும் எழுதினாலும் வாசகளைத் தீவிர நிலைப்பாடுகளுக்கு எடுத்துச்செல்லவில்லை. அதே நேரத்தில் அவை தனி மனித மனம் மற்றும் சமூக மாற்றங்களையும் மிகவும் நுணுக்கமாகவும் அநாயாசமாகவும் குறிப்பிடுவதற்குத் தவறவில்லை. அவருடைய நாவல்கள் 'அசடு', 'கிரகங்கள்', 'வீழ்ந்தவர்கள்', 'வியூகங்கள்' ஆகியவற்றில் சுயக் கூச்சம், வாசகர் கூச்சம் இன்றி அவர் எண்ணங்களை மன ஓட்டத்தை ஒட்டியே எழுதியிருக்கிறார். 'வியூகங்கள்' பல ஆண்டுகளாகக் கையெழுத்துப் பிரதியாகவே இருந்ததாகத் தெரிகிறது.

காசியபனுக்குப் பட்டப்படிப்பில் தத்துவம் ஒரு பாடமாக இருந்திருக்கிறது. அவருடைய கல்வி வடமொழி எதிர்ப்புச் சூழலில்லாத கேரளத்தில் அமைந்திருக்கிறது. பல முன்னணி எழுத்தாளர்கள் தமிழைக் கலப்படமாக்கி விடுகிறார்கள். சில சந்தர்ப்பங்களில் ஆங்கிலச் சொற்களை ஆங்கில வடிவத்திலேயே எழுதிவிடுகிறார்கள். ஆனால் காசியபன் நிரடல் இல்லாத நடையைக் கைவசப் படுத்திக்கொண்டிருந்திருக்கிறார். இன்னொரு அம்சமும் அவரைத் தனித்துக் காட்டுகிறது. அவர் தன்னை நீதிபதியாக நியமித்துக்கொண்டதில்லை.

காசியபன் தன்னுடைய 85ஆம் வயதில் காலமாகியிருக்கிறார். சில அந்தரங்க நண்பர்களைப் பெற்றிருந்தார். கவிஞர் – எழுத்தாளர் அழகியசிங்கர் காசியபன் படைப்புகளை வெளிக்கொணருவதில் பெருமைப்பட்டிருக்கிறார். 'வியூகங்கள்' நூலுக்குத்தான் எவ்வளவு பொருத்தமான அட்டை ஓவியம்! தொடர்ந்து அஞ்சலிக் கட்டுரை எழுதுபவர்களுக்குக் கண்ணீர் வற்றிவிட்டது. இன்னொரு பறவை தன்னுடைய கூண்டிலிருந்து விடுதலை பெற்றுவிட்டது என்றுதான் எண்ணத் தோன்றும். □


**சுவடி**

**புத்தகப் பட்டறை**

9/4, முசாபர் ஜங் சாலை, சென்னை -5

மின்னஞ்சல்: kalachuvadu@yahoo.com

- நீங்கள் பிரசுரிக்க விரும்பும் தமிழ் மற்றும் ஆங்கில நூல்களை மற்றும் இதழ்களைச் சிறந்த முறையில் உருவாக்கித் தரும் அமைப்பு 'சுவடி'.
- சிறந்த எழுத்துருக்களைப் பயன்படுத்தி, தகுதிபெற்ற மெய்ப்பு நோக்கர்ளை வைத்துச் சரிபார்த்து, சிறந்த எடிட்டர்களின் உதவியுடன் பிரதியை சீராக்கி, நவீன ஓவியர்களால் வடிவமைக்கப்பட்ட அட்டையுடன் நூல் தயாரிக்கப்படும்.
- தயாரிப்பிற்கான அசல் கட்டணங்கள் உங்களுக்குத் தெரிவிக்கப்பட்டு, எங்கள் கட்டணமாக மொத்த செலவில் 15% தனியாகப் பெற்றுக்கொள்ளப்படும்.
- அயல் வாழ் தமிழர்களுக்கும் இதே முறைமை பின்பற்றப்படும். மின்னஞ்சல் மூலம் துரிதமான தொடர்புகள் பணிக்காலத்தில் பேணப்படும்.
- அயலில் இருப்பவர்களுக்கு நூல்கள் 'காலச்சுவடு எக்ஸிம்' ஏற்றுமதி நிறுவனத்தின் மூலம் குறைந்த செலவில் அனுப்பி வைக்கப்படும்.

www.padippakam.com



# கங்கையும் காவிரியும் குமரியைத் தொடட்டும்!

வழக்கறிஞர்
**கே. எஸ். இராதாகிருஷ்ணன்**
செய்தித் தொடர்பாளர்,
ம. தி. மு. க.

**கா**லச்சுவடு ஜூன் 2004 இதழில் தேசிய நதிநீர் இணைப்புத் திட்டம் குறித்து 'நடக்கும் என்பார் நடக்காதென்கிற' தலைப்பில் திரு. ஏ. வைத்தியநாதன் எழுதிய கட்டுரையில் கூறப்பட்ட செய்திகள் ஏற்புடையவையல்ல. தொலைநோக்குப் பார்வை இருந்தால் எதையும் சாதிக்கலாம்.

சீனாவில் இம்மாதிரிப் பெரிய நதிகளை மக்களிடம் கடன் பத்திரங்கள் வழங்கி நிதி பெற்று இணைத்துள்ளனர். உதாரணமாக, கிராண்ட் கால்வாய் அமைப்பைக் கூறலாம். இதுபோன்று டைகிரிஸ், குவாங்கி, நைல் – சூயஸ் திட்டம் போன்றவை சாதிக்கப்பட்ட சாதனைகளாகும். அமெரிக்க ஐக்கிய நாட்டில் கலிஃபோர்னியா, டெக்சாஸ் மாநிலங்களுக்கு இடையே உள்ள நதிகள் இணைக்கப்பட்டுள்ளன. ஆப்பிரிக்கக் கண்டத்தில் உள்ள பல நதிகளையும் தென் அமெரிக்காவில் உள்ள நீண்ட அமேசான் நதியையும் தெற்கு முகமாகத் திருப்ப வேண்டுமெனவும் விவாதங்கள் நடைபெற்றுவருகின்றன. ரஷ்யாவில் மாமன்னர் பீட்டர் காலத்தில் இருந்து அமுதாரியா நதியின் நீரைத் துருக்மேனியக் குடியரசின் பாலைவனப் பகுதிகளுக்குத் திருப்ப வேண்டும் என்ற கோரிக்கை எழுப்பப்பட்டுச் சுமார் 1400 கிலோ மீட்டர் நீளமுள்ள "லெனின் காரகம் கால்வாய்" என அழைக்கப்படும் கால்வாயை உருவாக்கும் கடினப் பணி ஐந்து ஆண்டுகளில் செய்து முடிக்கப்பட்டது. ரஷ்யாவில் நிறைவேற்றப்பட்ட "வோல்கா – டீப்பர்" என்ற பிரம்மாண்ட கால்வாய் இணைப்பு, கங்கை – காவிரி இணைப்புக்கு ஒரு பாடமாக அமையும். 18ஆம் நூற்றாண்டில் ஜெர்மனியை ஆண்ட முதலாம் பெடரிக், சாத்தியமில்லை என்று சொல்லப்பட்ட எல்பெ, ஆடர், வெசர் என்னும் மூன்று நதிகளை இணைத்தார்.

கோதாவரி–கிருஷ்ணா அணைக்கட்டுகளைக் கட்டிய கிழக்கிந்தியக் கம்பெனிக்குப் பொறியாளரான சர் ஆர்தர் காட்டன் என்ற ஆங்கிலப் பொறியாளர் 1834இல் கங்கை – காவிரி இணைப்பைப் பற்றி ஆராய்ந்தார். 1930இல் சர் சி.பி.ராமசாமி அய்யர் கங்கை – காவிரி இணைப்பை ஆதரித்து விவரமான அறிக்கை வெளியிட்டார். 1971 – 72இல் மத்திய நீர்ப்பாசனத் துறை அமைச்சர் டாக்டர் கே. எல். ராவ் கங்கை – காவிரி இணைப்புத் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தினார். இவருடன் டாக்டர் சதுர்வேதி ராஜாரெட்டி என்பவரும் இணைந்து ஆய்வு நடத்தினார். சிந்துவின் துணை நதியான ராபி நதியிலிருந்து பிரம்மபுத்திராவை இணைப்பது; பிறகு மத்தியப் பிரதேசம், தக்காணப் பீடபூமி, தமிழகம் ஆகியவற்றை இணைக்கும் பூமாலைக் கால்வாய் அமைப்பது என்கிற திட்டத்தைக் கேப்டன் ஜே. தஸ்தூர் முன் வைத்தார். இவையெல்லாம் அரசின் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. இவற்றின் தொடர்ச்சியாகவே இன்றைய திட்டம் உருவாகியுள்ளது.

இது நர்மதை, தபதி ஆறுகளைத் தக்காணப் பீடபூமி ஆறுகளான மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா, பெண்ணாறு, காவிரி, வைகை, தாமிரபரணிவரை இணைக்கலாம். மேற்கு நோக்கிப் பாயும் கேரள, கர்நாடக மாநிலங்களில் வீணாகும் நீரைக் கிழக்கு நோக்கித் திருப்பி ஆங்காங்கு உள்ள கங்கை – பிரம்மபுத்திரா பிரதானக் கால்வாய்களில் இணைக்கலாம்.

கங்கை – பிரம்மபுத்திரா முதல் காவேரி – தாமிரபரணிவரை இணைப்பதால் அனைத்து மாநிலங்களும் பயன்பெறும்.



இத்திட்டம் தொழில்நுட்ப அடிப்படையில் எளிதாகச் செயல்படுத்த முடியும். இத்திட்டங்களை ஆராய மத்திய அரசு 1982இல் தேசிய நீர்வள மேம்பாட்டு ஆராய்ச்சி நிறுவனத்தை உருவாக்கியது. இந்த நிறுவனம் ஏழாம் ஐந்தாண்டுத் திட்ட அறிக்கையைத் தயாரித்துள்ளது.

மகாநதி – கோதாவரி, கோதாவரி – கிருஷ்ணா இணைப்புகள் குறித்து இந்நிறுவனம் மேற்கொண்டிருக்கும் அளவாராய்ச்சியில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. 1992இல் இது குறித்து மத்திய அரசு கொள்கை அளவில் விவாதம் நடத்தியது. கோதாவரி – கிருஷ்ணா இணைப்புக்கான ஆய்வு முடிவடைந்திருக்கிறது. கோதாவரி நதி மேல் போலாவரம் என்ற இடத்தில் ஒரு பெரிய நீர்த் தேக்கம் உருவாக்க ஆந்திர அரசு திட்டமிட்டுள்ளது. தவளேஸ்வரம் அணைக்கு மேற்கே சுமார் 42 கி. மீ. தொலைவில் உள்ள போலாவரம் நீர்த் தேக்கத்தையும் கிருஷ்ணாவிலுள்ள விஜயவாடா அணையையும் 174 கி. மீ. நீளமுள்ள ஒரு பெரிய கால்வாய் வெட்டி இணைக்கலாம். கோதாவரி நதிப்படுகையிலிருந்து உபரி நீர் கிருஷ்ணா நதிக்குக் கொண்டுசெல்லப்பட்டுக் கிருஷ்ணா சமவெளிப் பகுதிப் பாசனத்திற்குப்போக, தெற்கே வடபெண்ணை ஆற்றிற்குத் திருப்பலாம்.

கிருஷ்ணா நதியின் மேல் அமைந்திருக்கும் ஸ்ரீசைலம் நீர்த் தேக்கத்திலிருந்து சென்னைக் குடிநீருக்காக 414 கி. மீ. நீளத்திற்குத் தெலுங்கு கங்கைத் திட்டத்திற்கு வெட்டப்பட்ட கால்வாயைப் பெரிதாக்கித் தெற்கே திருப்பிக் காவிரிப்படுகையின் கொள்ளிடம் நதியில் உள்ள கீழ் அணைக்குக் கொண்டுசெல்லலாம். அல்லது மாற்றுத் திசையில் மேற்கே திருப்பி முக்கொம்பிலுள்ள அகண்ட காவிரியில் உள்ள மேல் அணையில் சேர்க்கலாம் அல்லது இரண்டிற்கும் மையப்பகுதியான கல்லணையிலேயே சேர்க்கலாமா என்பது குறித்து ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. அப்பகுதியிலிருந்து வைகை, வைப்பாறு, தாமிரபரணி இணைப்பின்மூலம் குமரி வரை கங்கை நீரை எடுத்துச் செல்லலாம்.

1980இல் மத்திய அரசு வைத்த தென்னிந்தியத் தீபகற்ப ஆறுகள் இணைப்புத் திட்டத்தின் மூலம் நீர்வள மேம்பாட்டை உறுதியாக்கலாமென்ற கருத்தைத் தேசிய நீர்வள மேம்பாட்டு நிறுவனம் ஆய்வு நடத்திப் புள்ளி விவரங்களைச் சேகரித்துத் திட்டங்கள் தயாரித்த நிலையில் இன்று வடக்கே மகாநதியையும் தெற்கே காவிரி நதியையும் இணைக்கும் இந்த மாபெரும் முயற்சி தொழில்நுட்ப அடிப்படையில் சாத்தியமாகும் என்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஏ. வைத்தியநாதன் குறிப்பிட்டுள்ள கருத்துகளில் உள்ள சூழ்நிலைகளை மனத்தில் உள்வாங்கி ஏற்படும் பிரச்சினைகளையும் தொழில்நுட்பச் சிக்கல்களையும் சீர்செய்து வெற்றி பெறலாம். தொடக்கத்திலேயே சாத்தியமா, இல்லையா என்ற விவாதத்தை விட்டுவிட்டு ஊர் கூடி இழுத்தால் தேர் நகரும். நதிநீர் இணைப்பால் ஏற்படும் சேதாரங்கள், பிரச்சினைகளைவிட இதனால் நாம் பெறும் பயன்பாடுகள் அதிகம் என்பதைக் கணக்கில் கொண்டு செயலாற்றுவோம். □



படிப்பகம்

www.padippakam.com

விவாதம்



# ஸ்டாலினிசமும் இலக்கியக் கூட்டணியும்

இந்தியாவில் காந்தி பற்றிய கடுமையான விமர்சனங்களைச் செய்தவர்களைச் சற்று எளிமைப்படுத்தி இரு பிரிவினராகப் பிரிக்கலாம்: (1) பகத்சிங், பெரியார், அம்பேத்கர், எம்.என்.ராய், சுபாஸ் சந்திரபோஸ், இந்தியப் பொதுவுடைமை இயக்கத்தைச் சேர்ந்த ஈ.எம்.எஸ்., சுனித் குமார் கோஷ் போன்றோர் ஒரு பிரிவினர்; (2) வி.டி.சாவர்க்கர், நாதுராம் வினாயக் கோட்ஸே, தெகாடியா மற்றும் சங்கபரிவாரத்தினர் மற்றொரு பிரிவினர். காந்தி கொலையுண்டபோது கதறியழுதவர் பெரியார்; இனிப்பு வழங்கி மகிழ்ந்த கூட்டத்தைச் சேர்ந்தவர் சாவர்க்கர்.

எனவே காந்தியை வெவ்வேறு நிலைபாடுகளிலிருந்து விமர்சனம் செய்தவர்களையெல்லாம் ஒரே கூட்டமாகக் காட்ட முயல்வது எவ்வளவு விவேகமானதோ அந்த அளவுக்கு விவேகமானதுதான் ஸ்டாலினையும் ஸ்டாலினிசத்தையும் விமர்சனம் செய்த / செய்கிற பல்தரப்பட்ட தமிழ் எழுத்தாளர்களை 'இலக்கிய ஜனநாயக முற்போக்குக் கூட்டணி'யாக இ.சி.ராமச்சந்திரன் (காலச்சுவடு, மே 2004 கடிதங்கள் பகுதி) ஆக்கும் முயற்சியும். 'ஜனநாயக', 'முற்போக்குக்' கூட்டணி அரசியலில் அவருக்கு நிறைய அனுபவம் இருக்கும் போலும்! மேற்சொன்ன முதல் பிரிவினரில் ஒருவரான ஈ.எம்.எஸ்.இன் அடியொற்றுச் செல்லும் சி.பி.எம். கட்சியை (இது தமிழ்நாட்டு 'முற்போக்கு ஜனநாயகக் கூட்டணி'யில் உள்ளது) சேர்ந்த சோமநாத் சாட்டர்ஜி பத்துப் பன்னிரண்டாண்டுகளுக்கு முன் தன் மகன்களுக்கு உபநயனம் செய்துவைத்தார்; காந்தி கொலைக்குச் சதித்திட்டம் தீட்டியவரும் இந்துத்துவக் கோட்பாட்டின் பிதாமகருமான வி.டி.சாவர்க்கரின் உருவப்படத்தை நாடாளுமன்றக் கட்டிட மைய மண்டபத்தில் திறந்து வைப்பதற்காக அமைக்கப்பட்ட ஆலோசனைக் குழுவில் இடம்பெற்று அதற்கு ஒப்புதலும் தந்தார். உருவப்படம் திறப்பதற்கு நாடு முழுவதிலுமிருந்து வந்த எதிர்ப்பு, சி.பி.எம்மின் காலங்கடந்த கண்டனம் ஆகிய வற்றுக்குப் பின்னரேதான் ஒப்புதல் அளித்ததற்குப் பகிரங்க மன்னிப்புக் கேட்டார். "நாடாளுமன்றத்தின் தரம் தாழ்ந்து கொண்டேவருகிறது" என்ற குற்றச்சாட்டையும் சொல்லிக் கொண்டே நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஊதியமும் சிறப்புச் சலுகைகளும் தொடர்ந்து அதிகரிக்கப்படுவதை ஆதரித்து வந்தார். எனினும் சோமநாத் சாட்டர்ஜியை அத்வானி வகையறாக்களோடு இணைப்பதில் உள்ள அபத்தத்தையும் நான் அறிவேன். அப்படிச் செய்வது ஹிட்லரின் ஜெர்மனியில் இருந்த சமூக (சோசலிச) ஜனநாயகவாதிகளை நாஜிக்களுடன் ஒப்பிட்டு அவர்களையும் சேர்த்துப் பரந்துபட்ட பாசிச எதிர்ப்பு முன்னணியைக் கட்டத் தவறிய மற்றொரு ஸ்டாலினிசத் தவறுக்கு ஒப்பானதாகும்.

ஸ்டாலினுக்கு எதிரான இலக்கியக் கூட்டணியின் உறுப்பினர்கள் என நான் உட்பட எட்டு தமிழ் எழுத்தாளர்களுடன் நின்றுகொள்கிறார் இ.சி.ராமச்சந்திரன். எம்.ஏ.நுஃமான், ஏ.ஜே.கனகரட்னா, சமுத்திரம், கா.சிவத்தம்பி, ராயன், தியாகு, யமுனா ராஜேந்திரன் போன்ற மார்க்சியத்தில் இன்னும் நம்பிக்கை வைத்துள்ள எழுத்தாளர்களை மட்டுமின்றி, "(கார்ல்) மார்க்ஸ் ரொம்பவும் பின்தங்கிவிட்டதாகக்" கருதும் பின்நவீனத்துவ இடதுசாரி எழுத்தாளர்களையும் கருத்தில் கொண்டால் இ.சி.ராமச்சந்திரனின் பட்டியல் மிகவும் நீளத்தான் செய்யும்.

இப்படி ஓர் 'இலக்கிய ஜனநாயக முற்போக்குக் கூட்டணி' (இதை ஏகாதிபத்தியக் கைக்கூலிகள், சி.ஐ.ஏ. ஏஜண்டுகள், குழப்பவாதிகள் இத்யாதி, இத்யாதி என்றும் அழைக்கலாம். அப்படித்தான் அதன் உறுப்பினர்கள் பலர் அழைக்கப்பட்டு வந்தனர் என்பதும் ஸ்டாலினிசத்திற்கு மற்றொரு சான்று) செயல்பட்டுக்கொண்டிருக்கும் ஓர் 'ஆரோக்கியமற்ற' தமிழ் இலக்கியச் சூழலில், "தோழர் ஸ்டாலினின் சாதனைகளைப் பட்டியலிட்டும் அவருடைய மேதாவிலாசத்தைப் புகழ்ந்தும்" ஆயிரத்து நூறு பக்கங்களில் ஓர் ஆங்கில நூல் இருப்பதை 'காலச்சுவடின்' மூலமாக மட்டுமே அறிந்து ஆச்சரியப்படுகிறார். இந்த விஷயத்தில் ஸ்டாலினை இன்னும் ஒரு வழிபாட்டுச் சிலையாகக் கொள்ளும் 'கம்யூனிஸ்டுகள்', 'காலச்சுவடிலிருந்து பின்தங்கி யிருப்பதற்கு வருத்தப்பட வேண்டியவர் கெடுபிடிக் கால (Cold War Period) வாய்ப்பாடுகளை இப்போதும் பாடிவரும் ராமச்சந்திரன்தான்.

காலச்சுவடு 'ஜனநாயகம்', 'பன்மைத்துவம்' என்று இரு இலட்சியங்களைக் கொண்டிருப்பதாக அறிவித்துள்ளது! எனவே ஸ்டாலின் பற்றிய ஓர் இருண்ட சித்திரத்தைத் தீட்டும் வேறொரு ஆயிரத்து நூறு பக்க ஆங்கில (அல்லது ஸ்வாஹிலி) நூல் பற்றிய கட்டுரையை அது எப்போதேனும் வெளியிடுமானால், இ.சி.ராவுக்கு ஆச்சரியம் ஏற்பட்டுவிடக்கூடாது.

ஸ்டாலின் பற்றிய கடுமையான விமர்சனங்கள் லெனினால் முன்வைக்கப்பட்டிருக்கின்றன (Collected Works of Lenin Vol. 5 கடைசி 50 பக்கங்கள்); மாசேதுங்கால் செய்யப்பட்டுள்ளன. ஸ்டாலினிடம் 70% உடன்பாடான அம்சங்களும் 30% எதிர்மறை அம்சங்களும் இருந்தன என்று மாவோ ஒருமுறை மதிப்பிட்ட போதிலும் 'சோவியத் யூனியனில் சோசலிசம் குறித்த பொருளாதாரப் பிரச்சினைகள்' என்ற ஸ்டாலினின் இறுதிக் காலப் படைப்பொன்றைப் பற்றிய மாவோவின் விமர்சனம், ஸ்டாலினின் சோவியத் யூனியனில் பொருளாதாரம் முதலாளித்துவ மதிப்பின் விதிக்கு (Law of Value) கட்டுப்பட்டிருந்ததைக் குறிப்பால் உணர்த்துகிறது.

ஒரு வகையில், பின் நவீனத்துவவாதிகளும் அவர்களை ஆதரிக்கும் ஃபிரெட்ரிக் ஜேம்சன் போன்ற மார்க்சியவாதிகளும் கூறுகிற 'பிற்கால முதலாளியம்' (Late Capitalism) என்பது சோவியத் யூனியனில் அன்றே வந்துவிட்டது எனலாம். தனிச் சொத்து ஒழிக்கப்பட்டிருந்தது; எந்த ஒரு தனிநபர் பெயரிலும் உடமைகள் இல்லை; ஆனால் சலுகை பெற்ற தனிநபர்கள் எந்த ஓர் உடமையையும் நிர்வகிக்கலாம்; தொழிற்சாலையை நடத்தலாம். சிறப்பு மருந்து வசதிகளிலிருந்து பிரத்யேக விடுமுறை இல்லங்கள் (Dachas) வரை எத்தனையோ இருந்தன. (நம் நாட்டில் உள்ள பொதுத்துறை நிறுவனங்களின் அதிகாரிகள் அனுபவிக்கும் உரிமைகள், அதிகாரங்கள் முதலியவற்றை நினைவு கூர்வோம்).

ஸ்டாலினின் சாதனைகளையும் மேதாவிலாசத்தையும் நானும் (இ.சி.ராவின் பட்டியலிலும் பட்டியலுக்கு வெளியிலுமுள்ள) எனது நண்பர்களும் அறிவோம். சோவியத் யூனியன் என்ற சாம்ராஜ்யத்தை ஏறத்தாழ 40 ஆண்டுகள் ஒரு முட்டாளால் நிர்வகித்திருக்க முடியாது. இரண்டாம் உலகப்போரில் பாசிசத்தை வீழ்த்திய பெருமையை ஸ்டாலினையும் ஸ்டாலினிசத்தையும் விமர்சித்து எழுதிய எனது கட்டுரைகளிலும்கூட நான் மறுத்ததில்லை. எனினும் வழக்கமான திருத்தொண்டர் புராணங்களில் காணப்படாத பல உண்மைகளை, பாசிசத்தை வீழ்த்துவதில் ஸ்டாலின் மேற்கொண்ட முயற்சிகளில் இருந்த குறைபாடுகளை, பலகீனங்களை எடுத்துக்கூறும் 'ஆயிரத்து நூறு பக்கங்க'ளுடைய வேறு நூல்களும் உள்ளன. அவற்றிலொன்று ஸ்டாலினிச ஒடுக்குமுறைக்கு இலக்காகி சிறையிலடைக்கப்பட்டு வறுமையிலும் பட்டினியிலும் வாடி வதங்கிக் காலமான வாஸிலி க்ராஸ்மன் என்ற கம்யூனிஸ்ட் எழுத்தாளரின் Life and Fate என்ற நாவலும் அடங்கும். மேலும், சோவியத் யூனியனில் பாசிச எதிர்ப்புப் போர் 'தந்தையர் நாட்டைப் பாதுகாக்க' (In Defence of Father Land) என்ற முழக்கத்தின் கீழ் நடத்தப்பட்டதேயன்றி 'சோசலிச நாட்டைப் பாதுகாக்க' (In Defence of Socialist Land) என்ற முழக்கத்தின் கீழ் அல்ல.

நானும் என் நண்பர்களும் 'இலக்கிய ஜனநாயக முற்போக்குக் கூட்டணி'யைச் சேர்ந்தவர்களோ இல்லையோ, அமெரிக்க

www.padippakam.com



ஏகாதிபத்தியம் தகர்க்கப்பட்டாலன்றி மானுட குலத்திற்கு விமோசனம் இல்லை என்று உறுதியாக நம்புகிறவர்கள். எங்களுக்கு ஏகாதிபத்திய எதிர்ப்புத் தோள்பட்டைகளோ பாட்ஜுகளோ இ. சி. ராக்களின் அங்கீகாரமோ தேவையில்லை. எனினும் ஏகாதிபத்தியத்தின் வீழ்ச்சியைச் சாதிக்க அவதார புருஷர்கள் மீது நம்பிக்கை வைப்பவர்களுமல்ல. கோடிக்கணக் கான உழைக்கும் மக்கள்மீதே எங்கள் நம்பிக்கை. அவர்களில் பெரும்பாலானோர்க்கு ஸ்டாலின் யுகம் பற்றி மட்டுமல்ல, கம்யூனிச மரபு பற்றியும் ஏதும் தெரியாமலும் இருக்கலாம். என்னையும் என் நண்பர்களையும் குறித்த இ. சி. ராவின் சித்திரிப்பு மிக மென்மையானது. இதைவிட அதிபயங்கரமான முத்திரைகள் எங்கள்மீது குத்தப்பட்டுள்ளன. எனினும் சோசலிசத்தின் மீதும் அதைச் சாதிக்கக்கூடிய மார்க்சியத்தின் மீதும் எங்களுக்குள்ள நம்பிக்கைகள் பலகீனப்படவில்லை. சோசலிசம் பற்றிய எனது புரிதல் இதுதான்:

வர்க்கச் சுரண்டலையும் ஏற்றத் தாழ்வுகளையும் பாலின ஒடுக்குமுறையையும் முடிவுக்குக் கொண்டுவந்து மானுட சுதந்திரத்தை உறுதிப்படுத்தி அதை விரிவுபடுத்துவதற்கான ஒரு வழிமுறையே சோசலிசம். குடிமை உரிமைகளுக்கு (Civil rights) சட்டவகைப்பட்ட உத்திரவாதங்கள்; முறையாகவும் அரசிட மிருந்து சுயேச்சையாகவும் சுயாதீனமாகவும் நிலவும் பொது மக்கள் கருத்து; மூடிய கதவுகளுக்குப் பின்னாலன்றி வெளிப்படையாக நடத்தப்படும் அரசியல்; ஒரு சுதந்திரமான பத்திரிகை உலகம்; பல்வேறு கருத்துகளுக்கு இடம் கொடுக்கக் கூடிய ஓர் அரசியல் கட்டமைப்பு ஆகியனதான் சமுதாயத்தின் அனைத்து மட்டங்களிலுமுள்ள அற்பத்தனமான அல்லது அப்பட்டமான சர்வாதிகாரங்களுக்கு முடிவு கட்டும்; திரை மறைவு சூழ்ச்சிகளிலிருந்தும் சொல்ஜாலப் புரட்டுகளிலிருந்தும் பொதுமக்களைக் காப்பாற்றும். அதாவது, பொதுவாகச் சொல்லப்போனால் நீதிக்கான தேடலையும் மானுடவாழ்வின் உண்மையான இலக்குகளுக்கும் இலட்சியங்களுக்குமான தேடலையும் அரசியல் செயல்பாட்டின் முதன்மையான குறிக் கோளாக ஆக்க வேண்டும். ஒப்பீட்டு நோக்கில் முன்னைக் காட்டிலும் கூடுதலான பொருளாதார வளர்ச்சியை, பொருளா தாரச் செழிப்பை, பொருள்களின் பகிர்வில் ஓர் அதிகரிப்பைச் சோசலிசம் இல்லாமலேயே சாதிக்க முடியும். தொழில் வளர்ச்சியடைந்த நாடுகள் இதைத்தான் செய்துள்ளன. ஆனால் மனிதர்களுக்கிடையே உள்ள உறவுகள் வெறும் பொருள்களுக் கிடையே உள்ள உறவுகளாக, அவர்கள் ஒருவரையொருவர் பயன்படுத்திக்கொள்ளும் உறவுகளாக இருப்பதை மாற்றி யமைத்து அவற்றை மானுடத்தன்மையாக்குவதே சோசலிசம்.

மரக் கலப்பைகளின் நாடாக இருந்த ரஷ்யாவை இயந்திர உழுவைகளின் நாடாக மாற்றிய ஸ்டாலினின் சாதனைகள், 'சோசலிசம்' என்பதற்கு நான் கொள்ளும் அர்த்தம் கொண்ட ஒரு விஷயத்தை ஒரு போதும் எட்டிப்பிடிக்கவில்லை. அதற்கு ஸ்டாலின் என்ற தனிநபர் மட்டும் காரணமல்ல; உள்நாட்டு, உலக நிலைமைகளும் காரணம். எப்படியிருப்பினும் சோசலிசத் திற்கான மறுமுயற்சிகள் உலகில் பல்வேறு இடங்களில் மேற்கொள்ளப்பட்டன, மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (கார்ல்) மார்க்ஸ் கூறினார்:

"... பாட்டாளி வர்க்கப் புரட்சிகள் தொடர்ச்சியாகத் தங்களைத் தாமே விமர்சித்துக் கொள்கின்றன; தங்களுடைய வழிப்பயணத்தை அடிக்கடி நிறுத்திக்கொள்கின்றன; பார்வைக் குச் சாதிக்கப்பட்டது மாதிரித் தோன்றும் கட்டத்துக்கே மறுபடியும் வந்து, முதலிலிருந்து மறுபடியும் தொடங்குகின்றன. தங்களுடைய முதல் முயற்சிகளின் பலவீனங்களையும் குறைபாடுகளையும் அற்பத்தனங்களையும் ஈவிரக்கமின்றிக் கண்டனம் செய்கின்றன. தங்கள் எதிரியைப் பூமியிலே தூக்கியெறியும்பொழுதுகூட அவன் பூமியிலிருந்து புதிய பலத்தைப் பெற்றுக்கொண்டு முன்னைக் காட்டிலும் பல வானாகத் தங்களுக்கு முன்னால் வரவேண்டும் என்று ஆசைப்படுவதுபோலத் தோன்றுகிறது (லூயி போனபார்ட்டின் பதினெட்டாம் புருமேர்)

இது 19ஆம் நூற்றாண்டுப் புரட்சிகளுக்கு மட்டுமல்ல, 20, 21ஆம் நூற்றாண்டுப் புரட்சிகளுக்கும் பொருந்தும். ஸ்டாலினிசத் தோடு சோசலிசம் முற்றுப்பெற்றுவிட்டது அல்லது அழிக்கப் பட்டுவிட்டது என்ற வரலாற்றுத் தன்மையற்ற, கருத்து முதல்வாத, இயக்க மறுப்பியல் முடிவுகளுக்கு எதிரான கருத்தாகும்.

**எஸ். வி. ராஜதுரை**

பதிவுகள்

# இரு நூல்கள்; ஒரு கூட்டம்

சென்னை தேவநேயப்பாவாணர் அரங்கில் 18.6.2004 அன்று மாலை சுயமரியாதை இயக்கத்தின் சார்பாக சி. புஸ்பராஜாவின் "ஈழப்போராட்டத்தில் எனது சாட்சியம்" மற்றும் "டேனியலின் கடிதங்கள்" (தொகுப்பு அ. மார்க்ஸ்) ஆகிய இரண்டு நூல்களுக்கான விமர்சனக்கூட்டம் நடைபெற்றது.

அறிமுக உரை நிகழ்த்திய அ. மார்க்ஸ், சி. புஸ்பராஜாவின் நூல் தேசிய இனப்பிரச்சினையை உயர்த்திப் பிடிக்கக்கூடியது; தேசிய இனப் பெருங்கதையாடலை மறுக்கக் கூடியது என்று கூறினார். இவர் ஒதுக்கப்பட்டதற்கு தலித் என்பது காரணமல்ல என்றும் டேனியலும் புஸ்பராஜாவும் தாழ்த்தப்பட்ட சிறுபான்மைத் தமிழர்கள் என்றும் கூறிய மார்க்ஸ், இரண்டு நூல்கள் குறித்தும் டேனியலுக்கும் தனக்குமான நட்பு பற்றியும் விரிவாகப் பேசினார். டேனியல் கடிதங்கள் பற்றிப் பேசிய தய். கந்தசாமி அ. மார்க்சுக்கு சம்பிரதாயமான பாராட்டுச் சாரல்களைப் பொழிந்தார். "தாழ்த்தப்பட்ட மக்களின் பிரச்சினையின் குறுக்குவெட்டுத் தோற்றம் டேனியல் கடிதங்கள்" என்றும் தலித்தியம் பற்றி எழுதிய இராசேந்திர சோழன் தலித்துகளுக்கு எதிரானவர் என்றும் கூறினார்.

அடுத்ததாகப் பேசிய கவிதாசரண் ஈழப் போராட்டத்தில் எனது சாட்சியம் நூலிலிருந்து ஓர் அத்தியாயத்தை நூலாக வருவதற்கு முன்பே கவிதாசரண் இதழில் வெளியிட்டதைப் பெருமையோடு நினைவுகூர்ந்தார். இந்நூல் புஸ்பராஜாவின் வாழ்நாள் சாதனை என்று சொன்ன அடுத்த நிமிடமே நூலில் புஸ்பராஜா தனது சாதியைப் பற்றிச் சொல்லாமல் மறைப் பதன் மூலமாக நூல் தனது நம்பகத்தன்மையை இழப்பதாகச் சொன்னார்.

அடுத்துப் பேசிய கோவை நந்தன் புஸ்பராஜாவின் நூலின் அடிப்படையையே கேள்விக்குள்ளாக்கினார். ஆரம்பத்தில் இயக்கங் களில் இருந்தவர்கள் கசப்புணர்வுகளால் வெளியேறி உலகின் பல்வேறு இடங்களில் வாழ்ந்துவருகிறார்கள். அவர்களை அடை யாளம் காட்டி அவர்கள் எங்கு வாழ்கிறார்கள் என்பதையும் தெரிவித்து அவர்களின் வாழ்வைக் கேள்விக்குரியதாக்கி உள்ளது இந்நூல் என்றார் அவர். இந்நூல் இலங்கையில் சமாதானம் ஏற்பட்ட பின்பு வந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்றவர், இப்போது இலங்கை போலீஸ்காரர்களுக்குத்தான் இது பயனுள்ளதாய் இருக்கும் என்றார்.

அடுத்து உரையாற்றிய மகேந்திரன் பிரச்சினையின் துயரங்களை, சுமைகளை வெளியில் சொல்ல ஒரு எழுத்தாளர் எழுதிய நூல்போல் புஸ்பராஜாவின் நூலை நினைக்காமல் வாழ்வினூடாக மனதில் பட்டதை அப்படியே மற்றவர்களுக்கு உணர்வுகளைச் சொல்வதாக நினைக்கவேண்டும் என்றார். புஸ்பராஜா வேண்டுமென்றே சாதியை மறைத்துக்கொண்டார் என்று சொல்ல முடியாது என்றார். மகேந்திரன் புத்தகத்தை ஆழ்ந்து படித்து வந்திருந்தது அவரது செறிவான பேச்சில் தெரிந்தது.


கடைசியாகப் பேசிய ஷோபா சக்தி எதைப் பற்றிப் பேச அழைக்கப்பட்டார் என்பதை மறந்துவிட்டாரோ என்று பார்வை யாளர்கள் நினைக்கும் வண்ணம் 'சாதி' சாமியாட்டம் போட்டு விட்டார். அவர் பேசிய விஷயங்கள், புள்ளிவிவரங்கள் மிகவும் முக்கியமானவையாக இருந்தாலும் இந்த இடத்தில் இதைப் பற்றிப் பேச வேண்டிய தேவை என்ன என்ற குழப்பம் ஏற்பட்டது.

கூட்டத்தில் வியப்பிற்குரிய சில விடுதல்களும் இருந்தன. நூல்களை வெளியிட்ட அடையாளம் பதிப்பகம் சார்பாக யாரும் பேசவில்லை. அதேபோல் கூட்டத்தை நடத்திய சுயமரியாதை இயக்கத்தைச் சார்ந்தவர்கள் யாரும் பேசவில்லை.

**பெ. அய்யனார்**

www.padippakam.com





## நஞ்சுண்டன்

## நோட்டம்

பெங்களூர் நாராயணா இருதயாலயத்தில் யூ. ஆர். அனந்தமூர்த்தி இரண்டாம் பைபாஸ் அறுவை சிகிச்சை செய்துகொண்டார். அவரைப் பார்க்க மருத்துவமனைக்குக் கர்நாடக முதல்வர், ராமகிருஷ்ண ஹெக்டே, தேவே கௌட என்று பல வி. ஐ. பிக்கள் வந்தார்கள் என்றறிந்து நான் மருத்துவமனைக்குச் செல்லவில்லை. அனந்தமூர்த்தியின் மகன் சரத் என் நெருங்கிய நண்பர். அவர் எங்கள் பல்கலைக் கழகத்தில்தான் பணிபுரிகிறார். மருத்துவமனைக்கு அப்பாவைப் பார்க்க வர வேண்டியதில்லை, அவர் வீட்டுக்குத் திரும்பியதும் அங்கே வந்தால் போதும் என அவர் சொல்லியிருந்தார். அனந்தமூர்த்தி வீட்டுக்குத் திரும்பியதும், எங்கள் பல்கலைக்கழகத்திலிருந்து சரத்துடன் நான் அவரைப் பார்க்கச் சென்றிருந்தேன். வழக்கமாக அனந்தமூர்த்தி என்னோடு மிகுந்த உற்சாகத்துடன் பல்வேறு நிகழ்ச்சிகளை நினைவுபடுத்திப் பேசுவார். அறுவைச் சிகிச்சையின் பக்க விளைவுகளால் அன்று அவர் வழக்கமான உற்சாகத்தோடு பேச முடியவில்லை. அப்போது ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. சரத் தொலைபேசியை எடுத்துச் சாதாரணமாக 'யார்?' என்று கன்னடத்தில் கேட்டார். அந்தப் பக்கத்திலிருந்து ஏதோ பதில் வந்தது. இவர், 'எந்தக் கிருஷ்ணா?' என்றார் மேலும் சாதாரணத் தொனியில். அடுத்து அந்தப் பக்கத்திலிருந்து வந்த பதிலால் என நண்பர் பரபரப்படைந்து தன் தந்தையிடம் தொலைபேசியைக் கொடுத்தார். காரணம், பேசியது அப்போதைய கர்நாடக முதல்வர் எஸ். எம். கிருஷ்ணா. ஒரு மாநில முதல்வர் ஒரு எழுத்தாளரைத் தானே தொலைபேசியில் அழைத்து எளிமையாகத் தன் பெயரைச் சொல்லி அறிமுகப்படுத்திக்கொள்வதையும் அவருக்குப் பட்டப் பெயர் இல்லை என்பதையும் இக்காலத் தமிழ் மக்கள் நம்ப மாட்டார்கள்.

இந்நிகழ்ச்சியோடு இன்னொன்றும் என் நினைவுக்கு வருகிறது. ராமகிருஷ்ண ஹெக்டே கர்நாடக முதல்வராக இருந்தபோது, மாஸ்தி வெங்கடேச ஐயங்காருக்குத் தொண்ணூறாம் பிறந்தநாள் வந்தது. அன்று காலை தன் மனைவியுடன் மாஸ்தியின் வீட்டுக்குச் சென்ற ஹெக்டே அவருக்கு மரியாதைசெய்து, காலைத் தொட்டு வணங்கி ஆசீர்வாதம் பெற்றார். மாஸ்தி போலும் ஒரு மூத்த எழுத்தாளரை ஒட்டு மொத்தக் கர்நாடகமே கௌரவித்ததாக அப்போது எழுத்தாள நண்பர்கள் பேசிக்கொண்டார்கள். தமிழ்ச் சூழலை நினைத்தால் சற்று வெட்கப்பட வேண்டியிருக்கிறது.

❑

ஒருமுறை பெங்களூரிலிருந்து சேலத்துக்கு இன்டர்சிடி தொடர்வண்டியில் பயணம் செய்துகொண்டிருந்தேன். நான் அமர்ந்திருந்த இருக்கைக்கு எதிரில் ஓர் இளம் தாய் தன் இரண்டு பெண் குழந்தைகளுடன் உட்கார்ந்திருந்தாள். தருமபுரியைத் தாண்டித் தொப்பூர்க் கணவாய் வழியாக வண்டி செல்லும்போது இரண்டு பக்கங்களிலும் தெரியும் காட்சி ரம்மியமாக இருக்கும். அப்போது, அந்தப் பெண்ணின் பெரிய மகள் ஏதோ ஓர் அட்லஸில் ஆழ்ந்திருந்தாள். அந்தச் சிறுமி நான்காம் வகுப்பு மாணவி. அந்தப் பெண் தன் மகளை வெளியில் தெரியும் காட்சியைப் பார்க்குமாறு பலமுறை வற்புறுத்தியும், சிறுமி 'போம்மா, எங்க மிஸ் அட்லஸை நல்லாப் படிச்சிட்டு வரச் சொல்லியிருக்கறாங்க' எனச் சொல்லி அட்லஸிலேயே மூழ்கியிருந்தாள்.

❑

எங்கள் பல்கலைக்கழகத்தில் ஒவ்வொரு துறைக்குமான தலைவர்கள் இரண்டாண்டுக்கு ஒருமுறை மாறுவார்கள். பதவியிலிருந்து விலகி அடுத்தவருக்கு வழிவிடும் சாதாரணச் சடங்காகவும் இதைக் கருதலாம். ஆனால், அத்தருணத்தில் நடக்கும் சண்டை, சச்சரவுகளின்போது பேராசிரியப் பெருந்தகைகள் அரசியல்வாதிகளை மிஞ்சிவிடுகிறார்கள். பல சமயங்களில் சிறுபிள்ளைகளைத் தோற்கடித்துவிடுவார்கள். எங்கள் பல்கலைக்கழகத்தின் ஒரு துறையில் மூத்த பேராசிரியை ஒருவர் துறைத்தலைவர் பதவியிலிருந்து விலகி வேறொரு இளைய பேராசிரியைக்கு வழி விட வேண்டியதாயிற்று. மூத்த பேராசிரியை பொறுப்பை ஒப்படைப்பதிலிருந்தே இருவருக்கும் பனிப்போர் தொடங்கி விட்டிருந்தது. ஒரு மாதம் கழிந்த பின்னர், முன்னாள் துறைத் தலைவி ஒருநாள் பல்கலைக் கழகத்திற்கு வராமல்போனதால் பதிவேட்டில் அவர் வரவில்லை (absent) எனச் சிவப்பு மையால் குறித்துவிட்டார் இந்நாள் தலைவி. மறுநாள், முன்னாள் துறைத் தலைவி விளக்கக் கடிதம் கொடுக்கத் துறையின் அலுவலகம் சென்றபோது, அங்கே அலுவலர்கள் யாரும் இல்லை. அதனால், கோபமடைந்த மூத்த பேராசிரியை ஆளில்லாத அலுவலகம் எதற்கு என்று ஒரு பூட்டைப் போட்டுவிட்டு நாலைந்து நாள் துறையின் பக்கம் தலைகாட்டவில்லை. அத்துறையின் அன்றாடச் செயல்பாடுகள் தடைபட்டன. விவகாரம் பெரிதாகித் துணைவேந்தர் வேறு துறைப் பேராசிரியர்களை அனுப்பிப் பஞ்சாயத்துச்செய்து அலுவலகப் பூட்டைத் திறக்க வேண்டியதாயிற்று.

❑

எங்கள் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்துக்கான இந்த வருடத் தேர்தல் கடந்த மாதம் நடந்தது. தலைவர், செயலர் பதவிகளுக்கு மட்டும் தேர்தல் நடைபெற்றது. வழக்கம் போல் இந்த ஆண்டும் நான் வாக்குகளை எண்ணும் பொறுப்பை ஏற்றேன். போடப்பட்டிருந்த மொத்த ஓட்டுகளில் இரண்டு செல்லாதவை. ஒவ்வொரு பதவிக்கும் தலா இருவர் மட்டுமே போட்டியிட்டதால் வாக்களிப்பது குழப்பமற்ற, மிக எளிய செயலாகவே இருந்தது. இருந்தும், மெத்தப்படித்த பேராசிரியர்கள் இருவரால் சரியாக வாக்களிக்க முடியவில்லை. நாட்டில் உயர் கல்வியின் தரத்தை இது பிரதிபலிப்பதாகச் சொன்னால், மறுத்துப் பேசுவது சுலபமான காரியமல்ல.

❑

வழக்கமாகத் தாமதமாக வருகிறவர் ஒரு நாள் அதற்கு மாறாக நேரத்தோடு வந்துவிட்டால், 'இன்று மழை பெய்யப் போகிறது' என்று மற்றவர்கள் சொல்வதை முன்பெல்லாம் பலமுறை கேட்டதுண்டு. ஆனால் இப்போதெல்லாம் எந்த அதிசயத்தைப் பார்த்தும் யாரும் 'இன்று மழை பெய்யப் போகிறது' என்று சொல்வதில்லை. ஆச்சரியமுற்ற ஒருவர் அப்படிச் சொல்லக் கேட்டு எத்தனை ஆண்டுகள் ஆயின என்பதை நினைத்தால் வருத்தம்தான் மிஞ்சுகிறது. மக்களின் நினைவிலி மனத்திலேயே அப்படிச் சொல்வது அபத்தம் என ஆழமாகப் படிந்துவிட்டதோ என நினைக்கத் தோன்றுகிறது. இதற்குப் பின்னாலுள்ள சோகம் ஆழமானது.


❑

ஏழெட்டு ஆண்டுகள் அமெரிக்காவில் வசித்த சாப்ஃட்வேர் இஞ்சினியர் ஒருவரைச் சந்திக்க நேர்ந்தது. அவரைக் கேட்டேன், 'அமெரிக்காவின் தேசியக் கவிஞர் யார் தெரியுமா?' அவர் சற்று நேரம் பேசாமலிருந்தார். அவர் முகபாவத்தில் ஏற்பட்ட மாற்றங்களிலிருந்து அதுவரை அவர் அக்கேள்வியை எதிர்கொண்டதில்லை என்பது நிச்சயமாயிற்று. யோசித்துப் பார்த்தேன். தமிழகத்தில் கொஞ்சகாலம் வாழ்பவரும் 'பாரதி' என்ற பெயரைக் கேள்விப்படாமல் இருந்துவிட முடியுமா? கர்நாடகத்தின் எந்த மூலையில் வாழ்பவரும் 'குவெம்பு' என்னும் சொல்லை அறியாமலிருக்க இயலாது. இந்த விஷயத்தில், கர்நாடகத்தையும் தமிழகத்தையும் ஒப்பிடும்போது அமெரிக்காவை நினைத்தால் சற்றுப் பாவமாக இருக்கிறது. ❑

படிப்பகம்

Edited and published by S. R. Sundaram (Kannan) for Kalachuvadu Pathippagam, 669 K. P. Road, Nagercoil 629 001

www.padippakam.com




படிப்பகம்

www.padippakam.com

Registered Newspaper
No: TN/KK Dn/12/2004 - 2006
Date of Publication Every month on 26th & 29th
ISSN 0972 - 8260 Kalachuvadu

Regd with the Registrar of Newspape
for India under No. 42764/88 Kalachuvad

